# பார்க்கும் விழி நானுனக்கு!

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## 1

அன்றுடன் இரண்டு தினங்கள் முழுவதுமாக முடிந்து விட்டன! இன்னும் பத்து நாட்களை எப்படிக் கழிப்பது?! வேலை விஷயமாய் வெளியூர் சென்றிருக் கும் தனசேகரன் — மாதவியுடைய அருமை, ஆசைக் கணவன் திரும்பி வர அத்...த்தனை நாட்கள் ஆகுமாமே!

வெளியே, காய்க்காரம்மா அழைப்பது மாதவியின் காதுகளில் விழத்தான் செய்தது.

''பீன்சு, காரட்டு, ஊட்டி மொளகா அல்லாம் இருக்கு! வேணுமாம்மா?''

தனா ஊரில் இருந்தால், இரவுக்குச் 'சைனீஸ் ஃப்ரைடு ரைஸ்' செய்யவென்று இதெல்லாம் வாங்கியி ருப்பாள்! அவளுக்கு முதலில் அவ்வளவு பிடிக்காது தான். முக்கால் வேக்காட்டில், காய்கறிகள் 'கருக்கருக்' என்று கடிபட உண்ணும்போது, ரசிக்காமல் தான் இருந்

தது! ஆனால், தனசேகரன், 'அதுவே ருசி' என்று 'ரெஸ்டாரன்ட்'டில் உண்பதைப் பார்த்து விட்டு, சமையல் குறிப்புப் புத்தகத்தில் தேடிப் பிடித்து, அனுப்பிசகாமல் செய்து வைத்து, கணவனிடம் பாராட்டும் பெற்றுக் கொண்டாள்: அவனோடு சேர்ந்து அதையே ருசித்து உண்ணவும் பழகி விட்டாள்!

இந்த 'ஃப்ரைடு ரைஸ்' மட்டுமல்ல! எத்தனையோ விஷயங்கள், இப்போது அவனுக்குப் பிடித்தால் தான் அவளுக்கும் பிடித்தது! அவனுக்குப் பிடிக்காதது, அவளுக்கும் வெறுத்துப் போயிற்று!

''என்னாம்மா? வூட்டிலேதான் இருக்கியா? காய் வேணுமா, இல்லியா?''

காய்க்காரம்மா பொறுமை இழப்பது அவளது குரலில் வெளிப்பட, ''இதோ வருகிறேன்!'' என்று பர்சை எடுத்துக் கொண்டு வெளியே சென்றாள். ''அன்றைக்குக் காய் வாங்கியதில் ஐந்து ரூபாய் ஐம்பது காசு நான் தர வேண்டுமே, இந்தாருங்கள்'' என்று பணத்தைக் கொடுத்தாள்.

''இதுக்கு என்னாம்மா அவசரம்? உன் பணம் எங்க, ஓடியாப் போவும்?'' என்று கேட்டபடியே பணத்தை வாங்கிச் சுருக்குப் பையில் வைத்துப் பையை இடுப்பில் சொறுகிக் கொண்டாள் அவள். ''என்னாம்மா, ஒரு மாதிரியா இருக்கியே, ஒடம்பு கிடம்பு சரியில்லையாங்காட்டியும்?'' என்று பரிவுடன் விசாரித்தாள்.

''உடம்புக்கு ஒன்றுமில்லை காய்க்காரம்மா!'' என்ற மாதவி மற்றவள் ஊட்டி மிளகாயைப் பொறுக்கி எடுப்ப



தைக் கண்டு, ''காய் வேண்டாம், காய்க்காரம்மா. இன்னும் பத்து நாளைக்குப் பிறகு கொண்டு வாருங்கள். அதுவரை வேண்டாம்'' என்று திரும்பினாள்.

''ஏம்மா? ஊருக்குப் போறியாம்மா? யம்மா, ஒரு கை கூடையைத் தூக்கி விடும்மா!'' என்று உதவிக்கு அழைத்தாள் கறிகாய்க்காரி.

''நான் ஊருக்குப் போகவில்லை! ஆனால் அய்யா... அய்யா ஊரில் இல்லை. வரப் பத்...து நாளாகும்!'' எனுமுன் மாதவிக்கு உதடு துடித்தது.

கண்ணில் சிரிப்புடன், ஏதோ சொல்ல வாயெடுத்து விட்டு, மாதவியின் முகத்தைப் பார்த்து, வாயை மூடிக் கொண்டு, அங்கிருந்து அகன்றாள் கறிகாய் விற்றுப் பிழைக்கும் அந்தப் பெண்மணி.

தனசேகரனுக்கு ஒரு பெரிய உரக் கம்பெனியில் 'சேல்ஸ் மேனேஜர்' வேலை. விற்பனைப் பிரிவில் தலைமைக்கு அடுத்த இடம் இவனது. சம்பளமே நிறைய வந்தது. அத்தோடு, ஆண்டில் குறியீட்டு அளவை எட்டி விட்டால் வஞ்சனையற்று போனஸ் கொடுத்தார்கள். எல்லாம் நன்கு விசாரித்து அறிந்த பிறகு தான் மாதவியுடைய தந்தை கதிரேசன் மகளை தனசேகரனுக்கு மணமுடித்து வைத்தார்.

மணமகனின் புகைப்படத்தைப் பார்த்ததுமே தலை சுற்றிப் போய் விட்டிருந்தாள் மாதவி!

விற்பனைப் பிரிவு என்றால் அடிக்கடி வெளியூர் சுற்றவேண்டும் என்பார்களே.... என்று முணுமுணுத்த தாயார் ரேவதியின் குரல் யார் காதிலும் விழவில்லை!

''இவள் ஒருத்தி, எதற்கும் வக்கணை சொல்லிக் கொண்டு! வியாபாரம் செய்கிற பையன் என்றால் நாள் முழுவதும் கடையில் கிடப்பானே என்றாய்! வக்கீல் என்றால் வார்த்தைக்கு வார்த்தை சட்டம் பேசி மகள் வாழ்வைக் கோர்ட்டாக்கி விடுவான் என்கிறாய்! டாக்டர் என்றால், மற்றவரின் வலி, வேதனையே தொழிலாகி விடுமே என்று வருத்தப்பட்டாய். நல்ல எம்.பி.ஏ படித்த பையன்! நல்ல சம்பாத்தியம் என்று பார்த்தால் அதற்கும் 'நொணநொண' என்று வரட்டுத்தவளை மாதிரி கொர கொரக்கிறாயே! பையன் பார்வைக்கு ராஜா மாதிரி இருக்கிறான்! நல்ல நடத்தை! குரலும் பேச்சும் கேட்டுக் கொண்டே இருக்கலாம்! நீயும் நேரில் பார்த்து விட்டுப் பிறீகு பேசு!... அப்போதும்.... இப்படிப் பேசுவது என் றால் பேசவே பேசாதே!'' என்று தாயாரை தந்தை அடக்கி விட்டபோது, மாதவிக்கு அப்பாடா என்று தான் இருந்தது. 'வரட்டுத்தவளை மாதிரிக் கொரகொரக்கி றாயே!' என்றது சிரிப்பாகக்கூட இருந்தது!

அப்பா சொன்னதுபோலவே, தனசேகரனை நேரில் பார்த்த பிறகு, ரேவதிக்கும் சந்தோஷம் தான். ஆசை மகளின் அழகுக்கு ஏற்ற மாப்பிள்ளை என்ற பூரிப்பில் அவளது ஆட்சேபனை அடங்கிப் போய் விட்டது!

பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் முதல் பார்வையி லேயே, மிகவும் பிடித்துப் போய்விட, எந்தவிதத் தடை யும் இல்லாமல் திருமணம் நல்லபடியாக நடந்து, தேனி லவு இனிமையாகக் கழிந்து, இங்கே தனிக்குடித்தனம் வைத்து, அடுத்து இருவருமாகக் குடும்பம் நடத்திய பதினைந்து நாட்கள் வரையும்கூட, மாதவி சொர்க்கத்தில் தான் இருந்தாள்.



ஆனால், இந்தப் பிரிவில் தான் அவள் மிகவும் துவண்டு போனாள்.

''நாக்பூர் போக வேண்டும், மதும்மா, அப்படியே சுற்று வட்டாரத்தில் சுற்றவேண்டும். வழக்கமாகப் பதி னைந்து நாட்கள் 'டூர்' போவேன். போக வேண்டிய இடங்களை எல்லாம் நெருக்கியடித்து, அங்கங்கே பய ணங்களை இரவில் போட்டு எப்படியோ, பன்னிரண்டு நாட்களுக்குக் குறுக்கியிருக்கிறேன்...'' என்று அவன் சொல்லும்போதே மாதவியின் கண்களில் நீர் தளும்பி விட்டது.

அணைத்துக் கொண்டு, ''என்னம்மா செய்வது? எனக்கும் தான் உன்னைப் பிரிந்து வெளியூர் செல்ல விருப்பம் இல்லை. வேலை பார்க்கிற இடத்தில், பெண் டாட்டியை விட்டுப் பிரிய மாட்டேன் என்று சொல்ல முடியுமா? தனியே வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக் காமல், சினிமா, ஷாப்பிங் என்று வெளியே போய் வா... பார்த்துக் கொண்டு இருக்கும் போதே நாட்கள் பறந்து விடும்! நானும் திரும்பி வந்து விடுவேன்!'' என்று அவளைத் தேற்றிப் பிரியாவிடை பெற்றுப் போனான் தனசேகரன்.

வெளியே போய் வா என்றான் கணவன்! வீட்டி லேயே டீ.வி. எத்தனையோ சானல் தொடர்புடன் இருந் தது. ஆனால், மாதவிக்குத் தான் எதுவுமே பிடிக்க வில்லை.

உண்ண முடியாமல், உறங்க மாட்டாமல் இந்தப் பிரிவாற்றமையில் மிகவும் தவித்துப் போனாள்.

தலைவனின் பிரிவால் மெலிந்து, வளை கழன்றதாகத் தமிழ் இலக்கிய வகுப்பில், கல்லூரியில் படித்தபோது, அவள், ஏளனமாகச் சிரித்தாளே! என்ன மடத்தனம்! வனவாசம் செல்வதற்காக, விடை பெற வந்த கணவனிடம், 'மற்று நின்வரவு வாழ்வார்க்குச் சொல்' என்ற சீதையை அவளால் அப்போது உணர முடிந்தது!

அந்த அளவுக்குக் கணவனின் முதல் பிரிவில் மாதவி துவண்டு போனாள்.

தொடர்ந்து வந்த பிரிவுகளிலும் அப்படி ஒன்றும் அவள் தேறியதாகத் தெரியவில்லை.

விக்கிரமாதித்தனின் 'காடாறு மாதம் நாடாறு மாதம்' போலக் கணவன் அருகாமையில் கொஞ்ச நாள் சுகிப்பதும், அடுத்து சில நாட்கள் அவனைப் பிரிந்து வாடுவதுமாக, இது தான் வாழ்வு என்பதற்கு மாதவி ஒருவாறு பழகிக் கொண்டாள்.

ஆனால், அவள் அதற்குப் பழகிக் கொண்ட விதம் தான் அவளுடைய கணவனுக்குப் பிடிக்கவில்லை.

மாதவி என்னதான் மறுத்தாலும், அவன் ஊரில் இல்லாத நாட்களில், அவள் சரிவர உண்ணாமல், உறங்காமல் சோர்வது அவனுக்குப் புரியாமல் இல்லை.

ஒரு நாள் மொத்தமாகப் பொங்கி 'ஃப்ரிஜ்ஜில்' வைத்து விட்டு, அன்றாடம், அதில் கொஞ்சம் எடுத்து, வெறும் பருப்புப் பொடியும், ஊறுகாயுமாக அதையும் அரைகுறையாக, அவள் உண்பதை ஊகித்து அறிய முடியாத அளவுக்கு அவன் முட்டாள் அல்ல!



மனைவியிடம் சீக்கிரமாக வந்து சேர்ந்து விடவேண்டும் என்பதற்காக, வேலை முடிந்ததும், மறு நாள் ரயிலுக்காகக் காத்திராமல், அங்கங்கே தொடர்பு 'பஸ்'களில் ஏறி, ஒரு பன்னிரண்டு மணி நேரம் முன்னதாக வீடு வருகிறவன் தானே அவனும்!

முதல் தடவை, அப்படி வந்த மகிழ்ச்சி சற்று அடங்கியதும், வயிற்றுப் பாட்டுக்காக அடுப்படியை நோக்கிச் சென்றவளிடம், ''வெறும் சோறு மட்டும் பொங்கு, மது. நான் வரும்போதே 'சிப்ஸ்' வாங்கி வந்து விட்டேன். சாதத்தில் பருப்புப் பொடி பிசைந்து சாப்பிடுவோம்'' என்றவன், பருப்புப் பொடி தீர்ந்து விட்டதே!'' என்று மாதவி சொன்னபோது முதலில் கொஞ்சம் ஆச்சரியம் மட்டும் தான் பட்டான்.

அவன் வெளியூர் செல்வதற்கு முன்தினம் இருவருமாய்ச் சென்று வாங்கிவந்த சாமான்களில் பருப்புப் பொடியும் இருந்ததாகத்தான் அவனுக்கு நினைவு!

'இல்லையோ' என்று எண்ணி, ''சரி! நான் போய் வேறு வாங்கி வருகிறேன்!'' என்று அவன் கிளம்ப, ''வேண்டாம் வேண்டாம். வந்தவுடன் கிளம்ப வேண்டாம்! ரசம் வைக்கிறேன். நீங்கள் இங்கே வந்து என்னோடு பேசிக் கொண்டு இருங்கள்!'' என்று மனைவி கூற, ''ஓ! நான் ரெடிப்பா?'' என்று சிரித்தபடி நெருங்கியவன், சற்றே தயங்கி நின்றான்.

''இல்லேம்மா. நான் குளித்து விட்டு வந்து விடுகிறேன். பஸ்சில் வந்தது, தலை உடம்பெல்லாம் கசகசவென்று இருக்கிறது!'' என்று, பஸ்சில் வந்த காரணம் சொல்லி அவன் குளிக்கச் சென்றபோது அவளுக்கும் ஒரே நெகிழ்ச்சிதான்.

தனசேகரனுக்கு, ரயிலில் முதல் வகுப்பு டிக்கட் அனுமதி உண்டு. டிக்கட்டைக் கொடுத்தால், அலுவலகத்தில் பணம் தந்து விடுவார்கள். இப்போது பஸ் செலவு தான் கிடைக்கும்! ஆனால் அவள் கணவன், தன் உடல் சுகத்தை அலட்சியப்படுத்தி, பஸ் பிரயாணம் செய்து வந்திருக்கிறான்! எல்லாம் அவளிடம் ஓர் அரை நாள் முன்னதாக வந்து விட வேண்டும் என்பதற்காகத்தானே?

பூரிப்பு ஒருபுறம் இருந்தாலும், இனி இப்படிச் சிரமப்படக் கூடாது என்று சொல்லிவிட வேண்டும் என்று எண்ணியபடி வேலையில் ஈடுபட்டாள் அவள். பஸ் குலுக்கலில், படுத்து உறங்க முடியாமல், உட்கார்ந்து கொண்டே எப்படி வந்திருப்பான், பாவம்!

மறுநாள் கறிகாய்க்காரி வந்து, ''இன்ன சாரு, நீ ஊருக்குப் போனாக்க உன் ஊட்டுக்காரி, ஒரு பதார்த்தம் வைக்காமப் பட்டினி கெடக்குதுப்பா! இத்தினி நாளு ஒரு காய் வாங்கலைப்பா!'' என்று புகார் சொல்லிவிட்டுப் போனபோது அவனுக்கும் மிகுந்த வருத்தம் தான்.

அடுத்த முறை வெளியூர் செல்ல நேர்ந்தபோது, நிறையக் காய்கறிகள் வாங்கி, ஃப்ரிஜ்ஜில் அடுக்கி விட்டுத் தான் போனான்! ஆனால், செய்து உண்பது அவள் கை செய்தால் தானே உண்டு! அவன் திரும்பி வந்து பார்த்தபோது, பெரும்பான்மைக் காய்கறிகள் அப்படியே இருந்தன. என்ன, கொஞ்சம் வாடி வதங்கிப் போயிருந்தன.

''குதிரையைத் தண்ணீர் இருக்கும் இடத்தில் கொண்டு போய் விடத்தான் முடியும். குடிக்கவும் வைக்க முடியுமா? உடம்புக்கு தண்ணீர் தேவை என்று உணர்ந்து,



அதுவாய்க் குடித்தால் தான் உண்டு. உன் உடம்புக்கு என்ன தேவை என்று கூடத் தெரியாதா? இப்படிப் பட்டினி கிடந்து மெலிந்தால் தான், உங்கள் பதிவிரதைத் தனம் தெரியுமாக்கும்?'' என்று திருமணமான பின், முதல் முறையாக, மனைவியிடம் கோபம் காட்டினான்.

''நான் என்ன செய்யட்டும், தனா? எனக்காக மட்டும் என்று எதுவும் செய்யப் பிடிக்கவே மாட்டேன் என்கிறதே! கத்தரிக்காயைப் பார்த்தால் எண்ணெய்க் கறி. உங்களுக்குப் பிடிக்குமே என்றிருக்கிறது? அவரைப் புளிப் பச்சடி செய்தால் கூட ரசித்து உண்பீர்களே! அப்புறம், முட்டைக்கோஸ் பருப்புக் கூட்டு செய்தால் இரண்டு பேரும் திண்ணத்தில் ஸ்பூன் போட்டுக் கொண்டு சாப்பிடுவோமே!... தனா, எனக்குச் செய்யவும் பிடிக்கவில்லை! அப்படியே செய்தாலும் அதை வாயில் வைக்கவே மனம் வரவில்லை! நான் என்ன செய்யட்டும்?'' என்று கண்களில் நீர் மல்க மாதவி கூறியபோது, கணவனின் அந்தக் கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று!

ஆனால் வருத்தப்பட்டான்.

என் பெண்டாட்டி நான் பக்கத்தில் இல்லாவிட்டால் பச்சைத் தண்ணீர் கூடத் தொண்டையில் இறங்காது என்று பீற்றிப் பறைசாற்றும் அளவு, ஏன் பெருமைப்படும் அளவு கூட அவன் பண்பற்றவன் அல்ல என்பதால் மனைவியின் போக்கு குறித்து மிகவும் வருத்தப் பட்டான்.

''இப்படித் தடவைக்குத் தடவை மெலிந்து கொண்டே போனால் அப்புறம் ஒரு நாள், உன் உடம்பில் எலும்பும் தோலும்தான் மிச்சமிருக்கும்! இப்போதே பாதி

ஆளைக் காணவில்லை! உன்னைப் போற்றிப் பாதுகாப் பேன்' என்று மந்திரம் சொல்லி மணந்து அழைத்து வந்திருக்கிறேன்! இப்படி ஒல்லியாக உன்னைப் பார்க்கிற வர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? மாப் பிள்ளை, நம் மகளுக்குச் சாப்பாடு போடவில்லை போல் இருக்கிறது என்று உன் பெற்றோர் நினைக்க மாட்டார் களா?.....'' என்று வருத்தப்பட்டவனுக்குச் சட்டென ஓர் ஐடியா தோன்றியது. ''இப்படி நான் வெளியூர் செல்லும் நாட்களில், நீ வேண்டுமானால் உன் பெற்றோரிடம் போய் இருந்து விட்டு வருகிறாயா?'' என்று கேட்டான்.

ஒவ்வொரு தடவை அவன் வெளியூர் செல்லும் போதும், இப்படி மாதவியைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பு வது எப்படியிருக்குமோ என்று தோன்றினாலும், இரண்டு மூன்று முறை போனாள் என்றால் மனம் மாறி விடுவாள்; பிறகு எல்லாம் சரியாகி விடும் என்பது அவன் எண்ணம்.

ஆனால், மாதவி அதற்கு ஒரேயடியாக மறுத்து விட்டாள்.

''இந்த மாதிரிப் பிரிவுகள் நேரும்போது கஷ்டமாய் இருக்கும்; விற்பனைத் துறை மாப்பிள்ளை வேண்டாம் என்று அம்மா முதலிலேயே சொன்னார்கள். இப்படி என்று போனால், கட்டாயமாய்ச் சொல்லிக் காட்டுவார் கள்! அது வேறு மனதுக்குத் துன்பமாய் இருக்கும்; வேண்டாம்!'' என்று மனைவி கூறவும் தனசேகரன் புருவங்களை உயர்த்தினான்.

''ஆகா! அப்படியானால் நான் மாமியாருக்குப் பிடிக்காத மாப்பிள்ளையா? அதனால் தான், திருமணத் தின் போது அத்தை கொஞ்சம்... ரொம்பவும் கொஞ்சம் தான், முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருந்தார் களா? நான் கூட நினைத்தேன்! என்னடா, நாம் ஒன்றும் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்கவில் லையே! குறைந்தபட்சமாய் ஒரு மாருதி கார் கூடக் கேட்காதபோது இப்படி அத்தை முகத்தில் கடுகு வெடிக் கிறதே என்று யோசித்தேன்! இப்போதல்லவா காரணம் தெரிகிறது! இது அம்மாவை மட்டும் எதிர்த்து நடந்த திருமணமா? அல்லது என்மேல் கொண்ட காதலால் உன் அப்பாவையும் பணிய வைத்தாயா, கண்மணீ?'' என்று கர்வக்குரல் காட்டி அவன் 'போஸ்' கொடுக்கவும் மாத விக்குச் சிரிப்பு வந்தது.

''ச்சு! போங்கள்! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை'' என்று அவள் கூறவும், ''போச்சுடா! அப்படியெல்லாம் ஒன்றுமே இல்லையா? அப்படியானால் காதல் கீதல் ஒன்றுமே கிடையாதா? பின்னே 'விதியே' என்று தான் என்னை மணந்தாயா?'' என்று அவன் சோகபாவனை காட்டவும், அவள் மீண்டும் நகைத்தாள்.

மனைவியின் கன்னத்தில் எழிலாய்த் தோன்றிய குழியை ரசனையுடன் அவன் தொட்டுப் பார்க்க, அந்தக் கையை அப்படியே கன்னத்தோடு அழுத்திக் கொண்டு, அவள் சொன்னாள். ''அப்பா உங்களை ஏற்கெனவே பார்த்து விட்டு வந்தாரில்லையா? அப்போதிருந்து அவர் உங்களிடம் 'சரண்டர்!' உங்கள் படத்தைப் பார்த்ததிலி ருந்து நான் சரணாகதியானேன். நீங்கள் வீட்டுக்கு வந்தீர் களே, நினைவிருக்கிறதா? அதிலிருந்து அம்மாவும் மாப்பிள்ளை போல உண்டா என்று தான் இருக்கிறார்

கள். அவர்களுக்குப் பிடிக்காதது உங்கள் 'சேல்ஸ்' பொறுப்புதான். அதுவும் உங்களைப் பார்த்த பிறகு பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. அதனால் அவர்கள் ஒன்றும் திருமணத்தின் போது முகத்தைத் தூக்கவில்லை! சும்மா கதைவிட வேண்டாம்?'' என்று முடித்தாள் அவள்.

''பிறகென்ன தடை?'' என்று அவன் தன் பிடியி லேயே நின்றான். ''அங்கே போய் ஓரிரு தரம் தங்கி விட்டு வரலாம் அல்லவா? மகளைப் பார்க்க அவர்களுக் கும் மகிழ்ச்சியாகத்தானே இருக்கும்? நாம் இருவரு மாய்ச் செல்லும் போதெல்லாம் எப்படி உபசரிக்கிறார் கள்! மருமகனின் குறுக்கீடு இல்லாமல் மகளோடு வம்ப ளப்பது என்றால் இன்னும் அதிக ஆனந்தமாய் இருக் குமே!''

''உங்கள் 'சேல்ஸ்' பேச்செல்லாம் என்னிடம் வேண டாம்!'' என்றாள் அவள் எடுப்பாக. ''எப்படியும் இந்தக் காரணம் கொண்டு நான் அம்மா வீட்டுக்குப் போக முடியாது! அண்ணனைவிட உங்களிடம் அவர்களுக்கு அதிகப் பிரியம், மரியாதை உண்டு தான் என்றாலும், வாய்ப்புக் கிடைக்கும் போது அம்மா சொல்லிக் காட்டா மல் இருக்க மாட்டார்கள். என் அம்மாவை எனக்குத் தெரியும்! அதனால் இந்த எண்ணத்தை விடுங்கள். அத்தோடு பத்து நாள், பதினைந்து நாளெல்லாம் வீட் டைப் பூட்டிப் போட்டு விட்டுப் போகவும் முடியாது!''

அவள் கூறியதும் சரிதான். என்னதான் நகைகள் எல்லாம் பாதுகாப்புப் பெட்டகத்தில் இருந்தாலும், டிவி, ஃப்ரிட்ஜ், கிரைண்டர், ஏசி என்று இவைகளும் விலை



உயர்ந்தவைதானே? பல நாள் வீட்டைப் பூட்டிப் போடு வது, வம்பை விருந்துக்கு அழைப்பது போலத்தான்!

மனைவி தனியாக வீட்டில் இருப்பது கூட தனசேக ருக்கு கவலை தான். அவள் சற்று எச்சரிக்கையோடு பூட்டிப் புழங்குகிறவள் தான் என்றாலும், இரவில் காவ லுக்கு ஆள் ஏற்பாடு செய்து விட்டுத்தான் வெளியூர் செல்வான். ஆனால், இரவு பகல் இருபத்து நாலு மணி நேரத்துக்கும் அலுவலக ஆளைக் காவலுக்கு வரச் சொல்ல முடியாது!

குழந்தை என்று ஒன்று உருவாகி விட்டால், மாதவி யின் கவனம் அதில் ஈடுபடக்கூடும் தான்! தனிமைத் துயரும் குறையலாம். ஆனால், கணவன், மனைவி இருவருக்குமே, குறைந்தது இரண்டு வருடங்களேனும் சென்ற பின் தான் குழந்தை என்பதில் ஒத்த கருத்து இருந்தது. இப்போது, இப்படி ஒரு காரணத்துக்காக, இருவருமாக யோசித்து செய்த முடிவை மாற்றுவது சரியல்ல! எப்படியும், மாதவி அதற்கு ஒத்துக் கொள்ள வும் மாட்டாள்!

பல்வேறு வழிகளைச் சிந்தித்துப் பார்த்துக் கொண்டே இருந்த தனசேகரனுக்குக் கடைசியாக ஓர் அருமையான ஐடியா தோன்றியது.

அதுபற்றி அவன் மாதவியிடம் சொன்னபோது, அவனளவு உற்சாகத்துடன் இல்லை என்றாலும் ஓரளவு ஊக்கத்துடனேயே அதில் ஈடுபட்டாள். பிரிவாற்றாமை, தனிமைத்துயர் என்று மனைவி இனியேனும் உண்ணா மல், உறங்காமல் உடம்பைக் கெடுத்துக் கொள்ள மாட் டாள் என்று தனசேகரன் நிம்மதியாய் மூச்சு விட்டான்.

ஆனால், அவனது ஒப்பற்ற ஐடியா, அவனது இனிய இல்லறத்துக்கே உலைவைத்து விடப் போகிறது என்பது அப்போது அவனுக்குத் தெரியாது.

## 2

மாதவி கல்லூரியில் 'ஃபைன் ஆர்ட்ஸ்' எடுத்துப் படித்தவள்: முதல் வகுப்பில் தேர்வு பெற்றவளும் கூட. சித்திரக்கலையில் ஆர்வம் உடையவளும்கூட. சும்மா டெலிஃபோனில் பேசும்போதும்கூட, டெலிஃபோன் கால்களைக் குறித்து வைக்கும் நோட்டுப் புத்தகத்தில் அவளது கை தன்னிச்சையாக ஏதாவது படம் வரைந்து கொண்டிருக்கும்.

இன்னொன்றில் ஈடுபாடு ஏற்பட்டால், மனைவி, தன் பிரிவை மறந்து, இயல்பான வாழ்வு வாழக்கூடும் என்பது தனசேகரனின் எண்ணம்.

தனியே மொட்டு மொட்டென்று உட்கார்ந்திருந்து, இந்த இடத்தில் இப்படி இருந்தோம்; அதை அப்படிச் சாப்பிட்டோம் என்று அதையே நினைத்து உருகிக் கொண்டிருக்க வழியில்லாமல் மனதிற்கு வேறு வேலை கிடைக்கும் அல்லவா?

படம் வரைய ஓர் உத்தி யோசிக்க வேண்டும்; தேவைப்படும் பொருட்கள் வாங்க வேண்டும்; உட்கார்ந்து வரைய வேண்டும்... இதில், கணவன் அருகில் இல்லையே என்ற ஏக்கம்-பின்னுக்குத் தள்ளிவிடப்பட்டு விடும் என்பது அவனது நம்பிக்கை.



எனவே, அவள் கற்ற கல்வியைப் பயன்படுத்தி, நல்ல சித்திரங்கள் வரையுமாறு யோசனை சொன்னான். ''தஞ்சாவூர் சித்திரம், கிளாஸ் பெயிண்டிங், டெரக் கோட்டா வேலை என்று எல்லாம் மகள் தான் செய்தாள் என்று உன் அப்பா பெருமை அடித்தாரே? உண்மை என்றால், இங்கேயும் அதெல்லாம் செய்வது தானே?'' என்றான் சீண்டுவது போல.

கணவனின் உள்நோக்கம் உணர்ந்து மாதவி, உள்ளூர இதமாய் உணர்ந்தாள். தலையைச் சரித்து, ஓரக்கண்ணால் கணவனை நோக்கி, ''செய்வேன்! ஆனால், நீங்கள் ஊரில் இல்லாத நேரம் முழுவதும் வரைவது என்றால், அப்புறம், அவைகளை மாட்டி வைக்க வீட்டில் இடம் இராதே!'' என்று குறும்பாய்க் கண் சிமிட்டினாள்.

''முழு நேரமும் வரைவதா? எதைப் பிடித்தாலும், உடும்புப்பிடிதானா? உதை கேட்கிறது உனக்கு!'' என்று, அவளைச் செல்லமாக மிரட்டினான் கணவன். ''ஒழுங்காக, உண்டு உறங்கி, மிச்ச நேரத்தில் தான் இந்த வரைதல், வண்ணம் தீட்டுதல் எல்லாம்! நினைவிருக்கட்டும்! மற்றபடி, அடுத்த முறை வரும்போது இதே போல் இருந்தாய் என்றால், நீ வரைந்த படம் அத்தனை மேலும் பெருக்கல் குறியிட்டுத் தூக்கித் தூரப்போட்டு விடுவேன்! உன்னையும்... உன் அம்மா வீட்டில் கொண்டு விட்டு விடுவேன்!'' என்று மிரட்டினான்.

அடுத்த முறை வெளியூர் செல்லுமுன், 'என்ன வரையப் போகிறாய் என்ன ஏது என்று அதைப் பற்றியே யோசி'' என்று அவளையும் அதுபற்றிச் சிந்திக்க வைத்தான்.

மாதவிக்கும் சந்தேகம் தான்; அவளுடைய 'தனா' எதிர்பார்த்த அளவுக்கு இது அவள் மனதைத் திசை திருப்பும் என்கிற நம்பிக்கை அவளுக்கு இல்லை தான். ஆனாலும், அவன் இவ்வளவு சொல்கிறானே, ஒரு முயற்சி செய்து பார்ப்போமே என்று தான் அவள் சித்திரம் பற்றி எண்ணிப் பார்த்தது.

ஆனால், அது பற்றி யோசிக்கும் போதே, கல்லூரி நாட்களும், ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு அவரவர் உருவாக்கியவற்றில் புதுமை புகுத்தியதும், ஆசியர்களிடம் பாராட்டுப் பெற்றதும் நினைவு வர, நினைவு வர, அவளுக்கு உள்ளூர ஒரு பரபரப்பு உண்டாயிற்று.

ஒரேயடியாக உற்சாகம் குமிழியிட்டுப் பொங்கவில்லை என்றபோதும், கணவன் ஊரில் இல்லாத சமயங்களில் வழக்கமாகத் தோன்றும் சோர்வும், அலுப்பும், உட்கார்ந்து அழ வேண்டும் என்ற உணர்வும் பழைய வேகத்துடன் உண்டாகவில்லை என்பது அவளுக்குமே பெரிதும் ஆறுதலாக இருந்தது.

தன் கெட்டிக்காரக் கணவனின் யோசனை சரியானதாகத் தான் இருக்கும் என்ற முடிவில் என்ன வரையலாம் என்று யோசித்தவளுக்கு, அவனது மிரட்டலும் நினைவு வரவே, இளம்புன்னகையோடு எழுந்து சென்று ஃபிரிஜ்ஜைத் திறந்தாள்.

சிந்தித்தபடியே வேலை செய்தவள், சமையலை முடித்தபோது, என்ன வரையலாம்; அதற்கு என்னென்ன பொருட்கள் வாங்க வேண்டும் என்பது பற்றியும், யோசித்து முடித்திருந்தாள்.



அந்த முறை 'டூரி'லிருந்து திரும்பி வந்து மனைவியைப் பார்த்த தனசேகரனுக்கும் மிகுந்த சந்தோஷமே!

அவள் வரைந்து வைத்திருந்த இரு படங்களையும் பார்த்து, 'பிரமாதம்' என்று பாராட்டியவன், மனைவியிடம், 'என் முதுகில் இரண்டு தட்டு தட்டுகிறாயா?' என்று கேட்டான்.

''ஏ...ன்?! ஏன்?!'' என்று அவள் திகைக்க, குறுஞ் சிரிப்புடன், ''என் அருமையான ஐடியாவுக்காக, என் முதுகில் நானே தட்டிக் கொள்ள முடியவில்லை! நான் தட்டினால் என்ன? என்னில் பாதி நீ-தட்டினால் என்ன?'' என்றான் அவன்.

''தட்டி விடுவேன்! ஆனால் வலியைச் சத்தமின்றிப் பொறுத்துக் கொள்ள வேண்டும், சரிதானா?'' என்று அவள் கூற, ''அம்மாடியோவ்!'' என்று பயந்தவன் போல அவன் நடிக்க, வீடு கலகலத்தது! எப்போதும் போல!

மாதவி வரைந்த இரு படங்களையும், எப்படிச் சட்டம் இடுவது, எங்கே மாட்டுவது என்று திட்டமிடும் போதே, தனசேகரனின் குரல் சற்றே இறங்கி விட்டது.

ஓரக்கண்ணால் கணவன் முகத்தை நோட்டமிட்டு விட்டு, ''இந்தத் தடவை தீட்டிய சித்திரங்களை ஹாலில் எதிர் எதிரே மாட்டலாம்; அடுத்த தடவை வரைவதை மற்ற இரு சுவர்களிலும். ம்ம்....சுவர்க்கடிகாரத்தையும், ராதாகிருஷ்ணன் காகிதக்கூழ் வடிவமைப்பையும் அகற்றி விட்டு அங்கே மாட்டலாம்! அப்புறம் படுக்கை அறை! பிறகு விருந்தாளி அறை! இன்னும் மூன்று தரம் நீங்கள் 'டூர்' போய் வரும் வரை தாங்கும்! அதன் பிறகு

வரையும் படங்களை எங்கே மாட்டுவது, தனா?'' என்று விழிகளை விரித்து வினவினாள் மாதவி.

''அது....அது...'' என்று சற்றுத் திணறிவிட்டு, ''நீ வரையும் படங்கள்! பார்க்கக் கசக்குமா, என்ன? யார், என்ன சொன்னாலும் பரவாயில்லை என்று ஒவ்வோர் அறையிலும் சுவர் முழுவதும் ஆணியடித்து வரிசை வரிசையாகத் தொங்க விட்டு விடுவேன் கண்ணே!'' என்று அவன், வீரவசனம் பேசினான்.

ஆனால், ''அசடு வழிகிறது! துடைத்துக் கொள்ளுங்கள்!'' என்றாள் அவனுடைய அருமை மனைவி, ''அப்புறம், மாதாமாதம் வாடகை வாங்க வீட்டுக்காரம்மா வரும்போது, படங்களைக் கழற்றி ஆணிகளைப் பிடுங்கி, ஆணி ஒட்டைகளில் சிமிண்ட் வண்ணம் தீட்டி வைப்பீர்களாக்கும்!'' என்று அவள் சிரித்தபோது, மெய்யாகவே அவன் முகத்தில் அசடு வழிந்தது.

''மது...'' என்று அவன் தயக்கத்துடன் இழுக்க, ''வீணாகக் கவலைப்படாதீர்கள்! என்று தேற்றினாள் அவள். இந்தச் சித்திர வேலையை நிறுத்தி விட்டால் நான் பழைய மாதிரி ஆகிவிடுவேனோ என்று உங்களுக்குப் பயம்! ஆனால் வரையும் படங்கள் சேர்ந்து கொண்டே போனால் அதை என்ன செய்வது என்று அது வேறு கவலை! அது தானே?''

ஆம் என்பது போல அவன் தலையாட்டினான்.

''அதற்கும் ஒரு வழி கண்டு விட்டேன்!'' என்றாள் மாதவி உற்சாகத்துடன். ''இந்தப் படங்களை விற்றுவிடலாம்!''



''விற்று...?'' என்று கேட்கும்போதே தனசேகருக்குச் சொத்தென்றாகி விட்டது. ''பெயர் வந்து விட்டால், கோழியாய்க் கிறுக்கினாலும் பெருவிலைக்கு விற்கலாம் தான். மற்றபடி, யார் வாங்குவார்கள்? யாரிடம் விற்பாய், மது? இதென்ன கத்தரிக்காயா, கூடையில் இட்டுத் தலைமேல் தூக்கி, 'சித்திரமோ சித்திரம்' என்று கூவி விற்பதற்கு?'' என்றான் கிண்டலாக.

''அப்படி விற்று வாருங்கள்' என்று உங்களை விரட்டி விடுவேனோ என்ற பயமாக்கும்! ஐயே! முகத்தைப் பார்!'' என்று சிரித்து விட்டு, சுகமாய், அவன் தோளில் சாய்ந்து கொண்டு, மாதவி சொன்னாள். ''அதற்கெல்லாம் அவசியமில்லை, தனா. என் தோழி ஒருத்தி, 'பொட்டிக்' வைத்திருக்கிறாள். கொஞ்சம் தனிப்பட்ட அயிட்டங்கள்! பத்திக், அப்ளிக், பெயிண்ட், சம்கி வேலை செய்த சேலைகள், சுரிதார்கள் விற்கிறாள். கொஞ்சம் உயர்மட்டத்து வாடிக்கையாளர்களாம். இந்தப் படங்களை வைத்தால், சேலை, சுரிதார் வாங்க வருகிறவர்கள், இவைகளையும் வாங்கிப் போய் விடுவார்கள் என்கிறாள். நமக்கு ஒன்றும் அதிக லாபம் குறியில்லையே! படத்துக்கு ஆன செலவு, செய்த வேலைக்குக் கொஞ்சம் கூலி, போதுமே. எனக்கும் பொழுது நல்லபடியாகப் போகும்! கை நஷ்டமாகவும் ஆகாது!'' என்றாள்.

முகம் மலர, ''அது யாரம்மா அந்த ஆபத்பாந்தவி, அனாதரட்சகி?'' என்று தனசேகர் நகைத்தான்.

''சொல்கிறேன். நீங்கள் கூட அவளைப் பார்த்திருக்கிறீர்கள்! நம் திருமணம் ஆன மறுமாதம், என் வகுப்புத் தோழிக்குத் திருமணம் என்று நாம் இருவருமாகப்

போனோமே! என் தோழியின் பெயர் சுகிர்தா!... நினைவு வருகிறதா?''

''ஆமாம் ஆமாம்! நீ கூடக் காலையிலேயே குளித்து அலங்காரம் செய்து கொண்டு தேவதை மாதிரி வந்து என்னை எழுப்பினாய்... அப்புறம்... ரொம்ப லேட்டாகப் போனோம் இல்லையா?'' என்று அவன் ரசனையோடு நினைவு கூர்ந்த விதத்தில் அவளுக்கு முகம் அழகுறச் சிவந்தது.

''ச்சு! நினைவுபடுத்திக் கொள்கிற விதத்தைப் பார்!'' என்று கடிந்து கொள்ள முயன்றபோதும் அவளுக்குச் சிரிப்பையும் அடக்க முடியவில்லை. இந்த மாதிரிச் சீண்டல்களும் சிலுமிஷங்களும், சிரிப்பும் தானே அவனது பிரிவை அவளுக்குத் தாங்க முடியாததாகவும் ஆக்கிவிட்டன!

''நல்...ல விஷயங்களை மறக்கக் கூடாதும்மா! அத்தோடு, கணவன் என்கிற மரியாதை இல்லாவிட்டால் போகிறது... இந்தக் காலத்தில் புருஷன், பெண்டாட்டி இரண்டு பேரும் சமம் என்றாகி விட்டதால் விட்டு விடலாம். ஆனாலும், ஐந்து வயது பெரியவன் என்பதற்காகவாவது மரியாதை கொடுத்துப் பேசம்மா!'' என்றவன், அவள் புருவம் சுருக்கி யோசிக்கவும், ''அதுதான் என்னத்தையோ 'பார்' என்றாயே! பாருங்கள் என்று சொல்ல வேண்டும், கண்மணி!'' என்று அவன் எடுப்பாகப் புத்தி சொல்ல, மீண்டும் அங்கே நகையொலி பரவியது.

கணவன் அணைப்பிலிருந்து, ஒருவாறு மீண்டு, ''சொல்ல வந்ததை ஒழுங்காகக் கேட்கமாட்டேன் என்கிறீர்களே!'' என்று மாதவி சலுகையாய்க் குறைப்படவும்,



சட்டென மிலிடரி ஸ்டைலில் நின்று, ''அம்மையாருடைய தோழியின் பெயர் சுகிர்தா! இரண்டு மில்லி மீட்டர் அதிகப்படியாக நீண்ட மூக்கு — ஆண்களுக்கு இருந்திருந்தால் ராஜகம்பீரமாய்த் தோன்றியிருக்கும்! அவளுக்கு...பரவாயில்லை! 'பன்றியின் குட்டியும் பருவத்துக்கு அழகு' என்பது போல இந்த வயதினால் பார்க்க சகிக்கும்படியே இருந்தாள்! கல்யாணப் பெண்ணாக இருந்தபோதும், அங்குமிங்கும் கண்கள் அலைந்து கொண்டே இருந்தன. நாம் வாங்கிப் போன பரிசை அப்போதே பிரித்துப் பார்த்து, 'வெள்ளி விளக்கா, தாங்க்ஸ்டி' என்றாள்! விவரங்கள் எல்லாம் சரிதானா, மேடம்?'' என்று கேட்டான் தனா.

விழிவிரித்து, வியப்பும் மையலுமாய் நோக்கினாள் மாதவி.

''ஆ....மாம்! இந்த மாதிரிப் பார்ப்பது! அப்புறம், ஒழுங்காக கேட்பதில்லை என்று குறை கூறுவது!'' என்று, அவள் மூக்கைப் பிடித்து ஆட்டிவிட்டு, ''ம், சொல்லு இப்போது. உன் தோழி சுகிர்தா தான் நமக்கு உதவப் போகும் கலங்கரை விளக்கமாக்கும்? நல்லது! நூறாண்டு காலம் அவள் நன்...றாய் இருக்கட்டும்!'' என்று ஆசீர்வதித்தான் அவன்.

சட்டென மாதவியின் முகம் மாறியது.

''என்னடா? ம்?''

''சுகிர்தா பாவம், தனா!'' என்றாள் மாதவி. ''நமக்குப் பிறகு திருமணம் ஆனவள். மணமாகி ஐந்தே மாதங்கள் தானே, ஆகிறது? அதற்குள் கணவன் மனைவி இரண்டுபேரும் பிரிந்து விட்டார்கள்!''

''வாட்!'' என்று அவன் அதிர்ந்தான்.

''ஆ....மாம் தனா! அவள் கணவன் முழு மடைய னாம்! கஞ்சனாம். தொழிலில் நல்ல வருமானம்தான். ஆனால், இவளுக்கு ஒன்று வாங்க வேண்டும் என்றால் மூக்கால் அழுவானாம்! இவளுக்கு எப்...படி இருக்கும் பாருங்கள்?!''

மனைவியின் கை விரல்களைப் பற்றி விளையாடிக் கொண்டு இருந்தவன், யோசனையோடு நிமிர்ந்து, ''அந்த ஒன்று என்பது வைர நெக்லஸ் இல்லையே!... முறைக்காதே, மாது! அன்று அவள் கணவனையும் தான் பார்த்தோமே! அவர், அப்படி ஒன்றும் மோசமாய்த் தோன்றவில்லையே!'' என்றான்.

கையை உருவிக் கொண்டு சோஃபாவில் திரும்பி அமர்ந்து கணவனை நேராகப் பார்த்தாள், மாதவி. ''சுகி சொன்னது சரியாகத்தான் தெரிகிறது! அவள் முதலி லேயே சொன்னாள், ஆண்கள் எல்லோரும் ஒரே குட் டையில் ஊறிய மட்டைகள் மாதவி என்றாள்! அவளு டைய அப்பாகூட அவள் கணவர் பக்கம் தான் பேசினா ராம்! அவளுக்கு எப்படி இருந்திருக்கும், பாவம்! அவ ளுடைய கணவர், சுகிர்தாவுக்கு நல்லதாக ஓர் உள் ளாடை வாங்கக் கூட முணுமுணுப்பாராம், இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?''

''என்னது? ஒரே குட்டையின் மட்டையா? ஐய்யோ! நானெல்லாம் அப்படி இல்லை தாயே! உனக்கு நிறைய உள்ளாடைகள் வாங்கித் தந்திருக்கி றேன்! லேஸ் நிறைய வைத்து...'' என்று தனசேகரன் கண்சிமிட்டவும், மாதவி சட்டென எழுந்து விட்டாள்.



''இதில்கூடக் கேலியா? பாவம்! ஒரு பெண்ணின் வாழ்க்கை அவலமாகி விட்டது என்கிறேன்! நீங்கள் பாட்டில் சிரிக்கிறீர்கள்! ஆண்களுக்கு இரக்கமே கிடை யாது என்று சுகி சரியாகத்தான் சொல்லியிருக்கிறாள்!'' என்று வெடுவெடுத்து விட்டு, விடுவிடுவென்று உள்ளே சென்ற மனைவியைத் தொடர்ந்து சென்று சமாதானப் படுத்தினான் தனசேகரன்.

கணவனின் அன்பில் ஈடுபட்டவளாய், ''அதில்லை தனா! சுகிர்தாவுக்கும் முன்னாலேயே மணமானவர்கள் நாம். நாம் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருக்கிறோம்! ஆனால், அவள் நிலையைப் பாருங்கள்! அதற்குள் எல்லாம் முடிந்து, தனி வாழ்க்கைக்கே வந்து விட்டாள்! அவளது துன்பத்தை நினைக்கும் போது, நாம் இவ்வளவு சந்தோஷமாய் இருப்பதே தப்பு போலக் கூட, ஒரொரு சமயம் தோன்றி விடுகிறது! நீங்கள் கேலி வேறு பேச வும்... ரொம்பவும் கஷ்டமாய் இருந்தது...'' என்றாள் அவள்.

கள்ளமற்ற குழந்தைபோல், மார்பில் துவண்டு கிடந்த மனைவியை யோசனையோடு தனசேகரன் குனிந்து நோக்கினான்.

இரு கை தட்டினால் தான் ஓசை! அந்த சுகிர்தாவின் பக்கம் பிழையே இல்லாமல், அவளுடைய கணவனுக் கும் அவளுக்கும் இடையே இந்தப் பெரும் பிளவு நேர்ந்திருக்கக் கூடும் என்று அவனால் நம்ப முடிய வில்லை.

விற்பனைத் துறையில் தனசேகரனின் வெற்றியின் அடிப்படையே, பார்த்ததும், மற்றவர்களைச் சரியாக மதிப்பிட்டு விடும் திறமை தான்.

திருமணத்தின் போது பார்த்த அளவில், அவனுக்குச் சுகிர்தா பற்றி அவ்வளவாக நல்ல அபிப்பிராயம் இல்லை! அவளுடைய கணவன் பற்றிப் பெரிய குறையும் தோன்றவில்லை!

சுகிர்தாகூட, கணவன் கஞ்சன், மடையன் என்றாளே தவிர குடி, சூது, போதை, பெண் என்ற எந்தக் குறையும் இருப்பதாகச் சொல்லவில்லையே! தொழிலிலும் கெட்டிக்காரன் என்கிறாள்...அப்படியிருக்க...

ஆனால், இதையெல்லாம் இப்போது எடுத்துச் சொன்னால் தோழியிடம் மனம் உருகி நிற்கும் மனைவி நிச்சயமாய் ஒத்துக் கொள்ளப் போவதில்லை என்பதோடு, அவர்களிடையேயும் மனநிலை கெட்டு விடக் கூடும்!

சற்று அதிக உணர்ச்சிவசப்படுகிறவள் என்றபோதிலும், மாதவி முட்டாளல்ல! அவளே ஒரு நாள் சுகிர்தாவை இனம் கண்டு கொள்வாள் என்பதும் அவனுக்கு நிச்சயமே!

எனவே, அப்போதைக்கு, ''சாரிம்மா! உன் சினேகிதி விஷயம் எனக்கு முழுவதாகத் தெரியாதில்லையா?...'' என்று சமாதானமாகப் பேசினான். ''முழு விவரம் தெரியாமல் நாம் எந்த முடிவு எடுப்பதும் தப்புதான்!'' என்று தன்னையே சொல்லிக் கொள்வது போல, அவளைக் குறிப்பாய் எச்சரித்தான்.

தொடர்ந்து, ''உன் தோழி சுகிர்தா நமக்கு உதவுகிறாள் என்பதில் எனக்கும் மிகவும் மகிழ்ச்சி தான். 'அப்பாடி' என்றிருக்கிறது. ஆனால் ஒன்றும்மா! தாயும் பிள்ளையும் என்றாலும், வாயும் வயிறும் வேறு என்பார்கள்... உன் தோழி ஏமாற்றுவாள் என்று சொல்லவில்லைடா! சிறு சிறு கவனப்பிசகுகள் எல்லோருக்கும் இயல்பு தானே? முதலிலேயே கவனமும் கணக்குமாய் இருந்து விட்டால், பிற்பாடு எந்த சலசலப்பும் இராதல்லவா? அதனால் தான் எச்சரிக்கையோடு இருக்கச் சொன்னேன்!'' என்று, வாழைப்பழத்தில் ஊசி இறக்குவது போல, மெல்லப் பொடி வைத்துப் பேசினான் அவன்.



ஆனால், அவனுடைய அப்பாவி மனைவிதான், அதைக் கண்டு கொள்ளவே இல்லை!

ஒருவாறு, அவள் அதைக் கண்டு பிடித்தபோது, காலம் வெகுவாகக் கடந்து போய்விட்டிருந்தது!

## 3

அடுத்த முறை 'டூர்' முடிந்து, தனசேகர் திரும்பி வந்தபோது வீட்டில் சிறுசிறு மாற்றங்களை அவன் காண நேர்ந்தது.

வழக்கமாக, பொருட்களை, அதது அந்தந்த இடத்தில் வைப்பதில் மாதவி பிடிவாதமாய் இருப்பாள். தினசரிப் பத்திரிகையைப் படித்து முடித்தபின், ஒழுங்காக மடித்து, டீபாயின் அடித்தட்டில் தான் வைத்தாக வேண்டும். அவளே செய்த, ஒரு செயற்கை பூங்கொத்து தவிர, டீபாய் மேல் வேறு எதுவும் இருக்கக் கூடாது. வாரம் ஒரு முறை ஒட்டடை அடித்து, மின்விசிறி துடைத்து, என்று சோம்பலின்றிச் செய்பவள் மாதவிதான். தினம் வேலைக்காரி வீடு துடைக்கும் போது, கூடவே நின்று,

மூலை முடுக்கு விடாமல் நன்றாக சுத்தம் செய்ய வைப்பாள்.

தனசேகரனும் ஓரளவு சுத்தம் பேணுகிறவன் என்ப தால், கூடச் சேர்ந்து வீட்டில் இருக்கும் நாட்களில், சோஃபாவை 'வாக்குவம் க்ளீனர்' செய்வது போன்ற வேலைகளைச் செய்து கொடுப்பான்.

எனவே, இரு திறத்து மாமியார், மாமனார்களும் மெச்சும் வண்ணம் வீடு எப்போதும் பளிச்சென்றே இருக்கும்.

அந்த முறை, வீட்டின் வழக்கமான பளிச்சென்ற தோற்றம் சற்றே குறைந்தாற்போல அவனுக்குத் தோன்றி யது.

ஏதோ அவசர வேலை! எதனாலோ பலநாள் செய்யாமல் விடப்பட்டு, இன்று அவசர அவசரமாகச் சீர்ப்படுத்த முயன்றிருப்பதைத் தனசேகரனால் ஊகிக்க முடிந்தது.

எந்த வேலையையும் மாதவி அரைகுறையாக விடு கிறவள் அல்ல; ஏனோதானோ என்று செய்கிறவளும் இல்லை! முடியாமல்....

அவசரமாக மனைவியைப் பற்றித் திருப்பிக் கவ லைக் கண்ணுடன் தனசேகரன் அவளை ஆராய்ந்தான்.

''என்னப்பா?''

''உனக்கு, உடம்புக்கு ஒன்றும் இல்லையே!'' என் றான் அவன்.

''இல்லையே, ஏன்?''



''ஒன்றுமில்லை...'' என்றவனின் பார்வை அவன், சற்று முன் குறை கண்ட இடங்களை சிறு வியப்புடன் நோக்கவும், மாதவியின் முகம் லேசாகச் சிவந்தது.

''வந்து...படம் வரைந்து கொண்டே இருந்ததில், இதெல்லாம் ஒழுங்காகச் சுத்தம் செய்ய நேரமில்லாது போயிற்று...சாரி, தனா!'' என்றாள் இறங்கிவிட்ட குரலில்.

''ஏய்! இதற்கெல்லாம் 'சாரி' என்ன? நீ சோம்பேறி அல்ல என்று எனக்குத் தெரியும். அதனால் தான், உடம்பு கிடம்பு சரியில்லையோ என்று பயந்து விட்டேன்! வேறொரு வேலையில் ஈடுபட்டிருந்ததால் உனக்கு நேர மில்லை! அவ்வளவு தானே? நாளை மறுநாள், ஞாயி றன்று நாம் இருவருமாகச் செய்வோம்!'' என்று அவன் இதமாகப் பேசவும், அவளுக்கு உள்ளம் நெகிழ்ந்து போயிற்று.

எவ்வளவு அருமையான கணவன் அவளுக்குக் கிடைத்திருக்கிறான்! பார்த்துப் பார்த்து செய்தாலும், குற்றம் குறை கண்டுபிடிக்கிறவர்களே நிறைந்து கொண்டி ருக்கும் இந்த உலகில், தனசேகரனைப் போல ஒரு நல்லவனை எங்கே பார்க்க முடிகிறது.

சுகிர்தாவின் 'பொட்டிக்'கில் உட்கார்ந்திருக்கும் வேளைகளில், ஒரொருவர் சொல்வதைக் கேட்கும் போது...சே!

நளினி என்று ஒரு பெண், வேலைக்காரி வீடு துடைத்தது சரியாயில்லை என்று தானே துடைத்தாளாம். மொசைக் தரை பளபளவென்று இருப்பதைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தாளாம்! கடைசியில் வீடு வந்த கணவனி

டம் தரையைக் காட்டித் தான் துடைத்தது பற்றிக் கூறிப் பெருமைபட்டாளாம்.

அவன் சொன்னானாம்...''அவசியமே இல்லாமல் மெனக்கெட்டிருக்கிறாய்! வேலைக்காரியே நன்றாகத் துடைத்து விடுவாள்!'' என்றானாம்.

''இல்லை என்றேனே! அவள் வீடு துடைத்தது சுத்தமாய் இல்லை என்று தான் நானே..'' என்றவளை இடைமறித்து, ''எப்படி அவளால் முடியும்? ஒரு மூட்டைப் பாத்திரம் போடுகிறாய்! அதைத் துலக்கி முடிக்கு முன் பாவம், அவளது கை கால் ஓய்ந்து போகிறாள். நீ பாதி பாத்திரங்களைத் துலக்கி விட்டாள், அவளுக்கும் தென்பு இருக்கும்; அவளே தரையை நன்றாய்த் துடைப்பாள். பெரிதாகச் சொல்ல வந்து விட்டாயே!'' என்று அப்போதும் அவள் மீது தான் அவள் கணவன் குறை கூறினானாம்.

பாதிப் பாத்திரம் இவள் துலக்க வேண்டும் என்றால், வேலைக்காரி எதற்கு? நமக்கு உதவிக்கு வேலையாளா? அல்லது வேலையாளுக்கு உதவி செய்ய நாமா? அப்படியே, வேலை செய்கிறவளுக்கு உதவி செய்து தான் ஆகவேண்டும் என்றால், பாத்திரம் தான் துலக்க வேண்டுமா? தரை சுத்தம் செய்யக் கூடாதா? அப்படி எண்ணியேனும், 'நன்றாய்ச் செய்தாய்' என்று ஒரு வார்த்தை அவளிடம் நல்லபடியாகச் சொல்லிவிடக் கூடாதா? எப்போதும் குட்டிக் கொண்டே தான் இருக்க வேண்டுமா?

இன்னோரன்ன கேள்விகளால் கணவன்மார்களும், அவர்களோடு புகுந்த வீட்டினரும் அலசி ஆராயப்படுவதை மாதவி பலமுறை கேட்க நேர்ந்தது உண்டு.



சுகிர்தாவும் அவர்களோடு கூடப் பேசுவாள். 'ஆமாம், ஆமாம்' என்று ஒத்துப்பாடியபடியே தன் விற்பனையையும் கவனிப்பாள்.

சுகிர்தாவுடைய கணவனும் சரியில்லைதானே?

அந்தப் பேச்சுகளை எல்லாம் கேட்கும் போது, மாதவிக்கு, அவள் எவ்வளவு அதிருஷ்டசாலி என்று உள்ளூரப் பூரித்துப் போவாள்.

அதே பூரிப்பு இப்போதும் மனதில் பொங்க, மையலுடன் கணவனை அணுகி, அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்!

அப்புறம்...அவளாக வரும்போது, அவன் விடுவானா என்ன?

சொன்னது போல, ஞாயிற்றுக்கிழமை வந்தபோது, வீட்டுப்பணியில் தனசேகரன் முனைய, மாதவியும் அவனுக்குக் கூடமாட ஒத்தாசை செய்தபடியே, கணவனுக்குப் பிடித்தமான சமையலில் ஈடுபட்டாள்.

பேச்சும் சிரிப்புமாக வீடு சுத்தமும், சமையலும் நடந்தன. உணவும் அதையடுத்த சிறு ஓய்வும் முடித்து கொஞ்சம் வெளியே போய் வந்தபின், இருவருமாக அவரவர் வேலையில் ஈடுபட்டனர்.

தனசேகரன் தன் 'டூர் ரிப்போர்ட்' தயாரிப்பதில் இறங்க, மாதவி, தன் சித்திரத்தில் மூழ்கினாள்.

சுமார் ஒரு மணி நேரம் தீவிர வேலையின் பின், தனசேகரன், மனைவியை அழைத்தான். ''மது, ஒரு கப் காஃபி தருகிறாயா?'' என்று கேட்டான்.

தான் வரைந்து கொண்டிருந்த தஞ்சாவூர் சித்திரத்தில் '000 பிரஷ்'சைக் கொண்டு, அதன் மெல்லிய பூ வேலையை, முழுக்கவனத்துடன் செய்து கொண்டிருந்த மாதவி,- பார்வையைப் படத்தில் இருந்து அகற்றாமல் தொடர்ந்து வரைந்தபடி, ''காஃபிதானே? நீங்களே கலந்து கொள்ளுங்களேன். உங்களுக்குத்தான் காஃபி போடத் தெரியுமே! காஃபி மேக்கரில் 'டிகாக்ஷன்' கூட இருக்கிறது.... கலந்து சூடுபண்ணிக் கொள்ளுங்கள்'' என்றாள் படத்திலேயே கவனமாக.

கால்குலேட்டரில் கண்ணும், கணக்கு எழுதியிருந்த காகிதத்தில் ஒரு விரலுமாக அமர்ந்திருந்த தனசேகரனின் முகத்தில் எரிச்சல் பரவியது. ''மதூ, இந்தக் கணக்கை இப்போது விட்டால், எல்லாமே, குழம்பிப் போகும்டி...'' என்றான் குரலில் எரிச்சல் தெரியாமல் காத்து.

''படத்தை இப்போது விட்டால் பெயிண்ட் கலவை கெட்டிப்பட்டுப் போய் படம் சரியில்லாமல் போகும், தனா!''

சற்று நேரம் அங்கே சத்தமற்றுப் போயிற்று.

அசையாமல் அமர்ந்திருந்த தனசேகர் விழிமட்டும் அசைத்து மனைவியைப் பார்த்தான்.

நான்கு சிறு குழல் விளக்குகள் சேர்ந்து அதிகப்படி ஒளிபாய்ச்ச, தன் சித்திரத்தில் உலகம் மறந்து கணவனையும் சேர்த்துத்தான் மறந்து மாதவி லயித்திருந்தாள்.

தனசேகரனின் முகம் சுருங்கியது.

இன்னொன்றில் ஈடுபட்டால் என் பிரிவை மறப்பாள் என்று நானே உந்தியது தான்! ஆனால் இவள் இதில் ஈடுபட்டு என்னையே மறப்பதா? இன்று இவளுக்கு வீட்டில் இவ்வளவு உதவி செய்கிறேன். வெளியே அழைத்துப் போய் மனைவி ஆசைப்பட்டாளே என்று கண்ணாடி பதித்த சுரிதார் வாங்கிக் கொடுத்து, இப்போது மூச்சு விடக் கூட மறந்தவள் போலத் தீட்டிக் கொண்டு இருக்கிறாளே, இந்த 'போஸ்டர் கலர்' வாங்கிக் கொடுத்து அலைந்து திரிந்து விட்டு வந்தால், முணுமுணு என்று தொடங்குகிற தலைவலிக்காக ஒரு காஃபி கேட்டால்... அவனே கலந்து கொட்டிக் கொள்ள வேண்டுமாமா? அவனது முக்கியத்துவம் அவ்வளவுதானாமா? இப்போது இந்தப் படத்தை...



சட்டெனத் தலையை உலுக்கி விட்டுக் கொண்டான் தனசேகரன்.

என்ன இது? தன்னைத் தவிர மனைவிக்கு வேறு நினைப்பே இருக்கக் கூடாது என்று எண்ணும் பழங்காலக் கணவன் போலல்லவா அவனும் எண்ணத் தொடங்கி விட்டான். சேச்சே! தான் ஒன்றும் ஆணாதிக்கம் பிடித்த முட்டாள் அல்லவே! ஒரு நல்ல கலையில், அவளுக்கு இருக்கும் ஈடுபாட்டைப் பாராட்ட வேண்டுமே தவிர, குறைப்படுவதோ, கோபப்படுவதோ சரியில்லை. அதுவும் மனைவியை தன்னில் ஒரு பாதியாக தனக்குச் சமமாக நினைக்கும் அவனைப் போன்ற ஒரு முற்போக்கு வாதிக்குத் தகுதியானது அல்ல!

ஆனாலும், அப்போது எழுந்து சென்று காஃபி போடுவதில் ஈடுபட்டால், கணக்குக் குளறுபடியாகி விடும் என்பதால், தலைவலியின் முணுமுணுப்பைப் பிடிவாதமாக அலட்சியம் செய்தபடி தனசேகரன், வேலையில் ஈடுபட்டான்.

ஆனால் அவனது பிடிவாதத்தை மீறிக் கொண்டு, தலைவலி தான் இருப்பதை நிலையுறுத்திக் காட்டியது. ஒருவாறாக, தனசேகரன் வேலையை முடித்தபோது அவனது தலை விண்விண் என்று தெறிக்கத் தொடங்கி விட்டது.

ஆனால், இரவாகி விட்டதால், இனி காஃபி அருந்துவது, இரவுத் தூக்கத்தைப் பாதிக்கும் என்பதால், பேசாமல் போய், பல் 'பிரஷ்' செய்து, உடல் கழுவிவிட்டுப் படுக்கையில் விழுந்தான் அவன்.

மாதவி, படத்தை ஒரு நிலையில் கொண்டு வந்து நிறுத்தியபோது இரவு பதினொன்றுக்கும் மேலாகி விட்டது.

தன் வேலைகளை முடித்துக் கொண்டு வந்தவள், அவன் அயர்ந்து உறங்குவதைக் கண்டதும், அவன் தூக்கம் கலைந்து விடாமல் சத்தமின்றிப் படுக்கையில் ஏறிப் படுத்தாள்.

மறுநாள் காலையிலேயே விழித்தெழுந்து, கணவனுக்குப் பிடித்த பரோட்டாவும், 'கோஃப்டா' குருமாவும் செய்வதில் ஈடுபட்டாள்.

பொதுவாகத் திங்களன்று காலை உணவு சற்றுக் கனமானதாய் இருக்க வேண்டும் என்று, தனசேகரன் பிரியப்படுவான்.

எப்போதும், ஞாயிறு லீவு நாளை அடுத்து வருவதால், திங்களன்று வேலை அதிகமாய் இருக்கும்; வயிற்றுக்குள் கொஞ்சம் கனமாகக் கிடந்தால் தான் சமாளிக்க முடியும் என்பான். தனி ஆளாய் இருந்தபோது, பரோட்டாக் கடையில் ஒரு மொக்கு மொக்கி விட்டுப் போவது வழக்கம் என்று அவன் சொன்னதிலிருந்து, மாதவி எப்போதுமே திங்கள் கிழமைகளில் காலை உணவுக்குப் பரோட்டாதான் செய்வது. கோஃப்டா கரி, பக்கோடா குருமா, காய்கறி குருமா என்று தொடுகறிகள் தான் வேறுபடும்.



முன் தினம் அறவே மறந்துவிட, அவன் காலை உணவை ஒரு வெட்டு வெட்டிவிட்டு, செய்த கைக்கு முத்தம் தந்துவிட்டு அலுவலகம் கிளம்ப, அவள் உச்சி குளிர்ந்து நின்றாள்.

மாலையில், அவளுக்குப் பிடித்த ரசமலாயைத் தனசேகரன் வாங்கி வந்தான்.

ஆனந்தம், ஆனந்தம் என்று வாய்விட்டுப் பாடாத குறையாகச் சில தினங்கள் கழிந்தன.

அன்று, அவள் வரைந்து முடித்த சித்திரங்களை இருவருமாகச் சென்று சட்டமிடக் கொடுத்துவிட்டு வந்தார்கள்.

எல்லாப் படங்களிலும் வலப்புறம் மூலையில் ஒரே மாதிரியான சித்திர வேலைப்பாட்டை பார்த்துவிட்டு, ஊன்றிக் கவனித்தவனுக்குச் சிரிப்போடு பெருமையும் உண்டாயின.

''சித்திரக்கார அம்மையாரின் முத்திரையாக்கும்! அதென்ன, எல்லாம் என் பெயரின் ஆங்கில எழுத்தையே ''D', 'D' என்று வரைந்து வைத்திருக்கிறாய்? சித்திரத்தைத் தீட்டுவது நீ, பெயர் என்னதா? சில ஆண் எழுத்தாளர்கள் பெண் பெயரைப் புனைப்பெயராக வைத்துக் கொள்வது போல, நீ என் பெயரில் வரைகிறாயா?'' என்று மகிழ்ச்சியுடன் வினவியவன், அவள்

முகத்தில் லேசான சிரிப்பைக் காணவும் ''என்ன என்ன'' என்று துருவினான்.

''உங்கள் முதல் எழுத்து வெறுமையாகவா இருக்கிறது?'' என்று கண்களில் மையலும், குரலில் குழைவுமாகக் கேட்டாள் மாதவி.

மீண்டும் படத்தைப் பார்த்து விட்டு, ''ம்ம்.... எழுத்து மேல்....எழுத்தைச் சுற்றிப் பின்னிப் பிணைந்து ஒரு கொடி... கொடியில் இலைகளோடு வெண்ணிறப் பூக்கள்! ஆகாகா! கண்டுபிடித்து விட்டேன்! என் முதல் எழுத்தின் மீது, மாதவிக் கொடி பின்னிப் பிணைந்து படர்ந்து கிடக்கிறதாக்கும். உவமையா? உருவகமா? வீட்டில் நாம் இருவரும் போல...'' என்று குரல் தணித்துக் குறும்பாகத் தனசேகர் கண்சிமிட்ட, மாதவியின் முகம் குங்குமமாய்ச் சிவந்து போயிற்று.

''ஷ், என்ன நீங்கள்? பொது இடத்தில் வைத்து, என்ன பேசுவது என்று இல்லையா?'' என்று கிசுகிசுப்பாய்க் கணவனைக் கண்டித்தாள் அவள்.

'ஓ'வென்று அவன் வாய்விட்டுச் சிரித்தான். ''அம்மையார் என்ன ஒளிவுமறைவாகவா முத்திரை பதித்திருக்கிறீர்கள்? பெயர் பார்த்துக் கண்டு பிடிக்கிறவர்கள் என்ன நினைப்பார்களாம்?'' என்று விடாமல் கிண்டல் செய்தான்.

''ஐயா, ப்ளீஸ், சும்மா இருங்களேன்! இந்த அளவு விளக்கம் எல்லாம் பார்க்கிறவர்களுக்குப் புரியாது! சும்மா ஒரு முத்திரை என்று தான் நினைப்பார்கள்!''

''ஆனால், உன் 'ஐடியா' நான் சொன்னது தானே! வா.வா. இன்று வீட்டுக்குப் போனதும்...''



வெட்கமும், பூரிப்புமாக அவள் சிரிப்பை அடக்க முயன்று தோற்றுக் கொண்டு இருந்தபோது தான், ''ஹலோ மாது! என்ன இந்தப் பக்கம்?'' என்று ஒரு பெண் குரல் கேட்டது.

அவசர அவசரமாக சிரிப்பை அடக்கிக் கொண்டு திரும்பிய மாதவியின் முகத்தில் தப்பு செய்து மாட்டிக் கொண்ட குழந்தையின் தவிப்பு இருந்தது ஒரு சில கணநேரம் தான்.

உடனேயே, முகம் மலர்ந்து விட, ''சுகிர்தா!'' என்றாள் உற்சாகத்துடன். ''படங்கள் சட்டமிடக் கொடுக்க வந்தோம், சுகி, தனா, இவள்தான் என் சினேகிதி, சுகிர்தா! அடையாளம் தெரிகிறது இல்லையா? சுகி, உனக்கு இவரை நினைவிருக்கிறதா? எங்கள் திருமணத்துக்கு நீ வந்தாய்...உன் திருமணத்துக்கும் நாங்கள் இருவரும் வந்திருந்தோம்'' என்று கணவனையும் தோழியையும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தாள்.

''நன்றாகவே நினைவிருக்கிறது! ஆனால், எங்கள் திருமணத்தின் போது உங்களைப் பார்த்த நினைவு எனக்கு இல்லை! அப்போது மது தவிர வேறு யார் முகமும் என் கண்ணிலோ கருத்திலோ பட்டதாக எனக்கு நினைவில்லை! படவே இல்லைதான். சர்வம் மாதவி மயம்! ஆனால், உங்கள் திருமணத்தின் போது உங்களைப் பார்த்த ஞாபகம் எனக்குத் தெளிவாய் இருக்கிறது!'' என்றான் தனசேகரன் இலகுவாய்ச் சிரித்தபடி.

கணவனின் கேலியில் மாதவியும் புன்னகை புரிந்தாள்.

ஆனால், ''ஏன்? ஒரே மாதத்தில் வேறு முகம் தேடத் தொடங்கி விட்டீர்களா?'' என்ற சுகிர்தாவின் ஏளனப் பேச்சு அபசுரமாய் ஒலித்து இருவரையும் அதிர வைத்தது!

## 4

ரொம்பவும் சாதாரணமான, ஓரளவு அறதப் பழசான கேலிதான். 'ஒரு நூறு ஆண்டு காலம் பயன்படுத்தித் தொத்தலாகி விட்ட கேலி' என்று சுகிர்தா, விளையாட்டாகவே குட்டியிருக்கலாம்.

ஆனால், அவள் பேசிய விதத்தில், தனசேகரனின் முகம் இறுக, மாதவியின் சிரிப்பும் துணி கொண்டு துடைத்தாற்போல மறைந்துவிடத் திகைப்புடன் தோழி முகத்தைப் பார்த்தாள் அவள்.

மாதவியின் பார்வையைச் சந்தித்த சுகிர்தா உடனே சோகமயமானாள். ''சாரி, மாதவி, திருமணம் என்ற வார்த்தையே எனக்கு வெறுத்து விட்டது. அதுவும், எனக்குத் திருமணம் என்று நடந்ததே, ஒரு கேலிக்கூத்து! அதைப் பற்றி யார் பேசினாலும், பற்றிக் கொண்டு வந்து விடுகிறது. யார், என்ன என்று பாராமல் ஏதாவது கடுமையாகப் பேசி விடுகிறேன்...தயவு செய்து என்னை மன்னியுங்கள், மிஸ்டர் தனசேகரன்! ப்ளீஸ்...!என்னைத் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்!'' என்று மன்றாடும் குரலில் மன்னிப்புக் கேட்டாள்.

''ஏய், என்ன நீ? இதற்கெல்லாம் போய் மன்னிப்பு மண்ணாங்கட்டி என்று கேட்டுக் கொண்டு! இவர் எப்போதும் கொஞ்சம் கிண்டல், கேலியாகத்தான் பேசுவார்! யாரையும் தப்பாக நினைக்கவும் மாட்டார்! விடு'' என்றாள் மாதவி.



உதட்டால் சிரித்து, ''ஆமாம், விட்டு விடுங்கள்'' என்றான் தனசேகரன் தானும் மனைவியை ஒத்து.

சுகிர்தா தன் வேலையைப் பார்க்க விரைவிலேயே கிளம்பி விடுவாள் என்று, கணவன் மனைவி இருவருமே எதிர்பார்த்தனர்.

ஆனால், அவளோ நின்று பேச்சுக் கொடுத்ததோடு அல்லாமல், ''தனி...யாக ரொம்பவும் போரடித்தது? மொட்டைப் பனைமாதிரித் தனி வாழ்வு தானே என் வாழ்வு! அது தான் இப்படிக் குருட்டாம்போக்காய் நடந்து கொண்டே இருந்தேன்! நல்லவேளையாக உங்களைப் பார்க்க முடிந்தது...'' என்று மகிழ்ச்சி வேறு காட்டினாள்.

இவளிடம் போய், 'இருவர் தனிமை! மூவர் கூட்டம்!' என்று இரக்கமின்றிச் சொல்வது எப்படி? அத்தோடு, நாகரீகம் என்றும் ஒன்று இருக்கிறதல்லவா?

அந்த நாகரீகம் கருதியே, ''வாருங்களேன்! அருகில் தான் 'சங்கீதா' இருக்கிறது. செட்டிநாடு சிற்றுண்டி வகையறா சுவையாக இருக்கும். ஒரு காஃபியோடு ஏதாவது சாப்பிட்டு விட்டு வரலாம்'' என்று தனசேகரன், அவளையும் உடன் அழைத்தான்.

''நான் எதற்கு உங்களுக்கு இடையில்?'' என்று சுகிர்தா பிகு பண்ணிக் கொள்ள, தனசேகரன் ஒப்புக்காக ஒரு தரமும், மாதவி உண்மையாகவே பல முறையும், உடன் வருமாறு அழைக்க, ஏதோ பெரிதாக விட்டுக்

கொடுக்கிறவள் போலத் தயக்கம் காட்டியபடியே, அவர்களோடு, சுகிர்தாவும் ஓட்டலுக்குப் போனாள்.

மூவருமாகப் பேசிக் கொண்டே உண்டனர்.

பேச்சுவாக்கில், தனசேகரன், கிட்டத்தட்ட இந்தியா முழுவதுமே சுற்றி வந்திருப்பது தெரிய வந்தது.

தலைசரித்து, கிண்டல் பண்ணுகிறவள் போல, ''நல்ல நல்ல ஊருக்கெல்லாம் போகிறீர்கள்; எங்கள் மதுவை உடன் அழைத்துப் போவதில்லையா? ஒரு வேளை, அவளைக் கூட்டிப் போவது, உங்கள் காரியங்களுக்கு இடைஞ்சலாகி விடும் என்று, அவளைத் தனியே விட்டு விட்டுப் போய் விடுகிறீர்களோ?'' என்று சுகிர்தா, விழிவிரித்து வினவினாள்.

''அவரோடு கூடப்போவதா? அவர் வேலை வேலை என்று அலையும்போது, நான் தனியாக ஓட்டல் அறையில் அடைந்து கிடக்க வேண்டியிருக்குமே! மொழி தெரியாத இடங்களில் அப்படிக் கிடப்பதைவிட, இங்கேயே இருந்து விடுவது மேல்!'' என்றாள் மாதவி அவசரமாய்.

''உங்கள் பேச்சில், பிழைகள் மலிந்து கிடக்கின்றனவே!'' என்றான் தனசேகரன் நிதானமாய். ''ஏகப்பட்ட திருத்தங்களும் தேவைப்படுகின்றன! ஒன்று, நான் நல்ல நல்ல ஊர்களுக்குப் போகிறேன் என்பது! என் வேலை உர விற்பனை. ஆகவே, அந்த 'நல்ல நல்ல' நகரங்களில் இருந்து கொண்டு, ஊர் சுற்றிப் பார்ப்பதன் இடையே என் வேலையையும் கவனிப்பது என்று செய்ய முடியாது! நான் உரம் விற்க வேண்டும். சுற்று வட்டாரத்தில் உள்ள விவசாயக் கிராமங்கள் தான் என் இலக்கு. ஒரு 'டூர்' போனேன் என்றால், தினமும் பல நூறு கிலோ



மீட்டர் தூரம், மோசமான ரோடுகளில் ஜீப்பில் சுற்ற வேண்டியிருக்கும்! பூனா போகிறேன் என்றால், பூனா ரயில் நிலையத்தில் இறங்குவதோடு, அந்த 'நல்ல' ஊருக்கும் எனக்கும் உள்ள தொடர்பு முடிந்து போகும். பிறகு, திரும்பி வந்து ரயிலைப் பிடிக்கும்போது தான் அடுத்த தொடர்பு! மீதி நாள் எல்லாம், பூனாவைச் சுற்றிலும் உள்ள கிராமங்களில் தான் வாசம். அங்கெல்லாம் உருப்படியாகச் சாப்பிடக் கொள்ளக்கூட சரியான ஓட்டல் இராது! தங்குவதற்கு ஏது? பெரும்பாலும், டீலர்களின் தயவில் தான் உணவு, தூக்கம், குளிப்பு எல்லாம் நடத்தியாக வேண்டும்! இரவானால், அவசரமாக, ஒதுக்குப்புறமாய் ஓர் அறையைத் தயார் பண்ணித் தருவார்கள். அதில் தான் உறங்கியாக வேண்டும். 'நல்ல நல்ல' ஊருக்கெல்லாம் போய் நான் நாசூக்காய் ஏசியில் உட்கார்ந்து விட்டு வருவதாக நீங்கள் நினைப்பது, ரொம்பப் பெரிய தப்பு! என்னவோ, நான் அவளைப் பிரிந்து சென்று ஜாலியாக அலைந்து திரிவதற்கு அவள் உடன் வருவது இடைஞ்சலாகி விடும் என்று அவளை நான் விட்டு விட்டுப் போவதுபோல நீங்கள் கூறியது அதை விடப் பெரிய தப்பு'' என்றான் அவன் விளக்கமாக. ''நானே ஒட்டில் தொற்றிக் கொண்டு ஊர் ஊரரய் அலையும் போது இவளை எங்கே ஏற்றி, எப்படி அழைத்துச் செல்வது? நான் செல்லும் இடங்களின் இயற்கைக் காட்சிகளை ரசிப்பதற்கு என்றால், வயல் வெளிகள் இங்கேயும் தான் இருக்கின்றன. அவற்றைப் பார்க்க, அவ்வளவு தூரம் சிரமப்பட்டுச் செல்ல வேண்டியது இல்லை!''

ஓரக்கண்ணால் மாதவியைப் பார்த்துவிட்டு, ''அம்மாடியோவ்! இனி மேல் மாதவிக்காக ஒரு வார்த்தை

வாயைத் திறக்க மாட்டேனப்பா? கிடைத்தது வாய்ப்பு என்று விளாசித் தள்ளி விட்டீர்களே!'' என்று சுகிர்தா வேடிக்கை போலவே தொடர்ந்து கூறி முடித்தாள்.

ஆனால், மாதவியின் முகம் கலங்கி விட்டிருந்தது. ''நீங்கள் என்னிடம் சொன்னதே இல்லையே! இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டா இருக்கிறீர்கள்? ஒவ்வொரு பயணம் முடிந்து வரும்போதும் ஒரு சுற்று மெலிந்து வருகிறீர்களே ஏன் என்றால், 'உன்னைப் பிரிந்து தான் கண்ணே!' என்று வசனம் பேசினீர்களே! பார்த்தால், சாப்பாடு தண்ணீருக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டு அல்லவா அலைந்திருக்கிறீர்கள்?'' என்றாள் கண்ணீர் குரலில்.

இருக்கையை மனைவியோடு ஒட்டிப் போட்டுக் கொண்டு, ''ஷ் என்ன மது இது? பார், உன் தோழிக்கு எப்படி இருக்கும்? அதுவும் அவர்கள் கிளம்புகிற நேரத்தில் 'ஊளு, ஊளு' என்பார்களா? நம் விஷயம் பிறகு பேசலாம். இப்போது சிரித்த முகமாய் அவர்களுக்கு விடை கொடு! ம்! உன் சினேகிதி இப்போது நம் விருந்தாளி! முகம் வாடவிடக்கூடாது. புன்னகையோடு அனுப்பி வை!'' என்று தணிந்த — ஆனால் சுகிர்தாவுக்குக் கேட்கும்படியாகவே கூறினான்.

வேறு வழியின்றி ''ஆமாம், மாதவி. எனக்கும் நேரமாகி விட்டது!'' என்று சுகிர்தாவும் எழுந்தாள். ''பாவம்! உன் கணவர் எனக்கு அளித்த விளக்கம், உன்னை அழ வைத்து விட்டது. இனி, உன் கண்ணீரை மாற்ற என்ன பாடுபட்டு அவர் என்ன என்ன சொல்ல வேண்டியிருக்குமோ! சாரி, மிஸ்டர் தனசேகரன், உங்களை அனாவசியமாய்ச் சிரமப்பட வைத்து விட்டேன்!



வருகிறேன்!'' என்று விடை பெற்றுக் கொண்டு, ஒருவாறாக, அங்கிருந்து கிளம்பிச் சென்றாள்.

அவள் சென்ற திசையை வெறுப்புடன் நோக்கி விட்டு, பார்வையைத் தனசேகரன் மனைவியிடம் திருப்பினான்.

அவள் குனிந்து, பிறர் அறியாமல் கண்களைத் துடைத்துக் கொண்டு இருந்ததைக் காணவும் அவன் பார்வை கனிந்தது.

'பில்' கொண்டு வருமாறு சைகை செய்து விட்டு, மனைவியின் அருகே அமர்ந்து, அவள் கையைப் பிறர் அறியாமல் அழுத்தி விட்டான். ''மது, நீ நினைக்கிற மாதிரி என் வேலை ஒன்றும் சிரமமானது அல்லடா!'' என்று அவன் மென்குரலில் கூறியதற்கு அவள் பதிலே சொல்லவில்லை.

வீடு வந்து சேர்ந்ததும், ''நீங்கள் இந்த வேலையை விட்டு விடுங்கள், தனா!'' என்று மாதவி கூறவும், அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

கணவன் கஷ்டப்படுகிறான் என்று மனைவி மனம் உருகிக் கொண்டு இருக்கிறாள்: அப்படி அவள் உருகும் படி ஆகிவிட்டதே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தவன், அவன். ஆனால், அவனுடைய அருமை மனைவி, ஒருபடி மேலே போய், அவனது கஷ்டம் தீர இப்படி ஒரு வழியையும் கண்டுபிடிப்பாள் என்று அவன் எதிர் பார்க்கவே இல்லை.

அவள் கண்டுபிடித்த வழியில், அவனுக்குத் திகைப்புடன் சிரிப்பும் வந்தது. எனவே, ''செய்யலாம்! ஆனால் அப்புறம் 'புல்வா'வுக்கு என்ன செய்வதாம்?'' என்று

இலகுவாய்க் கேட்டு விட்டு, ''காற்றை உண்டு உயிர் வாழ்வேன்'' என்று பழைய கால நாக கன்னிகைப் பாட்டைப் பாடியபடி கண்ணால் நகைத்தான்.

''விளையாடாதீர்கள், தனா! நான் சீரியசாகத்தான் பேசுகிறேன். இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு நீங்கள் ஒன்றும் இந்த வேலை பார்க்க வேண்டாம்!'' என்றாள் அவள் தீர்மானமான குரலில்.

''வேலையை விட்டு விட்டால் சம்பாத்தியத்திற்கு என்ன வழி? இந்த வேலைக்காக நிறுவனம் தரும் வாடகைப் படியில்தான் இவ்வளவு பெரிய வசதியான வீட்டில் நாம் வசிக்க முடிகிறது! நினைத்தாற்போல சைனீஸ், செட்டிநாடு என்று போகிறோம்; பிடித்தால் துணிமணி, சிறு நகைகள் கூட வாங்குகிறோம்; எல்லாம் போகக் கணிசமாய்ச் சேமிக்கவும் செய்கிறோம்! இதை விட்டு விட்டு, சோற்றுக்கு லாட்டரி அடிப்பதா? சொல்லு! வேறு வேலை கிடைப்பது அப்படி ஒன்றும் எளிதல்லடா!''

''இந்த வசதிகள் எல்லாம் இல்லாமல்கூட, சுகமாகவே வாழலாம், தனா! சாதாரணமாய்ச் சாப்பிடும் அளவுக்கு ஒரு சின்ன வேலை போதும்!''

''உதைக்க வருவார், உன் அப்பா! என் பெற்றோரும் தான் . என்னாய்யா, உன் வருமானத்தைப் பார்த்து, அதில் என் மகளை ராஜபோகமாய் வைத்துக் கொள்வாய் என்று நம்பித்தானேய்யா பெண்ணைக் கொடுத்தேன்; மடத்தனமாய் தூக்கிவீசிவிட்டு வந்து விட்டாயே என்று உன் அப்பா கேட்கும்போது அவரிடம் நான் என்ன பதில் சொல்லட்டும்? மாமா அப்படிக் கேட்க மாட்டார் என்று சொல்லாதே. நம் திருமணத்துக்கு முன்,



எங்கள் அலுவலகத்தில், அவர் என் சம்பளம் பற்றி 'ரகசிய' மாக விசாரித்தது எனக்குத் தெரியும்.''

''...வந்து...நான் நியை...ய்யப் படங்கள் வரைந்தால்....

''இப்போது நானே உன்னை உதைப்பேன். படம் வரைவது உனக்கு ஓர் உற்சாகமான பொழுதுபோக்கு. அவ்வளவுதான். அதற்கு மேல் நீ முதுகு ஒடிய, கை, கால் வலிக்க, வரைந்து சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய தேவை ஒன்றும் கிடையாது! மது, கொஞ்சம் காதைக் கொடு! உனக்கு ஒரு ரகசியம் சொல்கிறேன். இன்று ஓட்டலில், அந்த சுகிர்தா ஒரு மாதிரிப் பேசினதால் தான், நான் அப்படிக் கஷ்டம்; இப்படி சிரமம் என்றெல்லாம் சொன்னது. நான் கூறியதில், பெரிய நகரங்களில் தங்க முடியாது என்பது மட்டும் தான் நிஜம். மற்றபடி என் சாப்பாடு, தங்கும் இடம் எல்லாம் நம் டீலர்கள் நல்லபடியாகவே பார்த்துக் கொள்வார்கள். கவலையை விடு'' என்றான் தனசேகரன் உற்சாகமூட்டும் விதமாய்.

''ம்ம்...'' என்று கணவனை மாதவி யோசனையோடு நோக்கினாள். ''நீங்கள் முதலில் சுகிர்தாவைச் சமாளிப்பதற்காகச் சொன்னது தான் மெய்யாயிருந்தது. இப்போது என்னைத் தேற்றுவதற்காகச் சொல்வது தான் பொய்யாக இருக்குமோ என்று, எனக்கு ஒரே சந்தேகமாக இருக்கிறதே! இப்போது மட்டும், நீங்கள் உண்மை பேசுகிறீர்கள் என்று நான் எப்படி நம்புவது? சொல்லுங்களேன்!''

''போச்சுடா!'' என்று கைவிரித்தான் கணவன். தலையைச் சொறிந்து யோசித்து விட்டு, ''இதோ பார்,

நம் அன்பின் மீது ஆணையிட்டு சத்தியம் செய்தால் நம்புவாயில்லையா? உன்னிடம் நான் பொய் சத்தியம் செய்ய மாட்டேன்! தெரியுமல்லவா? இப்போது, நன்றாகக் கேட்டுக் கொள். இந்தப் பயணங்களில், அதிக நேரம், அதிக தூரம் நான் சுற்றி அலைய நேர்வது உண்மை தான். விற்பனை செய்யப்போவது உரம். உரத்தைப் பயன்படுத்துபவர்கள் இருக்கும் இடம் தேடித்தான் போக வேண்டும். சற்றுப் பெரிய கிராமங்களுக்கெல்லாம் சென்று வாடிக்கை பிடிக்க வேண்டும். ஆனால், எங்கும் நான் தனியே செல்ல வேண்டியிராது. அந்தந்தப் பகுதியில் விற்பனை உரிமை எடுத்திருக்கும் டீலர் என்னோடு கூடவே வருவார். விற்க விற்க, அவருக்கும் விகிதப்படி வருமானம் அதிகம்தானே? அத்தோடு, இந்த 'டீலர்'களை மாற்றும் அதிகாரம் எனக்கு உண்டு. இந்த இரு காரணங்களுக்காகவும் அவர்கள் என்னை நல்லபடியாகக் கவனித்துக் கொள்வார்கள். எங்கே தங்குகிறோமோ, அந்த இடத்தின் சிறந்த வசதி எனக்கு ஏற்பாடு செய்யப்பட்டு விடும்.''

''பின்னே ஏன் வரும்போதெல்லாம் மெலிந்து தெரிகிறீர்கள்?''

''அது என் தப்புதான்'' என்று முறுவலித்தான் கணவன். ''உன்னிடம் விரைவாக வந்து சேர்ந்துவிட வேண்டும் என்ற வேகத்தில், அங்கே வேலை முடிந்ததுமே கிடைக்கிற பஸ்சில் ஏறி உட்கார்ந்து விடுவேன். தொடர்ந்து, அங்கங்கே பஸ் மாறி மாறி வருவேன். பஸ் பயணத்தில் வயிறு சங்கடப்படுத்தி விடக் கூடாது என்று, உணவையும் கட்டுப்படுத்திக் கொள்வேன். எனவே, கடைசி இரண்டு நாள் கொஞ்சம் உடம்பு வாடத்தான்



செய்யும். ஆனால் வந்த உடனே கிடைக்கும் விருந்து வகைகளில் உடனே சரியாகி விடும்!'' என்றுரைத்துச் சிரித்தான்.

கூடச் சேர்ந்து முறுவலித்த போதும், ''இனிமேல் இப்படி பஸ்களில் சங்கடப்பட்டுக் கொண்டு வரவேண்டாம், தனா. உங்களுக்குத் தான் ரயிலில் முதல் வகுப்பு பயணப்படி தருகிறார்களே! வசதியாகவே வாருங்கள். அரை நாள் முன்னதாக வருவதற்காக, உடம்பைப் போட்டு இப்படி வருத்திக் கொள்ள வேண்டாம்'' என்றாள் மனைவி, கணவன் தோளில் சலுகையாய்ச் சாய்ந்து கொண்டபடி.

''தேவியார் உத்திரவு!'' என்றான் அவன் அவளது கன்னத்தில் கோலமிட்டபடி.

''ஆனால், இந்தப் பிரிவுகள் இன்னமும் கஷ்டமாகத் தானே இருக்கின்றன! தனா? அதை நினைக்கும் போது..''

''கஷ்டமாய்த்தான் இருக்கின்றன. ஆனால், நம் முன்னோர்கள் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்று என்றைக்கோ, எப்படி எழுதி வைத்திருக்கிறார்கள் பார்! அந்தக் காலத்தில், பயணம் செய்வது என்றால் எத்தனையோ அபாயங்கள்! கிளம்பிச் சென்றால் திரும்பி வந்தால் தான் உண்டு! சூரியனையும், நட்சத்திரங்களையும் வைத்து தான் வழி கண்டுபிடிக்க வேண்டும். காடு, மலை, காட்டு மிருகங்கள், கள்ளர்கள், கடல் கொள்ளைக்காரர்கள்... அத்தனை ஆபத்துகளுக்கும் இடையேயும் 'கடல் கடந்தேனும் காசு சம்பாதிக்க, மனைவி மக்களைப் பிரிந்து சென்றார்களே! அதை நினைத்துப் பார்த்துவிட்டுப் பேசு, கண்மணி!''

''புரிகிறது! இப்போது இவ்வளவு வசதிகளை வைத்
துக் கொண்டு , கஷ்டம், சிரமம் என்பது தப்பு என்கிறீர்
கள்! புரிகிறது, சாமி! நன்றாகவே புரிகிறது! ஆனால்,
அறிவுபூர்வமாய் மூளைக்குப் புரிந்தாலும், மனது மட்டும்
முழுவதாக அதை ஏற்கத் தெரியாத முட்டாளாகத் தானே
இருக்கிறது!''

சன்னமாய்ப் புன்னகைத்து, மனைவியின் நெற்றி
யில் மென்மையாய் முத்தமிட்டான் அவன். ''முன்னெல்
லாம், வெளியூர் சென்றால், பயணங்களில், இரவில்
என்று வேலையின்றிச் சும்மா இருக்கும்போதெல்லாம்
உன்னை நினைத்து மிகவும் கவலையாக இருக்கும்...''

''வேலையில்லாத நேரம் மட்டும் தான் என்
நினைவு வருமா...!'' என்று மாதவி பிணங்கினாள்.

''சரிதான்! அம்மோனியாவும், நைட்ரேட்டும்
என்ன மாதிரி சதவீதத்தில் கலந்து, யாருக்கு எப்படி
உதவுகிறது என்று விளக்கிக் கொண்டு இருக்கும்போ
தெல்லாம் நான் உன்னை நினைத்துக் கொண்டிருந்தால்
அவ்வளவுதான். கொஞ்ச நாளில் 'கல்தா' கொடுத்து
விடுவார்கள், தெரியுமா?'' என்று செல்லமாய் அவ
ளுக்கு ஒரு கிள்ளு கொடுத்து விட்டு, அவன் தொடர்ந
தான். ''ஆனால், இப்போது நீ இப்படிச் சித்திரம் வரை
யத் தொடங்கியபிறகு, பெருமளவு நிம்மதியாக இருக்கி
றது!'' என்று முடித்தான்.

ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் மேலும் சரிந்து,
கணவன் மடியில் வசதியாகப் படுத்துக் கண்களை மூடிக்
கொண்டாள் அவள்.

ஓர் இனிய மவுனத்தில் சற்று நேரம் கழிந்தது.



மனைவியின் முன்னுச்சிக் கூந்தல் சுருள்களை விரல்
களால் அளைந்து விளையாடிக் கொண்டு இருந்த தன
சேகரின் முகத்தில் சிந்தனை படர்ந்தது.

''நல்ல வேளையாகச் சரியான சமயத்தில் உனக்கு
அந்த சுகிர்தாவின் தொடர்பு மீண்டும் கிடைத்தது!''
என்று மகிழ்ச்சி காட்டியவன் மெல்லத் தொடங்கினான்.
''அந்த சுகிர்தா கொஞ்சம்...ரொம்பக் கொஞ்...சம்தான்
வயிற்றெரிச்சல்காரியாக இருப்பாளோ, மதும்மா!'' என்ற
வன், மாதவியின் முகத்தில் திகைப்பையும் கூடவே
மறுப்பையும் காணவும், ''அவள் பேசிய விதம்...லேசாக
அப்படியோர் எண்ணத்தை தூண்டியது?'' என்று,
லேசாக மன்னிப்புக் கோரும் குரலில் என்றாலும், தன்
அபிப்ராயத்தைக் கூறியே முடித்தான்.

எழுந்து உட்கார்ந்து கொண்டு, ''சேச்சே! அவ
ளுக்கு வயிற்றெரிச்சல் எல்லாம் கிடையாதுப்பா!'' என்று
உறுதியாக மறுத்தாள் மாதவி. ''அவள் நிலையில்
இருந்து கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்! அவள் இழந்தி
ருப்பது எப்பேர்ப்பட்டது?! எவ்வளவு?! திருமணமாகிக்
கொஞ்ச நாட்களேனும் நல்லபடியாகத்தான் இருந்திருப்
பார்கள். அந்த நாட்களின் நினைவும், அது இப்போது
இல்லாமல் தனிமரமாகி விட்டோமே என்கிற ஏக்கமும்
அவளுக்கு இருக்கத்தானே செய்யும்? அதுவும் அவள்
நம்மைப் பார்த்தபோது நாம் எப்படி இருந்தோம்?
ரொம்...பவும் சிரித்துக் கொண்டு.... அவள் குரல் கேட்ட
தும், எனக்கே ஒரு மாதிரியாகி விட்டது தெரியுமா?
இப்படி ஜோடியாக, ஜோக்கடித்துச் சிரிப்பதைப் பார்க்
கும்போது பாவம், அவளுக்கு எப்படி இருக்கும், என்று
நினைத்தேன். அவளுக்கும், நமக்கு நேர் எதிர்மறையாக

அவளது நிலைமை பயங்கரமாகத் தோன்றியிருக்கும் தானே? அந்தத் தவிப்பில் அவள் ஏதோ வேசாகப் பேசினதை நாம் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது, தனா! அத்தோடு, அவளுக்கு, அவளுடைய கணவன் நினைவில், பொதுவாக ஆண்களிடம் அவ்வளவாக நம்பிக்கை கிடையாது. அதுகூட, 'நீங்கள் அப்படிப்பட்ட வர் இல்லை' என்று நான் சொன்னால், உடனே ஒத்துக் கொள்வாள். அவள் மிகவும் நல்லவள் தான், தனா!'' என்று முடித்தாள் அவள்.

''நீ சொன்னால் சரி!'' என்பதோடு நிறுத்திக் கொண் டபோதும், தனசேகரனுக்குச் சுகிர்தா பற்றி உள்ளூர நல்ல எண்ணம் தோன்ற மறுத்தது.

சட்டமிடக் கொடுத்த படங்களைச் சுகிர்தாவின் 'பொட்டிக்'கில் வைத்த இரண்டே நாட்களில் அவை நாலுமே விற்றுப் போயின.

மாதவி வரைந்த தஞ்சாவூர் சித்திரங்களுக்கு நல்ல வரவேற்பு இருப்பதை உணர்ந்து, மேலும் நிறையப் படங்கள் வரையுமாறு சுகிர்தா, தோழியை உந்தினாள்.

கண்ணனின் லீலைகளை வரிசையாக வரையத் தூண்டினாள். அவற்றுக்குரிய பொருட்கள் வாங்க வென்று பெருமளவு முன் பணமும் கொடுத்தாள்.

''பணம், நானே பார்த்துக் கொள்கிறேனே, சுகி!'' என்று முன்பணம் வாங்கத் தயங்கிய மாதவியிடம், ''எல்லாம் கணக்குதானே, மாது! படங்கள் விற்கிற போது, எனக்குரியதை எடுத்துக் கொண்டு விட்டு, மீதியில் உன் பங்கைத் தருவேன். அவ்வளவு தானே?'' என்று, வற்புறுத்திப் பணத்தை வாங்க வைத்தாள்.



ந்யூவுட், பாப்ளின்துணி, ஃபெவிகால், மரக்கோந்து, சாக்குக்கட்டிப் பவுடர், 'ப்ரஷ்'கள், போஸ்டர் கலர் என்று தேவைப்பட்டதை எல்லாம் வாங்கி முடித்து, வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதில் உதவி செய்த தனசேகர னுக்கு ஒரே வியப்பு!

இவைபோக, கண்ணாடியில் பெயின்டிங், வெறும் பென்சில் ஸ்கெட்சுகள் என்று, அவைகளிலும் கொஞ்சம் செய்யும்படி சுகிர்தா கேட்டதாக மாதவி கூறவும்,, ''இத்த னையையும் வைக்க, உன் தோழியின் 'பொட்டிக்'கில் இடம் கூட இராதே! என்ன செய்யப் போகிறாள்?!'' என்று ஆச்சரியப்பட்ட அவனுக்கும் அவனோடு கூடவே வியந்த மாதவிக்கும் விரைவிலேயே விடை கிடைத்தது.

அது ஒரு சித்திரக் கண்காட்சி.

சுகிர்தாவின் 'பொட்டிக்'கில் மாதவியின் சித்திரங் களை வாங்கிச் சென்ற ஒரு பெண்மணி, 'இவ்வளவு அருமையாக வரைகிறவளின் படங்களைக் கொண்டு ஒரு சித்திரக் கண்காட்சி நடத்தலாமே, என்று யோசனை தெரிவித்தாள்.

யோசனையாக நோக்கிய சுகிர்தாவிடம், ''இப்படி ஒன்றிரண்டாய் விற்று, நூறும் இருநூறும் லாபம் பெறு வதை விடுத்து, நிறையப் படங்களைக் கொண்டு ஒரு கண்காட்சி வைத்தால், கூட்டமும் நிறையவே வரும்! நல்ல விலைக்கும் விற்கலாம்; மொத்தமாய்ப் பணமும் பண்ணலாம்!'' என்றாள் அந்தப் பெண்மணி.

சுகிர்தாவுக்கு மூளையைக் குடையத் தொடங்கி விட்டது.

இதுபற்றிப் பலரிடம் தொடர்பு கொண்டு விசாரித்தாள். பெரும்பான்மை அபிப்ராயங்கள் ஆதரவாக இருக்கவே, கண்காட்சி நடத்துவதில் அவள் முழுமூச்சுடன் ஈடுபட்டாள்.

முதலில் மாதவிக்குப் பயம்தான்! தன்னால் முடியுமா என்று அச்சம் தான்! இது வெற்றியாகுமா என்பதில் கலக்கமும் கூடத்தான்.

ஆனால், சிறு சிறு மாற்றங்களுடன், புதுப்புது உத்திகளைப் புகுத்தி, படங்களுக்கான வரிவடிவங்களை அமைக்கும்போதே, அவளுக்கும் உற்சாகமும் தன்னம்பிக்கையும் உண்டாகி விட்டன!

எந்த ஒரு பெரிய காரியத்தைச் செய்து முடிப்பது என்றாலும், அதற்குச் சில தியாகங்களையும் செய்து தான் ஆகவேண்டும். பாரதப் போரின் வெற்றிக்காக, அர்ஜுனனின் மைந்தன் அரவானையே களப்பலி கொடுக்கவில்லையா?

மாதவியும் பலி கொடுக்க நேர்ந்தது.

## 5

இந்தக் கண்காட்சி பற்றி முதலில் தெரிய வந்தபோது, தனசேகரனுக்கு உள்ளூரப் பெருமைதான். மனைவிக்குப் பெயரும் புகழும் பெருகும் என்று மகிழ்ச்சியாகவே தான் உணர்ந்தான்.

மாதவியே அஞ்சியது போல, அவளால் முடியாதோ என்றெல்லாம் அவன் எண்ணவில்லை. ஒன்றை ஏற்றால், அதைத் திறம்படச் செய்து முடிக்கும் சக்தி அவளுக்கு உண்டு என்பது அவனுக்கு நிச்சயமே.



ஆனால், அதில் ஒரேயடியாக ஈடுபட்டு, அவள் தன் உடம்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாதே என்கிற ஒரு கவலைதான் அவனுக்கு. எனவே அது பற்றி மட்டும் லேசாக எச்சரித்து வைத்தான்.

ஆர்வமும் பரபரப்புமாகத் துள்ளிக் கொண்டு இருந்த மாதவியிடம், அழுத்தமாகவோ, அதிகப்படியாகவோ பேசி, அவளது உற்சாகத்தைக் கெடுக்க அவனுக்கு மனம் வரவில்லை.

மாதவியோ, சட்டென உணர்ச்சிவசப்படுகிறவள். அவன், அவளது நலனுக்காக அதிகம் சொல்லப் போக, கணவனுக்கு இந்த முயற்சியே பிடிக்கவில்லையோ என்று அவள் தவறாக எடுத்துக் கொண்டு சோர்ந்து விடக்கூடாதே!

படம் வரைவதில் மாதவி தீவிரமாக ஈடுபட, ஈடுபட, அதன் பக்க விளைவுகள், வீட்டில் தென்படலாயின.

தனசேகரன், சிறு எரிச்சலோடு எதிர்பார்த்தவை தான். இனி, வீட்டை முன்போலக் கவனிக்க மாட்டாளே என்ற தாக்கம் அவனுக்கு இருக்கத்தான் செய்தது. அதைக் களைய அவன் சற்றுப் பாடுபடவும் வேண்டியிருந்தது.

'வீடு என்றால், அதன் வேலைகளை மனைவியே தான் செய்தாக வேண்டும் என்று எண்ணுகிற அளவு, நான் பழமைவாதியோ, ஆணாதிக்கம் கொண்டவனோ அல்ல' என்று பலமுறை திரும்பத் திரும்பத் தனக்குள்ளேயே உருப்போட்டுக் கொண்ட பிறகு தான், அவனால் அந்த எரிச்சலை அடக்கி, அகற்ற முடிந்தது.

எனவே, இயன்ற போது மாதவி செய்தாள்; அவ ளுக்குச் செய்ய நேரம் இல்லாதபோது உதவுவது கடமை என்று வீட்டில் சிலபல வேலைகளைத் தானாகவே எடுத்துச் செய்யவும் அவனால் முடிந்தது.

டி.வி. டெக், டைபாய் போன்றவைகளை அன்றாடம் துடைப்பது, அவசியத்துக்குக் காஃபி போடுவது, துவைத்த துணி மடிப்பது... என்று, திருமணமாகுமுன் அவன் செய்து கொண்ட வேலைகளைப் பலமுறை இப்போதும் அவன் செய்ய நேர்ந்தது. செய்தான் — அவ்வப்போது தலை நீட்டிய எரிச்சலை அடக்கி, மனதை அமைதிப்படுத்திக் கொண்டபடி.

ஆனால், இந்த வேலைகளை எல்லாம் பெருமளவு இயல்பாக ஏற்றுச் செய்தவனுக்கு, அவன் அடுத்த 'டூர்' கிளம்பும்போது மட்டும் வருத்தப்படாமல் இருக்க முடிய வில்லை.

வீடு என்றால் யாராவது வருவார்கள், போவார்கள், டெலிஃபோன் கால்கள், வீடு தேடி வந்து விற்பனை செய்கிறவர்கள் என்று மன ஈடுபாட்டைக் கலைக்கப் பல இடையூறுகள் நேரக்கூடும். அதுபோன்ற தொல்லைகள் இன்றி, அமைதியாகச் சித்திரம் தீட்டுவதற்காக அவளது 'பொட்டிக்'கின் ஸ்டோர் ரூமையே சுகிர்தா 'ஸ்டுடியோ' வாக ஒதுக்கிக் கொடுத்திருந்தாள். அலுவலகம் செல் வோர் போல, மாதவியும் காலையில் கிளம்பி, அங்கே சென்று இயன்றவரை வரைந்து விட்டு, மாலையில் திரும்பி வரலானாள்.

சில சமயங்களில், வேலைக்காரி சீக்கிரமாக வந்து, கணவன் மனைவி இருவருமே சற்று முன்னதாகக் கிளம் பிவிட்டால், தனசேகரனே, அவளைக் கூட்டிப் போய் விடுவதும் உண்டு.



பொதுவாக, பத்து மணிக்கு மேல் தான் சுகிர்தா வருவாள். அபூர்வமாக, இவர்கள் செல்லும் நேரத்தில் அவள் அங்கே இருந்தால், 'அலுவலகத்தில் அதிக வேலை; சீக்கிரமாய்ப் போகவேண்டும்' என்று பைக்கை விட்டு இறங்காமலேயே தனசேகரன் கிளம்பிப் போய் விடுவான்.

ஒவ்வொரு சமயம், தனசேகரன் வீடு வந்த பிறகும் மனைவி வரவில்லையானால், அவனே சென்று, மாத வியை அழைத்து வருவதும் உண்டு. ஆனால் அது வெகு அபூர்வம். சுகிர்தா, 'பொட்டிக்'கில் இருப்பாள் என்ப தால், அது சமயம் அங்கே செல்லத் தனசேகரனுக்கு விருப்பம் இருப்பதில்லை. அதனால், மனைவிக்காகக் காத்துக் கொண்டு, அனேகமாக வீட்டிலேயே இருந்து விடுவான்.

வீட்டில் இருந்துகொண்டு, பால் காய்ச்சுவது, பொருட்களை அடுக்கி வைப்பது என்று சிறு சிறு வேலைகள் செய்து வைப்பான்.

ஆனால், அனேகமாகக் கணவன் வீடு திரும்பும் நேரம் தானும் வீடு வந்து விடுமாறே மாதவியும் பார்த்துக் கொள்வாள். வீட்டில் இருந்தபடியே, புதிய படங்களுக்கு 'ஸ்கெட்ச்' போடுவது, புதுப்புதுக் கருத்துக்கள், கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்று, மனதில் தோன்றத் தோன்ற அவ்வப்போது குறித்து வைப்பாள்.

கணவனோடான பேச்சில்கூட அவளுக்கு அந்த மாதிரி உத்திகள் தோன்றும். அப்படித் தோன்றும் போது,

''ஒரு நிமிடம்! ப்ளீஸ்!'' என்று ஓடிப் போய்த் தோன்றி யதை எழுதி வைத்து விட்டு வருவாள்.

ஒரு பக்கம் சிரிப்பும், மறுபுறம் சிறு எரிச்சலுமாகத் தனசேகரன் அதைப் பார்த்துக் கொண்டு இருப்பான்.

ஒரு நாள் ரொம்பவும் தலைவலி என்று, இரண்டு மணி நேரம் முன்னதாகத் தனசேகரன் அலுவலகத்திலி ருந்து கிளம்பி வந்து விட்டான். காலியாகக் கிடந்த வீட்டைப் பார்த்ததும் மனம் வெறுத்துப் போயிற்று. ஒரு காபி கலந்து குடிக்கவோ, அத்தோடு ஒரு ஆஸ்பிரினைப் போட்டுக் கொள்ளவோ மனமின்றிச் சோர்வுடன் பேசா மல் படுத்து விட்டான்.

வழக்கத்துக்கும் தாமதமாக வீடு திரும்பிய மாத விக்கு மிகவும் வருத்தம். கொஞ்சம் அதிகப்படி தூரம் தான் என்றாலும், 'ஸ்டூடியோ'வுக்கு வந்து அவளையும் கூட்டி வந்திருக்கலாமே என்று மீண்டும் மீண்டும் சொல்லி மறுகினாள். கணவன் நெற்றியில் தைலம் தேய்த்து, இதமாகப் பிடித்து விட்டாள். இனி, இப்படி வழக்கத்துக்கு முன்னதாகத் தனசேகரன் திரும்ப நேர்ந் தால், 'ஸ்டூடியோ'வுக்கு வந்து, அவளையும் அழைத்துக் கொண்டு தான், வீடு வர வேண்டும் என்று வாக்கு வாங்கினாள்.

உச்சி குளிர்ந்து விட்ட தனசேகரனுக்கு, வலி சோர்வு எல்லாம் இருந்த இடம் தெரியாது பறந்தோடின.

ஆனால், அடுத்து ஒரு நாள் அலுவலக வேலையாக செங்கல்பட்டு வரை சென்றவன், சென்ற வேலை விரை வாக முடிந்து, ஒரு மணி நேரம் முன்னதாகவே திரும்பி வந்து விட்டான்.



அந்த ஒரு மணி நேரத்தில் அலுவலகம் சென்று சாதிக்க ஒன்றுமில்லை; மறுநாள் பார்த்துக் கொள்ளலாம், என்று முடிவு செய்து, மனைவியையும் கூடவே அழைத் துச் சென்று விடலாம் என்று அங்கே போய்ப் பார்த்தால் மெல்லிய துண்டுகளாக வெட்டப்பட்ட தங்க நிற ரேக்கு களை, ஒவ்வொன்றாக எடுத்து, படத்தில் மட்டி ஏற்றி வரைந்திருந்த வேலைப்பாட்டில், கவனத்துடன் ஒட்டிக் கொண்டிருந்தாள்.

தனசேகரன் வந்து அழைத்தபோது, அவள் தலை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. பார்க்க முடியவில்லை போலும். வேலையிலேயே கவனமாக, ''சாரிப்பா. இதை இடையில் விட்டு விட்டு வந்தேன் என்றால், படமே கெட்டு விடும். அதனால் நான் இதை முடித்து விட்டு நானாகவே வந்து கொள்கிறேன். நீங்கள்... நீங்கள் வீட்டில் ஒன்றும் செய்ய வேண்டாம்பா! கஷ்டமாய் இல்லாவிட்டால், பாலை மட்டும் காய்ச்சி வைத்து விடுங் கள்... ஆனால்..தலைகிலை வலிக்கவில்லையே? உடம்பு சரியில்லை என்றால் மட்டும் சொல்லிவிடுங்கள்! இந்தப் படம் வீணானாலும் பரவாயில்லை என்று வந்து விடு வேன்... அச்சோ!'' என்று உச்சுக் கொட்டினாள்.

''என்ன விஷயம்?''

''ஒன்...றுமில்லை, கொஞ்...சம் சின்னதாக வெட்டி விட்டேன்!'' இன்னொன்று சேர்க்க வேண்டும்...சரி தனா...நீங்கள் கிளம்புங்கள்! நான், முடிந்தவரை விரை வாக கிளம்பிவிடப் பார்க்கிறேன்!'' என்று விடை கொடுத்தவள், அதற்கு மேல் படத்தில் அடியோடு முழு கிப் போனாள்.

மனைவி தீவிரமாக வேலையில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்துக் கொண்டே நின்ற தனசேகரனின் கண்களில் இருந்த சிறு கோபம் மாறி ரசனை பரவியது.

சற்று நேரம் அப்படியே பார்த்துக் கொண்டு இருந்தவன், யாரோ கிசுகிசுப்பாய் அழைப்பது கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

சுகிர்தாதான்.

அவனை வெளியே அழைத்து, மாதவியின் காது கேளாத தூரத்துக்குக் கூட்டிச் சென்று, ''பாருங்கள் மிஸ்டர் தனசேகரன், தயவுபண்ணி கோபப்படாமல் நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். இது உங்களுக்குப் புரியுமோ என்னவோ, ஒரு கலைஞர் தீவிரமாகப் படைப்பில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும்போது, அவரது கவனத்தைக் கலைப்பது பெரிய தப்பு. படைப்பின் அழகு குன்றிப் போய்விடும். அதனால், மாதவி உங்கள் மனைவி தான் என்றாலும், இதுபோல அவளது கவனத்தை நீங்கள் கலைப்பது நல்லதல்ல. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், இனி இப்படிச் செய்யாதீர்கள்!'' என்று, கரம் குவித்துக் கும்பிடு போட்டாள்.

தன் கடுப்பைக் காட்டிக் கொள்ளாமல், ''நீங்கள் சொன்னதை நினைவில் வைத்துக் கொள்ள முயற்சி செய்கிறேன்!'' என்று பதில் கும்பிடு போட்டு விட்டுக் கிளம்பினான் அவன்.

நீ என்னடி சொல்வது என்று வேண்டுமென்றே இன்னொரு நாள் 'ஸ்டூடியோ'வுக்குச் சென்று, மாதவியை அழைத்து வரவேண்டும் என்று ஒரு வேகம் தோன்றிய போதும், தனசேகரன் அதை அடக்கிக் கொண்டான். செவ்வி அருமையும் பாராதவளாய்க் காதல் கணவனைக் கூட மறந்து, கருமமே கண்ணாய் வேலையில் ஈடுபட்டிருந்த மனைவியின் கவனத்தைக் கலைப்பது தவறே என்றது அவனது நியாய புத்தி.



கூடவே அவனுக்கு ஒரு பயமும்கூட. இன்று போலவே, மாதவி வர மறுத்து விட்டால், சுகிர்தா முன் தலையிறக்கம் ஆகிவிடுமே!

மொத்தத்தில், மனைவி என்று ஒருத்தி, தனசேகரனுக்காக வீட்டில் காத்திருப்பது என்கிற நிலை மாறிப் போயிற்று.

முதலில் கஷ்டமாக இருந்த போதும், இதுவே மாதவி வேலைக்குப் போகிறவளாக இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்? முதலிலிருந்தே வாழ்க்கை இப்படித்தானே சென்றிருக்கும் என்று எண்ணி, வழக்கம் போலத் தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டான் அவன்.

இந்நிலையில், அவனது அடுத்த பயணத் திட்டம் வந்தது.

அன்று மதியம் கிளம்பினால், அவன் திரும்பி வரப் பதினேழு நாட்கள் பிடிக்கும்!

பயணத் திட்டம் தெரிந்ததிலிருந்தே பிரிவாற்றாமையால் உள்ளூர வாடிய தனசேகரனுக்கு மனைவி தன் அருகிலேயே இருக்க வேண்டும் போல இருந்தது.

ஆனால், ''ராஜஸ்தான் பெயின்டிங்கை தஞ்சாவூர்ச் சித்திர பாணியில் தீட்டி, புதுமாதிரிச் சித்திரங்கள் ஒரு 'செட்' உருவாக்கலாம் என்று இருக்கிறேன், தனா!

ராஜஸ்தான் சித்திரங்கள், ஆயில் பெயின்டிங். ஆனால் பல்லக்கு, பட்டம், குதிரை அலங்காரம், தலை அலங்காரம், தலைப் பாகை... எல்லாமே தஞ்சாவூர் மாடலில் கல்லெல்லாம் பதித்துச் செய்தால் கண்ணைப் பறிக்கக் கூடியவையே! இது போல...'' என்று பென்சிலும் பேப்பருமாக அமர்ந்திருந்தவளிடம், பயணம் பற்றிச் சொல்லக் கூட அவனுக்குத் தோன்றவில்லை.

கடைசியாகக் கிளம்புவதற்கு இரு தினங்கள் முன்பாகச் சொன்னபோது, மாதவிக்கும் மிகவும் வருத்தம் தான். ''நேரத்துக்குச் சாப்பிடுங்கள். சத்தானதாய்ப் பார்த்து சாப்பிடுங்கள்; ஒழுங்காக ஓய்வெடுங்கள்! உடம்பு கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தாலும், ஒழுங்காக வைத்தியரிடம் காட்டி விடுங்கள்....'' என்று பலவிதமாய் பல முறை சொன்னாள்.

''பதினேழு நாட்கள் நான் இல்லாததால் இன்னும் அதிகநேரம், என் தொல்லையின்றி, நீ நிம்மதியாக வரைந்து கொண்டே இருக்கலாம்!'' என்று சிறு கேலி போல அவன் கூறவும், ''வரையலாம் தான்! அதற்காக, நீங்கள் ஊரில் இல்லாதிருப்பது எனக்குப் பிடிக்குமா, என்ன?'' என்று அவன் மார்பில் சாய்ந்து கண்ணீர் விட்டாள்.

''சேச்சே! சும்மா ஒரு கேலிக்காகச் சொன்னால் அழுகிறாயே!'' அவன் தேற்ற நிலைமை சரியாகிப் போயிற்று.

சற்று யோசித்து விட்டு, ''ஆனால் நீங்கள் சொல்வதும் ஒரு வகையில் சரிதான்...கூடுதலாகக் கொஞ்ச நேரம் கிடைக்கும் தான்.... அந்த நேரத்தைப் பயன்படுத்தி, எல்லாவற்றையும் முடித்து விட்டேன் என்றால், நீங்கள் வரும்போது, நிம்மதியாக வீட்டில் இருக்கலாம்!'' என்றாள் மாதவி.



தனசேகரனுக்குப் பகல் நேரப் பயணம். மூன்று மணிக்கு ரயில்! ''நான் பன்னிரண்டு மணி சுமாருக்கு வருகிறேன்.'' என்று மனைவியிடம் கூறிவிட்டு அலுவலகத்துக்குக் கிளம்பினான் அவன்.

''நான் இன்றைக்கு ஸ்டூடியோவுக்குப் போகவில்லை, தனா. மதியத்துக்கு மேல் வருவதாகச் சுகிர்தாவிடம் சொல்லி விடுகிறேன்!'' என்று மாதவி உரைத்த போது, அவள் கணவனுக்குப் பெரும் ஆறுதலாகக் கூட இருந்தது.

ஆனால், பன்னிரண்டு மணி அளவில், அவன் வீட்டை அடைந்த போது, மாதவி வீட்டிலே இல்லை!

அவனது சாவியால் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான்.

அவன் எடுத்துச் செல்ல வேண்டிய துணிமணிகள், 'அயர்ன்' செய்து, பெட்டியின் அருகே வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

எப்போதுமே, பெட்டிக்குள் எடுத்து வைப்பது அவன் தான். 'என்னென்ன, எங்கேங்கே இருக்கிறது என்பது, நானே அடுக்கினால் தான் தெரியும்!' என்று கூறி, அவனே பெட்டியில் அடுக்குவான்.

பெட்டியருகே, ஒரு தோள் பையில், தண்ணீர் பாட்டில், சில பொட்டலங்கள் இருந்தன.

பெட்டி மேல், பேப்பர் வெயிட்டின் அடியில் இருந்த கடிதம், கட்டா...யமாய் ஸ்டூடியோவுக்குப் போகும்படி

ஆகிவிட்டதாகவும், அதற்காக மன்னிக்கும்படியும், இரவு உணவுக்கு எலுமிச்சை சாதமும், சேப்பங்கிழங்கு வறுவலும் செய்து வைத்திருப்பதாகவும், அவன் திரும்பி வரும் நாளை ஆவலோடு எதிர் நோக்கிக் காத்திருப்பதாகவும் கூறியது.

தனசேகரனுக்குக் கோபத்தை விட, வருத்தம் தான் அதிகம் உண்டாயிற்று.

பெட்டி அடுக்கும்போது அவன் மீது சாய்ந்து கொண்டு அவள் சோர்ந்து கிடப்பதும், அவன் செல்லச் சிலுமிஷங்கள் செய்து, அவளை உற்சாகப்படுத்த முயல்வதும், கடைசியாக அவள் கண்ணீரை அடக்கி, அகல விழித்தபடி பிரியா விடை கொடுப்பதும்...எதுவும் இல்லை!

இழப்பு பெரிதாகத் தோன்றியது! இதுவே நிலைத்துப் போகுமோ என்ற அச்சமும் உண்டாயிற்று.

மனைவியிடம் நேரில் விடை பெறாமல் வந்தது மனதை வாட்டிக் கொண்டே இருக்கவும், மறுநாள் இரவு, எஸ்.டி.டியில் தனசேகரன் அவளோடு பேசினான்.

மாதவியும் வருந்திப் பேசினாள். கண்காட்சி நடத்துகிற கூடத்தின் நிர்வாகி வந்திருந்தாராம். எங்கெங்கே என்னென்ன மாதிரி வைத்தால் நன்றாயிருக்கும் என்பதெல்லாம் அவருக்குத்தான் நன்றாகத் தெரியுமாம்! படங்கள், அவைகளைப் பற்றிய விவரங்கள் எல்லாம் எடுத்துச் சொல்ல, சுகிர்தாவுக்கு மாதவி தேவைப்பட்டிருக்கிறாள்!



அதனால், வரவில்லை என்று தெரிவிப்பதற்காக டெலி∴போன் செய்தவளை வேறு வழியில்லாமல் ஸ்டுடியோவுக்கு அழைத்தாளாம்.

''ஏன்? அவளும் உன்போல் '∴பைன் ஆர்ட்'ஸ் படித்தவள் தானே? இந்த விளக்கங்களை அவளே கொடுத்திருக்கக் கூடாதா?'' என்றான் தனசேகரன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு.

''அய்யே! உங்களுக்குத் தெரியாதில்லையா! படிக்கும்போதே அவளுக்கு இதுபோன்றவைகளில் ஆர்வம் கிடையாது. துணி, பெயின்டிங், நகை 'டிசைன்' பண்ணுவது என்று அந்த மாதிரிதான் செய்து கொண்டு இருப்பாள்... இதையெல்லாம், தேர்வுக்காகக் கொஞ்சம் உருப் போட்டு விட்டு, தேர்வு சமயம் வாந்தி பண்ணி விட்டு, அத்தோடு மறந்து விட்டேன் என்பாள்!

அவளால் என்ன விளக்கம் கொடுக்க முடியும்? பாவம்!'' என்று சுகிர்தாவைத் தாங்கிப் பேசியது அவனுக்கு ரசிக்கவில்லை.

எனவே, ''சரிசரி. எச்சரிக்கையோடு இரு. உடம்பைப் பார்த்துக் கொள். வைத்து விடுகிறேன்'' என்று கூறிப் பேச்சை முடித்து விட்டான்.

அதற்கு மேல் மனைவியிடம் பேச எதுவும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை.

பாதி வரைந்த கொண்டிருந்த 'ஸ்கெட்ச்' அருகில் இருந்த பார்வையில் பட்டுக் கொண்டிருந்ததால், மாதவிக்கும் மேலே பேச்சை நீட்டிக்கத் தோன்றவில்லை!

## 6

அந்த முறை டூரிலிருந்து திரும்பி வந்தபோது, தனசேகரன், கிடைத்த பஸ்ஸில் ஏறி விழுந்து, அங்கங்கே தொடர்பு பஸ் மாறி அவசரப்பட்டு வரவில்லை. அவனுக்கு அலுவலகத்தில் அளிக்கப்பட்டிருந்த சலுகையின் படி, ரயிலிலேயே முதல் வகுப்பில், நன்றாகக் கால் நீட்டி மெத்தையில் படுத்து, உறங்கி, வசதியாகப் பயணத்தை முடித்துக் கொண்டு வந்தான்.

விழுந்தடித்துக் கொண்டு வந்தாலும் உரியபடி வரவேற்க அவன் மனைவி வீட்டில் இருக்கப் போவது இல்லையே! எதற்காக அனாவசியமாய்ச் சிரமப்பட வேண்டும்?

ரயிலில் வந்து வீட்டை அடைந்தபோதும், மாதவி வீட்டில் இல்லை தான்.

சாப்பாட்டு மேஜையில் அவனுக்குப் பிடித்தமான, எளிதாகவும், விரைவாகவும் தயாரிக்கக் கூடிய கலந்த சாதங்கள் 'ஹாட்பேக்'கில் சூடு ஆறாமல் வைக்கப்பட்டிருந்தன.

சாப்பிட்டு ஓய்வெடுக்கும்படி மாதவி எழுதி வைத்த குறிப்பும் கூட இருந்தது.

எல்லாவற்றையும் தூக்கி வீசி எறியவேண்டும் போலத் தோன்றிய உந்துதலை வெகு, சிரமப்பட்டுத் தனசேகரன் அடக்கிக் கொண்டான்.

மாதவியின் சித்திரக் கண்காட்சி நாள் மிகவும் நெருங்கி விட்டது. இப்போது, அவள் முழுக்கமுழுக்க



அந்த நினைவில் அந்த வேலையில் இருப்பது தான் இயல்பு! நியாயமும் கூட!

அதைவிட்டு, 'என்னை நினைக்கவில்லையே' என்று குறைப்படுவது தவறு. அப்படி அவள் ஒரேயடியாக நினைக்காமலும் இல்லை. அவனது உணவைத் தயார் பண்ணி வைத்து விட்டுத் தானே போயிருக்கிறாள்!

நியாய புத்தி உள்ளவன் என்பதால், கூடவே மனைவியிடம் மிகுந்த காதலும் உடையவன் என்பதால் இதையெல்லாம் யோசித்துத் தன் சினத்தைத் தணித்துக் கொள்ளத் தனசேகரனால் முடிந்தது.

ஆனால், அந்த அன்பு காரணமாகவே, இந்தப் பிரிவுகளின் பின்னர் சற்று அதிகமாகவே ஒட்டிக் கொண்டு கிடந்தும் பழகி விட்டதால், அந்த உறவாடலுக்கான ஏக்கமும், அது இல்லாத துன்பமும்கூட இருமடங்காக வாட்டுவதை அவனால் தவிர்க்க முடியாது போயிற்று.

கண்காட்சி நாள் நெருங்க நெருங்க, மாதவி வீட்டில் இருக்கும் நேரம் குறைந்து கொண்டே போயிற்று. காலையில் அவசர அவசரமாக எதையாவது செய்து வைத்து விட்டு ஓடுகிறவள், மாலை வீடு திரும்புவதும் தாமதமாகிக் கொண்டே போயிற்று. பெரும்பான்மை நாட்களில், 'இன்ஸ்டன்ட்' புளியோதரை 'மிக்ஸ்' கொண்டு பிசைந்து கொண்டு, 'சிப்ஸு'டன் உண்பது வழக்கமாயிற்று.

அன்று தனசேகரன் வீடு வந்து சேரவே இருட்டும் சமயமாகி விட்டது.

மாதவி வீட்டில் இல்லை.

அடுப்படியை உருட்டிப் பார்த்தான். இரவு உணவுக்கான எந்த ஏற்பாடும் நடந்ததாகத் தெரியவில்லை. மாதவி இடையில் வீடு திரும்பவே இல்லை என்பது தெளிவாய்த் தெரிந்தது. தானாக எதையும் செய்வது என்றாலும், ஒரு பால் காய்ச்சுவது, காபி, டீ போடுவது தவிர, சமையல் விவகாரம் அவன் அறியாதது!

சற்று நேரம் டி.வி. பார்த்தான்.

வெளியே நன்றாக இருட்டிவிடவும், அவனுக்கு அதற்குமேல் வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. பைக்கை எடுத்துக் கொண்டு, சுகிர்தாவின் 'பொட்டிக்'கிற்குப் போனான்.

கணவன் வந்தது தெரிந்ததும், மாதவி, கண்ட கண்ட வண்ணங்களும் கலந்து பட்டிருந்த ஏப்ரனைக் கூடக் கழற்றாமல் ஓடி வந்தாள்.

வந்த வேகத்திலேயே, ''நல்லவேளையாக வந்தீர்கள், தனா! இல்லாவிட்டால், நீங்கள் பட்டினியாய்ப் படுக்க நேர்ந்திருக்கும்! தனா, வீட்டில் இரவுச் சாப்பாட்டுக்கு ஒன்றும் இல்லை. நீங்கள் ஓட்டலில் ஏதாவது சாப்பிட்டு விடுங்கள். நான் வந்த பின் எனக்கு முடிந்தால் ஏதாவது பார்த்துக் கொள்கிறேன்...'' என்றாள் ஒரே மூச்சில் வேகமாக, ''எனக்காகக் காத்திராதீர்கள்! இரவு என்னை வீட்டில் கொண்டு விட்டு விட்டுப் போவதாகச் சுகிர்தா சொல்லியிருக்கிறாள்'' என்றபடி திரும்பினாள்.

''பொறு! முடிந்தால் என்ன பார்ப்பாய்? மது, உன் உணவை விட இது முக்கியமல்ல! சாப்பாட்டை...'' தனசேகரன் காற்றிடம் தான் பேசிக் கொண்டிருந்தான். மாதவி ஏற்கனவே, உள்ளே ஓடி விட்டிருந்தாள்.



சட்டெனப் பொங்கிய சினத்தில், தனசேகரின் முகம் கன்றிச் சிவந்து சூடாகி விட்டது.

நான் பேசிக் கொண்டிருக்கிறேன்; நின்று கேட்கும் மரியாதைகூட இல்லாமல் போய் விட்டாளே! அவ்வளவு அலட்சியமாக... என்று ஆத்திரம் அவனுக்கு முதலில் வந்தது.

அடுத்த கோபம் பசி தூண்டி வந்தது.

ஒழுங்காக உணவு உண்டு எத்தனை நாள் ஆகிறது? மாலைச் சிற்றுண்டிக்கு வடை, சமோசா, பிரட் பால் என்று ஏதாவது செய்வாளே! நொறுக்குத் தீனிக்கு முறுக்கு, ரிப்பன் பக்கோடா என்று இப்போதெல்லாம் வீட்டில் ஒரு மண்ணும் கிடையாது! வெறும் 'சிப்சு'ம் புளி சாதமும் முதல் நாள் வைத்த போதே கத்தியிருக்க வேண்டும்! பாவம் பெண்டாட்டி என்று பார்த்தால் பட்டினியாகப் படுக்க நேர்ந்திருக்குமாமா?

அப்படியானால், அவனது உணவு பற்றி அவளுக்கு ஒன்றுமே இல்லையா?

உன் சித்திரமுமாயிற்று; மண்ணுமாயிற்று என்று அவளைத் தலை முடியைப் பிடித்து இழுத்துப் போக வேண்டியது தான் என்று ஓர் எட்டு முன்னோக்கிக் காலெடுத்து வைத்தவன் சட்டென்று நின்றான்.

நினைத்தது அவன்தானா? தனசேகரன்தானா? அவனா மனைவியைத் தலைமுடியைப் பிடித்து இழுதது் போவது என்று எண்ணினான்? என்ன அநாகரீகம்!

ஒத்துக் கொண்ட பொறுப்பை மனைவி முழு ஈடுபாட்டுடன் நிறைவேற்றுகிறாள்! அதை அம்போ என்று இடையில் விட்டு விட்டு, அவள் என்னைத் தான்

பார்த்தாக வேண்டும் என்று எண்ணுமளவு நான் ஆணா திக்கம் உடையவன் அல்லவே!

பாவம்! கணவன் இப்படி நினைத்தான் என்று தெரிந்தாலே நொந்து போவாள்!

கழிவிரக்கம் கொண்டு, மனைவியிடம் மனமிளகிப் போனவனுக்கு, அவள் பேச்சு முழுவதாக நினைவு வந்தது. வீடு வந்தபின், முடிந்தால் தனக்கு ஏதாவது பார்த்துக் கொள்வதாகச் சொன்னாளில்லையா?

பார்ப்பதற்கு வீட்டில் என்ன இருந்தது? ஃபிரிஜ்ஜில் தோசை மாவு கூட இல்லை. பாவம்! பட்டினி கிடப்பதா கத்தான் எண்ணம்!

யோசனையோடு வெளியே வந்தவன், பைக்கை எடுத்துக் கொண்டு போனான். அண்ணாசாலையில், அந்த சைனீஸ் ஓட்டலின், 'சூப்'பும், 'நூடுல்'சும் மாத விக்கு மிகவும் பிடிக்கும்!

மனைவிக்குப் பிடித்தவைகளை, இருவருக்குமாகச் சேர்த்து வாங்கிக் கொண்டு, நல்ல மலாய் டீ இரண்டு கப் குடித்து விட்டு வீடு வந்து சேர்ந்து எல்லாவற்றையும் 'ஹாட் பேக்' கில் வைத்து மூடிவிட்டு, மனைவிக்காகக் கத்திருந்தான் தனசேகர்.

இரவு பத்துமணிக்கு மேல் மிகவும் களைத்துப் போய்த் திரும்பி வந்த மாதவி, அப்படியே விழுந்து படுத்து விடத்தான் விரும்பினாள். ஆனால், தனசேகரன் தான் அவளைப் பிடித்து வைத்து, உண்ணச் செய்தான்.

''சேர்ந்து சாப்பிடலாம் என்று நானும் உண்ணா மலே காத்திருக்கிறேன்'' என்று அவன் சொன்னதுமே,



முகம் கழுவிக் கொண்டு வந்து பசியாற உட்கார்ந்து விட்டாள் மாதவி.

கடைசிப்பிடி உணவை அள்ளி வாயில் வைக்குமுன் அவளது கண்கள் தூக்கத்தில் சொக்குவதைக் கண்ட தனசேகரன் அப்போது ஒன்றும் சொல்லவில்லை.

ஆனால், காலையில் களைப்பும் அலுப்பும் நீங்கிப் புத்துணர்ச்சியுடன் எழுந்து, பம்பரமாய்ச் சுழன்ற மாதவி யைப் பிடித்து வைத்துப் பேசினான்.

''மதும்மா, நீ படம் வரையத் தொடங்கியது ஏன் என்று நினைவிருக்கிறதா?'' என்று தொடங்கினான்.

நெளித்து, நழுவ முயன்றபடி, 'தனா, காய்கறி போட்ட அவல் உப்புமாவுக்காகக் காய்கறிகளை வெட்டி வாணலியில் இட்டிருக்கிறேன். கிண்டிவிடாவிட்டால், அடியில் தீய்ந்து விடும்! நீங்கள் சொல்வதை அங்கே, சமையலறைக்கு வந்து சொல்லுங்களேன்!'' என்றாள் அவள்.

விடாமல் கூடவே சென்றான் தனசேகரன். ''ஏன், உன் சமையல் அறை என்றால், எனக்கென்ன பயமா! வீராதிவீரனாய் அங்கேயே வந்து அறைகூவுகிறேன்!'' என்று வேடிக்கையாகவே அவன் பேச்சைத் தொடங்கி னான்!

''சொல்லுங்க, மகாராஜா!'' என்று அவளும் பதிலி றுக்க, மீண்டும் தொடங்கிச் சொன்னான்.

''பார், மது! நீ என்..நீ எதையாவது நினைத்து உண்ணாமல், உறங்காமல், உடம்பைக் கெடுத்துக் கொள் கிறாயே என்று உன் மனதைத் திசை திருப்ப ஒரு வழியாக நீ படம் வரையத் தொடங்கியது! நினைவிருக்கி

றதா? சித்திரம் தீட்டப் பிள்ளையார் சுழி போட்டதே நீ உடம்பைக் கவனித்துக் கொள்வதற்காகத்தான். நீ கலை, சித்திரம் என்று பழைய மாதிரியே உண்ணாமல் உறங்காமல் உடம்பைக் கவனித்துக் கொள்வது என்றால், இனிமேல் இந்தப் படம் கிடம் ஒன்...றும் கூடாது என்று தடையுத்தரவு போட்டு விடுவேன்! ஜாக்கிரதை!'' என்று விளையாட்டுப்போலவே, சற்று உறுதியான குரலில் மிரட்டினான்.

வெந்து விட்ட காய்கறிகளோடு, ஊறவைத்த அவலைக் கலந்து பிரட்டியபடியே, ஒரு பார்வையைக் கணவன் பக்கம் செலுத்தித் திரும்பிய மாதவி லேசாக முறுவலித்தாள். ''கண்காட்சிக்கு இன்னும் மூன்றே தினங்கள் தான் இருக்கின்றன, தனா! மற்றபடி, சத்து வேண்டும் என்று தானே, இவ்வளவு காய் சேர்த்து இந்த அவல் உப்புமா செய்கிறேன்!'' என்றாள் அவனுக்கு ஒரு மறைமுகப் பதிலாக.

''ஆனால், இந்த ஒரு வேளை உணவு, உனக்கு நாள் முழுவதற்கும் போதுமா? நேற்று மதியத்துக்கு நீ எடுத்துப் போன சப்பாத்தி குருமா அப்படியே டப்பாவில் நாற்றமடித்துக் கிடப்பதைப் பார்த்து விட்டுத்தான் பேசுகிறேன். நீ கலைத் தேவதையாக இருக்கலாம்! உயிரைக் கொடுத்து கலைச் சேவை செய்ய உனக்கு விருப்பமும் இருக்கலாம்! ஆனால், எனக்கு என் மனைவியின் உடம்பு முக்கியம்; அதன் ஆரோக்கியம் முக்கியம்! இந்த மாதிரிப் பசி பட்டினியோடு தான் படம் வரைவது என்றால், அதை நான் அனுமதிக்க மாட்டேன்! நிச்சயம் !'' என்றான் அவன் குரலும் முகமும் இறுக.



அடுப்பை 'ஆஃப்' செய்து விட்டுத் திரும்பினாள் மாதவி. அடுப்பு மேடையிலேயே சாய்ந்து கொண்டு கணவனை நோக்கி முறுவலித்தாள். 'சாப்பிடுகிறேன். வேளை தவறாமல் ஒழுங்காகச் சாப்பிட்டு விடுகிறேன். சரிதானா?'' என்றாள் சமாதானமாக.

அவளையே பார்த்து, ''எப்படி?'' என்று கேட்டான் அவன்.

''எது, எப்படி?''

''அம்மையார் ஒழுங்காக உண்பது தான்! இதுவே அவல்! இது இன்னமும் ஆறி அவலான பிறகு சாப்பிடுவாயா? மாட்டாய் என்பது எனக்குத் தெரியும்!''

சற்று யோசித்து விட்டு, ''பக்கத்தில் ஒரு நல்ல ஃபாஸ்ட் ஃபுட் இடம் இருக்கிறது. தனா! என்ன வேண்டும் என்று ஃபோன் செய்தால் அனுப்பி விடுவார்கள். சுகிர்தா அப்படித்தான் சாப்பிடுகிறாள். நானும் அதையே செய்து விடுகிறேன்! ஆனால் உங்களுக்கு...இந்த மூன்று நாட்களுக்கு...'' என்று இழுத்தாள் மனைவி.

எந்த நிலையிலும், தன்னை விட முக்கியமாய் மனைவி வேறு ஒன்றைக் கருதுகிறாள் என்பது எந்தக் கணவனுக்கும் பிடிக்காது தானே? தனசேகரனும் அதற்கு விதிவிலக்கு அல்ல தான்! ஆனால், அந்த உணர்வைச் சமாளித்துக் கொண்டு, பெருந்தன்மை உள்ள கணவனாய், ''என்னைப் பற்றி நீ கவலைப் படாதே என் அலுவலகத்திலேயே 'கான்டீன்' இருக்கிறதே! மதியத்துக்கு நான் அங்கே பார்த்துக் கொள்ளுவேன்! இந்த மூன்று நான்கு நாட்களுக்கு, இரவிலும் நான் இப்படியே ஏதாவது வாங்கி வந்து விடுகிறேன். ஆனால் நிபந்தனை நினைவிருக்கட்டும்! ஒழுங்காக, உண்டு உறங்கினால்

தான் மேற்கொண்டு படம் வரைய அனுமதி!'' என்றான் அவன்.

அன்று மதியம் சுகிர்தாவிடம், தனக்கும் சேர்த்து உணவுக்கு 'ஆர்டர்' கொடுக்கும்படி மாதவி கூறவும் அவள் புருவங்களை உயர்த்தினாள்.

''என்னவோ, உன் கணவர் கொண்டு போய் உண் பது இதுதான்; அதையே தான் நானும் சாப்பிடுவேன்- என்று பிகு பண்ணுவாயே! இப்போது உன் கணவர் வேறே நல்ல சாப்பாடு தேடி விட்டாரா?'' என்றாள் கிண்டலாக.

''அப்படியில்லை, சுகி!'' என்று தொடங்கி முன் தினத்திலிருந்து நடந்ததை எல்லாம் சிநேகிதியிடம் மாதவி மறைக்காமல் சொன்னாள்.

''பரவாயில்லையே!'' என்று அரைமனதாய்ப் பாராட்டினாள் சுகிர்தா. கூடவே, ''ஆனால்...மெய்யா கவே உன் ஆரோக்கியத்தில் உள்ள அக்கறையில் சொன் னாரா?...அல்லது, உனக்கு வரக்கூடிய புகழ், பணம், உன் திறமை எல்லாம் கண்டு பொறாமையில், அதை நிறுத்த வழி தேடுகிறாரா?'' யோசிப்பது போன்ற பாவ னையோடு உரக்கச் சொன்னாள்.

''சேச்சே! தனா அப்படிப்பட்டவர் அல்ல, சுகி!''

என்று உடனே மாதவி மறுத்துப் பேசினாள். ''என் கணவர் அந்த மாதிரிச் சின்னபுத்தி உடையவரே அல்ல. சரியாகச் சொல்லப் போனால், என்னை முதலில் வரை யச் சொன்னதே அவர் தான். இப்போதும் எனக்காக எவ்வளவு பொறுத்துப் போகிறார் தெரியுமா? தயவு பண்ணி அவரைப் பற்றி மட்டும் குறைவாகப் பேசாதே!



என்னால் பொறுக்க முடியாது!'' என்று, தொடர்ந்து, குரலில் சிறு அழுத்தத்துடன் மொழிந்தாள்.

உடனே கீழே இறங்கி விட்டாள் சுகிர்தா. ''சாரிப்பா, மாது! எனக்கு..எனக்கு என் கணவர் ஒரு மிகக் கசப்பான பாடம்! அவர் ஏற்றிய கசப்பு, என் ரத்தத்திலேயே கலந்து விட்டது என்று தோன்றுகிறது. 'ஆண்' என்றாலே, சட்டெனத் தப்பாக நினைக்கத்தான் வருகிறது. சாரிடி. என் பேச்சைத் தயவு பண்ணி மன்னித்து மறந்து விடு! ப்ளீஸ்டி!'' என்று, மாதவியின் காலில் விழாத குறையாக மன்னிப்புக் கேட்டாள்.

உடனே மாதவியும் உருகிவிட்டாள். ''பெரிய அடி பட்டு விட்டது உனக்கு! தெனாலிராமன் கதை மாதிரி, கொதிக்கிற பாலில் வாயை வைத்துப் புண்ணாகி விட்ட பூனை, நல்ல பாலைக் கண்டாலும் ஓட்டமெடுத்தது போல, உனக்கு ஆண்கள் என்றாலே 'அலர்ஜி'யாக விட்டது! போகிறது. போ!'' என்று தோழியைத் தேற்றி னாள்.

மாதவியின் சித்திரக் கண்காட்சி ஒரு பெரும் வெற் றியாக அமைந்தது.

தனசேகரன் அப்பாடி என்று பெருமூச்சு விட்டான்!

ஆனால்...

## 7

மாதவி தீட்டியவை எல்லாமே பார்த்ததும் கண்க ளைக் குளிர்விக்கும்படியான எளிய, இனிய சித்திரங்கள்! சர்ச்சைக்குரிய பிரச்னைகளை, முன்வைக்காத, புரியாத வர்களுக்கு விளக்கம் சொல்லத் தேவையிராதவை!

ஒரு புறம் ஆலிலைக் கிருஷ்ணனிலிருந்து, படிப்படி யாகக் கண்ணனின் லீலைகள் பொருத்தமான பின்னணி யில் தஞ்சைப் பாணி சித்திரங்களாகக் கண்ணைப் பறித் தன.

கூடவே, மாதவியின் சொந்த உத்தியில், ராஜஸ்தா னின் தர்பார், போர் வீரர், திருமணம், மணப்பெண் போல சித்திரங்கள், அங்கங்கே கல்பதித்து, தங்க ரேக்கு டன் காண்போர் கருத்தைக் கவர்ந்தன.

இடையிடையே பின்னணி ஒளியுடன், 'கிளாஸ் பெயின்டிங்'குகள் கவனத்தை ஈர்த்தன.

அந்தக் கூடத்தின் நிர்வாகியின் ஏற்பாட்டால், கலைத்துறை மந்திரி வந்தார். அவரைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளும், சில பல பெரிய மனிதர்களும் வந்தார்கள். ஏற்கனவே, சுகிர்தாவின் பொட்டிக்கிலிருந்து படம் வாங்கிப் போனவர்கள், அவர் கள் வீட்டில் அந்தப் படங்களைப் பார்த்தவர்கள், சுகிர்தா வின் ஏனைய வாடிக்கையாளர்கள் என்று கூட்டம் நன்றாகவே இருந்தது.

முக்கியமான விஷயமாய் தொண்ணூறு சதவீதப் படங்கள் உடனே விற்றுப் போயின.

"இன்னும் கொஞ்சம் அதிக விலை வைத்திருக்க லாம், அம்மா! இதற்கு இரு மடங்கு கொடுத்து வாங்கக் கூட எல்லோருமே தயார் தான்" என்றார் 'ஹால்' நிர்வாகி!

தனசேகரனும், தன் பங்குக்குக் கொஞ்சம் கூட்டம் சேர்த்திருந்தான். அவனுடைய எம்.டி.யை அழைத்திருந் தான். தனசேகரன் மீதுள்ள பிரியத்தால், அவர் தன் நிலையில் சில பேரை அழைத்து வந்தார்.



மாதவிக்கு இருந்த ஒரே குறை என்னவென்றால், அவனுடைய எம்.டி.வருவதாக இருந்ததால், தனசேக ரன், அலுவலகத்திற்குச் சென்று அவராடு கூடவந்து, அவருடனேயே திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. "அடுத்த சீசனின் விற்பனை பற்றிப் பேச வேண்டியிருக் கிறது. என்னோடு வருகிறாயா? இங்கே இவர்கள் பார்த்துக் கொள்வார்கள் இல்லையா?" என்று அவர் கேட்டபோது அவனால் மறுக்க முடியவில்லை.

தயக்கத்துடன் மனைவியிடம், முதலாளியின் அழைப்பைப் பற்றிச் சொன்னபோது லேசாக முகம் வாடியபோதும், அவள் தடையேதும் சொல்லவில்லை.

சம்பளம் கொடுக்கும் முதலாளி — அதுவும் நல்ல சம்பளம் வேறு — அவர் கூப்பிடும்போது முடியாது என்று எப்படிச் சொல்ல முடியும்?

ஒரு கணம் வாடிய மாதவியின் முகம் உடனேயே எதையோ எண்ணி மலர்ந்தது. "பரவாயில்லை! போய் வாருங்கள். உங்கள் எம்.டி.யோடு வந்தவர்களால் ஏழு படங்கள் விற்பனையாகி இருக்கின்றன. அந்த நன்றி எனக்கும் இருக்க வேண்டும் அல்லவா? அத்தோடு, இங்கே பெரிய வேலை எதுவும் இல்லை. படங்களை இங்கேயே தான் வைத்துவிடப் போகிறோம். பணக் கணக்கு சுகிர்தா பார்த்துக் கொள்வாள். அதனால் நீங்கள் போங்கள். நான் வழக்கம் போல, சுகிர்தாவோடு வீட்டுக் குப் போகிறேன்" என்றாள் சாதாரணமாகவே.

"நல்லது, மதும்மா!" என்று அவள் தோளில் லேசா கத் தட்டிவிடுத் தனசேகரன் சென்று விட்டான்.

"பொதுவாக ஆண்களுக்கு அவ்வளவாகக் கலா ரசனை கிடையாது என்பது தான் என் கணிப்பு. ஆனால்,

தனசேகரன் இப்படி ஒடுவார் என்று நான் நினைக்கவே இல்லை. பூவோடு சேர்ந்த நாராக, அவருக்கும் கொஞ்ச மேனும் கலையார்வம் வந்திருக்கும் என்று எதிர்பார்த் தேன். இந்த ஓட்டம் ஓடுகிறாரே!'' என்றாள் அருகில் வந்து நின்ற சுகிர்தா கிண்டலாக.

முறுவலித்து, ''ஆண்கள் என்றாலே எங்கே குற்றம் என்று தேடுவது உனக்கு வழக்கமாகி விட்டது! அவரு டைய எம்.டி. அழைத்ததால் தான் தனா போனார்'' என்றாள் மாதவி.

''யார் எம்.டி? அந்த முக்கால் வழுக்கை ஆளு, நீல நிற 'டை'தானே? முடிந்தால் வா என்று தானே சொன்னார்! என் காதில் நன்றாக விழுந்ததே!'' என்றாள் தோழி, வியப்புடன்.

''நீ சரியாகக் கேட்டிருக்க மாட்டாய்!'' என்று மாதவி அழுத்தமான குரலில் கூறவும், மேற்கொண்டு எதுவும் சொல்லாமல், சுகிர்தா வாயை மூடிக் கொண் டாள்.

இதுபற்றிப் பிறகு தனசேகரனிடம் சொல்ல வேண் டும் என்று நினைத்த மாதவி, உடனேயே அது அவசிய மில்லை என்று ஒதுக்கி விட்டாள்.

அவளுடைய கணவன் பொய் சொல்லுகிறவன் அல்ல! அப்படியே அவன் சற்று மாற்றிச் சொன்னாலும் அதற்குச் சரியான காரணம் இருக்கும்!

ஒரு வாரத்திற்குள்ளாகவே, 'செலவு போகப் பிரித்த தில் உன் பங்கு என்று சுகிர்தா ஒரு பெரிய தொகையை மாதவியிடம் கொடுத்தாள்.



''சுகிர்தாவிடம் பணத்தைக் கணக்கிட்டு வாங்கி விடு. நண்பர்களுக்குள், கொடுக்கல் வாங்கல் என்று இழுத்தால் நட்பு காணாமல் போய்விடும்'' என்று மனை வியை உந்தியது தவிர, அந்தப் பணத்தை, அவள் என்ன செய்யப் போகிறாள், என்று தனசேகரன் எதுவும் கேட்க வில்லை.

அது, அவள் உழைத்து சம்பாதித்த பணம்; எனவே, அதை என்ன செய்வதும் அவளது உரிமையே என்ற எண்ணம் அவனுக்கு. அது பற்றி அவளாக ஆலோசனை கேட்டால் தவிர சொல்வது சரியல்ல என்று அவன் எண்ணினான்.

அன்று மாலை வீடு திரும்பியதில் இருந்து, மாதவி, கணவனைப் படுக்கை அறைப்பக்கம் போகவே விட வில்லை.

முகம் கை கால் கழுவ, உடைமாற்ற...எல்லாவற்றுக் கும், அடுத்த படுக்கை அறையையும், அதன் குளியலறை யையுமே பயன்படுத்திக் கொள்ளச் சொன்னாள்.

முகத்தில் ஒரு மர்மச் சிரிப்பு வேறு.

என்னவாக இருக்கும் என்ற யோசனையில், தனசே கரனுக்கு அவன் சொல்ல வந்த சேதியே மறந்து போயிற்று...அடியோடு மறக்கவில்லை என்றாலும், மனைவியின் மர்மத்தை விடுவித்த பிறகு சொல்லிக் கொள்ளலாம் என்று நினைத்தான்.

கணவனின் முகத்தில் தீவிர யோசனையையும், அதை மறைத்து சாதாரணப் பேச்சு போலக் காட்டிக் கொள்ளும் முயற்சியைக் காணவும் மாதவிக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

சிரிப்பை அடக்கும் முயற்சியில் கண்கள் பளபளக்க நின்றவளை ஓரக்கண்ணால் பார்த்து விட்டுத் தனசேகரன் இன்னமும் தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்தான்.

கடைசியாகத் தோல்வியை ஒப்புக் கொண்டவனாய், ''ஏய் மது, நீயே சொல்லிவிடுப்பா! இன்று என்ன விசேஷம்? நம் திருமண நாள் வர இன்னும் ஒரு மாதம் இருக்கிறது. உன் பிறந்த நாளும் ஏற்கனவே கொண்டாடியாயிற்று! வேறு என்னடி? சொல்லேன்!'' என்று சரணாகதி அடைந்தான்.

காதுத் தொங்கட்டான்கள் எழிலாய் அசைய, மாதவி தலையை அசைத்தாள். ''ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுத்திருங்கள்! இரவு ஒன்பது மணிக்குத் தான் மர்மம் வெளிப்படுத்தப்படும்! அதுவரை...வருகிறீர்களா, 'சைனீஸ் செக்கர்ஸ்' விளையாடலாம்! அல்லது ஸ்க்ராபிள்...''

''வேறே நல்ல விளையாட்டு கூட ஒன்று இருக்கிறது...'' என்று கண்சிமிட்டிச் சிரித்தாலும், அவள் விருப்பத்துக்கு அவன் வளைந்து கொடுக்க இருவருமாக 'ஸ்க்ராபிள்' விளையாடினார்கள், சாப்பிட்டார்கள். உணவு முடிந்தபின் சற்று நேரம் வீட்டுத் தோட்டத்திலேயே உலாவினார்கள்.

கடைசியாகக் கைகடிகாரத்தைத் திருப்பிக் காட்டினான் தனசேகரன். மணி ஒன்பது.

அப்போதும், அவனை வெளியே நிறுத்திவிட்டு, தான் மட்டுமாய் உள்ளே சென்று, ஏதோ பண்ணிவிட்டு, அவனைக் கண்ணை மூடி உள்ளே அழைத்துப் போய்க் கண்களைத் திறந்து பார்க்கச் சொன்னாள் அவள்.



எதிரே, டி.வி. ஒன்று உட்கார்ந்திருந்தது. படுக்கைக்கு நேர் எதிரே, படுத்துக் கொண்டே பார்ப்பதற்கு வசதியாய், உரிய உயரத்தில் அமர்ந்திருந்தது.

''மதூ...இது...'' என்று கேட்கும் போதே அவனுக்குப் புரிந்து போயிற்று. சித்திரங்களை விற்ற பணத்தில் மாதவி இந்த டி.வியை வாங்கியிருக்கிறாள்! ''ஏன் மது?''

அவன் மீது சறுகையாய்ச் சாய்ந்து நின்றபடி, ''இரவில் படுக்கையில் படுத்துக் கொண்டே டி.வி. பார்த்துவிட்டு, எழுந்திராமல் அப்படியே 'ஆஃப்' பண்ணிவிட்டுத் தூங்கினால் நன்றாயிருக்கும் என்பீர்களே! அதனால் தான் வாங்கினேன்!'' என்றாள் அவள்.

ஏதாவது நல்ல நிகழ்ச்சி இருந்தால், ஹாலில் படுத்தபடி பார்த்துக் கொண்டிருந்து விட்டு, சோம்பல் முறித்தபடி அலுப்புடன் எழுந்து வந்து படுக்கையில் விழும் போது அவ்வப்போது தனசேகரன் கூறுவது தான்! ஆனால், அதற்காக...?

அந்தந்த மாதத்தில் இருவரின் வரவு, செலவு, இருப்பு பற்றிய ஸ்டேட்மெண்டை 'பாங்க்'கில் இருந்து வாங்கி வந்து 'ஃபைல்' பண்ணுவது தனசேகரன் தான். எனவே இந்தக் கண்காட்சி மூலம் மாதவிக்கு எவ்வளவு பணம் வந்தது என்பதும், அவனுக்குத் தெரியும். கூடவே இந்த டிவியின் விலையும் தெரியும்.

கிட்டத் தட்ட அவளது வருமானம் முழுவதையும் இதில் செலவு பண்ணி விட்டாளே! நெகிழ்ந்து போனான் அவன்.

''என்னடா, நீ? உனக்காக ஏதாவது வாங்கிக் கொண்டு இருக்கலாமில்லையா?'' என்றான் உண்மை யான வருத்தத்துடன்.

''எனக்கு எல்லாமே இருக்கிறதே, தனா? நீங்கள் தான், எனக்கு வேண்டியதெல்லாம் வாங்கித் தந்திருக்கி றீர்களே!'' என்றாள் அவளும் நெகிழ்ச்சியுடன்.

''நம் வீட்டில் நான் மட்டுமா வாங்குவது? நமக்காக நாம் வாங்கினோம் என்று சொல்லு...ஆனால் இது...எப் போதோ சோம்பேறித்தனமாக இருந்தபோது ஏதோ சொன்னேன் என்று, உன் வருமானம் முழுவதையும் எனக்காகச் செலவு பண்ணி விட்டாயேம்மா?'' என்று மீண்டும் வருந்தினான் அவன்.

அவன் முன்னே வந்து நின்று, சிட்டுக்குருவியாய்த் தலை சரித்து குறும்பாய் அவனை நோக்கினாள் மாதவி. ''ம்கூம்? இப்போது மட்டும் என் வருமானம்; நான் செலவும் பண்ணிவிட்டேனா? இதுவும், நம் வருமானத் தில், நமக்காக வாங்கியது தான் சார்!'' என்று கன்னம் குழிய அவள் சிரிக்கவும் தனசேகரனும் தன்னை மீறிச் சிரித்து விட்டான்.

''வாயாடிப் பெண்டாட்டிப்பா! இதுகிட்ட வாய் கொடுத்து மீளவே முடியாது!'' என்று செல்லமாகக் குறைப்பட்டான். ''நாம் இரண்டு பேருமாகச் சேர்...ந்து எப்படிப் பார்க்கவென்று இந்த டி.வியை வாங்கி னோமோ, அப்படிப் பார்க்கலாம், வா!'' என்று, அவ ளைத் தூக்கிச் சென்று, படுக்கையில் போட்டு விட்டுத் தானும் படுத்துக் கொண்டு டி.வியை 'ஆன்' செய்தான்.

டி.வி. நிகழ்ச்சியின் இடையே ஒரு கார் விளம்பரத் தைக் கண்ட பிறகு தான், தனசேகரனுக்குத் தன் செய்தி நினைவு வந்தது.



டி.வி.யை அணைத்து விட்டு, மனைவியைத் தன் புறம் திருப்பி அவன் சொன்னான். ''மதுக்குட்டிக்கு இன்னொரு நல்ல செய்தி தெரியுமா?'' என்று தொடங்கிச் சொன்னான். ''நம் உர நிறுவனத்தில் நம் உபயோகத் துக்கு ஒரு கார் தரப்போகிறார்கள் தெரியுமா?'' என்றான் மகிழ்ச்சியோடு!

''காரா!'' என்று வாயைப் பிளந்தாள் அவள்! ''நம் உபயோகத்துக்கு என்றால்...நமக்கு மட்டுமாய்ப் பயன் படுத்தவா? எப்போதும் நம் வீட்டிலேயே நிற்குமா?'' என்று ஆர்வமும் ஆனந்தமுமாக விசாரித்தாள்.

''ஆமாம் ஆமாம் ஆமாம்!'' என்று தொடங்கி அதன் விவரம் சொன்னான். ''நம் பெயரிலேயே இருக் கும். அவர்களிடம் தவணையில் பணம் கட்டுவது போல ஏற்பாடு. நம் சம்பளத்தில், காருக்கும் பணம் பிடிக்கிற மாதிரிக் கணக்கில் இருக்கும். ஆனால், கார் அலவன்ஸ் என்று தனியாக அதே அளவு தந்துவிடுவார்கள்! ஒரு பைசா கைச்செலவு இல்லாமலே! பெட்ரோலுக்குத் தனி யாகப் பணம் தருகிறார்களாம்!''

''அப்படியானால், நமக்கு ஒரு காசு செலவு இல்லா மல், ஒரு கார் வரப் போகிறதா, தனா?''

ஆமாம். மூன்று ஆண்டுகளில், தவணை முடிந்து கார் முழுக்க நம்மது ஆகிவிடும். அதன் பிறகு அந்த அலவன்சும் ஒரு 'இன்க்ரிமெண்ட்' மாதிரி நமக்கு வரும்! அன்றைக்கே — உன் கண்காட்சியன்றே, எம்.டி. இதுபற் றிப் பேசத்தான் என்னை அழைத்தார். எல்லாம் உறுதி யான பிறகு உன்னிடம் சொல்லலாம் என்று இருந்தேன். இன்று எம்.டி.யே நேரில் என்னைக் கூப்பிட்டுச் சொன் னார். அதுபற்றி ஒப்பந்தமும் கையெழுத்தாகி விட்டது! நம் கார் நம்பர் தெரியுமா? உன் 'லக்கி நம்பர்' என்

பாயே! அது தான் வேண்டும் என்றேன்! எம்.டி. அதற்கும் பணம் கட்டி ஏற்பாடு செய்து விட்டார்!'' என்று மகிழ்ச்சியோடு விவரம் சொன்னான் கணவன்.

''எல்லாம் உங்கள் வேலைத் திறமைக்குக் கிடைக்கும் பரிசுதானே, தனா?'' என்றாள் மனைவி பூரிப்புடன். ''எங்கள் அப்பா, அவரது நாற்பத்தைந்தாவது வயதில் தான் கார் வாங்கினாராம். நமக்குக் கார் வரப்போவது தெரிந்தால், அவர் எவ்வளவு சந்தோஷப்படுவார் தெரியுமா? ஒரு நாள் கே.கே.நகருக்குப் போய் உங்கள் அம்மாவிடம் சொல்லிவிட்டு வரவேண்டும்!'' என்று, கணவனின் உறுதியான தாடையை வருடியபடியே, பெருமையோடு உரைத்தாள் மனைவி.

அதன்படியே இருவருமாகக் காரிலேயே சென்று, இருவருடைய வீட்டாரிடமும் சொல்லி, ஆசி பெற்றுக் கொண்டு வந்தனர்.

தனசேகரனுடைய அண்ணன் மனைவியின் முகத்தில் மட்டும், கணநேரம் கடுப்பு தென்பட்டதோ என்ற சந்தேகம் மாதவிக்கு.

ஆனால், உடனே குணசேகரனுடைய மூன்று வயது மகன், 'சித்தப்பா, சித்தி' என்று ஏதோ சொல்லத் தொடங்கவும் எல்லாம் சரியாகி விட்டது.

''தனா, விக்கியின் பிறந்த நாள் நினைவு இருக்கிறதா? இன்னும் இருபது நாள் இருக்கிறது என்றாலும் நீ பாட்டில் 'டூர்' போய்விடக் கூடாதே என்று தான் இப்போதே சொல்லி வைக்கிறேன்!'' என்றான், குணசேகரன் தம்பியிடம்.

உடனே பிறந்த நாள் பற்றிப் பேச்சு சுழன்றது.



எப்போதும் கேக் நன்றாக வந்தாலும், அதன் 'ஐசிங்' சரியில்லாமல் வழிந்து விடுவது பற்றி குணசேகரன் மனைவி சந்தியா வருத்தப்பட்டாள்.

''எனக்குக் கேக்கைவிட 'ஐசிங்'தான் நன்றாய் வரும், அக்கா! என் அண்ணன் கூட, இவள் 'ஐசிங்'கைப் பார்த்து ஏமாந்து, இந்த மட்டமான கேக்குக்கு நான் 'ஐசிங்' பண்ணட்டுமா?'' என்று, மனைவி உதவ முன் வந்தது பற்றித் தனசேகரனுக்கு ஏகப்பட்ட பெருமை!

''உன்னால் முடியுமா? மாதவி?'' என்று ஒரு நிம்மதியும், கூடவே சந்தேகமுமாக, சந்தியா இழுத்தாள்.

கணவனின் பார்வையில் உள்ளம் பூரித்திருந்த மாதவி, ''நாங்கள் சீக்கிரமே வந்து விடுகிறோம், அக்கா! நீங்கள் கேக் மட்டும் செய்து வையுங்கள். நான் வந்து ஐசிங் செய்து தருகிறேன்! உங்களுக்கு ஏதாவது மாடல்... என்ன மாதிரி 'டிசைன்' செய்வது என்று ஏதாவது ஐடியா இருக்கிறதா?'' என்று வினவினாள்.

''கால்பந்து மைதானம் போல ஒரு தரம் பார்த்தேன், மாதவி. எனக்கு அது மிகவும் பிடித்தது!'' என்றாள் சந்தியா, உடனே உற்சாகமாய்!

''நல்ல ஐடியா! ஸ்கோர் போர்டில், அணியின் பெயரில் விக்கி என்றும், ஸ்கோராக 'மூன்று' என்றும் எழுதலாம்!'' என்று மாதவி கூறியது எல்லோராலும் வரவேற்கப்பட்டது.

சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டு, தனசேகரன் தம்பதி கிளம்பினர்.

கிளம்பும்போது, ''ரொம்ப நன்றிம்மா. ஆறு மணிக்கு விழாவைத் தொடங்கலாம் என்றிருக்கிறோம்.

நீங்கள் இரண்டு பேரும் மதிய உணவுக்கே வந்து விடுங்கள்'' என்றான் குணசேகரன்.

''மதியம் வருவது சிரமம் அத்தான். நான் அங்கேயே ஸ்கோர் போர்டு, 'நெட்'டெல்லாம் செய்து கொண்டு நாலு நாலரைக்கு வந்து விடுகிறோம். மைதானம் செய்ய அதிகநேரம் ஆகாது!'' என்று கூறி மாதவி விடை பெற்றாள்.

''மைத்துனன் பிள்ளை பிறந்த நாளை கேக்குக்கு 'ஐசிங்' அலங்காரம் பண்ணுவது பற்றி எனக்கு மகிழ்ச்சி தான். ஆனால், உங்கள் சொந்தப் பிள்ளையை எப்போது பெற்றுக் கொள்வதாக உத்தேசம்?'' என்று கேட்டு விட்டு, சின்ன மகனும் மருமகளும் அசடு வழிவதைப் பார்த்து விட்டு, ''ரொம்பத் தள்ளிப் போடாதீர்களப்பா. உன் பிள்ளையையும் பார்த்து விடும் ஆசை, எனக்கும் இருக்குமல்லவா?'' என்றார் தனசேகரனுடைய அன்னை.

திரும்பி வரும்போது, காரை ஓட்டியபடியே, தன் தாயாரின் பேச்சு பற்றித் தனசேகரன் குறிப்பிட்டான். ''நிறையப்பேர் என்னிடமும் கேட்கிறார்கள், மது! எங்கள் எம்.டி.கூட, அன்று பேசிக் கொண்டு இருக்கும் போது, 'குட்டி தனசேகர்' எப்போது வரப்போகிறான் என்று கேட்டார். நாம், இரண்டு ஆண்டுகள் என்று கணக்கு வைத்தது, சற்று அதிகப்படியா என்று இப்போது எனக்கே தோன்றுகிறது!'' என்றான்.

சற்று யோசித்து விட்டு, ''எப்படியும் இப்போதைக்கு வேண்டாம், தனா அந்தப் பொறுப்பெல்லாம் ஏற்க, இப்போது என்னால் முடியாது. அது பற்றி யோசிக்கக் கூட எனக்கு நேரமே இல்லை! அந்த ஆஃபீஸ் வரவேற்பு அறை வேலை இப்போது தான் முடிந்தது. மருத்துவமனை ஒன்றிற்கு மூன்று படங்கள் கேட்டிருக்கிறார்கள். தனிப்பட்ட நாலைந்து 'ஆர்டர்'கள் இருக்கின்றன. இதன் நடுவில், சுகிர்தா வேறு கேட்கிறாள்! கண்காட்சியில் மீந்ததெல்லாம் விற்றுவிட்டதாம். இதெல்லாம் ஒருவாறு முடியட்டும். அதன் பிறகு பார்ப்போம்!'' என்று முடித்தாள் மனைவி.



தனசேகரன் பதிலேதும் சொல்லவில்லை...உள்ளூர அவனுக்கு, இந்தச் சித்திர வேலைகள் எப்போது முடிந்து, எப்போது இதுபற்றி மாதவி யோசிக்கப் போகிறாள், என்று இருந்தது. 'அலை ஓய்ந்து கடல் குளியல்' கதையாகி விடக் கூடாதே என்று தோன்றினாலும் வீண் சச்சரவாகி விடக் கூடாது என்று அவன் பேசாமலேயே இருந்து விட்டான்.

உள்ளூர இன்னோர் ஏக்கமும் தோன்றி அவனை உறுத்தியது. மனதில் தோன்றியதையெல்லாம், ஒளிவு மறைவின்றி — ஒளிவுமறைவுக்கு அவசியமே இல்லாமல், வெளிப்படையாக இருவரும் பேசி மகிழ்ந்து மனம் ஒட்டி வாழ்ந்த நாட்கள் இனிமேல் என்றேனும் மீண்டும் வரக்கூடுமா?

அல்லது, இந்த விரிசல், பிளவு எல்லாம் அவனது கற்பனைதானா? அவனது ஒரு சின்ன — அற்ப ஆசை தான்! அதை நிறைவேற்றுவதற்காக, சுமார் நாற்பது நாட்கள் கடுமையாக உழைத்து அவள் ஈட்டிய பணம் அவ்வளவையும் செலவழித்திருக்கிறாளே! மனதால் விலகிப் போகிறவள் செய்யக்கூடிய காரியமா, இது? இன்று கூட அவளாக உதவ முன்வந்தாளே! இத்தனைக்கும், சந்தியா ஒன்றும் ஓரகத்தியிடம் உருகி வழிகிறவள் கிடையாது. அண்ணன் மதியச் சாப்பாட்டுக்கே வரச்

சொன்னபோதும்கூட, அவள் அது பற்றி வாய் திறக்கவில்லையே!

அதை உணர்ந்து, சாதுர்யமாய் மதியம் செல்வதைத் தவிர்த்த போதும், உதவுவதில் மாதவி பின்வாங்கவில்லையே!

தன்னையறியாமல் ஒரு பெருமூச்சு விட்ட தனசேகர், அதன் எதிரொலியே போல, மாதவியும் பெருமூச்சு விடவும் திகைத்தான்!

இதுபோன்ற சஞ்சலங்கள் மாதவி மனதிலும் இருக்கின்றனவா?

மனம் உருகி, ''என்னடா, மது? ஏன் இந்தப் பெருமூச்சு?'' என்று கனிவாய் விசாரித்தான்.

''ஒன்றுமில்லை...இந்தப் படம் எல்லாம் வரையத் தொடங்காமலே இருந்திருக்கலாமோ என்று சிலசமயம் தோன்றுகிறது! வீட்டில் எத்தனையோ வேலைகள் செய்யாமலே நின்று போகின்றன. தையல் விட்டுப் போனது, எத்தனையோ தைக்கவில்லை; உங்கள் சட்டை நாலைந்தில் பட்டன் இல்லாமல் அப்படியே கிடக்கின்றன. நொறுக்குத் தீனிக்கு செய்து வைத்து எத்தனையோ காலம் ஆகிவிட்டது. பல நாட்கள் நீங்கள் வரும்போது வீட்டில் இருக்க முடியவில்லை...அதையெல்லாம் யோசித்தால் மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது! ஆனால், படம் வரையும்போது அது நன்றாயிருக்கிறது என்று நாலு பேர் பாராட்டும்போது விற்றுப் பணம் கைக்கு வரும்போது...எதையோ பெரிதாய்ச் சாதித்து விட்ட மாதிரி, அது ஒரு தனிப் பரவசமாய்த் தான் இருக்கிறது! அதை விட்டு விடவும் மனம் வரவில்லை!... நான் என்ன தான் செய்யட்டும் தனா?'' என்று அவனிடமே ஆலோசனை கேட்டாள்.



தனசேகரன் என்ன சொல்வான்?

கேவலம் நீ ஒரு பெண்! நீ என்ன சாதித்துக் கிழிப்பது என்று சொல்லக்கூடிய அகம்பாவம் அவனுக்குக் கிடையாது! அதில் ஒரு 'பரவசம்' என்று அவளே சொன்ன பிறகு, அதைத் தடுப்பதும் குற்றம்போல் தோன்றியது.

எனவே, ''விடுவானேன், மாதவி? செய். எத்தனையோ பெண்கள் அலுவலகம் சென்று வரவில்லையா? அது போல நீயும் இதைச் செய்ய முயற்சி செய். கொஞ்ச நாளில் எல்லாம் ஒரு நிதானத்துக்கு வந்து விடும். என்று, அடிமனதின் எதிர்ப்பைக் காட்டிக் கொள்ளாமலே பதிலிறுத்தான்.

பிறகு, அந்த எதிர்ப்புக்காகவும் வெட்கியவனாய், அவளிடம் லேசாகத் திரும்பி, ஒரு முறுவலைக் காட்டி விட்டு, ''ஒரு முக்கியமான விஷயம், மாதவி. இன்று வேலை நிமித்தமாய் தேனாம்பேட்டையில் ஒரு அலுவலகத்துக்குப் போயிருந்தேன். ரொம்பவும் புது மாடலில் கட்டப்பட்ட அலுவலகம் அது. அங்கே, உள்ளே சென்றதும் என்ன பார்த்தேன் என்கிறாய்? உன் சித்திரம்!'' என்றான் குரலில் உற்சாகம் காட்டி.

''அப்படியா! நன்றாயிருந்ததா?'' என்றாள் அவளும் ஆர்வமும் மகிழ்ச்சியுமாக.

''பின்னே?'' என்று மீண்டும் அவள் புறம் திரும்பிப் பல்லைக் காட்டி விட்டு, மறுபடியும் சாலையில் பார்வையைப் பதித்து, காரை ஓட்டியவாறே அவன் தொடர்ந்தான். ''அது கோவர்த்தனகிரியைக் கண்ணன் தாங்கி நிற்கும் படம். பார்த்ததும் எனக்குப் பெருமையாக இருந்தது! உன் கண்காட்சியில் வாங்கியிருக்கிறார்கள். அதை சிம்பாலிக்காக வைத்து, அது போல, அவர்கள்

நிறுவனம் இந்திய மக்களைக் காப்பது போல ஒரு படம் வரையச் சொல்ல வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள்'' என்றவன், அதற்கு மேல் 'ரவுண்டானா' வைச் சுற்றி வந்து காரைத் திருப்புவதில் வெகு கவனத்துடன் ஈடுபட அத்தோடு, அந்தப் பேச்சு நின்றது.

தனசேகரன், மனைவியிடம் சொல்லாமல் விட்டதும் சிலது இருந்தது. அங்கே அவன், படம் வரைந்தது தன் மனைவிதான் என்று சொல்லவில்லை! சொல்லப்பிடிக்கவில்லை!

படத்தைப் பற்றிக் குறிப்பிட்ட, அந்த நிறுவனத்து நிர்வாகி, படத்தைச் சிலாகித்துப் பேசியதோடு, நிற்கவில்லை! படம் வரைந்தவளைப் பற்றியும் விமர்சித்தார். அவள் உடம்பு 'செம கட்டை' என்றவர், 'அவள் கணவன் கொடுத்து வைத்த பாவி! நம் வீட்டிலும் இருக்கிறதே!' என்று குறைப்பட்டார். அவளைப் பக்கத்தில் இருந்து பார்ப்பதற்காகவே, இந்தப் படம் பற்றிப் பேசுவதற்காகத் தானே செல்லப் போவதாகவும் சொன்னார்.

சற்று நேரம், எதையுமே பேசமாட்டாமல் தனசேகரனுக்கும் அங்கே தொண்டை இறுகிப் போயிற்று! உடம்பு முழுவதுமே தான்! சென்ற வேலையை ஒருவாறு முடித்துக் கொண்டு திரும்புவதே, பாடாகிப் போயிற்று!

இதை வெளிப்படையாக மனைவியிடம் கூறவும் அவனால் முடியவில்லை. பார்க்கிறவர்கள் பார்வை, அவரவர் தன்மைக்கு ஏற்பப் பத்து விதமாய்த்தான் இருக்கும்! அதற்காக முக்காடு போட்டு, முகம் மறைத்து முகம் என்ன முழு உடலையுமே மறைத்து, வீட்டினுள் முடங்கிக் கிட என்று சொல்ல முடியுமா? இந்த இருபத்தோராம் நூற்றாண்டில், அது பத்தாம்பசலித்தனமாகவும், படுமுட்டாள்தனமாகவும் அவனுக்கே தோன்றும் போது, எப்படி, அவன் அப்படிச் சொல்வான்?



ஆனால், நம் நாட்டு ஆண்களுக்கே உரிய உரிமை உணர்வும் வாட்ட, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் மாட்டாமல் தனசேகரனின் திண்டாட்டம் தொடர்ந்தது!

இந்நிலையில், அவனுடைய அண்ணன் குணசேகரனுடைய மகனான விக்கி என்றழைக்கப்படும் விக்னேஷின் பிறந்த நாள் வந்தது!

திருமணமான பின் முதல் முறையாகத் தனசேகரன் மனைவிக்காக அவமானப்பட்டுத் தலைகுனியும்படி ஆயிற்று!

## 8

**விக்கி**யின் பிறந்த நாள் மெல்ல நெருங்கி வந்தது..

இடையில் 'ஓர் ஐந்தே நாட்கள்' பயணமாகத் தனசேகரன் ஆந்திர மாநிலத்துக்குப் போய் வந்தான். ''அடுத்த டூர் இனி விக்கியின் பிறந்த நாளைக்குப் பிறகு இருக்கும்படி ஏற்பாடு செய்து விட்டேன்!'' என்றான் மனைவியிடம்.

தன் வேலைகளினூடே மாதவி, கால்பந்தாட்ட மைதானத்தில் விளையாடும் வீரர்கள், நடுவர்கள், ஸ்கோர் போர்டு எல்லாம் சர்க்கரையில் செய்து, எடுத்து, வண்ணம் கொடுத்து எடுத்து, காற்றுப் புகாத [illegible]வில், பத்திரப்படுத்தி வைத்தாள்.

அந்தச் சிறு உருவங்களின் அமைப்பைப் பார்த்து விட்டு, ''வீட்டில் ஒரு கலையரசி இருப்பது எவ்வளவு

வசதி என்பது இப்போது தான் தெரிகிறது!'' என்று நகைத்தான் கணவன்.

ஆனால், எல்லாமே நகைப்பாக இல்லாமல், சில சிறு...உரசல்களும் நேராமல் இல்லை.

வேறுபாடுகளில் ஒன்று சுகிர்தா பற்றியது.

இன்னமும் இரு முன்னணி நிறுவனங்களின் அலுவலகங்களில், மாதவி வரைந்த படங்களைப் பார்த்து தனசகேரனுக்கு, அந்தப் படங்களை உருவாக்கிய மனைவி அவைகளுக்காகப் பெற்று வரும் தொகை மிகவும் குறைவானதாகத் தோன்றியது. அந்தப் பணம் பற்றி, அவன் உரிமை காட்டியது கிடையாது என்றாலும், மாதவியின் உண்மையான உழைப்பு • ஏமாற்றப்படுகிறதோ என்ற சந்தேகம் அவனுக்கு.

அவன் படங்களைப் பார்த்த நிறுவனங்கள், சாதாரணமான, மலிவான பொருட்களைத் தேடிப் போகிறவர்கள் அல்ல!

படங்களை ரசிப்பது போலக் காட்டிப் பேசி அங்கே விவரம் சேகரிக்க அவனுக்கு மனமில்லை. முன்போல எவனாவது மாதவி பற்றித் தரக் குறைவாகப் பேசினால், இன்றைய மனநிலையில் அவனால் சகித்துக் கொள்ள முடியாது!

எனவே, மாதவியையே உசுப்பிவிட முயற்சி செய்தான்.

வீட்டுப் பொறுப்புகளை விட்டு விட்டு, ஓரளவு கணவனையும் புறக்கணித்து விட்டு, அவள் உழைக்கும் உழைப்புக்குச் சரியான ஆதாயமாவது இருக்க வேண்டும் அல்லவா?



'இத்தனை படங்கள் வரைந்து விட்டாய்! உன் படங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது! படங்களுக்கு விலை சற்று அதிகம் வைக்கலாம் இல்லையா?'' என்று ஒரு நாள் ஆழம் பார்த்தான்.

''அதெல்லாம் சுகிர்தா பார்த்துக் கொள்வாள்!'' என்றாள் மாதவி, அவனது உட்குறிப்பைக் கொஞ்சமும் கவனியாமலே.

''புரியவில்லையே! முதுகு ஒடியப் பாடுபட்டுப் படம் வரைபவள் நீதானே? விலையை அவள் என்ன நிர்ணயிப்பது?'' புரியாதவன் போலப் பாவனை காட்டினான் அவன்.

இப்போதும் அவனைப் புரிந்து கொள்ளாமலே, ''ஆமாம் தனா! பண விவகாரம் எல்லாம் அவள் பொறுப்பு தான். வரைவதோடு என் பணி முடிந்தது. அதற்கு விலை குறித்து, சரியான வாடிக்கையாளர் தேடி, விற்பது, விற்ற பணம் வசூலிப்பது எல்லாமே அவள் தான்!'' என்றாள் மாதவி சர்வ சாதாரணமாகவே.

''அவள் பண விஷயமாக ஏதாவது தில்லுமுல்லு செய்தால் எப்படிக் கண்டு கொள்வாய்?'' என்று தனசேகரன் முடிக்குமுன்பே, அவனைக் குற்றம் சாட்டுவது போல முறைத்தாள் மனைவி.

முறைத்து விட்டு, ''தில்லுமுல்லு எல்லாம் அவள் செய்ய மாட்டாள். ஆனால் எனக்கு வேறு சந்தேகம்!'' என்றாள் அவள்.

''என்ன சந்தேகம்?''

''மனைவிக்குத் தனியாகப் பணமும், நாலு பேர் நடுவில் புகழும் வருவது கணவனுக்குப் பிடிக்காது

என்பது உலக இயல்பு; அதற்குக் காரணமான அவளை நீங்கள் வெட்டி விட முயற்சிக்கக் கூடும் என்று சுகிர்தா ஒரு தரம் சொன்னாள். அப்படிப்பட்ட அற்ப புத்தி உங்களுக்குக் கிடையாது என்று அவளிடம் அன்று நான் அடித்துப் பேசியதில், உடனே ரொம்பவும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்! இப்போது...''

''இப்போது என்ன?'' என்றான் அவன் அவளை நேராக நோக்கி.

''அவள் சொன்னது சரிதானோ என்று தோன்றுகிறது!'' என்றாள் அவள் விறைப்பாக நின்று.

''அதாவது, உன்னைப் பற்றி அடுத்தவர் புகழ்வதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அசூயைக்காரன் நான்! உன்னிடம் தனியாகப் பணம் இருப்பதை தாங்க மாட்டாத அளவு ஆணாதிக்கம் உடையவன், என்கிறாய்! அப்படித் தானே?'' என்றான் தனசேகரன் ஆத்திரத்துடன்.

ஒரு கணம் மவுனமாய் இருந்து விட்டு, ''சுகிர்தாவைப் பற்றி வேறு எதற்காக நீங்கள் தப்பாகப் பேசுகிறீர்கள்?'' என்று சற்றே இறங்கிய குரலில் மாதவி கேட்டாள்.

''ஏன்? மற்றதெல்லாம் தியாகம் செய்து விட்டுக் கடுமையாக உழைக்கிறாயே; உன் உழைப்புக்கு உரிய ஊதியம் இன்றி நீ ஏமாந்து விடக்கூடாதே என்ற அக்கறை கூடக் காரணமாக இருக்கலாமில்லையா?''

மீண்டும் ஒரு மவுனத்தின் பின், ''மற்றதெல்லாம் தியாகம் செய்து விட்டு என்கிறீர்களே, அது என்ன மற்றதெல்லாம்?'' என்று அவள் வேறு விவரம் கேட்டாள்.



''ஏன்...'' என்று தொடங்கியவன், சற்றுத் திகைத்து விட்டு, மீண்டும் தொடர்ந்து சொன்னான். ''அன்றைக்கு நீயே சொல்லவில்லையா, பட்டன் தைக்கவில்லை, பலகாரம் செய்யவில்லை..நான் வரும்போது வீட்டில் இருப்பதில்லை என்றாயே! நமக்கு ஒரு குழந்தை உருவாவதையே இதற்காகத் தானே இப்போது வேண்டாம் என்றாய்? இதெல்லாம் தியாகங்கள் அல்லவா?''

கணவனை வெறித்து நோக்கிய மாதவியின் முகத்தில் ஒருகைத்த புன்னகை தோன்றியது. 'சுகியிடம் அவ்வளவு தூரம் சண்டை போடாத குறையாக வாதாடினேன்! கடைசியில் அவள் சொல்வது தான் சரியாக இருக்கிறது!' என்று முணுமுணுத்து விட்டுக் கணவனை நிமிர்ந்து நோக்கினாள். ''அதாவது புருஷனுக்குப் பட்டன் தைப்பதும், அவனுக்கு நொறுக்குத் தீனி செய்து வைப்பதும், தலைவர் வீடு வரும் நேரத்தில் ஊழியம் செய்வதற்காக அவள் வீட்டிலேயே இருப்பதும், அவர் குலம் தழைக்கப் பிள்ளை பெற்றுப் போடுவதுமாக...இவைகளுக்காகத்தான் ஒரு பெண், பிறவி எடுப்பதே என்கிறீர்களாக்கும்! இதெல்லாம் சய்யாதது பெரும் தியாகமாக்கும்! இதற்குப் பெயர் ஆணாதிக்கம் இல்லை என்றால் வேறு எதைத்தான் ஆணாதிக்கம் என்பது? நீங்களே தான் சொல்லுங்களேன்!'' என்று, கசப்பும் ஏளனமும் கலந்த குரலில் மாதவி கேட்டபோது, தனசேகரன் வாயடைத்துப் போனான்.

எதிலிருந்து எதற்குத் தாவுகிறாள்? அதுவும் எப்படித் தாவுகிறாள்? அவளாகச் சொன்னபோது 'பசுப் போலச் சிறப்பாக இருந்தது. இப்போது 'மாடுமாதிரி' என்று கொடுமையாக மாறிவிட்டதே!

இது மாதவியாகச் சொல்வது அல்ல. பிழைகாணத் தெரியாத அப்பாவி அவன் மனைவி. இந்த மாதிரிப் பேச்சுகளை எதிர்பார்த்து, அவளைத் தயார்படுத்தி வைத்திருக்கிறாள் அந்த சுகிர்தா!

'பசுப்' போன்ற மனைவி மாதவி, அந்த சுகிர்தாவின் உசுப்பலில், 'மாடு மாதிரி' முட்டுகிறாள் என்று எண்ணிய தனசேகரனுக்கு, முன் நினைத்ததோடு இதை ஒத்திட்டுப் பார்த்து உள்ளூரச் சிரிப்புகூட வந்தது.

ஆனால், மாதவியின் இப்போதைய மனநிலையில், இதுபோன்ற வேடிக்கை எல்லாம் ஏடாகூடமாகி விடக் கூடும் என்று தோன்றவே, ''மாதவி, அன்று நீ சொன்னதைத்தான் நான் திருப்பிச் சொன்னேன். மற்றபடி, இதையெல்லாம் நீ செய்தே தீர வேண்டும் என்று நான் உன்னிடம் எப்போதாவது சொன்னதுண்டா? சொல்லு? சட்டென்று ஆணாதிக்கம் பிடித்தவன் என்று விட்டாயே?'' என்று தணிந்தே பேசினான்.

''பின்னே, 'தியாகம்' என்கிறீர்களே!'' என்றாள் அவள், அப்போதும் முழுமையாகச் சமாதானம் அடையாமல்.

''அதுகூட, அன்று நீ செய்ய முடியவில்லையே என்ற வருத்தப்பட்டுப் பேசியதால் தான்! வருத்தப்பட்டதால், நீ விரும்பவதைச் செய்வதைக் கூட விட்டு விட்டு என்பதைத் 'தியாகம்' என்று குறிப்பிட்டு விட்டேன். வெறும் ஒரு வார்த்தை! இதை வைத்துக் கொண்டு நாம் இருவரும் வாதாட வேண்டுமா? விடு! இன்று மாலை ஏதாவது சினிமாவுக்குப் போய் வரலாமா?'' என்று தாஜா பண்ணி, தனசேகரன், ஒருவாறு நிலைமையைச் சமாளித்தான்.



மாதவிக்கும், தான் சற்று அதிகம் பேசி விட்டோமோ என்கிற எண்ணம் தான். எனவே, ''ஆமாம்! சின்ன விஷயத்தைப் பெரிதுபடுத்துவானேன்!'' என்று இறங்கி வந்தாள். ''என்ன சினிமாவுக்கு..'' என்று தொடங்கியவள், உடனே ஒன்றை நினைத்து, ''சினிமா வேண்டாம், தனா. ஒரு படத்தின் கடைசி நகாசு வேலை பற்றித் திட்டமிட வேண்டியிருக்கிறது...அதனால், சினிமா போக நேரமில்லை!'' என்றாள், யோசனையோடு.

அவனிடமிருந்து பதில் வராது போகவும் கணவன் முகத்தை ஏறிட்டவளுக்கு, இறுக மூடியிருந்த உதடுகளின் மீது ஆள்காட்டி விரலை வைத்துக் காட்டி விட்டுக் கைகளை விரித்து அவன் குறும்பாய் நோக்கவும், சட்டெனச் சிரிப்பு வந்து விட்டது.

அடக்கிக் கொண்டு, ''சேர்ந்து சினிமாவுக்குப் போக முடியவில்லையே என்று கொஞ்சம் வருத்தம் தான். ஆனால், அதைப் பெரிதாகத் 'தியாகம்' என்று சொல்லத் தேவையில்லையே! கொஞ்சம் விட்டுக் கொடுத்து..சற்று நீக்குப்போக்காக நடந்து கொள்வதாக வைத்துக் கொள்ளலாமில்லையா?'' என்று முறுவலுடனேயே கேட்டாள்.

பதிலாகப் புன்னகைத்தபடி, ''நான், 'ஒரு வார்த்தை' சொல்லவில்லையம்மா!'' என்று அவன் சிரிக்க, கூடச் சேர்ந்து நகைத்த போது, மாதவிக்குக் கொஞ்சம் ஒரு மாதிரி தான் இருந்தது.

தன் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றவில்லையோ என்று அவளுக்கு உள்ளூர ஒரு சந்தேகம் உண்டாயிற்று. வெளியே சென்று பொருள் ஈட்டுவது

அவன் கடமை என்றால், வீட்டுப் பொறுப்பு அவளது தானே? அதைச் சரிவரச் செய்யவில்லை என்றால்...

லேசாக மனம் குன்றும்போதே, மாதவியின் தலை மீண்டும் நிமிர்ந்தது.

அவளும் தான் சம்பாதிக்கிறாள்! தனசேகரன் அள வுக்கு இல்லை என்றாலும், அவளும் ஒன்றும், அவன் கையை எதிர்பார்த்துதான் வாழ்ந்தாக வேண்டும் என்று இல்லையே! அவளது வருமானத்தில் வீட்டுக்கு டி.வி. கூட வாங்கி வைத்திருக்கிறாளே!

அவள் ஒன்றும் படிப்பறிவு இல்லாத, பழங்காலப் பஞ்சாங்கம் அல்லவே, வெளி உலகம் பற்றி ஒன்றுமே தெரியாத முட்டாளாய், மாங்குமாங்கென்று வீட்டு வேலை அத்தனையும் செய்து கொண்டு, சம்பாதித்துப் போடுகிறாள் என்ற ஒரு காரணத்துக்காகக் கணவனுக் குக் கால் அமுக்கிக் குற்றேவல் புரிந்து, அடிமை போல வாழும் அவசியம் அவளுக்கு என்ன வந்தது?

அத்தோடு...குழந்தை விஷயமாய் எண்ணிப் பார்த் தாலும்கூட, பத்து மாதம் சுமந்து பெறப் போகிறவள் அவள்! அந்தக் குழந்தையை எப்போது பெறுவது என்ப தில் அவளது விருப்பம் தானே முதலாவதாகவும் முக்கிய மானதாகவும் கருதப்பட வேண்டும்?

இரவு உணவின்பின் தனசேகரனைத் தனியே உட் கார்ந்து டி.வி. பார்க்கவிட்டு விட்டுத் தன் சித்திரங்கள் தொடர்பாக வேலை செய்யச் சென்றபோது மாதவி சற்றும் தயங்கவில்லை! அவள் மனதில் எந்தவித உறுத்த லும் எழவும் இல்லை.

ஆனால், தனசேகரனுக்கு உள்ளூர ஏதோ நிரடியது. மாதவி 'ஆணாதிக்கம்' என்கிறாளே! அது உண்மையா?



மனைவியிடம் அவன் எதிர்பார்ப்பது அதிகப்படிதானா? அவளாக மனமுவந்து செய்த போது ஒன்றும் தெரிய வில்லை. அவன் பொருளீட்ட, அவள் வீடு பேண...எல் லாம் இயல்பாய் சமமாய்த் தோன்றியது.

இப்போது, அவளிடம் ஒரு கலை இருக்கிறது; அதற்கு வெளியுலகில் வரவேற்பு இருக்கிறது எனும் போது, அதற்கும் மதிப்புக் கொடுப்பது தானே நியாயம்? முன்பு செய்த வேலைகளை எல்லாம் அவள் செய்து தான் தீர வேண்டும்; செய்து முடித்து விட்டுத் தான் தன் கலை பற்றி அவள் கவனித்தாக வேண்டும் என்றால், முற்போக்கு எண்ணம் கொண்ட தனசேகரனால் அதைச் சரியென்று நினைக்க முடியவில்லை! அது எவ்வளவு தான் அவனுக்கு வசதியாக இருந்தபோதும்!

சற்றுத் தடித்துவிட்ட இந்தப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, இருவருமே சற்று அளந்து தான் பேசிப் பழகினர்.

அவ்வப்போது அடுத்தவர் முகம் பார்த்து, முக பாவனையிலிருந்து, அடுத்தவர் மனம் ஊகித்து, வீண் சச்சரவுகள் நேர்ந்து விடாமல் கவனத்துடன் வார்த்தை களை வெளியிட்டனர்.

எனவே, உள்ளே எப்படி இருந்த போதும், வீட்டில் அமைதி நிலவியது.

'விக்கி'யின் பிறந்த நாளன்று காலையிலேயே கொண்டு செல்ல வேண்டிய பொருட்களை எல்லாம் மாதவி தயாராக எடுத்து வைத்து விட்டாள். அணிந்து செல்ல வேண்டிய சுரிதார் அயர்ன் பண்ணி அதுவும் ரெடி.

விக்கிக்கு அவர்களின் பரிசான பொம்மை நாய்க் குட்டி பஞ்சடைக்கப்பட்டு கடைசிக் கட்டத் தையலுக்கா

கக் காத்திருந்தது. நாயின் காது, கண், மூக்கு எல்லாம் அவசர அவசரமாகத் தைத்தவள், முதுகுப்புறம் சேர்த்துத் தைப்பதைக் காரில் செல்லும் போதே முடித்து விடலாம் என்று எடுத்து வைத்தாள்.

சற்று ஓய்வெடுத்துக் கொண்டு, ஒரு காபியோடு மூன்று மணிக்குக் கிளம்பினால் நாலு மணிக்குள் கே.கே. நகர் சென்று விடலாம்; 'ஐசிங்' வேலை அரைமணி நேரம்; பிறகு ஒரு மணி நேரம் பலூன் ஊதிக் கட்டி, கலர் ரிப்பன் ஒட்டி வீட்டை அலங்காரம் செய்யவும். மீண்டும் ஒப்பனைகள் செய்து கொண்டு ஆறு மணிக்குள் தயாராகவும் நேரம் சரியாக இருக்கும் என்று இருவருமாகத் திட்டமிட்டிருந்தனர்.

''என்ன, இனி உடைமாற்றிக் கிளம்புவோமா என்று புரண்டு படுத்தபடியே தனசேகரன் கேட்டபோது, டெலிஃபோன் மணி அடித்தது.

எழுந்து சென்று எடுத்துப் பேசியவனுக்கு மறுமுனையில் பேசியவள் சுகிர்தா என்றதுமே உள்ளூர் எரிச்சல் தான்.

''உன் சினேகிதி தான். பேச்சைக் கொஞ்சம் சீக்கிரமாய் முடித்து விட்டுக் கிளம்புகிற வழியைப் பார்...நான் வேண்டுமானால் 'காஃபி மேக்க'ரில் தூள் போட்டுத் தண்ணீர் ஊற்றி வைக்கிறேன் என்று கூறிச் சமையலறைக்குச் சென்றான்.

''இப்போதா...? இப்போது நேரமில்லையே சுகி! முன்னமே சொன்னேனில்லையா? என் மைத்துனர் மகன் பிறந்த நாளைக்காகக் கிளம்பிக் கொண்டு இருக்கிறோம்'' என்று மாதவி சொல்லக் கேட்டுக் கொண்டிருந்தபோதே, 'காஃபி மேக்க'ரில் தண்ணீர் தளதளவென்று கொதிக்கத் தொடங்கியது.



மனைவி பேசி முடிக்குமுன் காஃபி கலந்து விடலாம். அது தனக்குத் தெரிந்த வேலைதானே என்று எண்ணியவனாய் தனசேகரன் எக்சாஸ்ட் ஃபேனை ஓட விட்டுப் பாலையும் சூடுபடுத்தினான்.

அவன் காஃபியைக் கலந்து, இரு கப்புகளில் ஊற்றி எடுத்து கொண்டு, படுக்கை அறைக்குள் சென்ற போது, மாதவி, உடைமாற்றி விட்டிருந்தாள்.

''அடடே, அதற்குள் தயாராகி விட்டாயா? இதோ, காஃபியைக் குடி. நானும் விரைவாக உடைமாற்றி சீக்கிரமே கிளம்பி விடலாம்'' என்று, ட்ரேயை 'டிரஸ்சிங் டேபிள்' மேல் வைத்து விட்டுத் தன் உடையை எடுக்கத் தனசேகரன் திரும்பினான்.

ஆனால், ''சாரி, தனா! நான் உங்களோடு வர வில்லை!'' என்று மாதவி கூறவும் திகைத்துப் போனான்.

''என்ன உளறுகிறாய்?'' என்று ஆத்திரத்துடன் மனைவியை நோக்கி, ''அங்கே கேக்குக்கு 'ஐசிங்' செய்து தருவதாக வாக்களித்து விட்டு, வரவில்லையா? கொஞ்சம் யோசித்து நியாயமாகப் பேசு!'' என்றான் அதட்டலாக.

முகம் சிவந்து, ''யோசிப்பதும், நியாயமாகப் பேச வேண்டியதும் நீங்கள் தான் செய்ய வேண்டும்!'' என்றாள் மாதவி சீற்றத்துடன். ''உங்கள் அண்ணன் வீட்டுக்கு நான் வரவில்லை என்று எப்போதாவது சொன்னேனா? உங்களோடு வரவில்லை என்று மட்டும் தானே சொன்னேன்?'' என்று அவள் கேட்டபோது விழித்தான்.

'சாரி' வேறு சொன்னாளே!

ஒரு பெருமூச்சுடன், ''மாதவி, ப்ளீஸ்! நீ என்னதான் சொல்கிறாய்? தயவு பண்ணித் தெளிவாகச் சொல்லு.

என்னோடு வரவில்லை என்றால் வேறு எப்படி வரப் போகிறாய்? அங்கே தாமதமானால்...உனக்கு அண்ணி யைப் பற்றித் தெரியும்!'' என்று தணிந்து விட்ட குரலில் வினவினான்.

''முதலிலேயே, இப்படிக் கேட்டிருக்கலாமில்லை யா?'' என்று, ஒரு தரம் சொல்லிக் காட்டிவிட்டு, 'தனா, ஒரு பெரிய மூன்று நட்சத்திர ஓட்டலில், 'லாபி' முழுவ தும் என் படம் வைக்கச் சொல்கிறார்கள். என்ன மாதிரி எப்படி என்றெல்லாம் நாலைந்து நாட்களாகவே சுகியி டம் பேச்சு நடத்தினார்களாம். அளவு, மாதிரிகள் கொண்டு வந்திருக்கிறார்களாம். பார்த்து சரி, இல்லை என்று ஒரே வார்த்தை சொல்லிவிட்டு வந்து விட வேண்டியது தான். மிஞ்சிமிஞ்சி அரை மணிநேரம் ஆகும்.. அவ்வளவு தான்'' என்றாள் அவளும் இதமான குரலில்.

''ம்ம்...லேட்டாகி விடமாட்டாயே, மது? எதற்கும் இந்தப் பேச்சை நாளைக்கு வைத்துக் கொண்டால் என் னடா?...''

''ஓட்டலின் ஜெனரல் மானேஜரே வருகிறாராம், தனா! எப்படி அவரைப் போய், 'நாளை வா' என்பது?''

''அப்படியானால், நான் இருந்து உன்னை அழைத் துப் போகிறேனே!''

''எப்படி முடியம், தனா? பாருங்கள், பலூன், ரிப்பன் எல்லாம் இங்கே தான் இருக்கிறது. நீங்கள் போய்விட்டால், பலூன் ஊதுவதையாவது முடிக்க லாமே? எதற்கும் இந்தக் கால்பந்தாட்ட வீரர்கள், கோல் வலை, ஸ்கோர் போர்டு எல்லாம் நீங்களே எடுத்துப் போய் விடுங்கள். சிதைந்து விடாமல், கவனமாய் அடுக்கி இருக்கிறேன். காரில் கொண்டு போவது நல்லது.



எதற்கும் எடுத்து வைக்கும்போது எச்சரிக்கையாய்ப் பண்ணுங்கள்...நாய் பொம்மையை மட்டும் நான் வைத் துக் கொள்கிறேன். ஆட்டோவில் வரும்போதே முது கைத் தைத்து விடுவேன்...வரட்டுமா, தனா? காரைக் கவனமாய் ஓட்டுங்கள்! பை...'' என்று பேசியபடியே நாய் பொம்மை அடங்கிய பை, கைப்பையுடன் வெளியே நடந்து விட்டாள் மாதவி.

பின்னோடு ஓடிச் சென்று, அவளது கையைப் பற்றி நிறுத்தி, ''மாதவி, நினைவிருக்கட்டும்! எக்காரணம் கொண்டு, நீ நேரம் பிந்திவிடாதே! நமக்கு மிகவும் அவமானமாகி விடும்! ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தான் கணவன்.

மந்தகாசமாய் முறுவலித்தபடி, ''அனேகமாய் நீங் கள் 'ஷேவ்' பண்ணிக் குளித்துக் கிளம்பி உங்கள் அண்ணன் வீடு சென்று அடையுமுன், நானே அங்கி ருந்து உங்களை வரவேற்றாலும் வரவேற்கக் கூடும்!'' என்று இலகுவாகப் பேசி விடை பெற்றுச் சென்றாள் அவள்.

கவலையகன்று, நிம்மதியோடு தான் கிளம்புவ தைப் பார்க்கலானான் தனசேகரன். ஆனால்....

## 9

வீட்டை விட்டுக் கிளம்பிச் செல்லும் போது தனசேகரனுக்குக் கொஞ்சம் யோசனைதான்.

செல்லும் வழியில் எதற்கும் இருக்கட்டும் என்று நல்லதாகப் பிறந்த நாள் கேக் ஒன்றை வாங்கிச் சென்று விடலாமா என்று பலமுறை நினைத்தான். ஒரு நல்ல

பேக்கரியில் விற்பனைக் கூடம் ஒன்றின் அருகில் காரை நிறுத்தவும் செய்தான்.

ஒரு வேளை மாதவி சரியான நேரத்துக்கு வந்து சேரவில்லை என்றால் இதையே பிறந்த நாள் கேக்காக பயன்படுத்திக் கொள்ளலாம். அவள் சொன்னபடி வந்து விட்டால் இதிலிருக்கும் 'பிறந்த நாள் வாழ்த்துக்கள்' என்ற எழுத்துக்களை மட்டுமே நீக்கிவிட்டு உண்பதற்கு இன்னொரு கேக்காக வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தான்.

ஆனால், காரை விட்டு இறங்கிச் சென்று அந்தக் கேக்கை வாங்கிக் காரில் வைக்க அவனுக்கு மனம் வரவில்லை. அப்படி அவன் வாங்கிப் போவது அவனுடைய அருமை மனைவியின் சொல்லை அவனே சந்தேகப்படுவது போல் ஆகாதா?

முன்பானாலும் பரவாயில்லை. 'நீ வருகிற ஆட்டோ ஏதேனும் ரிப்பேராகி நின்று போய் நீ வர தாமதமானால் என்ன செய்வது? என்று வாங்கினேன்!' என்று கணவன் சொன்னால் அதை அப்படியே ஒத்துக் கொள்கிற மனோபாவம் அவளுக்கு இருந்தது!

அவனும் அப்படித்தான். அவள் ஒன்று சொன்னால் அதை சந்தேகிக்கவோ குற்றம் காணவோ அவனுக்குத் தோன்றியதே இல்லை தான்.

ஏன் இப்போது அவள் வருகிறேன் என்று விட்ட பிறகு, வராவிட்டால் என்ற எண்ணமே அவனுக்கு வந்திராதே! அதே நம்பிக்கைதான் அவளுக்கும் இருந்தது அப்போது!



ஆனால், இப்போது நிலைமை அப்படி இல்லையே! என்னவோ பேசிக் கொண்டிருக்கும்போது எங்கேயோ பாய்ந்து விடுகிறாள்! அவனுக்கும், அவள் பேச்சில் நம்பிக்கை இப்போது போயிற்று! கூடவே இம் எனுமுன் வார்த்தை தடித்து விடுகிறது!

சாதாரணமான பேச்சைக் கூட கவனத்துடன் கையாள வேண்டியிருக்கும் இந்தச் சமயத்தில், இவன் கேக்கை வாங்கிப் போவது, வம்பை விலை கொடுத்து வாங்குவது போல ஆகி விடக் கூடும்!

பலவாறு யோசித்து விட்டு, கேக்கை வாங்காமலேயே தனசேகரன் அண்ணன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

அவனோடு கூட, மாதவியும் சேர்ந்து வரவில்லை என்பதே எல்லோருக்கும் அவரவர் வகையில் ஏமாற்றத்தை அளித்தது.

''ஏண்டா? இந்த அத்தைக் கிழவி, திரும்பவும் பிள்ளை கிள்ளை என்று கிண்டிக் கிளறப் போகிறாள் என்று, நேரத்துக்கு வந்து நேரத்துக்குக் கிளம்பி விட நினைத்தாளா?'' என்று எப்போதும் போல அவன் தாயார் நேரடியாகவே கேட்டார்.

''தனா, உன் மனைவி சரியாக வந்து விடுவாள் இல்லையா? கேக் அலங்கார ஐசிங் அவள் வந்து செய்ய வேண்டியிருக்கிறதே! அது அவளுக்கு நினைவு இருக்கும் அல்லவா?'' என்று குணசேகரன் கவலையுடன் தம்பியிடம் ரகசியமாய் வினவினான்.

''கட்டாயமாய் வந்து விடுவாள்!'' என்று அண்ணனுக்கு ஊட்டிவிட்டு, உள்ளே சென்று ஹாலை அலங்கரிப்பதில் தனசேகரன் கலந்து கொண்டான்.

''ஏன்? பத்து நிமிடம் சீக்கிரம் வந்தால், அந்த நேரத்தில் வரைந்து சம்பாதிக்கிற பணம் குறைந்து போய் விடுமாமா? எதற்காக அவள் ஒரு புறம் தனியாக வருவது?'' என்று சந்தியா துருவினாள்.

இரு சேகரன்களுக்கும், ஒன்று விட்ட மாமா மகள் தான் சந்தியா.

தாய்வீட்டு உறவு என்பதாலும், வந்த உடனேயே பேரனைப் பெற்றுத் தந்து விட்டதாலும், பிள்ளைப்பேற் றின் போது சந்தியா கொஞ்சம் சங்கடப்பட்டு விட்டதா லும், அவளுக்கு உதவியாக என்று தான் முதலில், தனசேகருடைய தாயார் தன் மூத்த மகனோடு இருக்கத் தொடங்கினார். கணவர் கட்டிய வீடு. அவர் கடைசியாக இருந்த வீடு அதை விட்டுப் போக மனமில்லை என்ப தோடு பேரனைப் பாராமல் இருக்கவும் முடியாது போயிற்று. கூடவே மாதவியும் தனசேகரனும் புதுமணத் தம்பதிகள்.

தனசேகரனின் அலுவலகமே அவனுக்கு வீட்டு வசதி செய்து தரவும், அவர்கள் இருவருமாக அங்கே வசிப்பது இயல்பாய் நடந்து விட்டது.

ஏற்கனவே உறவு என்பதாலும், மூத்த மருமகள் என்பதாலும், சந்தியா எப்போதுமே உரிமை எடுத்துப் பேசுவாள்.

ஆனால், வீடு மாமியாருடையது; கூடவே அவரது பென்ஷன் பணமும் வருவதால் அவர் அவர்களுக்குச் சுமையில்லை என்பதாலோ என்னவோ, அவரிடம் நல்ல படியாகவே நடந்து கொள்வாள்.

வீட்டின் சின்ன மருமகளான மாதவியின் அழகி லும், அவள் தன்னைவிட வசதியான குடும்பத்துப் பெண் என்பதிலும், மைத்துனர், கணவனை விட அதிகம் சம்பாதிப்பதிலும், அவளுக்கு ஒரு வித 'காழ்ப்பு' உண்டு தான். அவ்வப்போது, அவளையும் மீறி அந்தக் காழ்ப்பு ணர்ச்சி வெளிப்படுவதும் உண்டு தான்.



இப்போது ஓரகத்தியின் சித்திரக்கலையும், அதன் மூலம் அவளுக்குக் கிடைக்கக் கூடிய பணமும் கூட அவளது பொறாமைக் கனலை விசிறி விட்டுக் கொண்டி ருந்தன. அதன் பொறியும் அவ்வப்போது தெறித்துக் கொண்டே இருந்தது.

விற்பனைத் துறையின் முக்கியத் தேவை, எதிராளி யின் எண்ணத்தை ஊகிப்பது. தனசேகரனுக்கும் சந்தியா வின் மனதைப் படிப்பது ஒன்றும் சிரமமாக இருக்க வில்லை.

எனவே, ''படம் வரையவில்லை, அண்ணி. அது தொடர்பாக ஒரு பேச்சு வார்த்தை. அனேகமாகச் சரிவ ராது என்று சொல்லிவிட்டு வருவது தான். சட்டென்று முகத்தில் அடித்த மாதிரி மறுப்பைச் சொல்ல முடியாது பாருங்கள்! அதனால் தான் கொஞ்சம் நேரமாகிறது'' என்று இங்கிதமாய்ப் பேசி அவளை அமைதிப்படுத்தி னான்.

ஆனால், உள்ளூர மனைவி எப்போது வருவாளோ என்கிற தவிப்பு அவனை அரிக்கத் தொடங்கி விட்டிருந் தது.

பலூன்கள் ஊதியாயிற்று! ஹால் முழுவதும், அங் கங்கே அவைகளைக் கொத்துக் கொத்தாகத் தொங்கவிட் டாயிற்று. வண்ணவண்ணமாய்க் காகித ரிப்பன்கள் ஒவ் வொரு மூலையிலிருந்தும், இடையிடையே சுவர்களிலி ருந்தும் ஒய்யாரமான சுருள்களுடன் வந்து, நடுவில் ஒரு

பெரும் கொத்து பலூன்களின் பின்புறத்தில் இணைந்தன நீள மேஜை மீது அழகான விரிப்பின் மீது பரிசுப்பொருட்கள் ஒருபுறமாய் அடுக்கப்பட்டு விட்டன.

''கேக்குதான் பாக்கி! அந்தப் பொண்ணு எப்போது வந்து எப்போது செய்யப் போகிறது?'' என்று சந்தியாவுடைய தாயார் அங்கலாய்க்கத் தொடங்கினாள்.

'என்ன?' என்பது போல எல்லோர் பார்வையும் தனசேகரனிடம் பாய, அவமானமாய் உணர்ந்தான் அவன். அவ்வளவு நேரம், சிறு வயது போலப் பலூன்களை ஊதுவதும், ஒன்றிரண்டு உடையும்போது சிரிப்பதும், வேலையுமாக நேரம் இனிமையாக கழிந்து போயிற்று! இப்போது இன்னும் சில நிமிடங்களுக்குள்ளாக மாதவி வந்து சேரவில்லை என்றால், அவள் செய்வதாக ஒப்புக் கொண்ட வேலை நடவாது! செய்து முடிக்க முடியாது! கேவலமாகிப் போகும்!

அதுவும், அண்ணி வீட்டு உறவினர் முன் மகா அசிங்கமாகி விடும்!

தாயும் தமையனும் கேள்வியாய் நோக்க, குனிந்து கைக்கடிகாரத்தைப் பார்ப்பது போல் பாவனை செய்து, ''இதோ எந்த நிமிஷமும் வந்து விடுவாள்! நாம் வேறு வேலையிருந்தால் பார்க்கலாமே!'' என்றான் தனசேகரன்.

''வேறு வேலை என்ன இருக்கிறது? எல்லாம் தான் முடித்தாயிற்றே! தட்டில் வைக்க இனிப்புக்கு என் தம்பி 'ராஸ்பெரி' பால் ஸ்வீட் வாங்கி வந்து விட்டான். காரத்துக்கு சமோசா வாங்கி வைத்திருக்கிறது. எதற்கும் இருக்கட்டும் என்று எங்கள் அம்மா கார முறுக்கு வேறு கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்த சனியன் பிடித்த கேக் வேலை மட்டும் தான் பாக்கி. அதையும் வாங்கித் தொலைத்திருக்கலாம். இப்போது இவள் பேச்சை நம்பி...சே! எல்லோரும் வந்து விட்டால், கேக்குக்குப் பதிலாக என் தலையைத் தான் வெட்ட வேண்டும்!'' என்று வெடுவெடுத்தாள் சந்தியா.



''அண்ணி, அவள் வேண்டுமென்று வராதிருக்க மாட்டாள். வழியில் ஏதாவது போக்குவரத்து நெரிசலில் மாட்டிக் கொண்டாளோ என்னவோ? எதற்கும் நான் போய் அவளது ஸ்டுடியோவுக்கு போன் செய்து பார்த்து விட்டு வருகிறேன்'' என்று தனசேகரன் எழுந்தான்.

''ஆமாம்! இனிமேல் நீங்கள் ஃபோன் செய்து, புறப்படச் சொல்லி, அவள் எப்போது வந்து, எப்போது 'ஐசிங்' செய்வது?'' என்றாள் சந்தியா ஆத்திரத்துடன்.

''கிளம்பச் சொல்வதற்காக அல்ல, அண்ணி. எப்போது கிளம்பினாள் என்று தெரிந்து கொள்வதற்காகத் தான்'' என்று தன் எரிச்சலை அடக்கிக் கொண்டு, தனசேகரன் அமைதியாகவே பதில் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

கவலை அவளுக்கு மட்டும்தானா? அவனுக்கு இராதா? கவலையோடு அவமானமும்கூட!

கிடைத்த பொது டெலிஃபோன் பூத்தில் புகுந்து, சுகிர்தாவின் 'பொட்டிக்' எண்ணுடன் தொடர்பு கொண்டான்.

''அவர்கள் யாரும் இப்போது இங்கே இல்லையே!'' என்றாள் உதவிக்காக சுகிர்தா இப்போது வேலைக்கு அமர்த்தியிருந்த பெண்.

அப்பாடி! கிளம்பி விட்டாள் என்ற ஆறுதலோடு, ''சுமார் எத்தனை மணிக்கு மாதவி கிளம்பினார்கள்!'' என்று தனசேகரன் விசாரித்தான்.

''அவர்கள் மட்டும் இல்லை, சார்! சுகிர்தாம்மா, மாதவிம்மா, அந்த ஓட்டல் பெரிய மேனேஜர் மூன்று பேருமாகவே, கிளம்பிப் போய்..கிட்டத்தட்ட அரைமணி நேரம் ஆகியிருக்கும் சார்! சரியாகச் சொல்லப் போனால்...இருபது நிமிஷம் ஆகிறது, சார்!'' என்றாள் அவள், கேட்டவன் தலையில் கல்லைப் போடுகிறோம் என்பதை அறியாமல்!

ஒரு கணம், முகம், காது சிவந்து, உடலெங்கும் தீப்பற்றி எரிவது போலத் தனசேகரன் உணர்ந்தான்.

சரி, இல்லை என்று ஏதாவது ஒரு வார்த்தை மட்டும் சொல்லிவிட்டு வரப்போன அவன் மனைவி, சொல்லி விட்டு உடனே கிளம்பி, அவனுக்கு முன்னதாகவே அண்ணன் வீடு வந்துவிடப் போவதாக உரைத்தவள், இருபது நிமிடம் முன்புவரை இங்கேயே இருந்திருக்கி றாள். பிறகும் கூட இருந்தவர்களோடு தான் சென்றிருக்கி றாள்! அதன் அர்த்தம், அவள் அப்போதைக்குக் கிளம் பப் போவதாக இல்லை!

ஓசையற்ற சில பெரிய மூச்சுகளை எடுத்து, தன்னை சமனப்படுத்திக் கொண்டு, ''அது எந்த ஓட்டல்?'' என்று அந்தப் பெண்ணிடம் கேட்டான் அவன். ''அந்தப் பெரிய மேனேஜரின் ஓட்டல் பெயர் என்ன?'' என்று, முடிந்த அளவு குரலில் எதையும் காட்டாமல் வினவினான்.

''அதுவா, சார்?'' என்று உற்சாகமாகத் தொடங்கிய வள் தடுமாறினாள். ''அது சார்...எதுவோ புளூ...புளூஸ் டார்...ரெட் லயன்...இப்படி ஏதோ கலர் சம்பந்தப்பட்ட பெயர் சார்! எனக்குச் சரியாகத் தெரியாதே...யாரும், எனக்குச் சொல்லவில்லை, சார்; நானாகக் கவனித்ததில்.. பெயரை..எனக்குத் தெரியவில்லை சார்!'' என்றாள் மன்னிப்புக் கோரும் குரலில்.



''பரவாயில்லை. வைத்து விடுங்கள்!'' என்று முடித்து, டெலிஃபோன் காலுக்கு உரிய பணத்தைக் கொடுத்து விட்டுத் தனசேகரன் 'பூத்' தை விட்டு வெளியே வந்தான்.

விண்விண்ணென்று தெறித்த நெற்றிப் பொட்டை அமுக்கி விட்டபடி யோசித்தான்.

இப்போதைக்கு அவன் மனைவி வரப்போவது இல்லை. ஒத்துக் கொள்ள மனம் வராவிட்டாலும், அது தான் உண்மை! அதனால் வரக்கூடிய அவமானம், கேவலம் எல்லாம் அவன் பட்டுத் தான் ஆகவேண்டும். வாய்ப்புக் கிடைத்ததென்று அண்ணி அவள் வீட்டார்.. ஏன், அம்மாவும் அண்ணனும் கூட ஏதாவது சொல்லக் கூடும் தான்.

ஆனால் அதையெல்லாம் இப்போது நினைத்துக் கொண்டு இருக்க முடியாது. பிறந்த நாள் 'கேக்'குக்கு ஏதாவது ஓர் ஏற்பாடு செய்தாக வேண்டும்!

காரைத் திறந்து, மாதவி தந்த பாக்கெட்டைக் கவ னத்துடன் எடுத்துக் கொண்டு வீட்டினுள் சென்றான்.

''என்ன? எப்போது வருவாளாம்?'' என்ற கேள் விக்கு, கிளம்பி விட்டாளாம். ஏதோ போக்குவரத்து நெரிசலில் மாட்டிக் கொண்டு விட்டாளோ என்று தோன் றுகிறது!'' என்றவன், பாக்கெட்டைப் பிரித்து, விளை யாட்டு வீரர்கள், வலைகள், ஸ்கோர் போர்டை எல்லாம் எடுத்து வைத்தான்.

அவற்றின் செய்நேர்த்தி, எல்லோர் வாயையும் அடைத்திருந்த வேளையைப் பயன்படுத்திக் கொண்டு, ''அண்ணி, நீங்கள் கேக்கின் அடிப்பகுதி செய்து விட்டீர் கள் தானே? இந்த 'ஐசிங்'கின் கலவையையும் செய்து

பாருங்களேன்! பச்சைக்கலர் சேர்த்து நாமே வேலையை முடித்து விடலாம்! மாதவி லேட்டாக வந்து, அவசரமாகச் செய்து, அது வேறு கெட்டுப் போய் விடப் போகிறது!'' என்றான்.

பெரும்பான்மை அவனை ஆதரிக்கவே, சந்தியா அரைமனதாய் 'ஐசிங் ஷுகர்'ரை எடுத்துக் கொண்டு போனாள்.

ஆனால், அவள் சொன்னது போலவே சரியான பதம் தெரியாமல், கேக்கில் கலவையைக் கொட்ட, அது வழிந்து ஓட, சமாளித்து அதன் மேல் வைத்த ஸ்கோர் போர்டு, வலை, எல்லாம் சரிந்து விழ, அவள் ஆத்திரத்தில் அலறத் தொடங்கி விட்டாள்! ''எனக்குத் தான் தெரியாது என்று சொன்னேனே! நாலு பேர் நடுவில் என்னை அவமானப்படுத்தவென்றே, புருஷனும் பெண்டாட்டியும் திட்டமிட்டு இப்படிச் செய்து என் கழுத்தை அறுக்கிறீர்களா?'' என்று உச்சஸ்தாயியில் கத்தினாள்.

அவமானம் யாருக்கு என்று அறியாமல் பேசுகிறாள்!

குமைச்சலை வெளியே காட்டிக் கொள்ளாமல் — காட்டிக் கொள்ள மாட்டாமல் உள்ளேயே அடக்கிக் கொண்டு, ''அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை, அண்ணி. இவ்வளவு சிரமப்பட்டு, இந்தச் சர்க்கரை பொம்மைகளை எல்லாம் செய்தவள், வேண்டுமென்று வராதிருப்பாளா? அவள் எந்த இடத்தில் கிடந்து தவிக்கிறாளோ, பாவம்! இப்போது என்ன, அண்ணி! ஆறு மணிக்கு மேல்தானே பார்ட்டிக்கு விருந்தினர் வரத் தொடங்குவார்கள். நான் இப்போதே காரை எடுத்துக் கொண்டு போய், ஏதாவது பேக்கரியில் ஒரு நல்ல கேக் வாங்கி வந்து விடுகிறேன்! நீங்கள் உடைமாற்றி எல்லோரும் தயாராகுங்கள். 'விக்கி'க்கு 'டிரஸ்' பண்ணி விடுவதே உங்களுக்குச் சரியாக இருக்கும்! நீங்கள் அதைப் பாருங்கள்! நான் போய் கேக்கை வாங்கி வந்து விடுகிறேன்!'' என்று கிளம்பிச் சென்றான்.



''இங்கே ஒன்றும் சரியாகக் கிடைக்காது! மெயின் ரோடு போக வேண்டுமடா!'' என்ற அண்ணன் சொல்படி, பிரதான சாலைக்கு சென்று தேடினான். ஒவ்வோர் இடமாகத் தேடி, ஒன்றும் திருப்தி தராமல், நேரமாக, ஆக, உடலும் மனமும் இறுகி, ஏதோ ஒன்றை வாங்கிக் கொண்டு, அவன் அண்ணன் வீடு வந்து சேர்ந்த போது மணி ஆறாகி மேலும் ஐந்து நிமிடங்கள் கடந்து விட்டிருந்தன.

கேக் யாருக்கும் திருப்தி தரவில்லைதான்.

ஆனால், அதை ஈடுகட்டும் விதமாக, ஐநூறு ரூபாய் நோட்டை, எடுத்து தன் பரிசாக — விக்கிக்குக் கொடுக்க வேண்டிய பரிசும் கூட மாதவியிடம் தானே இருந்தது. தனசேகரன் கொடுக்கவும் அங்கே அதிகப்படியான பேச்சு எதுவும் நடக்கவில்லை.

''என்ன, பணமா பெரிது?'' என்றபடியே, முகம் மலர, சந்தியா பணத்தை பிள்ளை கையிலிருந்து வாங்கிக் கொண்டாள்.

கேக் வெட்டி, எல்லோரும் உண்டு, பிள்ளைகளின் விளையாட்டுப் போட்டிகள் முடியும் வரை கூட மாதவி அங்கு வந்து சேர்ந்தாளில்லை.

மாதவிக்கும், இந்தப் பிறந்த நாள் விழாவுக்கு வரக்கூடாது என்பது இல்லை. இரண்டே வார்த்தைகள்

சொல்லிப் பேச்சை முடித்து விட்டு வந்து விட வேண்டும் என்று எண்ணித் தான் அவள் சென்றதும்.

ஆனால் பேச்சு நீண்டுகொண்டே சென்று விட்டது.

அந்த வடக்கத்திக்காரருக்கு, ராஜஸ்தான சித்திரங்களை, மாதவி தஞ்சைப் பாணி கலந்து வரைந்திருந்த விதம் மிகவும் பிடித்துப் போய்விட, கண்ணனின் லீலைகள் முழுவதையுமே அந்த முறையிலேயே அமைத்துத் தரச் சொன்னார்.

அவளது சொந்த உத்திக்குக் கிடைத்த பாராட்டு உச்சி குளிரச் செய்து விட, அதற்காகப் பேசியிருக்கும் பணம் என்று சுகிர்தா சொன்ன தொகையும் பெரிதாக இருக்கவே, மாதவிக்குப் பிறந்த நாள் விஷயம் ஓரளவு மறந்து போய்விட்டது எனலாம்.

கண்ணனின் லீலைகளாய்த் தான் விரும்பும் படங்கள் எவை எவை என்று அவர் கூற, என்னென்ன பின்னணியில் எப்படி எப்படி அவற்றை அமைப்பது என்பது போன்ற பேச்சின் உற்சாகத்தில் மாதவிக்கு நேரம் போனதே தெரியவில்லை.

ஆனால், முதலிலேயே, தான் சீக்கிரம் கிளம்ப வேண்டும் என்று மாதவி சொல்லிவிட்டிருந்தபடியால், சுருக்கமாகவே முதல் கட்டப் பேச்சை முடித்த ஓட்டல் நிர்வாகி, படங்கள் மாட்டப்பட வேண்டிய இடத்தை மட்டும் பார்த்து விட்டால் எத்தனை படங்களை, என்ன அளவில் வரையலாம் என்பதையும் தீர்மானித்து விடலாம் என்று அழைத்தபோது, மாதவிக்கு அது நியாயமாகவே பட்டது.



அதைப் பார்த்துப் பேசிவிட்டு, மணியைப் பார்த்த மாதவி பதறிப் போனாள்.

அதற்கு மேல் எதையாவது சாப்பிட்டு விட்டுத் தான் போகவேண்டும் என்று வற்புறுத்தினார் அந்தப் பெரியவர்.

சுகிர்தாவுக்கு விருப்பம் தான் என்றபோதும், பிடிவாதமாக மறுத்து விட்டு, மாதவி கிளம்பி விட்டாள்.

சாலையின் இருமருங்கிலும் நின்று ஒளியை உமிழ்ந்து, இருளை விரட்டி விட்டிருந்த சோடியம் விளக்குகளின் வெளிச்சத்தில், பொம்மை நாயின் முதுகுப்புறத்தை வேகமாக தைத்து முடிக்கும்போதே, அவளது மூளை வெகு தீவிரமாக வேலை செய்தது.

ரொம்பவும் தாமதம் ஆகிவிட்டது. முன்னர் செய்திருந்த ஏற்பாடுகளின் படி, இப்போது கேக் வெட்டி, உண்டு முடித்து, சிறுவர்களின் விளையாட்டுகளும் கூடப் பெரும்பாலும் நடந்தேறியிருக்க வேண்டும்.

'ஐசிங்' விஷயம் என்ன ஆகியிருக்கும்!

கேக்கையே தூக்கி மூலையில் போட்டிருக்க முடியாது. கேக் வெட்டி, 'ஹேப்பி பர்த்டே' பாடாமல் விக்கி விடமாட்டான்.

எப்படி சமாளித்தார்கள்.

எப்படி சமாளித்திருந்தாலும், எல்லோரும் அவள் மீது மிகுந்த கோபத்தில், கொதித்துக் கொண்டு இருப்பார்கள் என்பது மட்டும் நிச்சயம். நடந்ததைச் சொன்னால் யாரும் புரிந்து கொள்ள மாட்டார்கள்!

ஒரு வேளை அவளுடைய கணவன் மட்டும் புரிந்து கொள்ளக்கூடும்! முன்னெல்லாம் என்றால், கட்டாயம், புரிந்து கொள்வான் என்று அவளுக்கு நிச்சயமாய் இருக்கும்! இப்போது...அவ்வளவு உறுதியாய் அவனைப் பற்றியும் நம்பிச் சொல்ல முடியவில்லை தான்! சுகிர்தா சொல்லுகிற அவளுக்கு இல்லை என்றாலும், தனசேகரனும் சற்று மாறிவிட்டிருப்பது உண்மை தான்...

ஆனால் இப்போது அது பிரச்சனை இல்லை.

அங்கே, கே.கே.நகரில் வீட்டினர் கோபத்தை எப்படி சமாளிப்பது?

அவர்கள் நிலையிலிருந்து யோசித்துப் பார்த்தால், அவர்களின் கோபமும் நியாயமானதே! வாக்குக் கொடுத்து விட்டுச் செய்யாமல் இருந்து விட்டாள்! வந்து செய்கிறேன் என்று சொல்லிவிட்டு வராமலே இருந்து விட்டால் கொதிப்பாய்த்தான் இருக்கும்.

அந்தக் கோபத்தைக் குளிரவைப்பது எப்படி?

சந்தியாவின் முன் குற்றத்தை ஒத்துக் கொண்டு குனிந்து நிற்பது முடியாது! அது குற்றம் தானா? இதே நிலையில் சந்தியா இருந்திருந்தால் வேறு என்ன செய்திருப்பாள் என்பதெல்லாம் யோசிக்கக் கூட மாட்டாள். ஓரகத்தியிடம் ஒரு குறை கண்டு விட்டால் அதைச் சொல்லிக் காட்டிக் கொண்டே இருப்பாள். திருமணத்தின் போது மாதவி, ரசம் சாதத்துக்கு முன்பாகவே பாயசத்தைக் குடித்து விட்டாள் என்று இன்றும் எந்தக் கல்யாண வீட்டுக்குப் போனாலும் சொல்லிச் சிரிப்பாள்! அவளிடம், இன்னது விஷயம் என்று சொன்னால் அவ்வளவு தான்.!



தீவிரமாக யோசித்த மாதவிக்குச் சட்டென ஓர் ஐடியா தோன்றியது. தீயை அணைக்கக்கூடியது தண்ணீர்! அவர்கள் கோபத்தில் சீறுமுன் இவள் வருத்தம் காட்டிக் குளிர்வித்து விட்டால்?

வேறு மாதிரி விவரம் கூறி, பத்து தரம் வருத்தம் காட்டி விட்டால் யாருடைய கோபம் நிலைத்து நிற்க முடியும்?

என்ன, எப்படிச் சொல்வது என்று மனதிற்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டவாறே அவள், மைத்துனன் வீட்டை அடைந்தாள்.

விளையாட்டுகள் முடிவடைந்து, சிற்றுண்டிகளை காகிதத் தட்டுகளில் எடுத்து வைத்துக் கொண்டு இருந்தார்கள்.

மடமடவென்று உள்ளே சென்று, விக்கியிடம், ''விக்கிக் கண்ணு! 'சாரி'டாம்மா! சித்தி வர ரொம்ப லேட்டாகி விட்டது. ஆனால், இதோ உன் நாய்க் குட்டி பார்!'' என்று பரிசைக் கொடுக்கவும் அவனுக்கு உற்சாகமாகி விட்டது.

பஞ்சடைத்து, மெய்யான சடை நாய் போலவே நேர்த்தியாய்ச் செய்யப்பட்டிருந்த பொம்மையை அணைத்துப் பிடித்தபடி எல்லோருக்கும் காட்டி மகிழ்ந்தான்.

குணசேகரன் தவிர, அங்கே யாரும் வா என்று கூடச் சொல்லவில்லை.

ஒரு குறிப்பான பார்வையுடன் கையில் இருந்த காலி 'ட்ரே'யை மனைவியிடம் கொடுத்து, ''உள்ளே

போய் வேறு டிபன் தட்டுகள் எடுத்து வா'' என்று விழா வேலைகளில் அவளை இயல்பாகப் புகுத்த முயன்றான் தனசேகரன்.

தட்டை வாங்கிக் கொண்டு உள்ளே சென்று, தட்டை வைத்தவள், சந்தியாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''அக்கா, சாரிக்கா. ரொம்ப 'சாரி'க்கா போன இடத்தில் என் கூடப் படித்த தோழி வழியை மறித்துக் கொண்டு விடவே மாட்டேன் என்று விட்டாள். அப்படியும் ஐந்தே காலுக்குள் வந்திருப்பேன். ஏறின ஆட்டோ ரிப்பேர்! அது மாறி இன்னொன்றில் ஏறினால் சீக்கிரம் வரவேண்டும் என்று சொன்னேன் என்று ஆட்டோக்காரன் குறுக்கு வழியில், 'ஒன்வே'யில் வந்தானா? போக்குவரத்துப் போலீஸ் பிடித்துக் கொண்டு விட்டது. ஒரு வழியாய் அதிலிருந்து மீண்டு வந்தால் இரண்டு இடத்தில் போக்குவரத்து நெரிசலில் வேறு மாட்டிக் கொண்டேன். குதித்து இறங்கி ஓடி 'வந்து விடலாமா என்று கூட இருந்தது. கொஞ்சம் பக்கத்தில் இருந்திருந்தால் அப்படியே வந்தும் இருந்திருப்பேன்! நேரம் ஆக ஆக எனக்கு அழுகையே வந்து விட்டது! 'சாரி'க்கா! 'கேக்' விஷயமாய் என்ன பாடுபட்டீர்களோ! தயவு பண்ணி என்னை மன்னித்து விடுங்கள்! ப்ளீஸ்க்கா!'' என்று ஒரேயடியாய் உருகிக் குழையவும் சந்தியாவால் கோபமாக எதுவும் பேச முடியாமல் போயிற்று.

மாதவி எதிர்பார்த்தது போலத்தான்.

மாதவியும் அத்தோடு விடவில்லை. சந்தியாவுடைய பெற்றோர், தம்பி, தம்பி மனைவியைக் கூட விடாமல், எல்லோரிடமும் தன் வருத்தத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டாள்.



''சரிதானம்மா! எல்லாமாய்ச் சேர்ந்து இத்தனை சதி பண்ணும்போது, பாவம் நீ என்ன பண்ணுவாய்! பசியாய் இருக்கும்! சாப்பிடு!'' என்று மாதவியை சந்தியாவுடைய தாயார் தேற்ற, சந்தியாவும், ஒரு கப் காபியைக் கலந்து, ஓரகத்தியிடம் கொடுத்து, ''பாவம், மனத்தவிப்பிலேயே களைத்துப் போயிருப்பாய்! முதலில் இதைக் குடி!'' என்று உபசரித்தாள்.

''பரவாயில்லைக்கா! பாத்திரத்தைக் கொடுங்கள். யாருக்காவது இனிப்பு, காரம் இன்னும் வேண்டுமா என்று பார்த்து வைத்து விட்டு வருகிறேன்! உபயோகம் இல்லாத சின்ன வேலை என்றாலும், எதையாவது செய்தால் தான் எனக்கு மனம் ஆறும்!'' என்று இனிப்பு, காரங்கள் இருந்த பாத்திரங்களை, ட்ரேயில் எடுத்துச் சென்று தேவைப்பட்டவர்களுக்குப் பரிமாறலானாள்.

ஹாலில் அமர்ந்து, தன் ஒன்றுவிட்ட அண்ணனான மூத்த சம்பந்தியுடன் பேசிக் கொண்டிருந்தார் தனசேகரனுடைய தாயார்.

சின்ன மருமகளைக் கண்டதும், ''வருவதாக இல்லை என்றால் முதலிலேயே சொல்வதுதானே?'' என்று எரிந்து விழுந்தார்.

உடனேயே மாதவி, மீண்டும் ஒரு தரம் தன் கற்பனை விவரங்களைச் சொல்லி, மாமியாரிடமும் 'சாரி சாரி' என்று வருத்தம் தெரிவிக்கத் தொடங்கினாள்.

கூடவே வந்து, மனைவி கொணர்ந்ததில் இருந்து ஒரு சமோசாவை எடுத்து, அண்ணன் மாமனாரின் தட்டில் வைத்த தனசேகரன் மனைவியிடம் திரும்பி, ''ஒரு நல்ல நாளில் போய், எத்தனை தரம் 'சாரி'

சொல்வாய்? போதும்!'' என்றான் உணர்ச்சியற்ற குரலில்.

''ஒரு தரம் சொல்ல நேர்ந்ததே அதிகப்படி!'' என்று ஒரு மாதிரிக் குரலில் அவன் தொடர்ந்து கூறவும், மாதவிக்குச் சுருக்கென்று குத்திவிட, மேலும் பரிமாறுகிற சாக்கில் அப்பால் விலகிப் போய் விட்டாள்.

ஆனால், பிற்பாடு வீட்டார் எல்லோரும் சேர்ந்து உணவு அருந்திய போது, மீண்டும் இதுபற்றியே பேச்சு எழுந்தது.

''எங்கள் எல்லோருக்கும் கோபம் தான், மாதவி. ஆனால் ஆட்டோ ரிப்பேராகி இருக்கலாம், போக்குவரத்து நெரிசலில் மாட்டியிருக்கலாம் என்றெல்லாம், தனா தம்பி சொன்னபோது கூடப் பெண்டாட்டிக்காகப் பேசுகிறார் என்று எரிச்சல் தான். கடைசியில் அப்படியே ஆகியிருக்கிறது, பாரேன்!'' சந்தியா கூறவும், மாதவிக்கு நெஞ்சுக்குள் பிசைந்தது.

மற்றவர்களின் கோபம், சங்கடங்கள் ஒரு புறம் இருக்கட்டும்! தனசேகரன், மனைவியைக் காணாமல் எவ்வளவு குன்றிப் போயிருப்பான்! அப்போதும் விட்டுக் கொடுக்காமல் சமாளிக்க முயன்றிருக்கிறானே! அவனைப் பற்றி அவள் நினைத்துப் பார்க்கவே இல்லையே!

சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டு, கணவனும் மனைவியும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினர்.

அவன் மவுனமாகக் கார் ஓட்ட, அவளுக்கும் பேச வாயெழவில்லை.



மற்றவர்களிடம் மனைவியை விட்டுக் கொடுக்காமல் பல்வேறு சமாதானங்கள் தனசேகரன் சொன்னான் தான். மனைவி சரியான நேரத்துக்கு வராததால் பெரிதும் அவமானமாய் உணர்ந்து அந்த ஆத்திரத்தில் மற்றவர்களோடு சேர்ந்து திட்டியிருந்தால் கூட அவனைக் குறை கூறுவதற்கு இல்லை தான்! ஆனால், அவன் அவளைத் தாங்கிப் பேசியிருக்கிறான்!

இதை எண்ணும் போது, நியாயமாய்ப் பார்த்தால், மாதவி மகிழ்ச்சி தான் அடைய வேண்டும்! ஆனால், அவளோ, தப்பு செய்து மாட்டிக் கொண்ட சிறுபிள்ளை போலத் தவியாய்த் தவித்தாள்!

## 10

மாதவியின் தவிப்புக்குக் காரணம், அவள் சொன்ன பொய்!

தனசேகரன் மனைவியை நன்றாக அறிந்து வைத்திருக்கிறான்! அவள் வரத் தாமதம் ஆனதன் காரணத்தையும் சரியாகவே கண்டு கொண்டிருக்கிறான். தாமதமாக வரப்போகிற மாதவி, இங்கே என்னென்ன சொல்லி சமாளிக்க முயற்சிப்பாள் என்பதையும் சரியாகவே ஊகித்து, அதே காரணங்களைச் சொல்லி மற்றவர்களை அமைதிப்படுத்த முயன்றிருக்கிறான்!

இப்போது அதே வார்த்தைகளைப் பயன்படுத்தி மாதவி தன் தாமதத்திற்குக் காரணம் சொன்னால்...அப்படிச் சொல்வதை விட, 'நான் ஒரு பொய். சொல்லி' என்று எழுதி, நெற்றியில் ஒட்டிக் கொள்ளலாம்.

உண்மை முழுவதையும் கணவனிடம் சொல்லவும், மாதவிக்கு அவ்வளவாய்ப் பிடிக்கவில்லை. சுகிர்தாவிடம் போய்விட்டு வருவதாகப் பேச்செடுக்கும்போதே, எகிறினானே! இவன் எங்கே அவளது நியாயத்தைப் புரிந்து கொள்ளப் போகிறான்?

ஏற்கனவே அவன் கோபமாய் இருக்கிறான்! ஒரு வார்த்தை பேசாமல் ஓட்டுவதிலிருந்தே தெரியவில்லையா?

சொல்வது அறியாமல் மாதவியும், எதையும் சொல்லப் பிடிக்காமலே தனசேகரனும், பயண முழுவதையும் மட்டுமின்றி, வீட்டிலும் அமைதி காத்தனர்.

காரைக் 'காரேஜி'ல் நிறுத்தி விட்டு, உடம்பு கழுவி வந்தவன், "எனக்கு இரவு பால் வேண்டாம்!" என்ற பொதுவான வார்த்தையோடு, நேராகப் போய்ப் படுத்து விட்டான்.

அப்புறம் அவனிடம் அசைவே இல்லை.

சற்று நின்று பார்த்து விட்டு, மாதவி குளிக்கப் போனாள்.

குளித்து முடித்து விட்டு வந்தால், அப்போதும் தனசேகரன், அப்படியே தான் படுத்திருந்தான்.

கணவனின் அருகே சென்று, மாதவி அவனைக் கூர்ந்து நோக்கினாள்.

மூச்சு சீராக வந்தபோதும், தனசேகரன் தூங்கவில்லை என்று தான் மாதவிக்குத் தோன்றியது.

எனவே, "பாருங்கள் தனா! எனக்கு விக்கியிடம் மிகுந்த பிரியம்! நேரத்துக்குச் சென்று உதவ முடியவில்லை என்பதில் எனக்கும் வருத்தம் தான்! தயவு பண்ணி என் பேச்சை நம்புங்கள்!" என்றாள்.



அவனிடம் எந்தவித அசைவும் இல்லாது போகவும், 'சிவுக்'கெனத் திரும்பி நடந்து, படுக்கையின் அடுத்த ஓரமாய்ப் படுத்துக் கண்களை மூடிக் கொண்டாள். இறுக மூடிய இமைகளிலிருந்து இரண்டே இரண்டு சொட்டு நீர்தான் கசிந்தது!

முன் தினம் நடவாதது போல மறு நாள் நடந்தது.

அவள் ஏதோ சொல்ல, அவன் அதற்குப் பதில் உரைக்க, வாழ்க்கை சாதாரணமாக நடந்தது.

கையில் அன்றைய ஆங்கில தினசரியோடு தனசேகரன் அமர்ந்திருந்தான்.

படித்து முடித்த பக்கம் திருப்பியவன், திருப்பிய புதிய ப்க்கத்தை வெறித்தபடி சற்று நேரம் அமர்ந்திருந்தான்.

இதை மாதவியிடம் சொல்வதா வேண்டாமா?

பேசாமல் விட்டு விட்டால்...என்று எண்ணும் போதே, தானாக அவன் தலை மறுப்பாய் அசைந்தது.

'நான் அப்படிப்பட்டவன் அல்ல என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டபடி, மனைவியை அழைத்தான், "மது, ஒரு நிமிடம் வந்து விட்டுப் போக முடியுமா?"

எள் எனுமுன் எண்ணையாக அவளும் அடுப்பை அணைத்து விட்டு, உடனே ஓடி வந்தாள். "என்ன? என்ன விஷயம்?"

தன்னைப் போலவே, மாதவியும் ஒருவருக்கொரு வர் இன்னும் கொஞ்சம் நல்லபடியாக நடந்து கொள்ள வேண்டும் என்று முதல் நாள் இரவில் முடிவெடுத்திருக்க வேண்டும், என்று சரியாகவே ஊகித்தவன் பத்திரிகை யில் பிரித்திருந்த பக்கத்தை அவளுக்குக் காட்டினான்.

அது ஒரு விளம்பரம்! 'கனகாஞ்சலி' என்று தலைப்பு! ஒரு நகம் வெட்டியையும், அருகே சிறு பிறைபிறையாக வெட்டப்பட்ட நக நுனிகளையும் ஒரு புறம் காட்டி, மறுபுறத்தில் அந்தப் பிறைபிறையாய் வெட்டப் பட்ட நகத்துணுக்குகளைப் பெரிதாக்கி எதிரும் புதிருமாகச் சேர்த்து, ஒரு பூ மாதிரி இணைத்து, இருபுற மும் சங்கிலி கோர்த்திருந்தார்கள்.

பென்டன்ட்! அமைப்பு அழகாக இருந்தது.

அத்தோடு, இப்படி உங்களுக்குச் சொந்தக் கற்ப னையாக ஏதாவது தோன்றினால் எழுதுங்கள். நகை செய்யும் உரிமை எங்களது! உங்களுக்கு உரிய பரிசும் 'ராயல்டி'யும் வழங்கப்படும் என்று விளம்பரம் செய்தி ருந்தார்கள்!

''ஆகா! என்ன அழகு பாருங்கள். எவ்வளவு சாதாரணமான விஷயத்திலிருந்து, எவ்வளவு அழகான படைப்பு மலர்ந்திருக்கிறது!'' என்று மாதவி வியந்தாள்.

''அவ்வளவு தானா? இந்தப் போட்டியில் கலந்து நீ எதையாவது வரைந்து அனுப்பப் போவது இல்லை யா?'' என்று தனசேகர் மனைவியைச் சீண்டினான்.

''என்னையா வரையச் சொல்லுகிறீர்கள்?'' என்ற மாதவியின் கண்கள் விரிந்தன.



''இந்த வீட்டில் வேறே யாரும் கலை ராணிகள் இருக்கிறார்களா! இருந்தால் சொல்லும்மா! அவர்களை யும் கொஞ்சம் டாவடித்துப் பார்க்கிறேனே!''

''ம்ம்...! விடுவேன் என்று நினைத்தீர்களோ?'' என்று அவள் பதிலுக்குக் கேட்ட விதத்தில், பழைய வாழ்வு எட்டிப் பார்ப்பது போலத் தனசேகரனுக்குத் தோன்றியது.

''என்ன வரையலாம்? எதை வரைந்து அனுப்ப லாம்? என்று பரபரத்த மனைவியைக் கேலியாக நோக்கி விட்டு, ''ஆயிரம் வேலை செய்வீர்கள், ஒன்றையும் சாட்சியாய்க் கண்களில், மனதில் பதிய வைப்பது மட்டும் கிடையாது! கரும்பு கடித்து, கடித்து தோல் இழுத்துத் துப்புவீர்களே!....அதைவிட, ஆணி மாதிரி ஒன்றில் உருளைக் கிழங்கைச் சொருகிவிட்டு, ஒரு கத்தியை அந்த ஆணியில் மாட்டிச் சுற்றிக் கொண்டே வந்து, நீளமாய், சுருள் சுருளாய் உருளைக் கிழங்கு சிப்ஸ் செய்வாயே, நினைவிருக்கிறதா? அந்தச் சுருளையும் அது போல நகை டிசைனையும் அனுப்பி வையேன்!'' என்றான்.

அதன்படியே அவளும் அனுப்பினாள்.

வாழ்க்கை சிறிது காலம் நிம்மதியாகச் சென்றது. இருவருமே, அந்த நிம்மதியை நிலைக்க வைக்கப் பெருமுயற்சி செய்தனர்.

தனசேகரன் ஒரு தரம் டூர் போய் வந்தான்.

இந்நிலையில், ஒரு நாள், தனசேகரின் வரவுக்காக மாதவி ஆவலாகக் காத்திருந்தாள்.

அவளைப் பார்த்ததும், ''என்ன இன்றைக்குத் தாமரை முழுமையாக விரிந்து மலர்ந்து விகசிக்கின்றது'' என்று 'கமெண்ட்' அடித்தான் தனா.

''ஏதாவது காரணம் இருக்கும்!'' என்று மர்மமாய் முறுவலித்தாள் மனைவி.

சட்டெனப் பளிச்சிட்ட கண்களை, இமை தாழ்த்தி மறைத்து, ''அது என்ன அப்படிப்பட்ட காரணம்!'' என்று தனசேகரன் விசாரித்தான்.

''எங்கள் அண்ணி கருவுற்று இருப்பது தெரியுமல்லவா!''என்று அவள் தொடங்கவும், சட்டென தனசேகரனின் கண்களில் இருந்த ஒளி மங்கியது.

அதைக் கவனியாமல், தனசேகரனுக்கு மாலைச் சிற்றுண்டியைத் தட்டில் எடுத்து வைத்துக் கொடுத்து விட்டு மாதவி சொன்னாள். ''வரும் ஞாயிறன்று, அண்ணி வீட்டில் இருந்து அண்ணிக்குப் பூ முடிக்கப் போகிறார்களாம்!.....உங்களுக்குத் தெரியுமா, அண்ணிக்கும் எனக்கும் போட்டி. யார் முதலில் பிள்ளையார் ஆகிறார்களோ, அவர், அடுத்தவருக்கு வெள்ளித் தட்டில் ஆயிரம் ரூபாய் வைத்து, அவரது பூமுடிப்பின் போது கொடுக்க வேண்டும் என்று. ஞாயிறன்று தருவதாக, அண்ணி டெலிஃபோன் செய்தாள்!'' என்று பரபரப்புடன் பேசினாள் மனைவி.

சிறு அமைதியின் பின், ''இதற்காகத் தான் இந்தப் போட்டியில் வெல்வதற்காகத்தான் குழந்தை வேண்டாம் என்றாயா?'' என்று சற்று வரண்ட குரலில் தனசேகரன் வினவினான்.



''என்னது? என்ன சொல்கிறீர்கள்?'' என்று திகைத்து விட்டு, ''சேச்சே! அதற்காகவெல்லாம் ஒன்றும் இல்லை! திருமண அழைப்புக் கொடுக்கப் போனபோது, ஆசிரியைகள் எல்லோருமே அப்படித்தான் சொன்னார்கள்! சிலபேர் ஐந்து ஆண்டுகள் வேண்டாம் என்று கூடக் கூறினார்கள். பிறகு, நாம் இருவரும் சேர்ந்து தானே இரண்டு ஆண்டு வேண்டாம் என்று முடிவெடுத்தோம்? இப்போது ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?'' என்று அவன் முகத்தைப் பார்த்தாள் அவள்.

அவன் பேசாமல் நிற்கவும் மாதவி லேசாக முறுவலித்தாள். ''ஓகோ! அய்யாவுக்கு அப்பா ஆகிற ஆசை வந்துவிட்டதாக்கும்!'' என்றாள் கேலியாக. உடனே முகம் 'சீரிய'சாக, ''இந்தப் படங்கள் விஷயம், ஒரு நிலைக்கு வரட்டும், தனா கையில் இருக்கும் வேலைகள் முடிந்ததும், பார்க்கலாம்! நாம் என்ன, பெற்றுக் கொள்ளாமலேயா இருந்து விடப் போகிறோம்? இப்போதைக்கு வேண்டாம். அவ்வளவு தானே!'' என்று முடித்தாள்.

தனசேகரன் பேச்சின்றித் தட்டில் இருப்பதைக் கொறித்தான்.

தன் காபியை எடுத்து ஒரு மடக்கு அருந்தி விட்டு, ''நம் விஷயம் கிடக்கட்டும், தனா! இப்போது அது முக்கியம் அல்ல. இன்றைக்கு அண்ணி, அம்மா இரண்டு பேருமே ஃபோனில் பேசினார்கள். பூ முடிப்பு அடுத்த ஞாயிற்றுக் கிழமையாம். நம் இருவரையும் சனிக்கிழமையே அங்கு வந்துவிடச் சொல்கிறார்கள். அடுத்த சனிக்கிழமை உங்களுக்கு லீவுதானே! போய் விட்டு, மறுநாள் மதிய விருந்துக்கு மேல் மெல்லக் கிளம்புங்கள்

என்கிறார்கள்! உங்களுக்கு என்ன உடை தனா? குர்த்தா செட் வைக்கட்டுமா? இலகுவாக இருக்குமே!'' என்று கேட்டாள்.

கையிலிருந்ததைத் தட்டில் போட்டு விட்டு, ''நீ போய் வா!'' என்று தனசேகரன், சுருக்கமாக உரைத்து விட்டுக் கை கழுவ வாஷ் பேசினுக்குச் சென்றான்.

''என்னது?'' என்று அதிர்ந்த மாதவியின் முகத்தில் சிறு சினச் சிவப்பு எட்டிப் பார்த்தது.

கை கழுவி, பேசின் அருகே வளையத்தில் தொங்க விடப்பட்டிருந்த டவலில் கை துடைத்து விட்டு அவன் வரும் வரை பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள்.

அவன் வந்து அமர்ந்து, காபியைக் கையில் எடுத்ததும், ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள், தனா? வீட்டில் விசேஷம் என்று கூப்பிடுகிறார்கள்! அதுவும் லீவு நாட்களில்! 'நீ போய் வா' என்றால் என்ன அர்த்தம்?'' என்றவளின் குரல், அவளது கட்டுப்பாட்டை மீறிக் கொண்டு ஆத்திரத்தில் லேசாக நடுங்கியது.

''என்ன பெரிய விசேஷம்?'' என்றான் அவன் சற்று அசட்டையாகவே. ''பூ முடிப்பு! பெண்கள் விசேஷம். இதற்கு நீ போனால் போதாதா?''

''பெரிய விசேஷம் தான். எங்கள் வீட்டுக்கு அடுத்த வாரிசு உருவாகிவிட்டதென்று உலகத்துக்கு அறிவிக்கும் சடங்கு அது....''

''உன் வீடு இது என்பது மறந்து விட்டதாக்கும்!'' என்றான் அவன் கேலிபோல. அத்தோடு, ''இன்னமும் நீ அந்த வீட்டை, உன் வீடு என்று பேசினால், உன் அண்ணியே அடிக்க வருவாள்!'' என்று கிண்டலாய்ச் சிரித்தான்.



''அதெல்லாம் மாட்டாள். எப்படியும் நான் பிறந்து வளர்ந்த வீடு! 'எங்கள் வீடு' என்பது ஒன்றும் பெரிய பிழை அல்ல! ஆனால், இப்போது பிரச்சனை அதுவல்ல, பூமுடிப்பு ஒன்றும் சின்ன விஷயம் அல்ல என்பதும், அதற்கு ஆண்கள் வரக்கூடாது என்று ஒன்றும் கிடையாது என்பதும் தான்'' என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக.

''நீ சொல்வதை ஒத்துக் கொண்டாலும், நான் வருவதற்கில்லை, மாதவி. எனக்கு 'டூர்' இருக்கிறது!'' என்றான் தனசேகரன் சாதாரணமாகவே.

''டூர்தானே? தள்ளிப் போடுங்கள்!'' என்றாள் அவளும் சர்வசாதாரணமாய்.

''என்ன, விளையாடுகிறாயா? எவ்வளவு திட்டமிட்டு 'டூர்' புரோகிராம்' போட்டுக் கொண்டு இருக்கிறோம்! தள்ளிப் போடுவதாவது? சாத்தியமே கிடையாது!'' என்றான் அவன் குரலில் உறுதி ஏற்றி.

''ஏன் கிடையாது? உங்கள் அண்ணன் மகன் பிறந்த நாள் என்றால் மட்டும் டூரைத் தள்ளிப் போடவில்லையா? ஆண்டுதோறும் வரக்கூடிய பிறந்த நாளைக்காகவே பயணத்தைத் தள்ளிப் போட்டீர்களே!...''

''உன் அண்ணியையும் ஆண்டுதோறும் பிள்ளை பெற்றுக் கொள்ளச் சொல்லு. அடுத்த முறை பார்க்கலாம்!'' என்றான் தனசேகரன் பரிகாசமாய்.

''ஆண்டுதோறும் பெற்றாலும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒன்றாய்ப் பெற்றாலும், அது அவர்கள் விருப்பம்.

ஆனால் பூ முடிப்பு முதல் குழந்தை உருவாகும்போது மட்டும் தான் உண்டு! அதனால், இதற்குப் போய் தான் ஆகவேண்டும்!''

''தாராளமாய்ப் போய் வா என்று தானே நானும் சொல்கிறேன்! உன் பிறந்த வீட்டு வைபவங்களுக்குப் போகக்கூடாது என்று நான் ஒன்றும் உன்னைத் தடுக்க வில்லையே!''

''என்னை உங்களால் தடுக்கவும் முடியாது!'' என்றாள், அவள் அவனை அலட்சியமாய் நோக்கி. ''நான் சொல்வது நீங்களும் வரவேண்டும் என்பதுதான்.''

''அது தான் டூர் இருக்கிறது என்றேனே!'' என்றான் தனசேகரன் அலுப்புடன் கையால் தலையைக் கோதிவிட்டபடி. ''முன்பு தள்ளிப் போடவில்லையா என்று கேட்காதே. அது சாதாரணமான நேரம். வெறும் கிரமப்படியான வேலை. கொஞ்சம் தள்ளிப் போடுவதால் எந்தப் பாதிப்பும் இராது. இப்போது அப்படியல்ல. சீசன் நேரம். பயிர்களுக்கு உரம் இடவேண்டிய காலம். போட்டிக் கம்பெனி வேறு, நம்மது போல ஒன்றைத் தயாரித்து, பெரிதாக விளம்பரங்கள் செய்து கொண்டு இருக்கிறான். இப்போது தள்ளிப் போட்டால், 'முந்தினவன் கை மந்திர வாள்' என்கிற மாதிரியாகி விடும்!''

''அப்படியானால் வேறு யாரையாவது அனுப்புங்கள்! உங்கள் நிறுவனத்தின் விற்பனைப் பிரிவில், உங்களைத் தவிர வேறு ஆட்களும் இருப்பார்கள் தானே? அவர்களை அனுப்புங்கள்! என்னவோ, கம்பெனியையே நீங்கள் தான் கட்டிக் காக்கிற மாதிரி அலட்டாதீர்கள்!'' என்றாள் அவள் ஏளனமாக.



''அலட்டலும் இல்லை! மண்ணாங்கட்டியும் இல்லை!'' என்றவனின் முகத்திலும் குரலிலும் சினம் தெரிந்தது. ''ஆனால் இதை எல்லாம் நன்றாக, நேரடியாகக் கவனிக்கிறேன் என்பதால் தான் மற்றவர்களுக்கு இல்லாத பலசலுகைகளை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள்! அன்றைக்குக் காரைக் கண்டதும் ஈ என்று அத்தனை பல்லையும் காட்டி இளித்தாயே! அந்தக் கார்கூட, நான் ஒழுங்காகக் கடமையை நிறைவேற்றுவதற்காகத்தான்! நினைவிருக்கட்டும்!''

குத்தி நோகடிப்பதற்காகவே சொன்ன வார்த்தைகள்! காரைப் பார்த்ததும் ஈ என்று இளிக்க அவள் என்ன இல்லாதவர் வீட்டுப் பெண்ணா?

''காணாமல் கண்ட மாதிரி காரைப் பார்த்ததும் அப்படி இளிப்பது உங்கள் வீட்டுப் பழக்கம்! நம் திருமணத்துக்கு முன்பே எங்கள் வீட்டில் காரில் போய் வந்து பழகியவள் நான் என்பது நினைவிருக்கட்டும்!'' என்று பதிலுக்குக் குத்தினாள்.

அவனுடைய குடும்பத்தையே தாழ்த்திப் பேசிவிட்டாளே! என்ன திமிர்!

கொதிப்புடன், ''காரில் போய் வருவது மட்டும் கடமை உணர்ச்சியைப் போதித்து விடாது என்பது இப்போது தெரிகிறது! ஆனால் நான், அப்படியல்ல. பன்றியுடன் சேர்ந்த கன்று போல உன் பழக்கத்தில் நான் மாற மாட்டேன். என் கடமையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, உனக்கு வால் பிடித்து வர என்னால் முடியாது!'' என்றான் தனசேகரன் தீர்மானமாக.

இந்தக் குரலில் பேசினால் அவன் மாறமாட்டான்!

ஆத்திரத்துடன் மாதவி கணவனை முறைத்துப் பார்த்தாள். "பெரிய கடமை! எல்லாம் பொய்! வெறும் பழிவாங்குகிற உணர்ச்சி! அன்றைக்கு விக்கி பிறந்த நாளைக்கு நான் தாமதமாகவே வந்தேன் என்பதற்காகக் கரம் வைத்துப் பழி வாங்குகிறீர்கள்!" என்றாள் அவள்.

"பழி வாங்குகிற எண்ணமெல்லாம் எனக்குக் கிடையாது!" என்று முகம் திருப்பிக் கொண்டான் தனசேகரன்.

"பொய்! பொய்!" என்றவளின் சுதி ஏறியது. "அன்றைக்கு நான் வராமல் கேக்குக்காக அலைந்து திரிந்திருக்கிறீர்கள். உங்கள் வீட்டார் முன் அவமானப் பட்டிருக்கிறீர்கள். அதற்குப் பழிவாங்குவதற்காகத்தான் என் வீட்டார் முன் என்னை அவமானப் படுத்துவதற்காகத்தான் இப்போது வர மாட்டேன் என்கிறீர்கள்!"

"அப்படி எதுவும் இல்லை! இல்லை! இல்லை! இந்தச் சமயத்தில் என் பயணத்தை எதற்காகவும் தள்ளிப் போட முடியாது என்று சொன்னால் தயவு...பண்ணிப் புரிந்து கொள்!" என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் அவன்.

"எதற்காகவுமா? நான் செத்துப் போனால்?"

"சை! இந்த மாதிரி உளறல்களுக்குப் பதில் சொல்ல என்னால் ஆகாது!" என்று எழுந்து ஹாலுக்குச் சென்று தொப்பென அமர்ந்தான் அவன்.

இதற்கு மேல் உன் பேச்சைக் கேட்கப் பிரியமில்லை என்று சொல்லாமல் சொல்வது போல 'ரிமோட்'டை எடுத்து டி.வியை இயக்கி, டி.வி சத்தத்தையும் கூட்டினான்.



ஆத்திரத்துடன் சென்று, டி.வியின் ஸ்விட்சையே அவள் அணைத்தாள். "உங்களுக்கு ஆணாதிக்கம் கிடையாது என்பீர்களே! இப்போது ஆண்பிள்ளை என்கிற திமிரைக் காட்டத்தானே இப்படிச் செய்கிறீர்கள்? நீ பெண் இவ்வளவு செய்தால், நான் ஆண் எவ்வளவு செய்வேன் என்றுதானே? நீ பாதிவரை வராவிட்டால் நான் முழுவதுமே வர மாட்டேன் என்று உங்கள் ஆணவத்தைப் பறைசாற்றத்தானே!" என்று கொதித்தாள்.

"இந்த நேரம் என் வேலையைத் தள்ளிப் போட முடியாது என்று திருப்பித் திருப்பிச் சொல்கிறேனே! கொஞ்சம்கூடவா உன் மண்டையில் ஏறவில்லை? உன் புத்தி தெரிந்து தான் அன்றைக்கே உன் அம்மா விற்பனைத் துறையில் வேலை பார்க்கிறவர் வேண்டாம் என்று சொன்னார்கள் போல. அதைக் கேட்டு, உன் அப்பா வேறு ஆளைப் பிடித்திருந்தால், குறைந்த பட்சம் நானாவது நிம்மதியாய் இருந்திருப்பேன்!"

இவ்வளவு காலம் இணைந்து வாழ்ந்து விட்டு வேறு ஆளா?

முகம் சிவக்க, உடல் பதற, "என்ன சொன்னீர்கள்?" என்றபோது அவளது குரல் கிரீச்சிட்டது.

தான் ரொம்பவும் அதிகப்படியாகப் பேசிவிட்டது அவனுக்கும் உறைத்திருக்க வேண்டும். ஒரு வினாடி பேசாதிருந்து விட்டு, "என்ன சொன்னாலும் ஏற்கமாட்டேன் என்கிறாயே, மாதவி. எது முக்கியம் என்பதைக் கொஞ்சம் புரிந்து கொண்டு பேசு!" என்றான் சற்றுத் தணிந்து விட்ட குரலில்.

''புரிந்து கொண்டு பேச வேண்டியது யார்? அன்றைக்கு நடந்ததற்காகப் பழிவாங்குவது மட்டும் தான் முக்கியம் என்று நீங்கள் அல்லவா பேசுகிறீர்கள்! அன்று எத்தனை தரம் 'சாரி' சொன்னேன்! ஒன்று கூட உங்களுக்கு உறைக்கவில்லையே!'' என்றாள் அவள் வெறுத்த குரலில்.

ஆத்திரத்துடன் எழுந்தான் அவன். ''அதில் ஒரு 'சாரி' யைக்கூட நீ உண்மையான வருத்தத்துடன் உணர்ந்து சொல்லவில்லையே! எங்கே? என்னைப் பார்த்துச் சொல்! அன்று நீ அண்ணன் வீட்டுக்கு வரவேண்டும் என்பதையே அலட்சியப்படுத்திப் பேசிக் கொண்டு இருந்து விட்டு, ஆட்டோவில் வரும் போது என்ன மாதிரிப் பேசுவது என்று திட்டமிட்டுக் கொண்டு வரவில்லை? திரும்பத் திரும்ப 'சாரி சாரி' என்றால் எல்லோரும் அடங்கிப் போய்விடுவார்கள் என்று கணக்கிட்டு வந்தே அந்த 'சாரி' சொல்லவில்லை? சொல்லு. உண்மையைச் சொல்லு. அது தானே நடந்தது?''

விரல் நீட்டிக் குற்றம் சாட்டி அவன் பேசப்பேச அவள் திகைத்துப் போனாள்.

கண்டு பிடித்து விட்டானே என்ற அவமானத்துடன் அவள் வாயடைத்து நின்றது ஒரு சில கணங்களே!

உடனேயே ஆங்காரத்துடன் தலை நிமிர்ந்தாள்! ''ஆமாம். சொன்னேன்! அப்படித்தான் பொய்யாகத்தான் 'சாரி' சொன்னேன்! எதற்கு? உங்கள் வீட்டு உளுத்துப் போன மூளைகளுக்கு உண்மையைச் சொன்னால் உணர்ந்து கொள்ளத் தெரியாது என்பதால் உண்மையை ஒளித்துப் பொய் சொன்னேன்! அன்றைக்கு அந்த ஒப்பந்



தப்படி எனக்கு ஓட்டல்காரர்கள் தரும் பணம் எவ்வளவு தெரியுமா? ஒரு லட்சம் ரூபாய்! முழுசாக ஒரு லட்சம்! அவ்வளவு தொகை மொத்தமாய்ப் பார்க்க, நீங்கள் உண்ண, உடுக்க, ஒரு பைசா செலவு பண்ணாமல் ஆறு மாதம் உழைக்க வேண்டும்...''

''போதும், மாதவி. அனாவசியமாய் வார்த்தைகளைக் கொட்டாதே! பிறகு வீணாக வருத்தப்பட நேரும்!'' என்ற கணவனின் பேச்சைக் காதிலேயே வாங்காமல் அவள் சொல்லிக் கொண்டே போனாள்.

''உங்கள் அண்ணன் இருக்கிறாரே, உங்கள் அம்மா வீட்டில் ஒசியில் உட்கார்ந்து வீட்டு வாடகை மிச்சம் பிடித்துக் கொண்டு! அவர் ஓர் ஆண்டு காலம் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டிப் பச்சைத் தண்ணீர் குடித்துக் கொண்டு காலம் கழிக்க வேண்டும்! முழுசாக ஒரு லட்ச ரூபாய் ஒரே மாதத்தில் சம்பாதிக்கப் போகிறேன் என்றால் உங்களுக்கெல்லாம் தாங்குமா? உங்கள் அண்ணி வயிற்றெரிச்சலில் வீங்கி வெடித்துப் போய் விட மாட்டார்களா? நீங்களும் தான் என்ன? பெண்டாட்டிக்குப் பணம், புகழ் வருகிறது என்றால் பொறுக்க முடியுமா? பொறாமைத் தீயில் பொசுங்கிப் போய் விடுவீர்களே என்று தான் இன்று வரை இதைச் சொல்லாமல் வைத்திருந்தேன்!'' என்று வாயில் வந்ததை எல்லாம் கொட்டித் தீர்த்தாள் அவள்.

''எனக்கென்ன பொறாமை? உன் உழைப்பு, உன் பணம்! அதை நான் கணக்குக் கேட்டதும் இல்லை; கையில் வாங்கிக் கொண்டதும் இல்லை!'' என்றான் தனசேகரன்.

"உள்ளே காந்தல் இல்லாமல் இருந்திருந்தால் அதை என்ன ஏது என்று கேட்டும் இருப்பீர்கள்; அதை என்ன செய்வது மேல் என்று சொல்லியும் இருப்பீர்கள்!" என்று அவன் பேச்சை அவன் மீதே திருப்பினாள் அவள்.

"இல்லை. நீ நினைப்பது தவறு! நான் தலையிடாத காரணம்...."என்று ஏதோ சொல்ல வந்தவனின் பேச்சில் குறுக்கிட்டு, "அதெல்லாம் இப்போது அனாவசியம்!" என்றாள் அவள் அலட்சியமாக.

"இப்போது எனக்குப் பதில் சொல்லுங்கள். நீங்கள் அண்ணியின் பூ முடிப்புக்கு வரப்போகிறீர்களா, இல்லையா?" முகம் இறுக அவனை நேரா

கப் பார்த்துக் கேட்டாள்.

"முடியாத காரியம் என்று முதலிலேயே சொல்லிவிட்டேன்!" என்றான் அவனும் இரக்கமின்றி. "நாளன்று நான் 'டூர்' கிளம்பியே ஆக வேண்டும்! இந்த முறை திரும்பிவர இருபது நாட்கள் ஆகும்! இது நிச்சயம்!" என்றான் உறுதியான குரலில்.

புருவம் நெறித்து, சிவந்த கண்களுடன் காளி ரூபமாய்க் கணவனை நோக்கினாள் மாதவி. "அப்படி நீங்கள் பிடிவாதமாகப் போனீர்கள் என்றால், திரும்பி வரும்போது, நான் இந்த வீட்டில் இருக்கமாட்டேன்! போனால் பிறகு எப்போதுமே வரவும் மாட்டேன்! இதுவும் நிச்சயம்தான்!" என்றாள் அவளும் உறுதியான குரலில்.

"ரொம்பவும் நல்லது! நானும் கொஞ்சம் நிம்மதியாக இருப்பேன்!" என்றவன், அதற்குமேல் அவளை அலட்சியம் செய்து, டீவியைப் போட்டுக் கொண்டு அதன்முன் அமர்ந்தான்.

அவனை வெறித்து நோக்கிவிட்டு, அடுத்த படுக்கையறைக்குள் சென்று அங்கிருந்த ஒற்றைக் கட்டிலில் குப்புற விழுந்தாள் அவள்!

அந்த முறை 'டூர்' முடிந்து அசதியுடன் தனசேகரன் திரும்பி வந்த போது, மாதவி வீட்டில் இல்லை.

முதலில் அதை அவன் பெரிதாக நினைக்கவில்லை. தன் 'ஒரு லட்சம் ரூபாய்' வேலையில் மூழ்கி இருக்கிறாள் போலும் என்றுதான் எண்ணினான். தன் படைப்புகளில் மூழ்கி, கணவன் வரும் நேரங்களில் மாதவி வீட்டில் இல்லாமல் போய் விடுவது இப்போது வழமையாகி விட்டதால் அவள் இல்லை என்பதை அவன் பொருட்படுத்தவே இல்லை.

வழக்கம்போல அவனது சாவி கொண்டு கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று, அலுப்பு தீரக் குளித்து உடை மாற்றி வந்தவனுக்கு வீட்டில் ஏதோ ஒரு வேறுபாடு உறுத்தலாய்த் தெரிந்தது.

யோசனையோடு ஆராய்ந்தபோது அந்த வேறுபாடு இன்னதென்று புரிந்தது.

மாதவியின் பொருட்கள் எதுவும் வீட்டில் இல்லை! குளியல் அறையில், அவளது பல் தேய்க்கும் பிரஷ், சோப் இல்லை. அலமாரியில் அவள் துணிவைக்கும் பகுதி காலியாக இருந்தது. டிரஸ்சிங் டேபிளில் அவளது சீப்பு, பொட்டு மற்றும் அலங்காரச் சாதனங்கள்...பீரோவில் அவளது பட்டுச்சேலைகள்....எதுவுமே இல்லை.

பைத்தியக்காரத்தனம் அளவு மீறிப் போகிறது என்று எண்ணியபடி, டெலி.ஃபோனின் அருகில் அவன் வரும் போது அதுவே குரல் கொடுத்தது.

பேசியது அவனுடைய மாமனார்தான்... ''என்ன மாப்பிள்ளை இது? மாதவி இனி உங்களோடு வாழமாட்டாளாம்! ஒரே பிடிவாதமாய் இருக்கிறாளே!'' என்றார் அவர் கவலையோடு.

''அது...அது ஒன்றுமில்லை, மாமா! நான் வந்து அவளைப் பார்த்துப் பேசினால் எல்லாம் சரியாகி விடும். கவலைப்படாதீர்கள்'' என்று தனசேகரன் அவருக்கு ஆறுதலாய்ப் பேசினான்.

''அதுதானே மாப்பிள்ளை பிரச்னையே'' என்றார் அவர் குரலில் இன்னமும் கவலை ஏற, ''மாதவி இனி உங்களைப் பார்க்கவோ, உங்களுடன் பேசவோ மாட்டாளாம். நாங்கள் வற்புறுத்தினால், ஏதேதோ செய்து கொள்ளப் போவதாக எங்களை மிரட்டுகிறாள். மாப்பிள்ளை!'' என்றவரின் குரலில் கலவரம் முழுமையாக இருந்தது.

## 11

கணவன் என்னதான் இருபது நாட்கள் 'டூர்' என்று கறாராகச் சொல்லிவிட்டுப் போனபோதும், மாதவிக்கு உள்ளூர ஒரு நப்பாசை இருந்தது. அவ்வப்போது பத்து நாள் டூர், பதினைந்து நாள் பயணம் என்று செல்கிறவன், ஓரிரண்டு தினங்கள் முன்னதாகவே திரும்பி வந்திருக்கிறான்.

'உன்னைப் பிரிந்திருக்க முடியவில்லை' என்று சொல்லி, அங்கங்கே பஸ் மாறி, பஸ் கிடைக்காதபோது



லாரியில் நின்று கூடத் தனசேகரன், தன் பயணத்தை விரைவாக முடித்துக் கொண்டு மனைவியுடன் திரும்பி வந்ததுண்டு.

அந்த மாதிரிக் காதலில் உருகி இப்போதும் வருவானா என்பதில் மாதவிக்குச் சந்தேகம்தான். ஆனால், பிரிந்து சென்று விடுவேன் என்று மிரட்டியிருக்கிறாளே! ஒரேயடியாக அவன் மனைவி அப்படிப் போய் விடுவாளோ என்ற அச்சம் அவனுக்கு இல்லாமலா போகும்? அந்தப் பயம் காரணமாகவாவது கணவன் திரும்பி வந்துவிடக் கூடும்; வந்துவிடுவான் என்று அவள் எதிர்பார்த்தாள்.

அந்த எதிர்பார்ப்பினாலேயே அவளுடைய அண்ணன் மனைவியின் பூச்சூட்டலுக்கு முந்தைய நாள் வரை, அவள் தாய் வீடு போகாமல் அவள் வீட்டிலேயே கணவனுக்காக காத்திருந்தாள்.

அவள் அப்படிப் போய் விட்டால் நல்லதுதான்; தனக்கு நிம்மதியாகவே இருக்கும் என்று தனசேகரன் சொன்னது, அவ்வப்போது நினைவு வந்து அவளைக் கலங்கவும் கூடவே கொதிக்கவும் செய்தபோதும், அந்த நினைவைப் பிடிவாதமாக ஒதுக்கி, இருவருமாகக் கழித்த இனிய நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்து நம்பிக்கை தளர்ந்து விடாமல் காத்தபடி வழிமேல் விழி வைத்து என்பார்களே, அதுபோலத் தவிப்புடன் காத்திருந்தாள்.

பூச்சூட்டலை ஒரு ஞாயிற்றுக்கிழமையில் வைத்திருந்தார்கள். லீவு நாளாக இருந்தால் முக்கியமாக வீட்டு மாப்பிள்ளையான தனசேகரனுக்கும், மற்றுமுள்ள உறவினருக்கும் கூட வந்து கலந்து கொள்ள வசதியாய்

இருக்கும் என்று அந்த தினத்தைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

கூடவே, அன்று ஒரு சுப முகூர்த்த நாளாகவும் இருந்தது வேறு அந்த நாளையே நிச்சயிக்க இன்னொரு காரணம் ஆயிற்று.

சனிக்கிழமை மதியம் வரை மாதவி பொறுத்துப் பார்த்தாள்.

தனசேகரன் வீடு வந்து சேரவில்லை என்றாகி விடவும், அவனது அலுவலகத்துக்கு டெலிஃபோன் செய்து பேசினாள். விற்பனைப் பிரிவில், தனசேகரனுக்கு அடுத்த இடத்தில் இருப்பவனோடு தொடர்பு கொள்ள முயன்றாள். அவனும் ஏதோ டூரில் இருப்பதாகச் சொன்னார்கள்.

'என்ன டூர், மண்ணாங்கட்டி! சும்மா சும்மா டூர் போவதற்கு இங்கே ஆயிரக் கணக்கில் வாடகை கொடுத்து ஓர் அலுவலகம் எதற்கு? ஏதாவது ரயிலில், அல்லது ரயில் நிலையத்தில் அலுவலகம் நடத்த வேண்டியதுதானே?' என்று உள்ளூரப் பொருமியபடி, அலுவலகத் தலைமை நிர்வாகிக்கே டெலிஃபோன் செய்தாள்.

அந்த மட்டும் தனசேகரனுடைய மனைவி என்றதும், அவரும் உடனே அவளோடு பேசினார். பொதுவாக, அவருடைய செயலாளரே எல்லோரிடமும் பேசி முடித்து விடுவார்; மிகவும் வடிகட்டி, ஓரிருவரோடுதான் தலைமை நிர்வாகி நேரடியாக உரையாடுவது என்பான் தனசேகரன். அது நினைவு வரவும், தனக்கு அளிக்கப்பட்டிருக்கும் சலுகையில் சற்றே மனம் ஆறுதல் அடைய, ''வணக்கம், சார்.'' என்றாள் மாதவி.



''வணக்கம்மா. உங்கள் படங்கள் எல்லாம் எந்தமட்டில் இருக்கிறது? அடுத்த கண்காட்சி எப்போது வைக்கப் போகிறீர்கள்?'' என்று அவர் விசாரிக்கவும் ஆச்சரிய முற்று, ''சார் உங்களுக்கு நான் படம் வரைவது தெரியுமா?'' என்று வினவினாள்.

''தெரியுமாவா? அன்றைக்கு உங்களுக்கு இருந்த பரபரப்பில் என்னைச் சந்தித்த நினைவு இருக்க நியாயமில்லைதான். உங்கள் சித்திரக் கண்காட்சிக்கு நானும் வந்திருந்தேன். தனசேகர் எம்டியையே பிடித்து வந்தவன், என்னை விடுவானா? உண்மையைச் சொன்னால், அவனுக்காகக் கொஞ்சம் போரடிப்பதைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான் என்று எண்ணித்தான் கண்காட்சிக்கு நான் வந்தேன். ஆனால் ஆனந்தமான அதிசயமாய், படங்கள் எல்லாமே மிக நன்றாய் அமைந்திருந்தன! நீங்கள் அவைகளை வரிசைப்படுத்திக் காட்டிய விதமும் நேர்த்தியாய் இருந்தது. அதனால்தான் அடுத்த காட்சி எப்போது என்று கேட்டேன். அடுத்த கண்காட்சியின் போது எனக்கு ஓர் அழைப்பு, கட்டாயம் அனுப்ப வேண்டும் நான் மனைவியோடு வருவேன்!'' என்றார் அவர் பாராட்டும் குரலில்.

உச்சி குளிர, ''கட்டாயம், சார். நீங்களெல்லாம் வந்து பார்ப்பதே எனக்குப் பெருமைதானே, சார்!'' என்றவளுக்குத் தான் எதற்காக டெலிஃபோன் செய்தோம் என்பது கூட மறந்து போய், ரிசீவரை வைத்துவிட இருந்தாள்.

ஆனால் அவர் தலைமை நிர்வாகி அல்லவா? எதையும் மறவாமல் ''என்ன விஷயம், அம்மா? எதற்காக டெலிஃபோன் செய்தீர்கள்?'' என்று விசாரித்தார்.

மனதில் தவிப்பும், கடுப்பும் குரலில் வெளிப்பட்டு விடாமல் காத்தபடி, ''அவர், எப்போது திரும்பி வருவார், சார்?'' என்று மாதவி விவரம் கேட்டாள்.

''என்னது?! தனசேகர் உங்களிடம் வரும் தேதி சொல்லாமலா 'டூர்' போனான்? இந்தமுறை இருபது நாள் பயணம், அம்மா. மேற்குப் பக்கம் முழுவதும் 'கவர்' பண்ணவேண்டும்! இப்போது குஜராத்தில் சுற்றிக் கொண்டு இருப்பான்! அவனிடம் ஏதாவது சொல்ல வேண்டுமா? சொல்லுங்கள்! திங்களன்று மாலையில் டெலிஃபோனில் பேசுவான். அப்போது உங்களிடம் பேசச் சொல்லட்டுமா? அல்லது, அந்த குஜராத் டீலர் நம்பர் தருகிறேன். நீங்களே பேசுங்கள்...ஆனால், அந்த நம்பரில் கூட அவனைப் பிடிப்பது கஷ்டம். காடோமேடோ என்று அலைந்து கொண்டு இருப்பான்...'' என்றார் அவர். ''எதற்கும், திங்களன்று அவனையே பேசச் சொல்கிறேனே?'' என்றார் தொடர்ந்து.

''வேண்டாம் சார், அவசியமில்லை'' என்றாள் அவள் நிதானமாக. ''டூர் இருபது நாட்களா, இருபத்திரண்டு நாட்களா என்று தெரிந்து கொள்ளத்தான் டெலிஃபோன் செய்தேன். இப்போதுதான் தெரிந்துவிட்டதே! இனி, அவரிடம் ஒரு தடவை கேட்பது அனாவசியம். அதனால், அவரைப் பேசச் சொல்ல வேண்டாம் சார்... நான் கேட்டது கூடச் சொல்லத் தேவையில்லை சார்!... அப்புறம்... அடுத்த கண்காட்சிக்குக் கட்டாயம் வாருங்கள் சார். வைக்கிறேன் வணக்கம்!'' என்று பேச்சை முடித்து ரிசீவரை மெல்ல அதன் தாங்கியில் வைத்தாள்.

ஓய்ந்து போய் அமர்ந்தவள், வெகுநேரம் அசைவற்று, அப்படியே தொய்ந்து கிடந்தாள்.



திங்களன்று, குஜராத்தில் இருந்து நிர்வாகிக்கு டெலிஃபோன் செய்வானாமா? அப்படியானால், தனசேகரன் நிச்சயமாய் நாளை விழாவுக்கு வரப்போவது இல்லை! என்ன அநியாயம்?!

இவர்களுக்கெல்லாம் மனைவி மட்டும்தான் வேண்டும்! அதுகூட அவள் செய்யும் வேலை, குலாவல், இனிப்பு மட்டும்தான் வேண்டும்! ஒரு வார்த்தை மாறிப் பேசினாலே வேண்டாதவள் ஆகிவிடுவாள்! மனைவியின் வீட்டு உறவு, மனைவி வீட்டு வைபவங்கள் எல்லாம் தூசுக்குச் சமம்! அவ்வளவு அலட்சியம்!

தனசேகரனுடைய அண்ணன் மகனின் பிறந்த நாள் கேக்கிற்காகச் சர்க்கரையில் மிகுந்த கவனத்துடன் செய்த விளையாட்டு வீரர்கள், ஸ்கோர் போர்டை எல்லாம் நினைக்கும்போது மாதவிக்கு உள்ளே கொதித்துக் கொண்டு வந்தது. பரிசாக அந்த நாய்க்குட்டி வேறு! எவ்வளவு வேலை செய்தாள்? அவள் என்ன சும்மா உண்டு உறங்குகிறவளா? அதற்குமேல் அவனும் முன்னாலேயே போய்ப் பலூன் ஊதிக் கொண்டு உட்கார்ந்திருந்தானே! இத்தனைக்கும் அவர்கள் 'வா' என்று சும்மா ஒரு வார்த்தை சொன்னதோடு சரி! 'கேக் ஐசிங்' செய்வதாகச் சொன்ன பிறகுதானே மதியம் உணவுக்கு வா என்றதே! அதுவும் மைத்துனர் மட்டும்தான்! இங்கானால் 'வா வா' என்று வருந்தி வருந்தி அழைக்கிறார்கள்! பொல்லாத மாப்பிள்ளை வர வசதியாக விடுமுறை நாளில் விசேஷம் வைத்துக் கூப்பிடுகிறார்கள்? என்ன பிரயோஜனம்?

மனதில் கொஞ்சமேனும் பிரியம் இருந்தால் இப்படிப் போகத் தோன்றுமா? அதுவும் அவள் சொன்ன பிறகு?

தனசேகரன் மனைவி வீட்டாரை மட்டும் அவமானப்படுத்தவில்லை. மனைவியையும் ... அதிகம் அவமானப்படுத்தி இருக்கிறான்! இவ்வளவு நாள் அவள் காட்டிய அன்பை அலட்சியப்படுத்தி அவமதித்திருக்கிறான்!

அங்கேபோய், கணவன் வரவில்லை; இந்த வைபவத்தை ஒரு பொருட்டாக மதியாமல் வெளியூர் சென்றிருக்கிறான் என்று சொல்லும் போது அவளுக்கு எவ்வளவு தலைகுனிவாக இருக்கும்?!

அவளது உணர்ச்சிகளைப் பற்றி அவனுக்குக் கொஞ்சம் கூட அக்கறையே இல்லையே!

இந்தக் கணவனின் சுகத்துக்காகவும், சந்தோஷத்துக்காகவும் என்று பார்த்துப் பார்த்துச் செய்ததெல்லாம் நினைக்க அவளுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

மூளையைக் கசக்கி யோசித்து, முதுகு ஒடிய உழைத்து சம்பாதித்த பணத்தை எல்லாம் போட்டு, அவனுக்காக டி.வி. வாங்கினாளே! என்ன முட்டாள்த்தனம்!

இப்படி எல்லாம் செய்து செய்துதான் தனசேகரனுக்குத் திமிர் ஏறி விட்டது! என்ன செய்தாலும், எப்படி அலட்சியப்படுத்தினாலும் காலில் விழுந்து கிடப்பாள் என்கிற அகம்பாவம்! பிரிந்து போய் விடுவேன்; திரும்பி வரமாட்டேன் என்று அவள் சொன்னதை அவன் லட்சியமே பண்ணவில்லையே!

இதற்கு ஒரு பாடம் கற்பித்தே ஆக வேண்டும்!



கணவனுக்குப் பாடம் கற்பிக்கும் நோக்கத்தில்தான் மாதவி முதலில் தாய் வீட்டுக்குக் கிளம்பியது. தன் சாமான்கள் அனைத்தையும் எடுத்துப் போய் விட்டால், மனைவி சொன்னதைச் செய்கிறவள்; செய்து விட்டாள் என்ற பயமும் கவலையுமாக ஓடிவந்து மன்னிப்புக் கேட்பான்; நன்றாகக் கெஞ்சிக் கதற வைத்துவிட்டுத் திரும்பி வரலாம் என்பதுதான் அவள் எண்ணம்!

அதுவும் பூச்சூட்டலின் போதே, அத்தனை சாமான்களுடனும் பிறந்த வீட்டிற்குச் சென்று நிற்க அவளுக்கு மனம் வரவில்லை. என்னவோ என்று எல்லோரும் கலங்கி விடுவார்கள்! விழாவின் போது வீடு களையிழந்து போகும்!

எனவே, பூச்சூட்டலுக்குச் செல்லும்போது, தனக்கு இரண்டு நாட்களுக்குத் தேவையானவற்றை மட்டுமே மாதவி எடுத்துச் சென்றாள்.

பூச்சூட்டலில் உற்சாகமாகக் கலந்து கொண்டாள். வெள்ளித்தட்டில் வைத்து அண்ணி இந்துமதி கொடுத்த ஆயிரம் ரூபாயை உரக்கச் சிரித்து வாங்கிக் கொண்டாள்.

அண்ணி, அண்ணனைக் கேலி செய்தாள்.

மாதவியுடைய அண்ணன் பெயர் ரவிச்சந்திரன், அண்ணி பெயர் இந்துமதி. இருவர் பெயரிலும் சூரியனும் சந்திரனும் இருக்கிறார்கள் என்று எப்போதுமே சொல்வதுதான். அதை இப்போதும் சொல்லிக் கேலி பேசினாள். பிள்ளைக்குப் பெயர் சூரியனா, அல்லது சூரிய சந்திரனா என்று அவள் கேட்க எல்லோரும் சிரித்தனர்.

மாப்பிள்ளை வரவில்லையே என்றதற்கு, "அவர் என்ன உங்கள் மாதிரிச் சொந்தத் தொழிலா? நினைத்தால் மூடிப் போட்டு விட்டு ஓடி வந்து விடுவதற்கு? சம்பளம் கொடுக்கிறவர் சொல்கிறபடிதானே ஆட வேண்டும்?" என்று தனசேகரனை தாங்கிப் பேசினாள்.

மாப்பிள்ளை வரவில்லை என்ற வருத்தம்தான். ஆனால் அவர் ஊரில் இருந்திருந்தால், அவர் வரும் போது அவரோடு ஒட்டிக் கொண்டே இருந்துவிட்டு, அவரோடு கூடவே ஓடிவிடுவாயே! இப்போதானால் நாங்களும் உன் கண்ணுக்குத் தெரிகிறோம்" என்று ரவிச்சந்திரன் சொல்ல, அதற்கும் எல்லோரும் சிரித்தனர்.

மற்றவர்களோடு சேர்ந்து, அவளும் கஷ்டப்பட்டு பல்லைக் காட்டி இளித்து வைத்தாள்.

விழா முடிந்தது, மறுநாள் விருந்தினர் எல்லாம் சென்ற பிறகு டிரைவரிடம் சொல்லிக் காரை எடுத்து வந்தாள்.

வீட்டிலிருந்த அவளது சாமானையெல்லாம் காரில் ஏற்றிக் கொண்டு தந்தை வீட்டுக்குத் திரும்பி வந்தாள்.

திருமணமாகுமுன் அவள் பயன்படுத்திய அறையில் அவ்வளவு சாமான்களையும் அடுக்கச் செய்தாள்.

அடுக்கி முடிக்கும் வரை, அவள் யாரையும் பேச விடவில்லை. அந்த வேலை முடிந்தானதும், இனிக் கணவன் வீடு செல்லப் போவதில்லை என்று குண்டைத் தூக்கிப் போட்டாள்.



# 12

உண்மையாகவே அவர்கள் மத்தியில் ஒரு வெடி குண்டு வெடித்தால் கூடக் கதிரேசன் குடும்பத்தினருக்கு அவ்வளவு அதிர்ச்சி ஏற்பட்டிருக்குமோ, என்னவோ! வீட்டுப் பெண்ணரசி போட்ட வார்த்தை வெடிகுண்டில் எல்லோருமே திக்பிரமை அடைந்து விழித்தார்கள்.

முதலில் சுதாரித்தது ரவிச்சந்திரன்தான். "ஏய் என்னடி பேத்தல்! மாப்பிள்ளை ஊரில் இல்லாதது போரடித்து, எல்லாரையும் ஓர் ஆட்டம் காட்டிப் பார்க்கிறாயாக்கும்! இதை எல்லாம் நம்பி பயப்பட இங்கே யாரும் முட்டாள் இல்லை! அதனால், இந்த அசட்டுப் பிசட்டுத்தனத்தை விட்டு ஒழுங்காகவே பேசு!" என்று அதட்டினான்.

"ஒழுங்காகத்தான் பேசுகிறேன்!" என்றாள் அவள் உதடு அழுந்த.

"மாது... என்னடி இது, தலையில் கல்லைத் தூக்கிப் போடுகிறாய்! மருமகன் ஊரில் இல்லாத சமயம் கூட வீட்டை விட்டு வரமாட்டேன் என்று அங்கேயே கிடந்தது என்ன? இப்படிப் போட்டேன்; உடைத்தேன் என்று வந்து நிற்பது என்ன? புருஷன் பெண்டாட்டி என்றால் ஒருவார்த்தை தடித்து வரத்தான் செய்யும்! அதற்காகப் புருஷனையே விட்டு விடுவேன் என்பதா?..."

தாயின் கண்ணீரைக் கண்டதும் மாதவிக்குக் கொஞ்சம் ஒரு மாதிரிதான் இருந்தது. தனசேகரனுக்கு ஒரு சரியான பாடம் கற்பிப்பதற்குத்தான் இப்படிச் சாமான்

செட்டோடு அவள் வந்தது என்று சொல்லிவிடலாமா என்று கூடத் தோன்றியது.

ஆனால் அப்படிச் சொன்னால், அவள் நினைத்தது நடக்காது. அவளுடைய அப்பாவை நம்ப முடியாது. முதலிலிருந்தே அவருக்கு மருமகனிடம் பெருமதிப்பு உண்டு. கேலிப் பேச்சில்கூட, அவர் தனசேகரன் பக்கம் சேர்ந்து கொள்வார். இப்போதும் அவன் சார்பாய்த்தான் பேசுவார் என்பதோடு, மருமகன் மனம் நொந்துவிடக் கூடாது என்று முதல் ஆளாய் அவனிடம் போய் வத்தியும் வைத்து விடுவார்.

ஒருவேளை... ஒருவேளை நெஞ்சிலே கத்தி சொருகுவது போலச் சொன்னானே; அவள் பிரிவு தனக்கும் நிம்மதி என்று, அன்று தனசேகரன் சொன்னானே, அது உண்மையாகவே அவன் உள்ளூர உணர்ந்தே சொன்னதாயிருந்து, மனைவியைத் தேடி அவன் வராதிருந்து விட்டால்... நினைத்துப் பார்க்க அவளுக்குமே மிக மிக வேதனையாகத்தான் இருந்தது! ஆனால், தனசேகரனைப் பற்றித்தான் இப்போது ஒன்றுமே உறுதியாகச் சொல்ல முடியவில்லையே! ஒருவேளை அப்படி அவன், பிரிவு மேல் என்று இருந்து விட்டால் இவர்களை அந்த நிலைக்குத் தயார்படுத்தவும் வேண்டுமல்லவா?

இல்லை என்று சொல்லிக் கிடைத்தால் மகிழ்ச்சிதான். ஆனால், கிடைக்கும் என்று நினைத்து இல்லாது போய் விட்டால் இருமடங்குத் துயரம் ஆயிற்றே!

எனவே, கணவனுக்கும் தனக்கும் இடையே, சமாதானத்துக்கு இடமே கிடையாது. பிரிவு நிச்சயம் என்று பெற்றவர், உடன் பிறந்தாரிடம் மாதவி அடித்துச் சொல்லி விட்டாள்.



உண்மையான அன்பு கொண்ட யாரும் இதை அப்படியே விட்டுவிட மாட்டார்கள்தான். எனவே கதிரேசன், அவர் மனைவி மீனாட்சி, பிள்ளை ரவிச்சந்திரன், அவன் மனைவி இந்துமதி என்று எல்லோருமே அவரவர் இயல்புக்கும் உறவு உரிமைக்கும் ஏற்றவாறு, பலவாறு வீட்டுப் பெண்ணுக்குப் புத்தி புகட்ட முயன்றனர்.

பாவம்! அவர்களுக்கு எப்படி இருக்கும்! என்று முதலில் சற்றுப் பொறுமையுடனே இந்த அறிவுரைகளை சகித்த மாதவி விரைவிலேயே எரிச்சலுற்றாள்.

பின்னே, வீட்டு வேலைக்காரி வரை, பெண்டாட்டியின் கடமை பற்றி எடுத்துச் சொல்லத் தொடங்கினால் அவளுக்கும்தான் எப்படி இருக்கும்?!

அவளுக்கும்தான், இந்த நிலை என்ன ஆனந்தமாகவா இருந்தது? வெடிக்கும் நிலைக்கு வந்து விட்டவள், கடைசியாக, இனி அவளது வாழ்வு பற்றி யாராவது பேசினால் புருஷன் வீட்டுக்குப் போ என்றால், ஒன்று தற்கொலை செய்து கொள்வேன்; அல்லது இந்த வீட்டை விட்டு வெளியேறி விடுவேன்! என்று மிரட்டவும், எல்லோருமே கப்சிப்பென்று அடங்கிப்போயினர்.

கண்ணீரும் கம்பலையுமாக இருந்த மனைவியிடம், "எல்லாம் மாப்பிள்ளை வந்து இரண்டு அதட்டல் போட்டால் சரியாகிவிடும். கவலைப்படாதே!" என்று தேற்றிய போதும், கதிரேசனுக்கும் உள்ளூரக் கலக்கம்தான்!

ரோஷம், பிடிவாதம் இரண்டுமே மகளுக்குச் சற்று அதிகம் என்பது அவரது கருத்து. மற்றபடி மாதவி நல்லவள்தான். ஓரளவும் வெகுளியும் கூட என்றாலும், இந்தக் குணங்களினால் அசட்டுத்தனமாக மகள் தன்

வாழ்வை கெடுத்துக் கொண்டுவிடக் கூடாதே என்று அவர் கவலைப்பட்டார்.

ஆனால், மருமகனிடம் அவருக்கு முழு நம்பிக்கை இருந்தது. அவ்வளவு சுலபத்தில் அவன் வாழ்க்கையை வீணாக விட்டு விடமாட்டான் என்று நிச்சயமாக நம்பினார்.

எனவேதான், தனசேகரன் வரும் நாள் அறிந்து வைத்து அவன் வந்ததுமே டெலிஃபோனில் விவரம் சொன்னார்.

உள்ளூரத் தனசேகரனுக்கு மனைவி மேல் மிகுந்த கோபம் ஏற்பட்டிருந்தது.

அவளுடைய தகப்பனார் போலத் தனசேகரன் சொந்தத் தொழில் செய்கிறவன் அல்ல! இன்னொருவரிடம் கை நீட்டிச் சம்பளம் வாங்குகிறவன். அதுவும் கஞ்சத்தனம் இல்லாமல் கை நிறையத் தாராளமாய் கொடுக்கிற நிறுவனத்தில் வேலை பார்க்கிறவன்.

வேறு யார், முப்பது வயதுகூட நிறையாத அவனுக்குக் கார், ஏசியுள்ள வீடு என்று எல்லா வசதியும் கொடுத்து, மேலே இவ்வளவு சம்பளமும் கொடுப்பார்கள்?

நிறுவனம் தருகிற வசதிகளை மட்டும் உரிமை போல ஆனந்தமாய் அனுபவித்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா? அதற்குரிய வேலைகளையும், செய்ய வேண்டிய நேரத்தில் சரியாகச் செய்துதானே ஆக வேண்டும்.

தன்னை மீறிய விஷயம் என்றால், விவரத்தைச் சொல்லி இன்னொருவரை அனுப்பலாம்தான்.



ஆனால், மைத்துனன் மனைவிக்குப் பூச்சூட்டல்; நான் இங்கே இருந்தாக வேண்டும்; வேறு யாரையாவது அனுப்புங்கள்' என்றால் சிரிக்கமாட்டார்களா? சொன்னால் புரிந்து கொள்ளவே மாட்டேன் என்றால் என்ன செய்வது?

அதுவும், நிறுவனத்தைப் பொறுத்த வரையில் இது ரொம்ப முக்கியமான விற்பனை நேரம்! துணிக் கடைகளுக்குத் தீபாவளி சீசன் போல, உர விற்பனைக்கு இந்த நேரம்! வருடாந்தர விற்பனையில் பாதி, இந்த மூன்று மாதங்களில்தான் நடக்கும்! அந்த நேரத்தில் அவன் ஒதுங்கிக் கொண்டால் எப்படி?

எல்லாம் தெரிந்தும், ஒரு முட்டாளைப் போல மனைவி சண்டை போட்டாள் என்பதே அவனுக்குப் பயணம் முழுவதும் உள்ளூர வருத்தமாக இருந்தது.

ஆணாதிக்கம் தனக்கு இல்லை என்று சொல்லிச் சொல்லி, அதை நிரூபிப்பதாக நினைத்து மனைவிக்கு அதிக இடம் கொடுத்து விட்டோமோ என்று அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று.

வெகுளி, அவனைவிட ஆறு வயது சிறியவள், சின்னப் பெண் என்றெல்லாம் எண்ணி அதிகப்படியாக விட்டுக் கொடுத்ததனால் வந்த வினை! இனி இப்படி இருக்கக் கூடாது! இப்படியே இருந்தால், குடும்ப வாழ்வு அடியோடு கெட்டுவிடும்!

ஆனால் மாதவி, இயல்பில் கெட்டவள் அல்ல! இனிய சுபாவம் கொண்ட மிக நல்ல பெண்தான், அண்ணி ஒரு மாதிரி நடந்து கொள்கிறவள் என்றாலும், அண்ணன் மகன் பிறந்த நாளைக்கு உதவ அவளாகவே முன்வரவில்லையா?

மாதவியின் குணம் மாற, சுகிர்தா ஒரு முக்கிய காரணம் என்றும் தனசேகரனுக்குத் தோன்றத் தொடங்கி யிருந்தது.

மாதவியின் கள்ளமற்ற தன்மையைப் பயன்படுத்திக் கொண்டு, சுகிர்தா சம்பாதிக்கிறாள் என்பதில் அவனுக் குச் சந்தேகமே கிடையாது! அதைக் கோடி காட்டினால் கூட, மனைவிக்குப் பிடிக்கவில்லை, ஆத்திரம் கொள்கி றாள் என்று ஒரு சில முறைகள் அனுபவப்பட்டதால் தான், ஏன் வீண் வம்பு என்று தனசேகரன் ஒதுங்கிப் போனது.

இந்த அளவு வருமானத்திலேயே மாதவிக்கு திருப்தி என்றால், அதில் மற்றவள் சற்றுச் சுரண்டுவது பற்றி அவள் பொருட்படுத்துவதாக இல்லை என்றால், தான் ஏன் வீணாகத் தலையிட்டுத் தன் தலையில் குட்டு வாங்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணியே, அது பற்றி பேசுவதை விட்டு, விட்டான்!

ஆனால், பணம் சுருட்டியது மட்டுமின்றி, வெகுளி யான மாதவியைச் சீண்டிவிட்டு, கணவன் மனைவிக்குள் சுகிர்தா சண்டையும் மூட்டுகிறாள் என்ற முடிவுக்குத் தனசேகரன் இப்போது வந்திருந்தான்.

அவளது சொந்த வாழ்வு சரியில்லை, என்பதால் வந்த வக்கிரம், அடுத்தவரின் அதுவும் தோழியின் நல் வாழ்வையே கெடுப்பதில் முனைந்திருக்கிறது!

அப்படித்தானா! அல்லது அவளது இயல்பான வக்கிரம் காரணமாய்த்தான் சுகிர்தாவின் திருமணமே முறிந்து போனதோ?

அதுபற்றியும் விசாரித்து அறிய வேண்டும் என்று தனசேகரன் நினைத்தான்.



இருபது நாட்களாக இரவின் தனிமையில் தூக்கம் பிடிக்காமல், சராசரிக்கும் கீழாகத் தரம் இறங்கிவிட்ட, இனிமை குன்றிவிட்ட மண வாழ்வைப் பற்றித் திருப்பித் திருப்பி அலசி ஆராய்ந்ததில் தனசேகரனுக்குத் தோன்றி யவை இவை.

இவைகளின் அடிப்படையில்தான் இனி வாழ்க் கையை நடத்த வேண்டும், மாதவியிடம் கனிவு மட்டுமே என்று இல்லாமல், சற்று கண்டிப்புடனும் நடக்க வேண் டும்; அந்த சுகிர்தாவின் உறவை முடிந்தவரை வெட்டி விட வேண்டும்...

இந்த மாதிரிப் பல்வேறு தீர்மானங்களுடன் தான் தனசேகரன் திரும்பி வந்திருந்தான்.

வந்தபோது, மாதவி இல்லாததை மனதில் குறித்து, இதுபற்றி அவளிடம் பாசமும் வருத்தமுமாக பேச வேண்டிய விதம் பற்றித் திட்டமிட்டபடிதான் குளித்து முடித்தான்.

ஆனால், அன்று சண்டையின் போது சொன்ன மாதிரியே, மாதவி வீட்டை விட்டுச் சென்றுவிட்டதைக் கண்டதும், கனிவுடன் கூடிய கண்டிப்பு எல்லாம் மறந்து விட்டது.

எல்லாச் சாமான்களுடனும் பிறந்த வீடு சென்று, அங்கே அவனை அவள் அவமானப்படுத்தி விட்டாளே, என்பதுதான் பெரிதாகத் தெரிந்தது.

மாமனார் வீட்டில் அவனை எவ்வளவோ மதிப்பாக வைத்திருந்தார்கள்! எல்லாம் கெடுத்து விட்டாளே என்ற ஆத்திரத்துடன் அவளுக்கு டெலிஃபோன் செய்யத்தான், அவன் டெலிஃபோன் அருகே சென்றது.

ஆனால், அதுவே மணியடித்து, எதிர் முனையில் மாமனார் குரல் கேட்டதுமே அவனுக்குக் குப்பென வியர்த்தது.

அவனைப் பார்த்தாலே பூரித்துப் போவார் அவர்!

இந்த நல்ல மனிதரிடம் மாதவி என்ன என்ன சொல்லி வைத்திருக்கிறாளோ!

என்ன சொன்னாள் என்பதை அவர் வாயிலாக அறியவும் அவனுக்கு உள்ளம் கொதித்தது.

இவ்வளவுக்கு இங்கே என்ன ஆகிவிட்டது? பெரிய சினிமா கதாநாயகி மாதிரி அலட்டுகிறாளே! இவளை...

பல்லைக் கடித்தவனுக்கு டெலிஃபோனில் காத்திருக்கும் மாமனார் நினைவு வந்தது.

கொதி நிலையில் இருந்த மனதை மறைத்து, "மாமா, மாதவியை உங்களுக்குத் தெரியாதா? குழந்தை மாதிரி அவள் குணம்! கோபமோ, தாபமோ எதுவும் நிலைக்காது. சீக்கிரமே, தானாகச் சரியாகி விடுவாள்!" என்று மாமனாருக்குத் தைரியம் சொன்னான்.

'தானாகச் சரியாகி விடும்' என்றால்? மனைவியைச் சமாதானப்படுத்தி அழைத்துச் செல்ல மருமகன் எந்த முயற்சியும் செய்யப்போவது இல்லையா?

"சில சீக்குகள் மருந்து கொடுக்காமல் குணமாகாது. மாப்பிள்ளை!" என்றார் நயந்த குரலில் பெரியவர்! எப்படியும் மருமகன் ஆயிற்றே!

தன்னைப் புரிந்து கொண்டு, ஜாடையாக மாமனார் பேசவும், தனசேகரனுக்கு மனம் இளகி லேசாகச் சிரிப்பு வந்தது. உள்ளூர நகைத்தபடியே, "அஜீரணத்துக்கெல்லாம் மருந்து கொடுப்பதைவிட, ஒருவேளை பட்டினி போட்டால் நல்லபடியாகக் குணமாகிவிடும், மாமா!" என்று பதில் உரைத்தான்.



மருமகனின் குரலும் பேச்சும் தெம்பூட்டிய போதும், பேச்சின் கருத்து கவலையை அதிகரிக்க, "நோய் நாடி, நோய் முதல் நாடி' என்று சொல்வார்கள்! எதனால் இப்படி என்று தெரிந்தால்..." என்று முடிக்காமலே நிறுத்தினார் கதிரேசன்.

தன் வீட்டுத் தகராறை வெளியே சொல்லத் தனசேகரனுக்கு மனம் இல்லைதான். ஆனால், மனைவி, அவருடைய மகள் ஆயிற்றே! தலையிட உரிமை இல்லை என்று எப்படிச் சொல்வது?

இந்த மாதிரி விளக்கம் கூற வேண்டிய நிலையில் தன்னை வைத்து விட்டாளே என்று மாதவி மேல் அவனுக்கு மேலும் கோபம் வந்தது.

அடக்கிக் கொண்டு, "பெரிதாக ஒன்றும் இல்லை, மாமா! வேலையை போட்டுவிட்டு, உங்கள் மருமகளின் பூச்சூட்டலுக்கு நான் வரவில்லை என்று கோபம். அவ்வளவுதான்!" என்றான் இலகுவான குரலில்.

"அதெப்படி இதற்காகவெல்லாம் நீங்கள் வேலையைப் போட்டுவிட்டு வரமுடியும்? இதற்காகக் கோபித்து... என்ன ஒரு சிறு பிள்ளைத்தனம், பாருங்கள்" என்று மன்னிப்பு கோரும் குரலில் பேசிய கதிரேசன், சற்று யோசித்து, "அப்படி.... அதற்காக என்று சொல்வதற்கும் இல்லையே, மாப்பிள்ளை! அன்று நீங்கள் வராதது பற்றி நாங்கள் வருத்தப்பட்டபோது, உங்களைத் தாங்கிப் பேசினாளே! தொழில் மாதிரி மூடிப் போட்டு விட்டு ஓடி வர முடியாது என்றெல்லாம்

சொன்னாளே! அதன் பிறகல்லவா, துணிமணி எல்லாம் எடுத்து வந்தாள்!'' என்று குழம்பினார்.

ஆனால் தனசேகரனுக்கு விஷயம் புரிந்து போயிற்று! அவனுடைய புத்திசாலி மனைவிக்கு நியாயம் தெரிந்து விட்டது. ஆனால் அதை ஒத்துக் கொள்ளும் அளவுக்கு அவளது ரோஷம் இடம் தரவில்லை!

அதுவும், வீட்டை விட்டு வெளியேறி விடுவேன் என்று வேறு மிரட்டி விட்டாளே! அவனும் வாயை வைத்துக் கொண்டு சும்மா இராமல், 'போனால் நிம்மதியாய் இருப்பேன்' என்று உளறித் தொலைத்து விட்டானே!

அதற்குப் பிறகும், கணவன் வருகைக்காக வீட்டில் காத்துக் கிடக்க, மாதவியின் தன்மானம் எப்படி இடம் கொடுக்கும்?

சொன்ன சொல் காக்கும் வீறாப்பில் மூட்டை கட்டிக் கொண்டு போய் விட்டு அவனது ஓர் அழைப்புக்காக, அங்கே, தவிப்பாய்த் தவித்துக் கொண்டு இருப்பாள்!

பைத்தியம்! கணவன் மனைவிக்குள் ரோஷமென்ன? வீறாப்பென்ன?

இப்போது என்ன? சமாதானத்திற்கான முதல் எட்டு தனசேகரன் எடுத்து வைக்க வேண்டும்! அவ்வளவு தானே? ''வா'' என்று அழைத்து விட்டால் போகிறது!

மருமகனிடமிருந்து எந்தவித விளக்கமும் வராது போகவும், ''என்ன மாப்பிள்ளை? உங்களுக்கும் ஒன்றும் புரியவில்லையா? அல்லது வேறே தகராறு ஏதாவது...'' என்று கவலையுடன் கதிரேசன் கேட்டார்.



''சேச்சே! அப்படி வேறே எதுவும் இல்லை மாமா! சும்மா ஒரு வீறாப்பு! அவ்வளவுதான்! நான், அப்புறமாய் டெலிஃபோனில் அவளோடு பேசுகிறேன். எல்லாம் சரியாகி விடும். கவலைப்படாதீர்கள்'' என்று ஒரு தென் பூட்டுதலோடு மருமகன் பேச்சை முடித்தான். மாமனாரிடம் 'அப்புறமாய்' என்று சொன்னபோதும், உடனேயே தனசேகரன் மாதவிக்கு டெலிஃபோன் செய்தான்.

மாதவியே ஃபோனை எடுத்தால் நன்றாயிருக்கும் என்று அவளுடைய கணவன் உள்ளூர விரும்பியதற்கு மாறாக, ரிசீவரை எடுத்தவள் அந்த வீட்டு மருமகள் இந்துமதி.

பேசுவது யார் என்று தெரிந்ததும் ''வணக்கம் அண்ணா! பயணம் எல்லாம் சுகமாக இருந்ததா?'' என்று முறைப்படி விசாரித்தாள்.

அவனும், ''ஆமாம் அம்மா. அங்கே விசேஷம் எல்லாம் நன்றாக நடந்ததா? என்னால்தான் வர முடியவில்லை! மன்னித்துக் கொள்! இப்போது உடம்பு எல்லாம் நன்றாயிருக்கிறதா?'' என்று முறைமை தவறாமல் குசலம் விசாரித்தான்.

''உடம்பு நன்றாக இருக்கிறது. ஆனால் மன்னிப்பு அது இது என்று பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாதீர்கள். அண்ணா! நீங்கள் என்ன வேண்டுமென்றா வராமல் இருந்து விட்டீர்கள்? ஊரில் இல்லை; வரவில்லை! அவ்வளவுதானே!'' என்று மரியாதையோடு இந்துமதி பதிலிறுத்தாள்.

''புரிந்து கொண்டாய் அல்லவா! அதுபோதும்! 'ஸ்கேன்' செய்தீர்களா? வரப்போவது சூரியனா,

சந்திரனா? அல்லது சூர்யா, சந்திராவா?'' என்று இரண்டு வார்த்தை கேலி பேசிவிட்டு, ''மாதவியைக் கூப்பிடம்மா!'' என்றான் தனசேகரன்.

''அண்ணி... அண்ணி, படம் வரைய ஸ்டியோவுக்குப் போயிருக்கிறார்களே, அண்ணா! வரும்நேரம் தான். ஓர் அரை மணி நேரத்தில் வந்துவிடுவார்கள். வந்ததும் போன் பண்ண..'' என்று தொடங்கி விட்டு, தயங்கி, தயக்கத்தை இருமல் போலக் காட்டி சமாளித்து விட்டு'', ''எதற்கும் நீங்களே ஒரு மணி நேரம் கழித்து ஃபோன் செய்கிறீர்களா, அண்ணா? இங்கே...இங்கே டெலிஃபோன் கருவியில் சின்ன... சின்னதாய் ஏதோ பழுது என்று நினைக்கிறேன். அவ்வப்போது டயல் செய்ய முடியவில்லை...'' என்று திக்கித் திணறினாள் இந்துமதி.

இவளும் கூட அறியும்படி மாதவி ஏதோ பேத்திக் கொட்டியிருக்கிறாள்! மற்றபடி, டெலிஃபோன் கருவியில் பழுதுமில்லை கிழுதுமில்லை.

அவமான உணர்வை விழுங்கிக் கொண்டு, ''சரிம்மா, நானே பண்ணுகிறேன். எதற்கும் மாதவியிடம் சொல்லிவை!'' என்றுரைத்து, ரீசிவரைக் கீழே வைத்தான் அவன்.

கணவன் தான் முதல் அடி எடுத்து வைத்துவிட்டானே என்று மாதவியே தொடர்பு கொள்ளக் கூடும் என்று தனசேகரன் எண்ணினான். அவளே கூப்பிட்டால் மாமனார் வீட்டில் அவனுக்கு இன்னும் கொஞ்சம் கௌரவமாக இருக்கும் என்று, அதையே அவன் எதிர்பார்க்கவும் செய்தான்.



ஆனால், மாதவி வரக்கூடிய நேரமாக, இந்துமதி சொன்ன அரை மணிக்கு மேலாக, மேலும் ஓர் இரண்டு மணிநேரம் வரையும் பொறுத்திருந்து விட்டு, ஒரு வேளை மெய்யாகவே மாமனார் வீட்டு டெலிஃபோன் கருவி ரிப்பேர் தானா என்று எண்ணி, தனசேகரன் அவனாகவே மீண்டும் மாமனார் வீட்டு டெலிஃபோன் எண்ணை டயல் செய்தான்.

இரண்டு தரம் மணி அடிக்குமுன், முன்பு இந்துமதி எடுத்தது போல, இப்போது யாரும் டெலிஃபோனை எடுக்கவில்லை.

ஒரு தரம் முழுமையாக அடித்து ஓய்ந்தபின், மாமனார் வீட்டு டெலிஃபோன் கருவி முழுமையாக பழுதாகி விட்டதுபோல் தோன்றுகிறதே, என்று எண்ணியவாறே, எதற்கும் இருக்கட்டும் என்று தனசேகரன் மீண்டும் ஒரு தரம் மாமனார் வீட்டுக்கு டெலிஃபோன் செய்தான்.

இம்முறை உடனேயே யாரோ எடுத்தார்கள்.

எடுத்தவள் மாதவிதான்.

பட்டுக்கத்தரித்தாற்போல், சுருக்கமான 'ஹலோ' தான் என்றாலும், குரல் மாதவியுடையது என்பதில் அவனுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

ஆனால், ''மதும்மா, நான் தனா பேசுகி....'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவன் தலையிலேயே போடுவது போல, ரிசீவரை 'லொட்'டென்று அதன் தாங்கியில் போட்டு விட்டாள் அவள்.

பலர் முன்னிலையில், முகத்தில் அறை வாங்கியது போல உணர்ந்தான் தனசேகரன்!

## 13

மெய்யாகவே தனசேகரனுக்கு, தன்னை யாரோ முகத்தில் ஓங்கி அறைந்து விட்டாற்போலத்தான் இருந்தது.

அறைந்தது வேறு யாருமில்லை! அவனுடைய மனைவி!

அறைந்தது, அவளுடைய உறவினர் மத்தியில்!

எவ்வளவு கேவலம்!

இந்துமதி திக்கித் திணறியதில் இருந்து, மாதவி கணவனிடம் கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டிற்கு வந்து இருக்கிறாள் என்பது அந்த வீட்டில் அத்தனை பேரும் அறிந்த பகிரங்க ரகசியம் என்பது தெளிவு.

சூடு, சொரணை விட்டு அவன், ஏற்கெனவே ஒருதரம் மனைவிக்கு டெலிபோன் செய்தாயிற்று!

கணவனின் அழைப்புக்குக் கொஞ்சமும் மதிப்புக் கொடுக்காமல் அவள் இருக்கும் போதே, அவள் காலடியில் விழுவதுபோல, அவன் மீண்டும் டெலி ஃபோன் செய்து விட்டது அவனது மடத்தனமே!

முழு நேர மணியும் அடித்து முடிக்கும் வரை யாரும் எடுக்காதது வேண்டுமென்று செய்ததுதான்.

அந்த நேரத்தில் டெலிஃபோன் செய்வது தனசேகரனாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்து, கணவன் பாடு, மனைவி பாடு என்று மற்றவர்கள் ஒதுங்கிக் கொண்டு விட்டிருக்கிறார்கள்.



அவன் மனைவியோ வேண்டுமென்றே டெலிஃ போனைத் தொடாமல் இருந்திருக்கிறாள்!

அந்த ஃபோன் கருவி ரிப்பேரோ என்று நினைத்து, மீண்டும் 'டயல்' செய்தது நினைத்து அவனுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

சும்மா இருந்தால், கணவன் தொடர்ந்து தொந்திரவு செய்து கொண்டே இருப்பான் என்று நினைத்தோ அல்லது வேறு யாரும் தொடர்பு கொள்ள முயல்கிறார்களோ என்று எண்ணியோ, ஒரு மரத்த குரல் 'ஹலோ' வோடு மாதவி ரிசீவரை எடுத்திருக்கிறாள்!

தனசேகரன் தான் என்று தெரிந்ததும் நொட்டென்று மண்டையில் குட்டினாற்போல், பட்டென்று கருவியை வைத்து விட்டாள்!

எல்லோரும் அறிய! மாமியார், அந்தப் பெண் இந்துமதி... மாமனாரும் மைத்துனனும் கூட வீட்டிலேயே இருந்திருக்கலாம்! 'மாப்பிள்ளை ஐயா' என்று மரியாதையுடன் வந்து நின்று, அவன் கொடுக்கும் காசை வாங்கிப் போகும் வேலையாட்கள்... இன்னமும் உறவினர், நட்பினர் என்று வேறு எத்தனை பேர் இருந்தார்களோ!

அத்தனை பேரும் அறிய, மாதவி, அவனை அவமானப்படுத்தி விட்டாள்!

என்னவோ, தாங்கிப் பேசினாள் என்று மாமனார் சொன்னாரே! புரிந்து கொண்டு விட்டாள் என்று தனசேகரன் மகிழ்ந்தது எவ்வளவு முட்டாள்தனம்!

சும்மா, மற்றவர்கள் முன்னிலையில், கணவன் வராததற்கு ஏதோ காரணம் சொல்லி சமாளித்திருக்கிறாள்!

அவ்வளவே! அந்த நேரத்தில், அவளது சொந்த கவுரவம் காப்பாற்றவென்று அவள் உணராமலே சொன்னது!

அதைப் போய்..சே! என்னவெல்லாம் கோட்டை கட்டி விட்டான்!

மனம் குன்றி, தன்னைத்தானே நொந்து கொள்ளும் போதே, தனசேகரனுக்கு இன்னொன்று தோன்றியது.

அவர்கள் இருவரின் கவுரவம் காக்கத் தானே மாதவி இப்படி எல்லாம் கணவனைத் தாங்கிப் பேசி இருக்கிறாள்! பாவம்! அந்த வம்புகார உறவினர் வேறு, என்னென்ன கேட்டார்களோ!

ரவிச்சந்திரனுடைய மனைவி இந்துமதி மிக நல்ல வளே என்ற போதும் மற்றபடி அவள் வகை உறவினரி டம் மாதவிக்கு அவ்வளவாக நல்ல அபிப்பிராயம் கிடையாது. அதிலும் இந்துமதியை இந்த வீட்டில் மிகவும் உயர்வாக நடத்துவது கண்டு அவளுடைய சொந்தத் தமக்கைக்கே வயிற்றெரிச்சல் என்பாள். அவளுடைய புகுந்த வீடு சரியில்லாததால், தங்கை வீட்டையும் மட்டம் தட்டவே எப்போதும் முயல்வாள் என்பாள், இந்துமதியு டைய தாயாரும் கொஞ்சம் உரக்கப் பேசுகிற ரகம். குணத்தில் கேடு கிடையாது; ஆனால் நாசுக்குத் தெரி யாது! என்று மாதவி அவனிடம் கூறியது தனசேகரனுக்கு நினைவு வரவும், மனைவிபால் அவன் மனம் இளகலா யிற்று.

அந்தக் கும்பல் என்ன பேசுமோ என்னவோ என்று தான் கணவனின் வரவை மாதவி அவ்வளவு வற்புறுத் திக் கேட்டாளோ, என்னவோ?



இப்போதுகூட, என்னென்ன கூறினார்களோ? இவள் உள்ளூர எவ்வளவு குன்றிப்போய் இருக்கி றாளோ?

அங்கேபட்ட அவமானம் எல்லாம், அதன் காரண மாக கணவனிடம் கோபமாய்ப் பாய்வதில் ஆச்சரியப் பட ஒன்றுமில்லை!

சொந்தத் தொழில் பரம்பரையில் வந்தவளுக்குப் பிறரிடம் வேலை பார்க்கும் கணவனின் கடமைகள் புரிவதும் சிரமம்தான்!

கிணற்றுத் தவளைக்குக் கடலைப் பற்றித் தெரிய வில்லை என்று கோப்படுவதிலும் அர்த்தமில்லைதான்! கடலைப் பற்றிச் சரியான முறையில் எடுத்துச் சொல்லிப் புரிய வைப்பது அவனது கடமைதான்!

மனைவியிடம் மனம் உருகி விட்டிருந்த தனசேக ரன், தன் சுயகவுரவத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு, மீண்டும் மனைவியுடன் பேசி அவளைச் சமாதானப் படுத்த முடிவு செய்தான்.

அதற்காகவே, மேலும் இருமுறை அவளுடன் தொடர்பு கொள்ள முயன்றான்.

ஆனால், ஓசை எழுப்ப இருகையும் சேர்ந்து தட்டி னால்தான் முடியும்! ஒரு கையை மட்டும் காற்றில் வீசி என்ன பயன்?

கணவனை அலைய வைக்க வேண்டும் என்று எண்ணியிருந்த மாதவி அவனிடம் டெலிஃபோனில் பேசவே மறுக்கவும், என்ன செய்வது என்று புரியாமல் அவன் திகைத்தான்.

மனைவியின் வீட்டுக்குச் சென்று அவளைச் சந்திக்க அவனுக்குத் தயக்கமாக இருந்தது!

மாதவி இன்னமும் கோபத்தில் இருந்தால்?

'இருந்தால்' என்பதென்ன? கோபத்தில்தான் இருக்கிறாள் என்பது தெளிவாகவே தெரிகிறதே! மற்றபடி, அவன் குரல் கேட்டதுமே, ரிசீவரைப் பட்டென்று வைப்பாளா?

பேச்சு வாக்கில் கணவன் வெளிப்படுத்திய ஒரு சிறு ஆசையை நிறைவேற்றுவதற்காக, நாற்பது நாட்கள் உழைப்பின் பலன் மொத்தத்தையும் செலவு செய்து எப்படி அன்பை அதீதமாகக் காட்டினாளோ, அதே போலக் கோபத்தையும் அளவு மீறிக் காட்டக்கூடியவள் என்பதை அனுபவத்தில் அறிந்து கொண்டிருந்தானே!

சற்றும் சிந்தியாமல் என்னவெல்லாம் பேசி விட்டான்! உளுத்துப் போன மூளை, வயிற்றெரிச்சல் அது இது என்று, அவன் மனதைக் காயப்படுத்த வேண்டும் என்று வெறி பிடித்தவள் போல வாயில் வந்ததை எல்லாம் உளறினாளே!

இதுபோல், அங்கே எல்லோர் முன்னிலையிலும் உளறிக் கொட்டினால் எவ்வளவு அசிங்கமாகப் போய்விடும்!

அதுவும், மதிப்பும் மரியாதையும் எப்போதும் நிலைத்திருக்க வேண்டிய இடத்தில், அப்புறம் தலை நிமிர முடியுமா?

அதுவும், கிட்டத்தட்ட அவன் வயதேயான மைத்துனனும் அவன் மனைவியும் ஒற்றுமையாக வாழும் இடத்தில், இருமடங்கு தலை குனிவாகி விடும்!



அதே சமயம் மனைவியை அவளது ஸ்டூடியோவில் போய்ச் சந்திக்கவும் அவனுக்குப் பிடிக்கவில்லை!

அது சுகிர்தாவின் இடம். அவளது 'பொட்டிக்' கின் உட்புறமாய் இருந்த இடத்தைத்தான் மாதவி ஸ்டூடியோவாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தாள்.

சும்மா, நன்றாக இருந்த காலத்திலேயே, படம் வரையும் போது வந்து நின்று அவள் வரைவதைக் கெடுக்க வேண்டாம்' என்று எச்சரிக்கை விடுத்தவள் சுகிர்தா!

இப்போது, உண்மைத்தோழி என்று மாதவி தன் இயல்பான வெகுளித்தனத்தோடு சுகிர்தாவிடம் எல்லாம் சொல்லி வைத்திருந்தால், அவளிடம் வேறு அவமானப் பட்டாக வேண்டும்!

தனசேகரன் அடாவடிக்காரன் அல்ல. பணத்தில் பிறந்து வளர்ந்த திமிரும் கிடையாது. சாதாரணமாக மத்தியதரக் குடும்பத்தில் பிறந்து, ஒழுங்காகப் படித்து, படிப்புத் திறமையால் நல்ல வேலை கிடைத்து, அதை நல்லபடியாகச் செய்து தன்னை வளர்த்துக்கொண்டு இருப்பவன்.

மான அவமானத்துக்குப் பயந்தது போலவே, உன்னால் ஆனதைப் பார் என்று அடுத்தவர் இடத்தில் திடுதிடுவென்று நுழைவதும் அவனுக்கு அருவருப்பாகவே இருந்தது.

எனவே,, மாதவி ஸ்டூடியோவுக்குச் செல்லும், வரும் வழியில் அவளை நேரில் பார்த்துப் பேச முயன்றான்.

தந்தை வீடு தூரத்தில் இருந்ததால், ஸ்டூடியோவுக்கு இலகுவாக வந்து போகும் நிமித்தமாய், தோழி சுகிர்தாவைப் பின்பற்றி, மாதவியும் ஒரு 'ஸ்கூட்டி' வாங்கி வைத்திருந்தாள். அதில்தான் படம் வரையப் போய் வருகிறாள் என்று கதிரேசன் கூறியிருந்தார். அப்படி அவள் வரும் நேரத்தில் அவளைச் சந்திப்பது என்று, அலுவலகத்தில் ஒரு மணி நேரம் அனுமதி கேட்டு வந்து காத்துக் கிடந்தவனுக்கு ஏமாற்றமே கிட்டியது.

ஏமாற்றமும், ஆத்திரமும்!

இரண்டு தடவை அவன் நிற்பதைப் பார்த்தபிறகும், மாதவி 'ஸ்கூட்டி'யை நிறுத்தாமல் சென்று விட்டாள்!

நிறுத்தாதது மட்டுமல்ல! வேகத்தை அதிகரித்தது போலவும் தோன்றவே, முதலில் மனைவி 'ஸ்கூட்டி'யை ஓட்டி வரும் அழகை ரசித்தபடி நின்றிருந்த தனசேகரனுக்கு சினம் துளிர்த்தது.

மறுமுறையும், அதுவே நடக்கவும், துளிர்விட்டிருந்த சினம் பெருமரமாய் வளர்ந்து விட்டது!

இவள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாள், சொல்லப் போனால் அன்றையச் சண்டையில் பெரும் பங்கு அவளதுதானே!

சின்னப் பெண்; பாவம் என்று அவனே இறங்கி வந்தால் ஒரேயடியாக எகிறுகிறாளே!

அப்படி என்ன, இந்தப் பிரிவு அவளுக்கும் உவப்பாகவா இருக்கும்? அதுவும், ஒரு பத்துநாள் 'டூர்' போய் வருமுன் உண்ணாமல், உறங்காமல் உடல் மெலிந்தவளுக்கு?



இனி அவளாக வரட்டும்! கொஞ்சநாள் நன்றாகப் பட்டு விட்டு வரட்டும். பட்டால் தான் புத்திவரும் என்று தனசேகரன் முறுக்கிக் கொள்வதற்கும், அவனது அலுவலகத்தில், இந்தியாவின், வடக்கு கிழக்குப் பகுதியில் அவனை 'டூர்' போகச் சொல்வதற்கும் சரியாக இருக்கவே, சற்றும் தயங்காமல் அவனும் கிளம்பி விட்டான்.

வீட்டுக்குப் போனால், மொட்டு மொட்டென்று தனியே உட்கார்ந்து கொண்டு, இந்த இடத்தில் என் மது இப்படி நின்றாள், அப்படிச் செய்தாள். அழகாகச் சிரித்தாள் என்று நினைத்து ஏங்கிக் கொண்டு இராமல், காலையில் தொடங்கினால், இரவு வரை ஊர் ஊராக அலைந்து திரிந்தபின், களைப்பின் விளைவாய், அயர்ந்து உறங்கலாமே! அதை விட்டு விட்டு இங்கே கிடந்து தவிப்பானேன்?

எதற்கேனும் தேடப் போகிறாரே என்று, மாமனாரிடம் மட்டும் ஒரு வார்த்தை சொல்லி விட்டு, தனசேகரன் ஒரிஸா சென்று விட்டான்!

ஆனால், விதிவசமாய், அவன் கிளம்பிய நேரம் தான் சரியில்லாமல் போயிற்று - மீண்டும்!

ஏனெனில், இந்தப் பத்துப் பதினைந்து நாட்களில், மாதவி ஒருவாறு மனம் இளகி விட்டிருந்தாள். அத்தோடு, அவளுக்கும்தான், கணவனைப் பிரிந்திருப்பதில் மகிழ்ச்சியா, என்ன? அதுவும், ஓர் உயிர் ஈருடலாய் வாழ்ந்து விட்டு!

இரண்டு தரம் கணவன் குரலை, டெலிஃபோன் கருவி மூலம் கேட்ட போது அவளுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டுதான் வந்தது!

அவனது வேலை நிமித்தம், அடிக்கடி பிரிந்திருப்பது வருத்தமான வழக்கமாகி விட்டிருந்த போதும், கோபதாபத்தில் விலகியிருந்தது அதுதானே முதல் தடவை!

ஒரு புறம் கோபம்! மறுபுறம் வருத்தம்!

தனசேகரன், அதே ஊரில், அதே சென்னை மாநகரிலேயே இருக்கும் போதும், ஒரு பேச்சு, சிரிப்பு, சீண்டல் ஒன்றும் இல்லை! ஆயிரம் கிலோ மீட்டர் அப்பால் இருப்பதுபோல, அந்த நிலைமை அவளுக்கு மிகவும் வேதனையாகவே இருந்தது.

அவளது மனம் இருந்த நிலைமைக்குத் தனசேகரன் முதலில் டெலி..ஃபோன் செய்ததுமே, ஓடிப்போய் மடியில் விழுந்திருப்பாள்!

ஆனால், அதற்கு இரண்டு தடைகள் இருந்தன.

'பிரிந்து போய் விடுவேன்' என்று அவள் கூறிய பிறகும், இந்துமதியின் பூச்சூட்டலுக்கு இராமல், தனசேகரன் வெளியூர் சென்றதை அவளால் மன்னிக்கவே முடியவில்லை. அதற்கு அவன் தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும் என்பது ஒன்று!

அவளுக்கும் வேதனைதான்! ஆனால், மனைவியை அலட்சியம் செய்ததற்காக அவன் வருந்தியே தீர வேண்டும்! அவள் பின்னால் வந்து கெஞ்சிக் கூத்தாடி அவன் மன்னிப்புக் கேட்கும் வரை, பிடிவாதத்தைத் தளர விடக்கூடாது!

இன்றைய மன வேதனையை நினைத்து, அவள் விட்டுக் கொடுத்தாள் என்றால், இனி வாழ்நாள் முழுவதும் கணவன் மதிப்பில் அவள் கிள்ளுக்கீரையாகத் தான் இருக்க நேரிடும் என்று உணர்ந்திருந்ததாலேயே, அவள் தன் முடிவில் உறுதியாகவும் நின்றாள்.



முதல் நாள் தனசேகரன் டெலி..ஃபோன் செய்த போது, அவன் குரல் கேட்டதுமே அவளுக்குக் கண் கலங்கி விட்டது. வாயைத் திறந்தால், கனத்து விட்ட குரலிலிருந்து அவன் கண்டு கொள்வான் என்றே, பட்டென ரிசீவரை வைத்து விட்டாள்.

ரிசீவரை வைத்து விட்டாளே தவிர, கண்ணைக் கரித்து, நாசி விடைத்து, அழுகை வருவதை அவளால் தடுக்க முடியவில்லை.

இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டு விடுமோ என்று தான், ..ஃபோனை எடுத்து 'மாதவி உங்களோடு பேச விரும்பவில்லை' என்று சொல்லிவிடும்படி வீட்டில் அத்தனை பேரையும் கேட்டுப் பார்த்தாள்.

ஆனால், அப்படிச் சொல்ல யாரும் தயாராயில்லை என்றான பிறகு தான், அவளே ரிசீவரை எடுத்தது.

அவள் எதிர்பார்த்தது போலவே, அழுகை பொத்துக் கொண்டு வரவும், அதை ஆத்திரமாக மாற்றி, "போதுமா" என்று வெடித்து விட்டு அறைக்குள் புகுந்து கதவை உட்புறமாகத் தாளிட்டுக் கொண்டாள். கட்டிலில் குப்புற விழுந்து, ஒரு மூச்சு அழுதும் முடித்தாள்.

இது முடியாதப்பா! இன்னும் ஒரு தரம், தனசேகரன் கூப்பிட்டால்.... கூப்பிடா விட்டாலும் கூட நேரேபோய் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுது விட வேண்டியதுதான் என்று கூட நினைத்தாள்.

ஆனால், அப்படி ஒரு சமாதானம் ஏற்படாமல் போனதன் அடுத்த காரணம் சுகிர்தா! அவளுடைய தோழியான மாதவிக்கு, முதுகெலும்பு என்று ஒன்று இருப்பதைச் சுட்டிக் காட்டி அவளை நிமிர வைத்தவள் அவள்தான்.

## 14

ஏற்கெனவே, மாதவி, அவளது வீட்டிலிருந்து அல்லாமல், அவளுடைய தந்தை வீட்டிலிருந்து ஸ்டுடியோவுக்கு வந்தது சுகிர்தாவின் குறுகுறுப்பைத் தூண்டி விட்டிருந்தது.

ஆனால், மாதவியைப் பற்றி ஒன்றும் உறுதியாகச் சொல்ல முடியாது! அதுவும் அவளுடைய கணவனைப் பற்றிப் பேசினால், எப்படி மாறுவாள் என்றே சொல்ல முடியாது! அவளுக்காகவே பரிந்து, தனசேகரனைப் பற்றிக் குறிப்பாய் ஒரு வார்த்தை சொன்னால் கூடப் பிடித்துக் கொண்டு, காளிரூபம் எடுத்து விடுவாள்! 'என் கணவர் அப்படி.. இப்படி' என்று புகழ்ந்து பேசி விட்டு, அவரைப் பற்றிக் குறைவாகப் பேசாதே!'' என்று சுகிர்தாவுக்கே உத்திரவிடுவாள்.

இரண்டொரு முறை முயன்று பார்த்துவிட்டு, சுகிர்தா, மாதவியிடம் பேசும் முறையையே மாற்றிக் கொண்டாள்! திருமணமாகி, அவள் பட்ட துன்பங்களை மட்டும் அவ்வப்போது கூறுவாள்.

எளிதில் உணர்ச்சிவசப்படும் மாதவி தோழியிடம் உருகிப் போவாள்.



அதன்பின், பொதுப்படையாக ஆண்களைக் குறை கூறி விட்டுத் தன் கணவனை நினைத்து ஆண் வர்க்கமே தனக்கு பிடிக்காமல் போய் விட்டதோ என்னவோ, என்றும் சொல்லிக் கொள்வாள்.

அப்போதும், மாதவிக்குத் தோழியிடம் மனம் உருகித்தான் போகும்.

அத்தோடு, பொதுவாக, ஆண்களிடம் குறைகள் அதிகம் என்ற எண்ணமும் மாதவிக்குள் உருவாகி வந்தது.

பெரும்பாலான ஆண்கள் ஆத்திரக்காரர்கள், ஆணவம் உடையவர்கள், பெண்களை அவர்களுடைய அடிமைகளாக எண்ணுகிறவர்கள் என்றெல்லாம் மாதவியும் கருதத் தொடங்கினாள்.

ஆனால், கணவன் மட்டும் தனி! அவன் ஒரு முழுமையான பக்கா 'ஜென்டில்மேன்' என்பதில் மட்டும் அவள் உறுதியாகவே தான் இருந்தாள்.

அவ்வப்போது, சுகிர்தா பற்றி தனசேகரன் பேசும் போது, மாதவி கொஞ்சம் மனது கஷ்டப்பட்ட போதும் கூடக் கணவனைப் பற்றி அவள் குறைவாக நினைக்கவில்லை. ஆனால், முன்போல, மனதில் தோன்றியதை எல்லாம் கணவனிடம் கொண்டு கொட்டுவது மட்டும் குறைந்து போயிற்று.

அந்த ஒட்டல் படங்களுக்காக வரவிருந்த ஒரு லட்சமும் அப்படிச் சொல்லாமல் விட்டதுதான்.

மனைவி, தன்னைவிட அதிகம் சம்பாதித்தாலோ, புகழ் பெற்றாலோ ஆண்களுக்குப் பிடிக்காது என்று

சுகிர்தா அவ்வப்போது சொல்வதுதான். ஆனால், அதற்காகத் தனசேகரன் அந்த ஒரு லட்சம் பற்றிப் பொறாமைப் படுவான் என்று முடிவெடுத்து, அதனாலேயே, மாதவி அதுபற்றி அவனிடம் சொல்லாமல் மறைத்தாள் என்று சொல்ல முடியாது.

எதற்கு வம்பு? மெள்ளச் சொல்லிக் கொள்ளலாம் என்கிற எண்ணம் தான் அப்போது அவளது கருத்து!

ஆனால், அன்று, அது வேறுமாதிரி வெடித்து விட்டது!

அன்றையப் பெரும் சண்டையும், அதன் விளைவான பிரிவும் மாதவியை மிகவும் பாதித்து விட்டன.

இந்த விஷயத்தில் வீட்டினர் யாரும் தனக்கு ஆதரவாக இல்லை என்று உள்ளூர உணர்ந்த மாதவி, அந்த ஆதரவைக் காட்டிய ஒரே நபரான சுகிர்தா பக்கம் சாய்ந்தாள்.

நமைச்சல் எடுக்கும்போது சொறிந்து விட்டால் சுகமாகத்தான் இருக்கும். ஆனால், அப்படி சொறிந்து கொடுப்பதினாலேயே படையும் புண்ணும் பெரிதாகி விடும்; அது சொறியும்போது யாருக்கும் புரிவதே இல்லை!

சொறிந்து விடுகிறவளுக்கு முதுகுப் புண்ணைக் காட்டுகிற மாதிரிதான், மாதவி தன் வீட்டு விவகாரம் பற்றி சுகிர்தாவிடம் கூறியது!

ஆனால், அது, வெறும் வாயைக் கூட மெல்லத் துடித்துக் கொண்டிருந்தவளுக்கு அவலைக் கொடுத்த மாதிரி ஆயிற்று.



மாதவியின் துயரக் கதையைக் கேட்ட சுகிர்தா, உடனே தனசேகரனைத் திட்டி எதுவும் சொல்லவில்லை! மாதவியின் செயலை ஆதரித்தும் பேசவில்லை! மாறாகக் கலகலவென்று கண்ணீர் வடித்தாள்! "அய்யோ, மாது, எனக்குத்தான் இதுபோலத் துன்பமெல்லாம் நேர்ந்தது என்று பார்த்தால், என்னோடு சேர்ந்த பாவம் உனக்கும் அப்படியே நேர்ந்து விட்டதே! என் ராசிதான் உனக்கும் ஒட்டிக் கொண்டது போலும்! வேணுமானால், இனிமேல் இங்கே வராமல் இருந்து கொள்கிறாயா? ஒரு வேளை உன் நிலைமை சரியாகி தனசேகரன் உன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளக் கூடும்!" என்று ஆலோசனை சொன்னாள் - விசும்பல்களின் இடையே!

"மன்னிப்பதா? அப்படி அவர் மன்னிப்பதற்கு நான் என்ன தப்பு செய்தேன்?" என்று வெடுக்கெனக் கேட்டாள் மாதவி.

சற்று யோசிப்பது போலப் பாவனை செய்து விட்டு, "நீ தப்பு எதுவும் செய்யவில்லைதான்! ஆனால், காலம் காலமாக நம் கதைகள், திரைப்படங்கள் எல்லாம் என்ன போதிக்கின்றன, பார்! ஆணோ, பெண்ணோ யார் தப்பு செய்தாலும், பெண்தான் ஆண் காலில் விழுகிறாள்! அதையே பார்த்துக் கேட்டுப் பழகி நம் நாட்டு மனோபாவமே அப்படியே ஆகிவிட்டது! என் தந்தைகூட, எனக்குத் தாலிகட்டியவனிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, அவனோடு குடும்பம் நடத்த வேண்டும் என்று சொன்னார்!" என்றாள் சுகிர்தா, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு!

''என்னிடம் அப்படி யாராவது சொன்னால்... சொன்னால் அப்புறம் நன்றாய்... வாங்கிக் கட்டிக் கொள் வார்கள்!'' என்று மாதவி ஆத்திரத்துடன் தலையைச் சிலுப்பினாள்.

''உன்னிடம் எதுவும் சொல்வார்களோ என்னவோ? ஆனால் என் மண்டைதான் நன்றாக உருளப் போகிறது. இந்த சுகிர்தா தான் புருஷனைப் பிரிந்து இருப்பது போதாது என்று, சினேகிதிகளையும் அப்படியே தூண்டி விட்டுக் குடும்பத்தைக் கலைக்கிறாள் என்பார்கள்! என்னோடு பேசக்கூட இனி உன்னை விடமாட்டார்கள்!'' என்றாள் சுகிர்தா மிகுந்த கவலையோடு.

''நான் என்ன சின்னப் பாப்பாவா, நான் யாரோடு பேசலாம், பேசக் கூடாது என்று மற்றவர்கள் முடிவு செய்வதற்கு? உன்னை யாராவது ஏதாவது சொன்னால் கிழிகிழி என்று கிழித்து விடுவேன்!'' என்று மாதவி சூளுரைத்தாள்.

''ஆனாலும் என் ராசி, மாதவி? அப்படி ஏதாவது உனக்குத் தோன்றினால் தாராளமாகப் போய்க் கொள். நீ என்னைப் பிரிந்து செல்வதை நான் தப்பாகவே நினைக்க மாட்டேன்! ஏதோ, நீ நன்றாயிருந்தால் சரி!'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் மற்றவள்!

தன் துன்பத்தைப் பின்னுக்குத் தள்ளி, ''சேச்சே! என்ன, சுகி நீ! ராசி கீசி என்று என்ன பேச்சு இது?'' என்று மாதவி, தோழியை அணைத்துக் கொண்டாள். ''இதோ, நான் சொல்வதை நன்றாகக் கேட்டுக் கொள்! நானாகவும் சரி, உன்னைப் பற்றி வேறு யார் என்ன



சொன்னாலும் சரி, உன்னை விட்டுப் பிரிந்து நான் போகவே மாட்டேன்! இது உறுதி!'' என்றுரைத்து மற்றவளைத் தேற்றினாள்.

அதன் பிறகே, சுகிர்தா, தனசேகரனைப் பற்றிப் பேசினாள். ''அதென்ன, மாது, உன் கணவரும் செயல் பாட்டில் அப்படியே என் கணவர் போலவே நடந்து கொள்கிறார்!? என் புருஷனும் இப்படித்தான்! அவர் வகை உறவினர் வீட்டு விஷயம் என்றால் முதல் ஆளாய்ப் போய் நின்று மாடு மாதிரி உழைப்பார்! நானும், அதேபோல் தலைகீழாய் நின்று வேலை செய்ய வேண்டும் என்பார். அதுவே, எனக்கு என்றால், திரும்பிப் பார்க்கக் கூட மனம் வராது! அதே மாதிரியே தனசேகரனும் இருக்கிறாரே!'' என்று வியந்தாள்.

புருவம் சுருக்கி யோசித்து விட்டு, ''நீ சொல்வது மெய்தான், சுகி! கல்யாணமாகி என் முதல் பிறந்த நாளைக்கு தனா ஊரில் இல்லை. அலுவல் 'டூர்'! இப் போது, விக்கி பிறந்த நாளைக்கு மட்டும், ஆபீஸ் பயணத்தைத் தள்ளிப் போட்டு விட்டு இருக்கவில்லையா? என் பிறந்த நாளைக்கு அப்படி இருக்க அவருக்குத் தோன்றவில்லை, பார்! பிறந்த நாள் மட்டுமா! எங்கள் திருமண நாளன்று கூட, நாங்கள் சேர்ந்து இருக்கவில்லை! அதே சமயம், அவரது பிறந்த நாளைக்கு மட்டும், ஜம்மென்று வீட்டில் இருந்தார்! நானும் பாயசம், குல்பி, பிரியாணி என்று செய்து கொடுத்தேன்! அதையெல்லாம், நன்றாகத் தின்றவருக்கு, மனைவியின் பிறந்த நாளையும் அப்படித்தானே கொண்டாட வேண்டும் என்று தோன்றவில்லை பார்!'' என்று,

ஒவ்வொரு குறையுமே, அப்போதுதான் நேர்ந்ததுபோல மாதவி மனம் வருந்தினாள்.

''மறந்து போயிருக்கும்!'' என்று சுகிர்தா தோளைக் குலுக்கினாள்.

''சேச்சே! மறக்கவில்லை, சுகி! வரும்போது ஏதாவது பரிசு மட்டும் தவறாமல் வாங்கி வந்து விடுவார். பிறகு வெளியே கூட்டிப் போவார். ஆனால் அவரோடு சேர்ந்து இருந்து உரிய நாளில் கொண்டாடுவது போல ஆகுமா?'' என்றவளின் முகம் கசங்கியது. ''ஆனால்... இப்போது...''

''இத்தனை நாள் விட்டுக் கொடுத்துவிட்டு இன்று மட்டும் அழுதால் எப்படி? ஆனால், நீ என்ன அழுதாலும், இப்படியே பழகிவிட்ட அவர் அதை மதிக்கப்போவது இல்லை... இப்படியேதான் இனி எப்போதும் உன்னை அலட்சியப்படுத்திக் கொண்டே இருக்கப் போகிறார்!''

''விடமாட்டேன்! என்னை மதிக்க வைப்பேன்! எப்படியும் அவர் என் பேச்சை மதிக்குமாறு செய்தே தீருவேன்!'' என்று மாதவி இன்னொரு சபதம் செய்தாள்.

''அந்த உறுதி இருந்தால் சாதித்தே காட்டலாம்!'' என்று தோழியை சுகிர்தா தட்டிக் கொடுத்தாள். ''நீ அப்படிச் சாதித்துக் காட்ட வேண்டும் என்பதுதான் என் ஆசை, மாதவி ஏதோ, என் வாழ்வுதான், தேய்ந்த செருப்பாய் வீசி எறியப்பட்டு விட்டது! நீயாவது, ஒரு கால் மிதியாய்க் கிடவாமல், கணவனோடு சம உரிமை பெற்று வாழ வேண்டும் என்பதுதான்... என் ஆசை!'' என்று உருக்கமாய்க் கூறினாள்.



''தனசேகர் திரும்பி வந்து, மதூ.... என்று ஒரு வார்த்தை சொன்னால், இந்த வீரம் காற்றோடு பறந்து விடாதா?'' என்று கேலி பேசி அவளது வீறாப்பைத் தூண்டி விட்டாள். மாதவியின் சபதத்தை அவள் மனதில் உறுதியாக நிலைத்து நிற்கும்படிச் செய்தாள்.

இதில், சுகிர்தாவுக்கு பெரும் ஆதாயம் இருந்தது.

தனசேகரனுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்பதைச் சுகிர்தா சரியாகவே ஊகித்திருந்தாள்! வாய்ப்புக் கிடைத்தால், அவன் மாதவியை, சுகிர்தாவிடமிருந்து பிரித்து விடுவான் என்பதும் உறுதியே. அப்படி மாதவி பிரிந்து விட்டால், அவள் மூலமாய் வரும் வருமானம் போய் விடும்! அது நடவாமல் காத்து, அந்த வருமானத்தைத் தக்கவைத்துக் கொள்வது சுகிர்தாவின் முதல் குறிக்கோளாக இருந்தது!

அடுத்தது, ஒரு தரம் தனசேகரன் லேசாகச் சந்தேகித்த, சுகிர்தாவின் வக்கிரப்புத்தி! அன்று படங்கள் சட்டமிடும் கடையில் மையலும் மகிழ்ச்சியுமாக மாதவியையும் அவள் கணவனையும் பார்த்ததிலிருந்து அவள் மனதில் ஒரே குடைச்சல்! அன்றிரவு, அவள் தூங்கவே இல்லை!

மாதவிக்கு மட்டும் இப்படி ஓர் அன்பான கணவன் எப்படிக் கிடைக்கலாம்? மனைவியின் விருப்பங்களை மதித்து அவற்றை, ஆசையாகவே நிறைவேற்றிக் கொண்டு.... மற்றபடி.... மாதவியின் படங்களைச் சட்டமிடும் கடைக்குத் தனசேகரன் வரத் தேவையில்லையே!

அவன் சிரமப்பட்டான் என்று இவள் வாடுவதும், இவள் வாடப் பொறுக்காமல் அவன் தேற்றுவதும்...

இந்தக் கூட்டை எப்படியாவது உடைத்தே ஆக வேண்டும் என்கிற வெறி அவளுள், தீயாய் எரிந்து கொண்டே இருந்தது.

அதை வெளிக்காட்டினால், உள்ளதும் போய் விடக் கூடாதே என்று அதை மறைத்து வைத்திருந்தவளுக்கு, மாதவியின் இன்றைய வேதனை பெரும் மகிழ்ச்சி யையே தந்தது!

அந்த மகிழ்ச்சியை, மாதவி அறியாமல் மறைத்துக் கொண்டு, கிடைத்த இந்த ஒரு சிறு பொறி அணைந்து விடாமல் காத்ததோடு, அதை ஊதிப் பெரு நெருப்பாக் கும் முயற்சியிலும் ஈடுபட்டாள்.

ஒரு தரம் சொந்த வாழ்வு பற்றிப் பேசி விட்ட மாதவிக்கு, அதற்குமேல் தன் தோழியிடம் எதையும் சொல்லத் தயக்கம் தோன்றவில்லை.

ஒருவேளை, அவளது சொந்த வாழ்வு பற்றி அறிவ தில் சுகிர்தா அதிக ஆர்வம் காட்டியிருந்தால், மாதவி, நத்தையாய் ஓட்டினுள் சுருட்டிக் கொண்டிருக்கக் கூடும்! ஆனால், தோழியிடம் உள்ள பரிவினால் மட்டுமே அவளது வருத்தங்கள் தெரிந்தால், ஆறுதலாக இரண்டு வார்த்தை பேசி அவளது வேதனையைக் குறைக்கலாமே என்ற நல்ல எண்ணத்தினால் மட்டுமே இது பற்றி விசாரிப்பது போலச் சுகிர்தா காட்டிக் கொள்ளவும் வெகுளியான மாதவி எளிதாகவே வலையில் விழுந் தாள்.

அவளுக்கும் உள்ளூரக் குமுறிக்கொண்டு இருந்தது தானே!" ஒரு வடிகால் கிடைத்தது என்று கொட்டி விட்டாள்.



அவ்வப்போது, பெரிய நியாயவாதி போல, 'பா வம் தனசேகரனுக்கும் கஷ்டமாய்த்தான் இருந்திருக்கும்! ஆனால் நம் மனைவி எவ்வளவு நல்லவள் என்பதையும் யோசித்து அவர் பேசியிருந்தால் எவ்வளவோ நன்றாயி ருந்திருக்கும்! பாவம்! அவருக்கு இருந்த ஆத்திரத்தில், உன் நல்ல குணம் பற்றிய நினைவே வரவில்லை போலும்!'' என்று தனசேகரனுக்குப் பரிந்து பேசுவது போலப் பேசியே, அவனைக் குற்றவாளியாக்கினாள்.

அன்றையச் சண்டையின்போது கடைசியாகத் தன சேகரன் வாயை விட்டது, பன்றியுடன் சேர்ந்த கன்று போல் என்றது அவளுக்கு ஒரு சிறந்த ஆயுதமாக கிடைத்தது.

தன் காதுகளையே நம்பமாட்டாதவள் போல சுகிர்தா, தன் சிறிய கண்களை இயன்றவரை அகல விழித்து, ''என்னது! பன்றியுடன் சேர்ந்த என்றா சொன் னார்? உன்னைப் போய்ப் பன்றி என்றாரா? எப்படி முடிந்தது? ஏன், இரவு கட்டிப் பிடிக்கும் போதெல்லாம் மட்டும் பன்றி என்பது தெரியாமல் போய் விட்டதாக் கும்? பன்றியாமா? எப்படியடி பொறுத்தாய்? அந்த வினாடியே எல்லாவற்றையும் விசிறியடித்து விட்டு கிளம்பியிருக்க வேண்டாமா? குறைந்தபட்சம், பன்றிக் குத் தாலிகட்டிய நீ யார் என்றாவது கேட்டிருக்க வேண் டாமா? எப்படி விட்டாய்?... அய்யோ, சாரிடி மாதவி! நான் பாட்டில் என்னென்னவோ சொல்லி விட்டேனே! ஒரு குடும்பம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்றால், பெண்கள் இதையெல்லாம் பொறுத்துத்தான் போக வேண்டும்! அதனால் நான் சொன்னதைப் பெரிதாக

நினைக்காதேடி!... ஆனாலும்... பன்றி என்ற பிறகும் எப்படியடி பொறுத்தாய்?'' என்று மிகுந்த வியப்பும் வேதனையுமாகக் கேட்டாள்.

மாதவிக்கும் இப்போது மிகுந்த ஆச்சரியம்தான்!

தனசேகரன், அவளைப் பன்றி என்று குறிப்பிட்டதை அவள் எப்படிப் பொறுத்தாள்?! சுகிர்தா சொல்வது போலப் பொங்கி எழுந்திருக்க வேண்டாமா? இந்த வார்த்தை என்னை எப்படிச் சொல்லலாம் என்று கேளாமல் எப்படி விட்டாள்? அதைக் கேளாமல் வேறு என்ன செய்து கொண்டிருந்தாள்?! இவ்வளவு முக்கியமான விஷயத்தை விட்டு விட்டு...

சட்டென நினைவு வந்தது மாதவிக்கு.

அப்போது மாதவி, தனசேகரனின் முகமூடியைக் கிழித்து அவனது பொய்யை வெளிக் கொணர்ந்து கொண்டிருந்தாள். அவனது பழி வாங்கும் வெறியை, ஆணாதிக்கத்தை எல்லாம் வெளிப்படுத்துகிற வேகத்தில் இந்த வார்த்தை அவள் மனதில் உரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இப்போது, சுகிர்தா எடுத்துச் சொன்ன பிறகுதானே, தனசேகரன் தன்னை எவ்வளவு இழிவுப்படுத்தியிருந்தான் என்பதே அவளுக்குச் சரிவரப் புரிகிறது.

பன்றியா?! பன்றி என்றானா? பன்றி மாதிரி என்றால் என்ன? பன்றி என்றால் என்ன? எல்லாம் ஒன்று தானே?

பன்றி என்று அவளை அழைக்க அவள் கணவனுக்கு இவ்வளவு திண்ணக்கம் இருக்க வேண்டும்!



தனசேகரன், மனைவியை நாடி வரும்போது, இது பற்றியும் கேட்டாக வேண்டும்! கேட்டு, கேட்டு அவனை அழ வைக்க வேண்டும்! பன்றியுடன் குடும்பம் நடத்த அவ்வளவு ஆசையா என்று... சும்மா விடவே கூடாது!

அது இது என்று நினைத்து வைத்திருந்ததெல்லாம், கணவனின் ஓர் அழைப்பிலேயே உருத்தெரியாது கரைந்து மறைந்து போயிற்று.

தொழிலில் இருந்து, வாழ்க்கை வரை ஆலோசகி ஆகிவிட்ட சுகிர்தாவிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுக் கணவன் வீடு சென்று விட வேண்டும். சென்று விடலாம் என்று எண்ணியபடிதான் மறுநாள் மாதவி ஸ்டூடியோவுக்குச் சென்றது.

ஆனால், அழுது சிவந்து வீங்கியிருந்த அவளது கண்களையும் முகத்தையும் கண்டதுமே சுகிர்தா உஷாராகி விட்டாள்.

தனசேகரனின் நடமாட்டங்களையும் விசாரித்து வைத்திருந்ததால் முன்தினம் அவன் பயணம் முடிந்து வந்திருப்பான் என்பது அவளுக்குத் தெரியும்!

ஆனால், அவனுக்கும் சுயகவுரவம் இருக்கும்; அதை அலட்சியம் செய்து, அவன் மாதவியிடம் வருவதற்குச் சில நாட்களேனும் பிடிக்கும் என்பது அவளது கணிப்பாயிருந்தது! அதற்குள், மாதவியைச் சற்று உசுப்பி விட்டால் போதும் என்றும் எண்ணியிருந்தாள்!

ஆனால், இப்போது மாதவியின் முகத்தைப் பார்த்ததும் அவளுக்குச் சந்தேகம் வந்தது! அவள் நினைத்தது போலத் தனசேகரன் தன்மானம் பார்க்கிறவன் இல்லையா?

மற்றபடி, அவளது வீட்டு உறவினர் பேச்சில் மாதவி இப்படி அழுது கரைய வாய்ப்பில்லை!

முன்னெச்சரிக்கையோடு, மாதவியை முந்திக் கொண்டு, சுகிர்தாவே பேச் தொடங்கினாள். ''மாது, இனிமேல் தான் நீ மிகவும் உஷாராய் இருக்க வேண்டும். பொதுவாகப் பெண்களின் பலவீனம், இந்த அன்பு தானே! அதை வைத்துத்தானே, இந்த ஆண்கள் நம்மை அடிமைப்படுத்தி விடுகிறார்கள்... தனசேகரனும், அதில் தான் விளையாட முற்படுவார்... உனக்குக் கூட அவரிடம் போய் விட்டாமா என்றுதான் இருக்கும்! ஆனால், நீ உறுதியோடு இருந்து, உன் கவுரவத்தை நிலை நாட்ட வேண்டிய இந்த நேரத்தை விட்டு விட்டால் அப்புறம் வாழ்நாள் முழுவதற்கும், நீ அவருடைய அடிமைதான். அதனால் எச்சரிக்கையோடு இரு... சே! நான் ஒரு முட்டாள்! 'பன்றி' என்று சொன்னபிறகும், கொஞ்சம் பிகுகூடக் காட்டாமல், அவர் காலடியில் போய் விழ, நீ என்ன தன்மானம் அடியோடு இல்லாதவளா? உன்னைப் போய் எச்சரிக்கிறேன் பார்!''

மெய்தான்! தன்மானம் இல்லாதவள் தான் அப்படிக் கணவனிடம் ஓர் 'இம்' இல் அவன் காலடியில் போய் விழுவாள்! அப்புறம் அவன் கால் மிதியாய்க் கிடப்பாள்!

மாதவியின் தலை மெல்ல நிமிர்ந்தது! உடலில் சோர்வு இருந்தபோதும், தொய்வு மறைந்தது. நீர்த் திரையிட்டிருந்த கண்கள், இயல்பு நிலைக்குத் திரும்பி விட, வேலையைத் தொடங்கினாள்.



மாதவியின் அந்த நிமிர்வு, தனசேகரனின் இன்னும் ஒரு டெலிஃபோன் காலையும், இருமுறை வழியில் நின்று பார்த்ததையும் கூடத் தாங்கி நின்றது.

சொல்லப்போனால், அதில் அவளுக்குக் கோபம் தான் வந்தது.

மாமனார் வீட்டிலும் , சுகிர்தாவின் 'பொட்டிக்'கிலும் மனைவியைச் சந்தித்துப் பேசத் தனசேகரன் கவுரவம் பார்த்தான்.

அதேபோலவே, இந்த தெருவோரச் சந்திப்பில் மாதவி ஒருவிதமாய் கவுரவம் பார்த்தாள்.

அவள் என்ன நடைபாதையிலா குடியிருக்கிறாள்? உண்டு உறங்கி வசிக்கும் அவளுடைய தந்தையின் வீடு இல்லையா? தொழில் செய்யும் இடம் இல்லையா? இரண்டையும் விடுத்து, 'ரோடு சைடு ரோமியோ' போலத் தனசேகரன், அவள் சென்று வரும் வழியில் நின்றது அவளுக்குச் சினமூட்டியது.

அவன் குரலைக் கேட்டாலே அவளுக்குத் தொண்டை அடைக்கிறது. இப்படி வழியில் நின்று பேசி, அழுகை வந்துவிட்டால் - அழுகை கட்டாயம் வரும் தானே? அப்படி நாலுபேர் பார்க்க வருவது அசிங்கமில்லையா?

அதைப்பற்றி எண்ணியும் பாராமல் இப்படி வந்து நிற்கிறானே!

தன் வசமிழந்து நாலுபேர் பார்க்க தான் அழுது விடக்கூடுமோ என்ற அச்சத்தில் தான் மாதவி முதலில் வேகத்தை அதிகரித்துக் கொண்டு விலகிப் போனது!

இரண்டாம் முறை நாலுபேர் அவனைப் பார்த்த பிறகும் அப்படியே விரைந்து சென்று விட்ட போதும், பழைய கோபம் அவளுக்கு வெகுவாகத் தணிந்து விட்டிருந்தது!

எப்படியோ, இருமுறை டெலிஃபோன், இரண்டு தடவை நேரில் என்று நான்காவது தரமாக அவளை அவன் நாடி வந்துவிட்டான். இனிமேல், தானும் சற்று இளகுவதில் தவறில்லை என்று அவளுக்குத் தோன்றியது.

அதே யோசனையாக இருந்ததில், தனசேகரன் மாமனார் வீட்டையும், ஸ்டுடியோவையும் தவிர்த்த காரணத்தையும் அவள் சரியாகவே ஊகித்து விட்டிருந்தாள்.

வீட்டு மாப்பிள்ளை! மாமனார் வீட்டில் கவுரவம் பார்ப்பது தப்பில்லை என்று அதை ஒத்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் சுகிர்தாவை வெறுப்பதை மட்டும் தனசேகரன் நிறுத்தியே ஆகவேண்டும்! மனைவியின் உயிர்த்தோழியாய் இருப்பவளிடம் மரியாதையும், பிரியமும் காட்டியே ஆகவேண்டும் என்று அவனிடம் தெளிவு படுத்த வேண்டும்! கூடவே, பன்றியென்று கண்ட வார்த்தை பேசியதற்கும், அவள் பக்க விசேஷத்தில் கலந்து கொள்ளாமல் வெளியூர் சென்றதற்கும் அவன் மன்னிப்புக் கேட்டு விட்டால், பிறகு முன்பு போல, இணைந்து, மகிழ்ந்து வாழலாம் என்று மாதவி முடிவு செய்தாள்.

ஆனால், இந்த தன் முடிவை, மாதவி, சுகிர்தாவிடம் சொல்லவில்லை. தனசேகரன் நடந்து கொண்ட முறையினால், எல்லோரிடமும் சினேகமாகப் பழகக் கூடிய சுகிர்தாவுக்கே அவனிடம் ஒரு... வெறுப்பு என்று சொல்ல முடியாவிட்டாலும், ஓர் ஒதுக்கம் ஏற்பட்டிருந்தது.



அந்த ஒதுக்கத்தைப் போக்கி, சுகிர்தாவின் மதிப்பையும் நட்பையும் சம்பாதிப்பதும் தனசேகரனின் கடமை தான்! அதையும் அவன் நிறைவேற்றித்தான் ஆக வேண்டும்!

ஆனால் அதுவரை, கணவனோடு சமாதானமாய் போவது பற்றிய எதையும் சுகிர்தாவிடம் சொல்லி, முன்கூட்டியே அவளை வருத்தப்படுத்த மனமில்லாததால், மாதவி, அவளிடம் அதைச் சொல்லாமலே விட்டு விட்டாள்.

இதெல்லாம் பற்றி வெளியே எங்கேயும் வைத்துப் பேசுவது அவனது கவுரவப் பிரச்சனையாலும், அவளது கண்ணீர்ப் பிரச்சனையாலும், சரிவராது என்பதை உணர்ந்த மாதவி, அவர்களது வீட்டிலேயே அந்தப் பேச்சு வார்த்தையை வைத்துக் கொள்ள முடிவு செய்தாள்.

நாலைந்து,. நாட்கள் தீவிரமாக யோசித்து, ஒரு வழியாய் இந்த முடிவுக்கு வந்த, மாதவி தன் தயக்கம், கூச்சம் எல்லாம் உதறித் தனசேகரனுக்கு டெலிஃபோன் செய்தபோது, முன்தினமே அவன் மீண்டும் பயணம் சென்று விட்டது தெரியவும், கொதித்துப் போனாள்!

தனசேகரன் வெளியூர் சென்றிருந்த இருபது நாட்கள், அதற்கும் முன்பாக இருவரும் சண்டையிட்டுப்

பேசாதிருந்த மூன்றுநாட்கள், இப்போது திரும்பி வந்து அவன் இங்கே இருந்த இருபத்தி இரண்டு நாட்கள் மொத்தமாய் நாற்பத்தைந்து நாட்கள்!

அதாவது, ஒன்றரை மாத காலமாக இருவரும் கருத்து வேறுபட்டுப் பிரிந்திருக்கிறார்கள்! இந்தப் பிரிவு நிரந்தரம் ஆகிவிடக்கூடும் என்கிற நிலை வேறு. இப் போது கூட அவளைச் சமாதானப்படுத்த வேண்டும் என்கிற ஆர்வமே இல்லாமல் அவன் பாட்டில் வெளியூர் சென்று விட்டான்!

இதற்கு என்ன அர்த்தம்?

உன் கோபம், வருத்தம், மான அவமானம் என்று எதையும் நான் மதிக்க மாட்டேன் என்று அவன் சொல் லாமல் சொல்கிறான் என்பதுதானே!

என்னவோ, இரண்டுதரம் ஃபோன் செய்து விட் டான், இருமுறை வழியில் காத்துக் கிடந்துவிட்டான், என்று உருகிப் போனாளே!

ஒருவேளை, இதையே வார்த்தையாலும் சொல்லத் தான் இந்த இரண்டு வழியிலும் முயற்சித்தானோ என் னவோ?

எனவே, அவளைச் சமாதானப்படுத்தி வீட்டுக்கு அழைத்துப் போவதற்காகத்தான் இதெல்லாம் என்று அசட்டுத்தனமாக நினைத்தாளே!

அதுதான், அவள் பிரிந்துபோனால் அவனுக்கு நிம்மதி என்று தெளிவாய்ச் சொன்னானே! அதன்பிற கும், இப்படியெல்லாம் ஒருத்தி கற்பனை செய்தாள் என்றால் அவளை வடிகட்டின முட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்!



அதுவும், அந்த முறை தனசேகரன் திரும்பிவரக் குறைந்தது இரண்டு மாதம் ஆகும் என்று தெரியவும் இனிமேல் தன் இல்லறம் அவ்வளவுதான் என்று மாதவிக் குத் தோன்றியது.

ஏனெனில், அந்த மாதிரி முடிவு செய்திராவிட்டால், தனசேகரன் அவளிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் இப்படித் திரும்பவும் வெளியூர் சென்றிருக்க மாட்டான்!

அல்லது அவளிடம் அவனுக்கு இருக்கும் மிதமிஞ் சிய அலட்சியம் காரணமாக இருக்க வேண்டும்!

'நான் என் விருப்பம் போலத்தான் இருப்பேன்; நீ அதற்கேற்ப நடந்து கொள்வது என்றால் உன் தன்மா னத்தைப் பறக்க விட்டு விட்டு வந்து என் காலில் விழு! அல்லது நீ இப்படியே போனாலும் எனக்கு அக்கறை இல்லை' என்று அவளுக்கு அறிவிக்கிறான்!

போகட்டும்! அப்படி மானரோஷமற்று அவன் விருப்பம் போல ஆடுகிற மானமற்ற வாழ்வு அவளுக் குத் தேவையில்லை. அவளிடம் ஒரு கலை இருக்கிறது! அதற்கு மக்களிடையே வரவேற்பு இருக்கிறது! அந்தக் கலை மூலம் அவள் தன் வயிற்றுப்பாட்டை நன்றாகவே பார்த்துக்கொள்ள முடியும்! சுகிர்தா போல அவளும் தலை நிமிர்ந்தே வாழமுடியும். இதுபோதும் அவளுக்கு!

பெற்றோரை நினைக்கையில் மாதவிக்குக் கொஞ் சம் வேதனையாக இருந்தது. இருவருக்கும் தனசேக

ரனை மிகவும் பிடிக்கும். அதிலும் அவள் தந்தைக்குத் தனசேகரன் மகனை விடமேல்! தங்கள் இருவரையும் போல மாதவியும் தனசேகரனும் நல்ல குடும்ப வாழ்வு வாழ வேண்டும் என்று அவர்களுக்கு மிகுந்த ஆசை! என்ன செய்வது? விதி அப்படி அமையவில்லையே!

எப்படியும், வீட்டை விட்டு வெளியேறும்படி அவளுடைய பெற்றோர் சொல்லிவிடப்போவது இல்லை!

அண்ணி... அவளும் நல்லவள்தான்! அவளுடைய வீட்டு மனிதர்கள் எப்படியிருந்தாலும் இந்துமதி நல்லவள்தான்!

அந்த வீட்டில், வாழாவெட்டி என்பார்களே, அது போல ஒருதனி வாழ்வு தான் அவளுக்குக் கொடுத்து வைத்தது போலும்!

ஆனால், அதற்குப் பயந்து ரோஷமற்று, அவளை அலட்சியப்படுத்தும் கணவன் காலடியில் போய்விழுவது - சுகிர்தா சொல்வதுபோல அவனது கால்மிதியாய் வாழ்வது அவளால் முடியாத காரியம்!

மனதினுள்ளே நடந்த பிரளயங்களை வெளியே காட்டிக் கொள்ளாமலே, மாதவி உண்டாள், உறங்கினாள், வேலைக்குப் போய் வருகிறவர்கள் போல, ஸ்டூடியோவுக்குப் போனாள்; படம் வரைந்தாள்; வீடு வந்தாள்! மீண்டும் உண்டு... உறங்கி... என்று காலம் சென்றது.

தனசேகரன் மீண்டும் வெளியூர் சென்றதை ரகசியமாக விசாரித்து அறிந்து கொண்ட சுகிர்தா, மாதவியிடம் அதிகமாக உருகி, அவளோடு தனக்குள்ள நெருக்கத்தை அதிகரித்துக் கொண்டாள்.



மாதவியுடைய தந்தை, ஏதோ வேலையாக அந்தப் பக்கமாய் வந்ததாகச் சொல்லி, அப்படியே சுகிர்தாவின் 'பொட்டிக்'கையும் அங்கே ப்ளைவுட் தடுப்பு வைத்த ஓர் இடத்தில் மாதவி சித்திரம் தீட்டிக் கொண்டு இருப்பதையும் பார்த்து விட்டுப் போனார்.

''உன் தந்தைக்கு 'மண்டி'யைத் தவிர வெளியுலகமே தெரியாது என்பாயே!''

கிண்டலும் கேள்வியுமாய் சுகிர்தா அதிசயப்பட, முதலில் விழித்து விட்டுப் பிறகு மாதவியின் முகம் லேசாக கன்றியது!

கதிரேசன் மகளைக் கண்காணிக்கவா வந்தார்? அல்லது வேவு பார்த்தாரா?

அந்தப் பேச்சை அப்படியே விட்டுவிட்டு, அடுத்து வந்த ஆர்டர் குறித்துச் சற்று நேரம் பேசிக்கொண்டு இருந்துவிட்டு, ''பெண்கள் விடுதியில் தங்குவது மிக வசதியாக இருக்கிறது! அதிகாரம் பண்ண, விரட்ட, வேவு பார்க்க என்று யாருமே கிடையாது!'' என்றாள் சுகிர்தா பெருமையாக.

தகப்பனார் ஏன் இங்கே வந்தார் என்று மனதை உருட்டிக் கொண்டிருந்த மாதவிக்கு 'அதுசரிதானோ?' என்றிருந்தது.

இப்போது வீட்டுக்குப் போய்த் தகப்பனாரிடம் இங்கே ஏன் வந்தீர்கள் என்று கேட்க முடியாது. அப்படிக்

கேட்டால் முதலில் அவள் கேளாமலே அவர் சொன்னது பொய் என்று சொல்லாமல் சொல்வது போல ஆகும்! ஒருவேளை, மருமகன் தனசேகரனுக்காக இவர் சொந்த மகளையே வேவு பார்க்கிறாரோ?

நினைக்கவே சகிக்கவில்லை அவளுக்கு.

இந்த உளைச்சல்களின் இடையே, இந்துமதியின் வளைகாப்பு வைபவம் வந்தது. ஐந்தாம் மாதக் கடைசியில் பூ முடித்து மகிழ்ந்தவர்கள், ஏழாம் மாதத் தொடக்கத்திலேயே வளைகாப்பு செய்து பெண்ணை அழைத்துப் போக வந்தார்கள்.

வீட்டினரின் மகிழ்ச்சியில், தான் பாகைத் துரும்பு போல உறுத்தலாக எண்ணி உள்ளூர மனம் குன்றிய போதும், அதை மறைத்துக் கொண்டு, மாதவி உற்சாகமாகவே நடமாடினாள்.

'ஆக்சிடைஸ்ட்' வெள்ளியில் நுணுக்கமான ஃபிளகரீ' வேலைப்பாடு செய்த வளையல்களைத் தன் பரிசாக மாதவி கொடுக்க, மிகுந்த மகிழ்ச்சியோடு, இந்துமதி அவளுக்கு நன்றி சொல்ல, முன்னவளும் இயல்பாகச் சிரித்துப் பேசலானாள்!

எல்லாம் சில நிமிடங்கள்தான்.

''கையை அழுத்தி விடுவேனோ என்று பயமாக இருக்கிறது. நீயே போட்டுக் கொள், அண்ணி!'' என்று மாதவி விலகிவிட, இந்துமதியும் அதை ஏற்று, வளையலை எடுத்துக் கையில் அணியத் தொடங்கினாள்.



''ஏய் இந்து, பொறு... பொறுடி...'' என்று முன்னே வந்து, இந்துமதியை அவளுடைய தமக்கை சுந்தரி தடுத்தாள்.

மனையில் இருந்த இந்துமதியிடம் வளையல்பெட்டியைத் திறந்து கொடுத்துவிட்டு, விலகிச்சென்று கொண்டிருந்த மாதவி நின்று திரும்பிப் பார்த்தாள்.

திகைப்புடன் நிமிர்ந்த இந்துமதியும், ''என்னக்கா? ஏன்?'' என்று தமக்கையிடம் விளக்கம் கேட்டாள்.

''இன்றைக்குத்தான் சூல்காப்பு என்று வெள்ளியில் ஏற்கனவே போட்டாயிற்றே! அடுத்து அடுக்கிய கண்ணாடி வளையல்களைப் பேறு காலமட்டும் கழற்றக் கூடாது! உன் அத்தை போட்ட தங்கத்தையும் கழட்டாமலே அணிந்து கொள்ளலாம். இது வேலைப்பாடு உள்ள வெளியல்லவா? போட்டுக் கொண்டே இருக்க முடியாது! இன்று கையில் அடுக்குவதைக் கழற்றவும் கூடாது... அதனால்தான்... அதற்கென்ன? உன் நாத்தனார் தந்தது. நீ எப்போது வேண்டுமானாலும் போட்டுக் கழற்றி பத்திரமாக வைத்துக் கொள்ளலாமே! இன்றுதான் அதையும் மாட்டிக் கொண்டாக வேண்டும் என்கிற கட்டாயம் ஒன்றும் இல்லையே! என்னம்மா நீயே சொல்லு! இவ்வளவு அழகாய் உன் அண்ணிக்காரிக் கென்று தேடிப் பார்த்து வாங்கி வந்திருக்கிறாயே! இதைப் பத்திரமாய் வைத்து, வெளியே போய் வருகிற நேரம் அலங்காரமாய் போடுவதை விட்டு... இப்போதே கையில் கழற்ற முடியாமல் தண்ணீரும் வேர்வையும் பட்டு நாசமாக்குவதா? சொல்லு!'' என்று அவசரமாய்க் குறுக்கே வந்து நீளமாய் பேசினாள், இந்துமதியுடைய தாயார்.

லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு, "என் அண்ணிக்கு வாங்க வேண்டும் என்று நினைத்தேன், வாங்கினேன்! அண்ணிக்கு அது பிடித்திருக்கிறது! எனக்கு அதுபோதும்! மற்றபடி, அதை எப்போது அணிவது என்பது அண்ணியின் விருப்பம்!" என்று கூறிவிட்டு, மாதவி, வளை அடுக்க வந்த மற்றவர்களுக்கு இடைஞ்சலாக நில்லாமல், அங்கிருந்து விலகிப்போனாள்.

இதை அவள் அப்போதே மறந்தும் போயிருப்பாள்! வெகு தற்செயலாக அவளது பார்வை, அவளுடைய தாயார் ரேவதியின் முகத்தைப் பாராமல் இருந்திருந்தால், இந்த நிகழ்ச்சி பற்றி, அவள் அதற்குமேல் கொஞ்சமும் நினைத்துக் கூட பார்த்திருக்க மாட்டாள்!

அவளுடைய அன்னையின் முகத்தில் இருந்த ஆசுவாசம், ஏதோ பெரிய சிக்கல் ஒன்று எளிதாகத் தீர்ந்துவிட்ட நிம்மதி ஏன் வந்தது? அப்படி அங்கே அப்போது பெரும் பிரச்னையாக என்ன நிகழ்ந்தது?

## 15

மனதில் இது குடையத் தொடங்கிய பிறகு, மாதவிக்கு அவளது அண்ணியின் வளைகாப்பில் ஒன்றும் ரசிக்கவில்லை!

ஒரு வகை சித்ரான்னங்களுடன் வளைகாப்பு சாப்பாடு கூட அவளுக்கு சுவைக்கவில்லை. கத்தரிக்காய், மசாலா சாதம் என்றால் பெரிதாக ஒரு வெட்டு வெட்டுகிறவள் அவள்! அன்று மரத்தூள் போல எல்லாவகை



உணவும் சுவையற்றுப் போய் விட, வெறுமனே உணவைக் கொறித்துவிட்டு எழுந்தாள்.

அம்மாவிடம் கேட்கத் தயங்குகிறவள் அல்ல மாதவி. ஆனால், இந்தக் கும்பல் எல்லாம் கிளம்பிப் போனபிறகுதான் கேட்க வேண்டும் என்று நினைத்துப் பொறுமையாகக் காத்திருந்தாள்.

ஆனால், அதற்கு அவசியமில்லாதபடி, சிக்கல் என்னவென்று, மாதவிக்கு சீக்கிரமே தெரிந்து போயிற்று!

வளைகாப்பு விழாவிற்கென்று வந்திருந்த வெளி விருந்தினர், இரண்டாம் சுற்று உறவினர் எல்லாம், உணவு முடிந்ததும், வெற்றிலை பாக்கு மஞ்சளுடன் ஆறு வளையல்களையும் அடுக்கி வைத்திருந்த அழகிய ஸ்டீல் கிண்ணங்களையும் வாங்கிக் கொண்டு கிளம்பிவிட்டனர்.

இந்துமதியை அவள் வீட்டார் மாலை ஐந்து மணிக்கு அழைத்துச் செல்வதாக ஏற்பாடு.

அண்ணனும், அண்ணியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண் கலங்குவதைப் பார்க்க மாதவிக்கு வேடிக்கையாக இருந்தது!

இத்தனைக்கும், மாதவி போலவே, இந்துமதியும் உள்ளூர் மருமகள் தான். வீட்டில் கார் இருந்தது! நினைத்தால் சென்று ரவிச்சந்திரன் மனைவியைப் பார்த்து வரலாம். என்னவோ, கண்டம் விட்டு கண்டம் செல்வது போலக் கண்ணீர் விடுகிறார்களே என்று நினைத்து, உள்ளூரச் சிரிக்கும் மாதவிக்கு வேறு நினைவு வந்தது.

அலுவலகப் பயணம் தான்! பத்து அல்லது பன்னி ரெண்டு நாட்களில் கணவன் திரும்பி விடுவான் என்று அவளுக்குத் தெரியும்தான். ஆனாலும் அந்தப் பத்துநாள் பிரிவுக்காக மாதவி எப்படி அழுதிருக்கிறாள்! அவனும் தான் எப்படி விழுந்தடித்துக் கொண்டு பஸ்சிலும் லாரியி லுமாகப் பயணம் செய்து ஓடி வருவான்!

இன்றானால், இரண்டு மாதப் பயணம் போகிறவ னுக்கு மனைவியிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகத் தோன்றவில்லை. கணவன் திரும்பி வந்து இரு பது நாட்கள் இந்த ஊரிலேயே இருந்தபோதும், எதிரும் புதிருமாக இருந்து இருவருமாக ஒருதரமேனும பேசவும் இல்லை.

சுகிர்தா கணவனைப் பிரிந்து வாழ்கிறாளே, அதற் கும் இதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

விற்பனையில் பெரிய விற்பன்னனாம்! மனைவி யின் உணர்ச்சிகளை மதித்து அவளை மகிழ்ச்சியோடு வைத்துக் கொள்ளத் தெரியவில்லை! இவனெல்லாம் ஏன் திருமணம் செய்ய வேண்டும்? ஒரு பெண்ணின் நிம்மதி யைக் கெடுப்பதற்கா?

கணவனைப் பற்றி நினைப்பு ஓடவும் மாதவியின் மனநிலை கெட்டுப் போயிற்று.

நாலரையிலிருந்து ஆறு மணி வரை ராகுகாலம் என்பதால் ஆறு பத்திற்கு மேல் இந்துமதியை அவள் வீட்டார் அழைத்துப் போவதாக ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.



மகனும் மருமகளும் விருப்பம் போல இருப்பதற் காக குளியலறையோடு கூடிய படுக்கையறை ஒன்று மகனுக்குக் கதிரேசன் கட்டிக் கொடுத்திருந்தார்.

இந்துமதியுடைய தாய், சகோதரிகள், பெரியதாய் என்று அவள் வகை உறவினர் எல்லோரும் அங்கே அமர்ந்து அவளோடு பேசிக் கொண்டு இருந்தனர்.

இந்துமதியும் மாதவியும் விருந்தினருக்காக மாலைச் சிற்றுண்டியைக் காகிதத் தட்டுகளில் எடுத்து வைத்து எல்லோருக்கும் கொடுத்தனர்.

''நான் அப்படியே வீட்டுக்குப் போய் விடுவேன். கொஞ்சம் உட்காரேன், பேசலாம்'' என்றாள் இந்துமதி யின் பெரிய தாயார்.

''சிற்றுண்டி முடிகிற நேரம் காபி எடுத்துவரப் போகலாம். நீங்களும் உட்காருங்கள், அண்ணி!'' என்று இந்துமதி அழைத்தபோதும், நாகரிகம் கருதி, அவளை அவள் வீட்டாரோடு தனித்துப் பேசவிட்டுவிட்டு, ''அப்பா எதற்கோ கூப்பிட்டார், அண்ணி நீ பேசிக் கொண்டிரு!'' என்று கூறி மாதவி விலகிச் சென்று விட்டாள்.

தாயார் கலந்து தந்த காஃபியை கப்புகளில் ஊற்றி ட்ரேயில் அடுக்கிக் கொண்டிருந்தபோது, சட்டென நினைவுவர, மாதவி கேட்டாள். ''அண்ணிக்கு வளையல் அடுக்கும்போது ஏனம்மா அப்படிப் பார்த்தீர்கள்?'' என்று விசாரித்தாள்.

''என்னது..? எப்போதும்மா?''

''அதான்மா! நான் கொடுத்த வெள்ளி வளையல் களை அப்போது போடவேண்டாம் என்று அந்த அத்தை சொன்னார்களே, அப்போதுதான்!'' என்று மகள் விளக்க வும் ரேவதியின் முகம் மாறிவிட்டது.

''அது... வந்து... ஒன்றும் இல்லைம்மா, நீ காஃ பியை ஆறுமுன் கொண்டுபோ.''

ஏதோ விஷயம் என்று தோன்றிவிட.... ''நீங்கள் சொன்னால்தான் போவேன்.. சொல்லுங்கள் அம்மா!'' என்றாள் மகள் செல்லப்பிடிவாதமாய்.

அப்போதும் தயங்கிவிட்டு, சொல்லாமல் மகள் விடமாட்டாள் என்று உணர்ந்து, ''அது... அது ஒன்றும் இல்லைம்மா... அண்ணி தவிர அவர்கள் வீட்டில் அவ்வ ளவாகப் படிக்காதவர்கள் பார்... நானும் படிக்கவில்லை தான். ஆனால் இங்கே வந்து வேறு மாதிரி... இப்போ தென்ன? நாளைக்கே மாப்பிள்ளை வந்து கூப்பிட்டால், நீ அங்கே போய்க் குடித்தனம் நடத்தப் போகிறாய்... அதற்குள் சும்மா என்னவோ ஆகாது அது இது என்று...'' என்ற முடிக்காமலே நிறுத்தினாள் பெற்றவள்.

சுகிர்தா சொன்னதுபோல வாழாவெட்டிப் பட்டம் கட்டி விட்டார்களாக்கும், இந்தப் பட்டிக்காடுகள்! நியாய அநியாயம் தெரியாத முட்டாள்கள் என்று எண்ணும் போதே, தாயின் பேச்சிலும் ஒன்று மனதில் தைத்தது.

என்னவோ நாளைக்கே மாப்பிள்ளை வந்து, மக ளோடு குடும்பம் நடத்துவார் என்று... இன்னுமா இந்தத் தாய் அப்படிக் கனவுகண்டு கொண்டிருக்கிறாள்!



அதெல்லாம் இனி அடியோடு நடவாத காரியம் என்று உடைத்து உறுதியாகச் சொல்லிவிட வேண்டியது தான் என்று எண்ணி வாயைத் திறந்த மாதவி உடனே வேறு நினைத்தாள். விருந்தினரும், விழாவுமாய் இன் றைக்குப் போய் ஏன் சொல்லவேண்டும்! அதற்கு அவகா சம் நிறைய இருக்கிறது.

இப்போதைக்கு கதவு, ஜன்னலையெல்லாம் சாத்திக் கொண்டு அறைக்குள் தன்னந்தனியே கண்களையும் இறுக மூடிக்கொண்டு படுத்துக் கிடக்க வேண்டும் போல இருந்தது அவளுக்கு.

உள்ளூர ஓர் அலுப்புடனேயே காபி ட்ரேயை இந்துமதியின் அறைக்கு எடுத்துச் சென்றவளுக்கு, அங்கே அவளைக் கண்டதும் சட்டெனப் பேச்சு நின்றது. ஆத்திரமூட்டியது!

அவளைப் பற்றித்தான் பேசிக் கொண்டு இருந்திருக் கிறார்கள்!

''ஐயோ! அண்ணி பேசிக் கொண்டே இருந்ததில் காஃபியை மறந்தே போனேன், சாரி!'' என்று இந்துமதி எழுந்து காபி கப்புகளை எல்லோருக்கும் கொடுக்கத் தொடங்கினாள்.

''ரொம்பவும் சுவாரசியமான பேச்சு போல!'' என் றாள் மாதவி கிண்டலாக...''அப்படி என்ன விஷயம் பேசினீர்கள்?'' என்று ஒரு சவால் விடும் பார்வையோடு, ஒரு காபி கப்பைச் சுந்தரியிடம் கொடுத்தபடி வினவி னாள்.

சற்றே முகம் கன்றியபோதும், உடனே சமாளித்துக் கொண்டு, ''உறவினர் சேர்ந்தால் பேச விஷயங்களுக்கா பஞ்சம்?'' என்றாள் சுந்தரி.

''உறவினர் சேர்ந்தாலோ?'' என்று தலையைச் சரித்து மாதவி கேலியாக அவளை நோக்கினாள். ''நானும் இப்போது உங்களுக்கு உறவுக்காரிதானே? என்ன பேசினீர்கள் என்று சொன்னால், நானும் கேட்டு சிரித்து விட்டுப் போகிறேன்!'' என்றாள் லேசாக மட்டம் தட்டும் குரலில்.

''இன்னும் ஒரு கப் வேண்டும், அண்ணி,'' என்று குறுக்கிட்டு இந்துமதி பேச்சைத் திசை திருப்ப முயன்றாள்.

இந்துமதியின் பேச்சு காதில் விழாத மாதிரி, என்ன என்பது போலப் புருவங்களை ஏற்றி இறக்கி, ''என்ன சத்தத்தையே காணோம்? ஒரு வேளை என்னைப் போல உறவுக்காரர்களிடம் சொல்லக்கூடாத விஷயமா?'' என்று சுந்தரி சங்கடப்படுவதை ரசித்தபடி அவளிடம் மீண்டும் மாதவி கேட்டாள்.

சட்டென முகம் கடுக்க, ''சொல்லக் கூடாததாய்ப் போவதற்கு நாங்கள் என்ன தப்பு விஷயமா பேசிக் கொண்டு இருக்கிறோம்? பூச்சூட்டலின் போதும் நீங்கள் இங்கேதான் இருந்தீர்கள். இப்போது வளைகாப்புக்கும் இங்கேதான் இருக்கிறீர்கள்! இடையில் உங்கள் வீட்டுக்கு அதாவது உங்கள் வீட்டுக்காரரிடம் போன மாதிரியும் இல்லை! ஒரு வேளை, இனி, இங்கேயே தான் நிரந்தர இருப்போ என்று பேசினோம்!'' என்று தேளாய்க் கொட்டினாள் சுந்தரி.



''அக்கா!'' என்றாள் இந்துமதி!

முகம் சிவந்துவிட, ''இது என் பெற்றோர் வீடு! என் வீடு! நான் இங்கே எவ்வளவு நாள் இருப்பதானாலும் அது என் விருப்பம்! நீங்கள் யார் அதைப் பற்றிப் பேசுவதற்கு?'' என்றாள் மாதவி ஆத்திரத்துடன்.

''அண்ணி... ப்ளீஸ்...'' என்று மீண்டும் இந்துமதி குறுக்கிட முயன்றாள்!

''ஏன் பேசக் கூடாது? நீ இங்கேயே உட்கார்ந்து கொண்டால் பிறகு என் தங்கையல்லவா படவேண்டும்!''

அக்...கா! அம்மா, அக்காவைச் சும்மா இருக்கச் சொல்லுங்கள்!'' என்றாள் இந்துமதி ஆத்திரத்துடன்.

மூத்த மகளின் வாய்க்குப் பயந்து, அதே சமயம் சின்னவளுடைய நாத்தனாரையும் பிடிக்காமல், அந்த அம்மாள், சற்றே தயங்க, மாதவி அவரிடம் பாய்ந்தாள். ''யாரைக் கேட்கிறாய்... அண்ணி! நான் ஆசையாய்க் கொடுத்த வளையலை அணியக்கூடாதென்று அரைமணி நேரம் பேசினார்களே, அவர்களையா? ஹூம்! எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்!'' என்றாள் மாதவி, ஏளனமாக.

''அண்ணி! அவர்கள் என் உறவினர்கள்! கொஞ்சம் யோசித்துப் பேசுங்கள்!'' என்று இந்துமதி சற்றுத் தணிந்த குரலில் எச்சரித்தாள்.

உதடு துடிக்க, அண்ணன் மனைவியை ஒருதரம் நேராக நோக்கிய மாதவி, சட்டெனத் தலையைத் திருப்பிக் கொண்டு அங்கிருந்து வெளியேறினாள்.

வசதியான முறையில் கட்டியிருந்த போதும், கதிரேசனின் வீடு ஒன்றும் கடல் அல்ல! சத்தம் சற்று உரத்துக் கேட்கவுமே எட்டிப் பார்த்த ரேவதியும் விஷயம் புரிந்து மகளிடம் சென்றாள்.

கோபப் பெருமூச்சுகளுடன் உட்கார்ந்திருந்த மகளிடம்தான் அவளுக்குக் கோபம். அங்கானால் கணவனோடு சண்டை போட்டு அங்கே போகவே மாட்டேன் என்று அது ஒரு களேபரம்! நல்ல மருமகள், நல்லபடியாக நடந்து கொள்கிறாள் என்று பார்த்தால் அதையும் கெடுத்து விடுவாள் போல இருக்கிறதே!

அதுவும், பிரசவத்துக்காகப் போகிற பெண்ணின் மனம் நோகப் பண்ணுவதா?

மகளைத் தட்டி வைக்கவேண்டிய நேரம் வந்து விட்டது என்று தோன்றவே, ''பெண்ணாகப் பிறந்தால் பொறுத்துப் போகத் தெரியவேண்டும் மாதவி! தப்போ சரியோ அனுசரித்துப் போக வேண்டும்!'' என்றாள்- சற்றுக் கண்டிப்பான குரலில்.

பெற்றவள்! தன்னைத் தாங்கிப் பேசாமல் பிறருக்கு ஆதரவாகப் பேசுகிறாளே!

ஆத்திரமாகத் தாயை உறுத்துவிட்டு, ''என்னைப் பற்றி பேச அவர்கள் யார்?'' என்றாள் மகள்.

''யாரா? உன் அண்ணியுடைய நெருங்கிய உறவுக்காரர்கள்! அது போதாதா? நீ அவர்களிடம் நல்ல விதமாய் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு? மாதும்மா, இதைக் கேள்! இந்துமதி நல்ல பெண். நம் எல்லோரிடமும் நல்லபடியாக பிரியமாக நடந்து கொள்கிறாள்! அவளுடைய தாயாரையும், தமக்கையையும் நீ ஏளனமாகப் பேசினால் அவளுக்கு எப்படி இருக்கும்? அதை யோசிக்க வேண்டாமா?''



''என்ன யோசிப்பது? அவர்கள் என்ன பேசினார்கள் தெரியுமா?''

''தெரியும்! தெரியும்! எல்லாம் என் காதிலும் விழுந்தது! கட்டின கணவனோடு சண்டை போட்டுக் கொண்டு, பிறந்த வீட்டில் வந்து உட்கார்ந்திருந்தால் வேறு என்ன பேசுவார்களாம்? எல்லாம் நீ இருக்க வேண்டிய இடத்தில் இருந்தாயானால், பல்லு மேலே நாக்கைப் போட்டு உன்னை யார், என்ன சொல்ல முடியும்? அதுபோல ஒழுங்கான முறையில் யோசியேன்!'' என்றாள் அன்னை.

''ஒழுங்கான முறையா? ச்சு! நீங்கள் வேறு எப்படிப் பேசுவீர்கள்? வீட்டில் உள்ள அத்தனை பேருக்கும், வாய்க்கு ருசியாய் வடித்துக் கொட்டுவது தவிர உங்களுக்குத் தான் வேறு என்ன தெரியும்?'' என்றாள் மாதவி வெறுத்த குரலில்.

''மெய்தான்! எனக்கு ஏதாவது தெரிந்திருந்தால் உன்னை இப்படியா வளர்த்திருப்பேன்! எனக்கு எதுவும் தெரியாததான்!'' என்று வேதனையோடு ரேவதி கண்ணைத் துடைக்க, அவ்வளவு நேரமும் அறைவாயிலில் நின்று கொண்டிருந்த இந்துமதி சட்டென உள்ளே வந்தாள்.

மாமியாரின் கையை ஆதரவாய்ப் பற்றியபடி, ''அத்தையில் பாதி அளவு எட்டினால் நாம் வாழ்வில் வெற்றி அடைந்தவர்கள் ஆகிவிடுவோம் அண்ணி.

இன்று வரை அத்தையைப் பற்றி ஒருவர் ஒரு குறை சொல்லி நீங்கள் கேட்டதுண்டா?'' என்றாள் அவள்!

''மாமியாரைக் காக்காய் பிடிக்கிறாயாக்கும்! அப்போதுதானே அம்மாவும் உன் பேச்சுக்கெல்லாம் ஜால்ரா போடுவார்கள்?! நன்றாகத்தான் நடிக்கிறாய் அண்ணி!''

மகளின் உக்கிரம் கண்டு ரேவதி திகைத்துப் போனாள். ''என்ன பேசுகிறோம் என்று யோசித்துத்தான் பேசுகிறாயா? இப்படிப் பேசிப் பேசித்தான் மாப்பிள்ளையையும் வெறுக்கடித்துக் கொண்டாய் போல! ஆனால் அதையெல்லாம் அங்கேயே வைத்துக்கொள்! இங்கே வேண்டாம். மட்டுமரியாதையோடு பேசுவதானால் இங்கே இரு! இல்லாவிட்டால்''.. என்ற மாமியாரைச் சட்டென வாய் பொத்தி அடக்கலானாள், இந்துமதி.

''அய்யோ அத்தை! என்ன பேச்சுப் பேசுகிறீர்கள்? அண்ணி பாவம். சும்மாவே மனம் நொந்து போய் இருக்கிறார்கள்! அவர்கள் இருவரும் எவ்வளவு பிரியமாய் இருந்தவர்கள்! பிரிந்து இருக்கும் வேதனையில் ஏதோ ஒரு வார்த்தை சொன்னால், அதைப் போய் பெரிதாக எடுத்துப் பேசுகிறீர்களே! விடுங்கள்! எனக்கு ஒன்றும் வருத்தமில்லை. அண்ணி உள்ளூர அப்படி நினைக்க மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும்.'' என்றாள் அவள்.

மனம் கூச, ''என்னை மன்னித்துக் கொள் அண்ணி. அம்மா சொன்னது சரிதான். நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது! நல்ல வேளை! நீ புரிந்து கொண்டாய்! வேறு யாராவது என்றால் வீடு இரண்டுபட்டிருக்கும்'' என்றாள் மாதவி மிகுந்த வருத்தத்துடன்.



மாமியாரை விட்டு, நாத்தனாரிடம் வந்து, அவள் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தாள் இந்துமதி. ''இவ்வளவு நாளில் உங்களைப் பற்றி இவ்வளவு கூட நான் அறிந்து வைத்திருக்கவில்லை என்றால் எப்படி? அண்ணி! உங்கள் அண்ணன் கோபமாய் ஒரு பார்வை பார்த்தாலே அன்றெல்லாம் எனக்கு கஷ்டமாக இருக்கும்! நீங்கள் என்னபாடு படுகிறீர்கள் என்று தெரியாது போகுமா... அண்ணி, நானும் உங்களிடம் மன்னிப்புக் கேட்கத்தான் வந்தேன். என் அக்கா எப்போதுமே கொஞ்சம் வருந்தப் பேசுகிறவள்தான். அவளை மன்னித்து விடுங்கள்...'' என்றாள் தொடர்ந்து.

ஒத்த வயதினளான இந்துமதி தாய்வீடு சென்று விடவும், மாதவிக்குத் தாய்வீடு மிகவும் போரடித்தது.

மரியாதையோடு பேசுவதானால், இங்கே இரு! இல்லாவிட்டால்... என்ற தாயின் பேச்சு அவளை உறுத்திக் கொண்டே இருந்தது.

மறுநாள், சுகிர்தாவிடம் அது பற்றிக் கூறி, ''அம்மா என்னிடம் இவ்வளவு கடுமையாகப் பேசக்கூடும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை, சுகி. அண்ணி மட்டும், அம்மா வாயைப் பொத்தவில்லை என்றால் அவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள்? யோசித்துப்பார்! முதலில் தனா! இப்போது அம்மா! உலகில் நான் மிகவும் பிரியம் வைத்திருந்தவர்கள் வரிசையாக என்னை வெறுத்து விரட்டுகிறார்களே!'' என்றாள் வருத்தத்துடன்.

''அடுத்து உன் அப்பாவும் சொல்வார், பார்! இந்த அம்மா அப்பாக்களே இப்படித்தான். புருஷன் என்று ஒரு மண்ணாந்தையோடு வாழ்ந்தாலும், தலைமேல்

தூக்கிக் கொண்டாடுவார்கள். அவர்கள் பார்த்து மண முடித்த கணவன் மோசம் என்றால் தாங்கமுடியவில்லை. எல்லாம் 'ஈகோ' பிரச்னை தான்! ஆனால், நீ ஏன், இதை எல்லாம் பட்டுக் கொண்டு உன் பெற்றோர் வீட்டில் இருக்க வேண்டும்? என்னைப் போல், பெண்கள் தங்கும் விடுதிக்கு வந்துவிட வேண்டியதுதானே?'' என்று யோசனை சொன்னாள் சுகிர்தா.

தலையசைத்து, ''என்னவோ பிடிக்கவில்லை, சுகி'' என்றாள் மாதவி சுருக்கமாக.

''ஏன்? அம்மா, அப்பாவை விட்டுப் போகப் பாப்பாவுக்குப் பயமா?'' என்று சுகிர்தா சீண்டினாள்.

''ஆனால், தனா 'டூர்' செல்லும்போதெல்லாம், நான் தனியேதான் இருந்தேன் தெரியுமல்லவா?'' என்று மாதவி சினம் காட்டவும், சட்டென் அந்தப் பேச்சை விடுத்து, வேறு பேசத் தொடங்கினாள்.

அன்றைக்குப் புதிய மனிதன் ஒருவனைச் சுகிர்தா, மாதவிக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

''இளங்கோ ஒரு வக்கீல், துரிதமாக விவாகரத்து பெறும் வழிகளைச் சொல்லிக் ,கொடுப்பதில் காந்தன் வல்லவர்!'' என்றாள்!

மாதவியின் உடல் ஏனோ சிலிர்த்தது.

விவாகரத்து!

என்னவோ அந்த வார்த்தை மாதவியை உலுக்கி எடுத்து விட்டது! ''இனித் தனசேகருடன் சேர்ந்து வாழ முடியாது; சுகிர்தா போலத் தனக்கும் தனிவாழ்வுதான் வாய்த்து விட்டது என்று மாதவி பலமுறை நினைத்து வருத்தப்பட்டிருக்கிறாள்.



வருத்தம் மட்டுமல்ல! கோபமாய் பிடிவாதமாகவும் கூட அப்படி நினைத்திருக்கிறாள்!

ஆனால், அவளாகத் தனசேகரனை மணவிலக்கு செய்து, அடியோடு அன்னியனாக்கி விட வேண்டும் என்று அவள் நினைத்ததே இல்லை.

அவளே நினையாததைச் சுகிர்தாவிடம் அவள் எப்படிச் சொல்லியிருக்க முடியும்?

பின்னே ஏன் இவள் விவாகரத்து வக்கீலை வர வழைத்திருக்கிறாள்.

திகைத்த பார்வையுடன் மாதவி சிலையாக நின்று விட, மற்ற இருவரும் அதன் காரணம் புரியாமல் விழித்தனர்.

''ஏய்! என்ன மாதவி? என்ன இது? என்னமோ பேயைக் கண்டமாதிரி விழிக்கிறாய்?'' என்று சினேகிதியின் தோளைப் பற்றிக் உலுக்கினாள் சுகிர்தா.

''ஒருவேளை என்னைப் பார்த்தால், உங்கள் தோழிக்கு அப்படித்தான் தோன்றுகிறதோ என்னவோ? பார்வைக்கு நான் ஒன்றும் பேரழகன் இல்லைதான் என்றாலும், பேய் போலவா தோன்றுகிறேன் மேடம்?'' என்று இலகுவாய்ச் சிரித்தபடி வினவினான் வந்திருந்த அந்தப் புதியவன், இளங்கோ!

சுதாரிக்க வெகுவாக முயன்றபோதும், ''நீங்... நீங்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்ட போது மாதவியின் குரல், பாதிக் காற்றாகத்தான் வெளி வந்தது.

சட்டெனப் புரிந்து கொண்டு சுகிர்தா சிரித்தாள். ''அப்பாடியோவ்? உன் அருமைக் கணவனிடமிருந்து உனக்கு மணவிலக்கு வாங்கித் தருவதற்காக இவர் இங்கே வரவில்லை தாயே! சற்று ஒழுங்காய் மூச்சுவிட்டு, உருப்படியாகத் தானே இரு!'' என்று அவள் சொன்ன பிறகுதான், மாதவிக்கு ஒழுங்காக மூச்சே வந்தது.

''பின் ஏன் இவர் இங்கே வந்திருக்கிறார்?''

''என் விடுதலைக்காக!'' என்றாள் சுகிர்தா பதட்டம், படபடப்பு எதுவுமின்றி.

திகைப்புடன், ''நீ... நீதான் முன்பே... சுகி... நீ இன்னமும் விவாகரத்து பெறவில்லையா?'' என்று மாதவி வினவினாள்.

''இன்னும் இல்லை!'' என்று சுகிர்தா அலுத்துக் கொண்டாள்! என்னைத் திருமணம் செய்துகொண்ட செக்குமாட்டிடமிருந்து இன்னமும் நான் முழுவிடுதலை பெற்றாகவில்லை! காரணம் நான்தானோ என்று நினைத்து விடாதே! உன்னைப் போல 'சென்டிமென்ட்' எல்லாம் எனக்குக் கிடையாது, பார். தாலியைக்கூட எப்போதோ கழற்றி வேறு நகையாக மாற்றி விட்டேன்!...''

''சுகி, ப்ளீஸ்...''

''என்ன ப்ளீஸ்'? மீண்டும் 'சென்டிமென்ட்டா? சரி விடு, விஷயத்தை மட்டும் சொல்கிறேன்'! எனக்கு இன்னமும் மண விடுதலை கிடைக்காததுதான் காரணம். நம் நாட்டு மடத்தனமான சட்டம்! கல்யாணம் ஆன



நாளிலிருந்தே தகராறு என்றாலும் திருமணமாகி ஓர் ஆண்டு காலமாவது முடிந்த பிறகுதான் 'டைவர்ஸ்' கேட்க முடியுமாம்! விவாகரத்து வேண்டும் என்று கேட்கவே ஓர் ஆண்டு! அப்புறம், அந்தக் கேசை நம் 'குடும்ப' நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள ஓர் ஆறு மாதங்கள்! அப்புறம் மேலும் மடமடவென்று விஷயத்தை முடிப்பார்களா? அதுவும் இல்லை. அதற்குப் பிறகும் 'ரிகன்சிடரேஷன் ஆபீசர்' என்று ஒரு ஓய்வு பெற்ற அதிகாரி யாரையாவது வைத்து இருவருக்கும் சமாதானம் செய்து வைக்க முயற்சி நடக்கிறது! இவர்கள் என்ன, நீதிமன்றம் நடத்துகிறார்களா அல்லது ஏதேனும் தொண்டு நிறுவனமா? சே!சேசே! சுத்த மோசம்! விவாகரத்து வேண்டும் என்றால் 'இந்தா' என்று கொடுக்க வேண்டியதுதானே? சும்மா இழுத்தடித்துக் கொண்டு நம் வரிப்பணத்தை வீணாக்கிக் கொண்டு...''

''ஏன் அப்படி இழுத்தடிக்கிறார்கள்?... பொதுவாய், நம் நீதிமன்றங்களின் நடைமுறையே ரொம்பவும் ஆமை வேகம்தான்! இல்லையா சுகி?!''

''அதுவேறு மாது! இங்கே கணவன் மனைவி சமாதானமாய்ப் போய்விட வாய்ப்புகளும் கால அவகாசமும் கொடுக்கிறார்களாம்!''

''அது நல்லதுதானே சுகி! ஒரு திருமணம் நிலைப்பதற்காக...''

''மண்ணாங்கட்டி! நிலைக்கிற திருமணம் என்றால் விவாகரத்து வரை வருமா? இவர்கள் இன்றைக்குச் சமாதானப்படுத்தி அனுப்பினால் அப்புறம் சண்டையே

இல்லாமல் இருவரும் சொர்க்க வாழ்வு வாழ்ந்து விடப் போகிறார்களாக்கும்! மணவிலக்கு வேண்டும் என்றால் பேசாமல் 'இந்தா' என்று கொடுத்துத்தொலைக்க வேண்டியதுதானே?''

மாதவி பதில் ஏதும் சொல்லவில்லை. அவளுக்கு உள்ளூர நம் அரசாங்கத்தின் முயற்சி மிகவும் பிடித்து விட்டிருந்தது. எவ்வளவு செலவு பண்ணி, என்ன பாடு பட்டு, பெற்றவர்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்கிறார்கள்! அதை, எடுத்தேன், கவிழ்த்தேன் என்கிற மாதிரி சட்டென இல்லையென்று ஆக்குவது தப்பல்லவா?

அந்த இளங்கோவிடம் திரும்பி, ''இப்போது, சுகிர்தாவின் விவாகரத்து வழக்கை நடத்தத்தான் வந்திருக்கிறீர்களா?'' என்று மெதுவாய் வினவினாள்.

வழக்கு நடத்துவதா?!

''அய்யய்யோ! மற்ற வழக்கு மாதிரி விவாகரத்து வழக்கும் என்று எண்ணினீர்களா? இந்த மணவிலக்கு வழக்குகள் நடக்கும் குடும்ப நீதிமன்றங்களில் வக்கீலுக்கு இடமே கிடையாது! பேச்சு வார்த்தை எல்லாம் வாதியும் பிரதிவாதியும் தான் வைத்துக் கொள்ள வேண்டும்!'' என்றான் அவன்.

''பின்னே...''

''பின்னே இதில் உனக்கென்னடா வேலை என்கிறீர்களா? விவாகரத்து வேண்டி மனுப்போடும் போது எப்படிச் செய்வது, உரிய வாசகங்கள், என்னென்ன



அடிப்படையில் மணவிலக்கு கோருவது... இந்த மாதிரி விஷயங்களில் உதவத்தான்!''

''ஆமாம்! மாதவி! கணவன் மனைவி இருவரும் சேர்ந்து ஒருமனதாய் மண விலக்கு பெற விரும்பினால், விவாகரத்து சீக்கிரம் கிடைக்கும் என்று அதற்குரிய சட்டக் குறிப்பை இவர்தான் கொடுத்தார். அதன்படி அனேகமாக, இன்னமும் ஓரிரு மாதங்களில் நான் முழு சுதந்திரப் பறவை ஆகி விடுவேன்!'' என்றாள் சுகிர்தா மகிழ்ச்சியோடு.

என்னவோ, மாதவியால், இந்த மகிழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ள முடியவில்லை!

ஆனால், சுகிர்தாவுடைய கணவன் மாதிரி ஒருவனிடமிருந்து விடுதலை கிடைப்பது நல்லதுதான்..

''சுகி, இதற்கு உன் கணவரும் சம்மதிக்க வேண்டுமல்லவா? ஒருவேளை அவர் மறுத்தால்?

''அவன், ஏன் மாதவி, மறுக்கப் போகிறான்? இந்தத் திருமணம் ரத்து ஆனால்தானே அவன் அடுத்த திருமணம் செய்ய முடியும்? அதற்காகவாவது மணவிலக்குக்கு உடனே ஒத்துக் கொண்டுதானே தீருவான்? ஏற்கனவே ஒத்துக் கொண்டு விட்டான் தெரியுமா?''

மாதவிக்கு இது அநியாயமாய்த் தான் பட்டது! மனைவி இறந்தாலும் கணவன் புது மாப்பிள்ளை! மற்றபடி விலகினாலும் அப்படியேதானா? பெண்ணுக்கு மட்டும் வேறு மாதிரியாகி விடுகிறதே!

ஒரு பெருமூச்சுடன், அவள் மீண்டும் ஸ்டூடியோவுக்குள் சென்றாள்.

இளங்கோ, கிளம்பும்போது மாதவியையும் அழைத்து விடைபெற்றான்.

''உங்களுக்கும், உங்கள் கணவருக்கும் ஒத்துப் போகவில்லை என்று சுகிர்தா சொன்னாள். உங்களுக்கு வேண்டுமானால் ஒரு மனு எழுதிக் கொண்டு வரவா?'' என்று அவன் கேட்கவும், மாதவிக்கு மீண்டும் நெஞ்சுக்குள் பிசைந்தது.

''ஏய் இளங்கோ! சும்மா அவளைக் கலக்காதே! மாதவியெல்லாம் வேறு ரகம். விவாகரத்து செய்யும் தைரியம் எல்லாம் அவளுக்குக் கிடையாது! இப்போது அவள் கணவன் வந்து, அழைத்தால் கூடப் பின்னாலேயே அவன் கால்பிடிக்க ஓடி விடுவாள்! சும்மா பகல் கனவு காணாதே!'' என்றாள் சுகிர்தா, விளையாட்டாய் இளங்கோவின் தோளில் தட்டி.

''அதுதானே பார்த்தேன்! இவ்வளவு அழகான அயிட்டமெல்லாம் இப்படி மாட்டிக் கொண்ட கேசாய்த் தான் இருக்கிறது! எனக்கு அதிர்ஷ்டமே கிடையாது. என்ன செய்வது? நான் வரட்டுமா, மாதவி? எப்போது மனதை மாற்றிக் கொண்டால் ஒரு தகவல் அனுப்புவீர்கள் என்று நம்புகிறேன்!'' என்று கூறித் தன் விசிடிங் கார்டை எடுத்துக் கொடுத்தான்.

அவள் அதை மிகுந்த தயக்கத்துடனேயே வாங்கவும், '' சும்மா வாங்கிக் கொள்ளுங்கள் மாதவி. விவாகரத்துக்காக மட்டும் தான் என்னைக் கூப்பிட வேண்டுமா



என்ன? ஒரு நண்பனாக... ஒரு பேச்சுத் துணையாக... நீங்கள் எப்போது, எதற்கு.... அழைத்தாலும் நான் வருவேன்!'' என்று சிரித்தான் அவன்.

''ஏய், ஏய், பெரிய ஆள்தான் நீ! பேச்சுத் துணை வருகிறாயா? வாயிலேயே கொடுப்பேன்! மாதவி ஒன்றும் அப்படி எளிதாகப் பழகுகிறவள் அல்ல, தெரியுமா? கிளம்பு!'' என்று இலகுவாகப் பேசிய சுகிர்தா, கைப்பையை எடுத்துக் கொண்டு, ''மாது, நான் இளங்கோவோடு கொஞ்சம் வெளியே போய் விட்டு வருகிறேன். 'பொட்டிக்'கையும் ஒரு கண் பார்த்துக் கொள்!'' என்று கிளம்பிச் சென்றாள்.

இந்தப் பேச்சுகளில் ஏதோ ஒன்று மாதவியின் அமைதியைக் கெடுத்து அவளை அலைக்கழித்தது... மனதிற்கு ஒவ்வாத ஏதோ ஒன்று என்னவோ ஒரு கன்னிப் பெண்ணிடம் முயல்வது போன்ற குறிப்புடன் கூடிய வார்த்தைகள் அந்த இளங்கோவின் பேச்சில்.... ஏன், சுகிர்தாவின் பேச்சில் இருந்தது போலத் தோன்றியது. தோன்றி அவளை கூச வைத்தது.

இது, கபடமற்ற கேலியாகவும் இருக்கலாம்! ஆனால், மாதவியின் மனம் சற்றுக் கலங்கிப் போயிற்று.

தனசேகரன் மட்டும் ஒழுங்காக அவளோடு குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தால், வெறும் விளையாட்டாய்க் கூட இப்படி அவளிடம் யாரால் பேச முடியும்? தைரியம் வருமா?

சுகிர்தா உதவிக்கென்று அமர்த்தியிருந்த பெண், ஏதோ சம்பளத் தகராறு என்று நின்று விட்டாள். வேறு

ஆள் வைத்துப் பார்க்கும் அளவுக்கு 'பொட்டிக்'கிலும் அப்படி ஒன்றும் விற்பனை இல்லாததால், வேறு ஆள் யாரையும் சுகிர்தா வேலைக்கு அமர்த்தவில்லை. எனவே, அவ்வப்போது சுகிர்தா வெளியே செல்லும் போது, 'பொட்டிக்'கைக் கவனித்துக் கொள்வது மாதவி யின் பொறுப்பாயிற்று.

அதைப் பற்றி மாதவி பொருட்படுத்தவும் இல்லை! அவளுக்கு எவ்வளவோ பெரிய உதவி செய்திருப்ப வள்... செய்து கொண்டே இருப்பவள் சுகிர்தா.

முதலில் அவளது சொந்த வருமானம் என்று ஒன்று ஏற்படக் காரணமே அவள்தானே? அது இருப்பதால் தான், தனசேகரனின் பாராமுகத்தோடு பெற்றோரின் கோபம், குமுறல்களையும் கூடத் தைரியமாக எதிர் நோக்க முடிகிறது? இப்படி ஒரு சுய வருமானம் இல்லா மல் இருந்திருந்தால், முதலிலேயே தனசேகரனின் அலட் சியங்களையும் அநியாயங்களையும் உள்ளூர வேத னைப்பட்டபடியே பொறுத்துப்போக நேர்ந்திருக்கும். அப்போது விலகிப் பிறந்த வீடு சென்றிருந்தாலும், பின்னர் பெற்றோரின் வற்புறுத்தலுக்குப் பணிந்து மீண் டும் கணவன் வீடு சென்று, முன்னிலும் கேவலமாய் சுகிர்தா சொல்வது போலத் தனசேகரனின் கால் மிதியாய் வாழ நேர்ந்திருக்கும்!

அதெல்லாம் இல்லாமல் அவள் தன்மானத்தோடு வாழ்வதற்கு வகை செய்ததற்கு நன்றிக்கடன் செலுத்த இதுமட்டுமின்றி, இன்னமும் கூட எவ்வளவோ செய்ய லாம் என்று மாதவி நினைத்தாள்.



ஆனால், இதுபோன்ற இடையூறுகள் காரணமாய், தேவையான அளவு படங்களை வரைய முடியாமல் போகவே, அவற்றை வீட்டுக்கு எடுத்துப் போய் வரை யத் தொடங்கினாள்.

என்னேரமும் சுறுசுறுப்பாய், வீட்டினரின் தேவை அறிந்து பணி செய்வதில் இந்துமதி கெட்டிக்காரி. சமைய லறைப் பொறுப்பை மாமியார் பார்த்துக் கொள்ள மற்ற வகையில் குடும்ப இயந்திரம் எளிதாய் இயங்க இங்கித மாய் உதவி வந்தாள்.

மாமனார் வந்ததும் கைப்பையை வாங்கி வைத்து, குடிக்கத் தண்ணீர் கொடுத்து, முகம் பார்த்துக் களைப்பு அறிந்து, நேரத்துக்குத் தக்கபடி காஃபியோ, மோரோ கொடுத்து உபசாரம் செய்வாள். கணவனுக்கும் அப்ப டியே! ரேவதிக்கும், பூஜை வேளைப் பூப்பறித்து வைப் பது, பூஜையறை சுத்தம் செய்வது, அங்கே இங்கே பொருட்கள் கலைந்து விடாமல் பார்த்துக் கொள்வது வேலையாட்களை மேற்பார்வை பார்ப்பது எளிய, ஆனால் மிகவும் தேவைப்பட்ட உதவிகள்!

இப்போது, அவள் தாய் வீடு சென்றுவிட, இந்த இதங்கள் இல்லாமல், எல்லோரும் திணறினர்.

இதுபற்றி யோசித்து உதவுகிற எண்ணமே இல்லா மல், அலுவலகம் சென்று வேலை பார்க்கிறவள் போலத் தினமும் படம் வரையப் போய்விட்டு வந்ததோடு, வீட்டிலும் வண்ணங்களை வைத்துக் கொண்டு உட் கார்ந்த மாதவியிடம் எரிச்சல் வந்தது.

திருமணமாகும் முன் இதெல்லாம் மாதவி செய்தது தானே? செல்லச் சிரிப்பும், விளையாட்டுமாக வண்ணத் துப் பூச்சியாய் பறந்து பறந்து செய்யவில்லையா? இப் போது படமா முக்கியம்?

"என்னம்மா! வேலை முடிந்து களைத்துப் போய் வந்திருக்கிறேன். ஒரு காபி தரக்கூடாதா? அது என்ன கண்ணராவி, கிறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கி றாயே!" என்றார் தகப்பனார்.

"அம்மாவுக்கு உதவக்கூடாதா?" என்று வெடு வெடுத்தான் தமையன்.

"இப்படி இருந்துதான் மாப்பிள்ளைக்கு வெறுத்து விட்டதுபோல' என்று தொடர்ந்து பேசியதுதான் அவ ளுக்குத் தாங்க மாட்டாமல் போயிற்று.

"கிறுக்குகிறேனா? எனக்குச் சோறு போடுகிற கலை யைப் போய் அப்பா கிறுக்குகிறேன் என்கிறாரே!" என்று தாயிடம் குமுறினாள்.

"என்ன பேசுகிறாய்? உனக்குச் சோறுபோட என்று நீ சம்பாதிக்க வேண்டுமா? நாங்கள் கேட்டோமா? பார்த்துத் தந்ததை வேண்டாமென்று வந்துவிட்டாலும், உனக்குச் சோறு துணி அப்பா தரமாட்டாரா? இந்து இங்கே இல்லாததற்கு நீ கொஞ்சம் ஏந்திச் செய்யக் கூடாதா? என்பது அவருக்கு! அதில் என்ன தப்பு?" என்றாள் ரேவதி.

மாதவி தாயை வெறித்துப் பார்த்தாள்.

ரேவதியின் 'நாங்கள்' அந்த வீட்டில் அவளைத் தனிமைப்படுத்தியது!



ஒரு பெண்ணுக்குத் திருமணம் ஆகிவிட்டால், அது வரை 'நாம்' ஆக இருந்தது மாறி, அவள் வேற்றாளாகி விடுகிறாள்! 'நாங்கள் கேட்டோமாவா'மே!

"இந்து, இந்து" என்று எல்லோரும் வாய்க்கு வாய் சொல்வது மாதவியின் பொறாமையைத் தூண்டியது. இருபத்தி இரண்டு ஆண்டுகளாக அவள் தான் இருந்த வீட்டை அன்னியமாகிவிட்டளே என்று ஆத்திரமாக எண்ணி விட்டு, உடனேயே அவள் தன்னை நேர்ப்படுத் திக் கொண்டாள்.

அண்ணன் மனைவி நல்லவளாகக் கிடைத்து, இந்த வீட்டோடு பொருந்தி கொண்டது அவர்களது அதிர்ஷ் டம்!

அதை நினைத்து சந்தோஷப்பட வேண்டுமே தவிர, தன்னை அன்னியமாக்கி விட்டதாக எண்ணி ஆத்திரப்ப டுவது தவறு. மாதவியை இந்துமதி அன்னியமாக்க வில்லை. மாதவியின் திருமணத்தன்றே அவள் இந்த வீட்டுக்கு அன்னியமாகிவிட்டாள்! அவளுடைய குடும் பம் வேறாகி விட்டது! வீடும் மாறிவிட்டது!

அவளுக்குள்ளேயே அந்த அன்னியத் தன்மை இருப்பதால்தான், அவள் சம்பாதித்த பணத்தில், வீட்டுக் குப் பழம் பண்டங்கள் வாங்கி போட்டுக் கொண்டே இருக்கிறாள். மற்றபடி, உணவுக்கும், உறைவிடத்துக்கும் என்று பணமாய்க் கொடுத்தால், பெற்றோர் அண்ணன் எல்லோரும் அதை அவள் மூஞ்சியிலேயே விசிறிய டித்து விடமாட்டார்களா!

யோசித்துப் பார்த்தபோது, இந்த வீட்டை விட்டும் விலகி விடுவது மேலோ என்று தோன்றியது! குழந்தையை எடுத்துக் கொண்டு இந்துமதி வந்துவிட்டால், அவளை எல்லோரும் கொஞ்சுவதில் நிச்சயமாக இவள் மனது கெட்டுவிடும்! இப்போதே கூட இவர்கள் எதிர் பார்க்கிற மாதிரி படம் வரைவதை விட்டுவிட்டு இந்த வீட்டைப் பார்த்துக் கொண்டிருக்க அவளால் முடியாது! படம் வரைந்தாக வேண்டும்! சுய சம்பாத்தியம் இருந்தாக வேண்டும்! அடிமனதின் திடத்துக்கு, அது கட்டாயம் வேண்டும்!

சுகிர்தாபோல, ஒரு பெண்கள் விடுதியில் தங்கிக் கொள்வதுமேல் என்று தோன்றிவிட்டது, அவளுக்கு.

ஆனால், அதை மெள்ளத் தாயாரிடம் சொன்ன போது, ரேவதி கண்ணீர் விட்டு அழுதாள்.

''நீ என்ன, யாரும் இல்லாத அனாதையா! நாங்கள் எல்லோரும் செத்தாபோய் விட்டோம்! அப்பேர்ப்பட்ட புருஷன் பிடிக்கவில்லை என்று வந்துவிட்டாய்! தலை விதி ! ஆனால் இந்த வீடு இருக்கும் போது, ஒருத்தரும் இல்லாத மாதிரி விடுதி கிடுதி என்று போனாயானால், என்னை ரொம்ப நாள் உயிரோடு பார்க்க மாட்டாய்!'' என்று அழுதாள்.

''என்னம்மா! நீங்கள் ஏதேதோ பேசுகிறீர்கள்?! சுகிர்தா அங்கே நன்றாகத்தான் இருக்கிறேன் என்கிறாள். என்னைப் பார்த்துப் பார்த்து நீங்களும் வேதனைப்படுகிறீர்களே என்று தான் சொன்னேன்! பிடிக்கவில்லை என்றால் விடுங்கள்!'' என்று பெற்றவளை மாதவி சமாதானப்படுத்தும்படி ஆயிற்று.



சமாதானப்படுத்தினாளே தவிர அவள் மனது முற்றிலும் மாறிவிடவில்லை. பெற்றோர் ஒத்துக் கொள்ளும்படி செய்வது எப்படி என்று யோசித்த வண்ணமே இருந்தாள்!

நேர்மாறாக, மனைவியிடமிருந்து விஷயம் அறிந்த கதிரேசன், மகள் மனதிலிருந்து அந்த நினைவை அடியோடு அகற்றுவதில் முனைந்தார். வீட்டில் சமையலுக்கு என்று தனி ஆள் வைத்தார். உதவிக்குச் சிறுமி ஒருத்தி. ரேவதி மேற்பார்வையிடுதல் மட்டும் என்றானபோது, வீடு இலகுவாக நடந்தது. மேலும் மகள் அறியாமல் அவளைக் கண்காணித்தார்.

இந்நிலையில் தன் அலுவல் 'டூர்' முடித்துக் கொண்டு தனசேகரன் திரும்பி வந்தான்.

## 16

மாதவியுடைய கணவனின் நடமாட்டங்களைப் பற்றிச் சுகிர்தா ரகசியமாக விசாரித்து அறிந்தது போலக் கதிரேசனும் தெரிந்து கொண்டிருந்தார். ஆனால் அவளைப் போல ரகசியமாக அல்ல.

வெளிப்படையாக தனசேகரன் எப்போது வருகிறார் என்று கேட்டுத் தெரிந்து கொள்வார்.

இந்த முறை தனசேகரன் திரும்பி வந்ததும் அவசரமாகச் சென்று அவனைச் சந்தித்தார்.

வீட்டில் நடந்தவை பற்றிய விவரங்களை மருமகனிடம் ஒளியாது உரைத்து விட்டு, ''ஆனால், மாதவி மேல்

வேறுமாதிரி ஒரு தப்பும் கிடையாது மாப்பிள்ளை! நான் உளவு ஏஜென்சி ஆள் வைத்தே விசாரித்தும் விட்டேன்'' என்று அவர் மேலும் சொன்ன போது, சற்று நேரம் தனசேகரன் ஒன்றுமே சொல்லவில்லை.

பிறகு, ''மாமா, இதை நீங்கள் சொன்னீர்கள்! அதனால் பொறுத்துக் கொண்டேன்! தயவு செய்து, மாதவியை உளவு பார்க்கிற வேலை, இனி செய்ய வேண்டாம்! நீங்கள் குறிப்பிட்டது போன்ற தப்பு எதுவும் அவளிடம் இராது என்று எனக்கு வெகு நிச்சயமாகத் தெரியும்!'' என்றான் உணர்ச்சி துடைத்த குரலில்.

சட்டென்று மருமகன் முகத்தைப் பார்த்தார் கதிரேசன்.

குரலை ஒத்ததுபோலத் தனசேகரனின் முகத்திலும் உணர்ச்சி துடைக்கப்பட்டிருந்தது.

பார்வை தழைந்து விட, ''மன்னித்து விடுங்கள் மாப்பிள்ளை!'' என்றார் பெரியவர்'' நீங்கள் தப்பாக நினைத்து விடக் கூடாதே என்று... உங்களுக்குச் சந்தேகம் வந்து விட்டால்...'' என்று அவர் தடுமாற, ''வராது'' என்றான் மருமகன் சுருக்கமாக.

''அது போதும், மாப்பிள்ளை!'' என்ற மாமனாரின் குரல் கரகரக்கவும், தனசேகரனுக்கு மனம் இளகிப் போயிற்று.

லேசாக முறுவலித்து, ''போதாதுபோல இருக்கிறதே, மாமா!'' என்று சற்று லகுவான குரலில் கூறினான். ''அந்த சுகிர்தா! அவளை மாதவியிடமிருந்து விலக்கியாக வேண்டும். அது, நடந்தால் தான் எல்லாம் நல்லபடியாக ஆகும்!'' என்றான் தொடர்ந்து.



''அப்படியானால், இனிமேல் அந்தப் பெண்ணோடு பழகக் கூடாது என்று மாதவியிடம் அதட்டிச் சொல்லி விடட்டுமா?'' என்று கேட்ட கதிரேசன், தனசேகரன் லேசாகத் தலையசைக்கவும் ''அது சரிவராது, இல்லையா மாப்பிள்ளை என் மகள் உடனே கொம்பேறி மூக்கனாய் ஆகி, அவளோடு கூட அந்த விடுதிக்கே போய் உட்கார்ந்து கொள்வாள்! ஆனால், இப்போது சும்மா இருந்தாலும், தகராறாகி விடும்போல் இருக்கிறதே!'' என்று கவலைப்பட்டார்.

சற்று யோசித்துவிட்டு, ''மாதவியிடம் சொன்னால் தானே மாமா, அப்படி ஆகும்? சுகிர்தாவிடம் முயற்சித்தால்?'' என்ற மருமகனை விசித்திரமாய் நோக்கினார் அவர்.

''அந்தப் பெண் துணிந்த கட்டை, மாப்பிள்ளை! என் மனைவியை விலக்கி விடு என்று நீங்கள் சொன்னால், கேட்டுக் கொண்டு சும்மா ஒதுங்கி விடுகிறவள் அவள் அல்ல!''

''சும்மா சொன்னால் அப்படித்தான்! ஆனால், சொல்லுகிற விதமாய்ச் சொன்னால்?... மாமா, அந்தப் பெண் பற்றி எனக்குச் சந்தேகம் உண்டு. அவள் எதனால் கணவனைப் பிரிந்து வாழ்கிறாள் என்று விசாரிக்கிறேன். விசாரித்து, 'உன் வண்டவாளத்தை எல்லாம் ஆதார பூர்வமாக மாதவியிடம் சொல்லி விடுவேன்! மரியாதையாக நீயாக அவளைவிட்டு ஒதுங்கிப்போ!' என்று மிரட்டினால்? மாதவி, குணக்கேடுகளைச் சகிக்கமாட்டாள். அடியோடு மாதவியை இழப்பதைவிட ஒரு

'பிசினஸ்' தொடர்பாகப் படங்களை வாங்கி, விற்க மட்டுமாய் இருந்து கொள்வது என்றால் அவளுக்கும் சம்மதமாகவே இருக்கும்!''

''என்ன படம், மாப்பிள்ளை! இவள் வரைந்து சம்பாதிக்கவிட்டால் குடியா முழுகிவிடும்? பேசாமல் இந்தப் படம் கிடம் எல்லாவற்றையும் ஏறக்கட்டித் தூரப் போடும் படி மாதவியிடம் கறாராய்ச் சொல்லிவிட வேண்டியதுதான்!''

மறுப்பாய்த் தலையசைத்தான் மருமகன். ''இல்லை, மாமா, வரைவதில் அவளுக்கு ஈடுபாடு இருக்கிறது. வரைந்து முடிக்கும்போது, ஒரு பரவசம் தோன்றுவதாக அவளே சொல்லியிருக்கிறாள்! அது விற்றுப் பணம் வரும்போது கூடுதல் மகிழ்ச்சி வேறு! அதை நாம் தடை செய்யக் கூடாது. ஆனால், எதற்கும் அவளது வடிகால் சுகிர்தா தான் என்று இருப்பதைத்தான் நாம் மாற்றியாக வேண்டும்! அதற்கு வேண்டிய ஏற்பாடு நான் செய்கி றேன்! நீங்கள் நிம்மதியாக இருங்கள்'' என்றான்.

மாமனார் கிளம்புமுன், ஒரு ரசகுல்லா டின்னைக் கொடுத்தான். ''இந்த டூர் பங்களா தேஷ் வரை போய் வந்தேன், மாமா. வரும்போது கல்கத்தாவில் வாங்கி னேன். மாதவிக்குப் பிடிக்கும்.... நான் கொடுத்தேன் என்றால் சாப்பிட மாட்டாள். யாரோ உங்கள் நண்பர் கொடுத்ததாகச் சொல்லி அவளிடம் கொடுங்கள்!'' என்று கூறி மாமனாரை வழியனுப்பி வைத்தான்.

கதிரேசனிடம் கூறியது போலவே, கிடைத்த நேரத் தில் சுகிர்தாவைப் பற்றி விசாரித்தான் தனசேகரன்.



நிறைய விவரங்கள் கிடைத்தன.

அந்த விவரங்களை எல்லாம் மாதவியிடமே சொல் லலாமா கூடாதா என்று யோசித்தான். சொன்னால், அவள் காது கொடுத்துக் கேட்க வேண்டுமே!

சுகிர்தா பற்றிச் சும்மா, குறிப்பாக ஒரு வார்த்தை சொன்னால் கூட, எகிறுகிறவள் மாதவி! அதுவும், இருவ ரும் நல்லபடியாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருந்த போதே அப்படி! இப்போது அவன் சொல்வதில் ஒரு வார்த்தை ஏற்பாளா!

இவனது குடும்ப ஒற்றுமைக்காக, 'நீ உன் குடும்ப அவலத்தை வெளிப்படையாகச் சொல்லு' என்று சுகிர்தா வுடைய கணவனைத்தான் கேட்க முடியுமா? கேட்டா லும், அதில் பயன் இருக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை!

சுகிர்தா என்ற பெயரைச் சொன்னால், அந்தக் குடும்பமே நொந்து போவது நன்றாய்த் தெரிகிறது.

இந்த வழி சரியில்லை என்று எண்ணி, சுகிர்தாவி டம் நேரடியாகப் பேசுவது என்று தனசேகரன் முடிவு செய்தான்.

சுகிர்தாவை அவளது 'பொட்டிக்'கில் சந்தித்துப் பேச முடியாது! அங்கே மாதவி இருப்பாள். சுகிர்தா தங்கியிருந்த பெண்கள் விடுதியிலும், அவள் பொதுவா கத் தாமதமாகத்தான் விடுதிக்குத் திரும்புவாள் என்றார் கள். இரவு ஏழு மணிக்கு மேல் பார்வையாளர்களுக்கு அனுமதி கிடையாதாம்!

இப்படிப்பட்ட நிலைமையிலும், அவளை எங்கே எப்படிச் சந்தித்துப் பேசுவது என்று தனசேகர் விரைவிலேயே திட்டமிட்டு விட்டான்.

ஆனால், அலுவலக நேரங்களிலும், பிறகும் கூட அதைச் செயலாக்க முடியாத சூழ்நிலை அமைந்து அதைத் தள்ளிப்போடும்படியாக ஆயிற்று.

பங்களாதேஷ், ஒரு குட்டியான அண்டை நாடு தான் என்றாலும், அங்கே, நிறுவனத் தயாரிப்புகளுக்குக் கிடைத்த வரவேற்பு, வேறு பல விஸ்தரிப்புகளைச் செய்யும் தைரியத்தை நிர்வாகத்துக்கு அளித்தது. மேற்கொண்டு பல திட்டங்களை நிர்வாகம் தீட்டுவதில் ஒரு வெளிநாட்டில் நல்ல விற்பனை ஏற்படுத்தித் தந்த தனசேகரும் பங்கேற்க வேண்டியிருந்தது. அவன் அலுவலக வேலைக்குப் பின் வாங்குகிறவன் அல்ல என்பதால் தன் சொந்த வேலையைக் கவனிக்க அவனுக்கு நேரம் கிடைப்பது அரிதாகிப் போயிற்று.

இதெல்லாம் தாண்டி, ஒருநாள் தனசேகரன் சுகிர்தாவைச் சந்தித்துப் பேசினான்.

அப்படிச் சந்திக்கும் வாய்ப்புக்காக அவன் ஒரு சிறு தந்திரம் செய்திருந்தபடியால், அவனைக் கண்டது சுகிர்தாவுக்கு அதிர்ச்சியைத் தந்தது.

மாதவி முன்பு சொன்னதை அடிப்படையாகக் கொண்டு, மாதவியின் சித்திரங்கள் மொத்தமாகத் தேவை என்றும், அதுபற்றியும் வேலை மற்றும் விவரங்கள் குறித்தும் பேசுவதற்காக இருவருமாக அவனைச் சந்திக்க வரும் படியாக ஒரு பொய்ப் பெயரில் அவன் சுகிர்தாவிடம் அழைப்பு விடுத்தான்.



பண விவரம் பேச, சுகிர்தா மாதவியை அழைத்து வரமாட்டாள் என்பது அவனுக்கு நிச்சயம். இருவரையும் சேர்த்தே அழைத்ததால், தவறான நோக்கம் இராதென்று சுகிர்தா துணிந்து வருவாள் என்றும் தனசேகரன் நினைத்தது போலவே அவளும் வந்தாள். வந்து, அங்கே தனசேகரனைக் கண்டதும் திகைத்த போதும், சமாளித்துக் கொண்டு, எடுப்பாகப் பேசியபடியே நழுவவும் முயன்றாள்! அது முடியாமல் நின்றாள்!

அவளுடன் வார்த்தையாடுவதில் தனசேகரனுக்கு என்றுமே விருப்பம் இருந்ததில்லை! இப்போது கேட்க வேண்டுமா? அவனது எச்சரிக்கை, சுருக்கமாகவும், நேரடியாகவும் இருந்தது.

மாதவியின் கலை மூலம் சுகிர்தா சம்பாதிப்பது பற்றி அவனுக்கு அக்கறை இல்லை! ஆனால், அவளது சொந்த வாழ்வில் தலையிடுவதைச் சுகிர்தா நிறுத்திக் கொள்ள வேண்டும். ஸ்டூடியோவை இடம் மாற்றிவிட வேண்டும்; பட விஷயமாகப் பேச எப்போதாவது தொடர்பு கொள்வது தவிர, மற்றபடி அவள் மாதவியை நெருங்கக் கூடாது! இதை அவளாகச் செய்யாவிட்டால், சுகிர்தாவின் சொந்த வாழ்வு - அவளது கணவனையும் புகுந்த வீட்டினரையும் அவள் படுத்தி வைத்தபாடு - நடத்திய விதம் பற்றி மாதவியிடம் சான்றுடன் விளக்கி, சுகிர்தாவின் முகத்தில் கூட மாதவி விழிக்காமல் தனசேகரன் செய்து விடுவான்! எனவே மாதவியின் படங்களின் மூலம் கிடைக்கும் வருமானம் நிலைக்க வேண்டுமானால், அவன் கூறியபடி அவள் மாதவியிடமிருந்து விலகி இருந்து கொள்ள வேண்டும்!

கடுமையும், கண்டிப்பும் நிறைந்த குரலில், இதைச் சொல்லி முடித்த பின் அரைக்கணம் கூடத் தனசேகரன் அங்கே நிற்கவில்லை.

சுகிர்தா பணத்தில் கெட்டி, பேராசை பிடித்தவள்! என்பது தனசேகரனின் அனுமானம். எனவே, மாதவியின் படங்களின் மூலம் வரக்கூடிய பணத்தை விட்டு விடக் கூடாது என்பதுதான் அவளது முக்கியமான குறிக்கோளாக இருக்கும். அதனால், அந்தப் பணத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே, அவள், அவனது மிரட்டலுக்குப் பணிந்து விடுவாள் என்று அவன் நினைத்தான்! நிச்சயமாக எதிர்பார்த்தான் எனலாம்!

எனவே, அவசியம் என்று அவன் நினைத்ததைச் சொல்லிவிட்டு அதற்குமேல் அரைக்கணம் கூட அங்கே நில்லாமல், அவள் முகத்தை ஏறிட்டும் பாராமல் மடமட வென்று சென்று விட்டாள், அவ்வளவுதூரம், சுகிர்தா இருந்த இடத்தில் நிற்கக் கூட அவனுக்கு வெறுப்பாக இருந்தது!

மறுநாள் அலுவலகம் சென்றபோது, அவனது வாழ்வின் பொருளாதார உயர்வுக்கான பெரும் வாய்ப்பொன்று அவனுக்காக அங்கே காத்திருந்தது. அவனது வேலைத் திறமைக்கான பெரும் பரிசு!

பங்களாதேஷில் தனசேகரன் கொணர்ந்த வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, கீழ்த்திசை நாடுகள் அனைத்திலும், அவர்களது உரவிற்பனையைத் தொடங்க நிறுவனம் திட்டமிட்டிருந்தது.



தென்கிழக்கில் ஆஸ்திரேலியா வரையும், செல்ல முடிவு செய்தார்கள். மையான்மா, மலேஷியா, தாய்லாந்து, ஜாவா, சுமத்ரா என்று வரிசையாகக் கிளைகள் திறக்க நிறுவனத்தின் எம்.டி. முடிவு செய்திருந்தார்.

அவற்றுள் பல நாடுகளில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிருந்த போதும், உலக முழுவதும் அவர்களுக்கு உதவ முன் வந்துள்ளதை மனதில் கொண்டு, உரம் என்பது அவர்களின் விளைச்சலைப் பெருக்குவதற்கு உதவும் என்கிற அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவு அது.

அந்தந்த நாடுகளில் தேவைப்பட்ட காலம் தங்கியிருந்து, டீலர்களை நியமிப்பது, அன்னியச் செலாவணி, பணம் கொடுக்கல், வாங்கல் பற்றிய ஏற்பாடுகள் செய்வது என்று அனைத்தும், தனசேகரனிடம் ஒப்படைக்கப்பட்டன. அந்தந்த இடத்திற்கேற்றபடி முடிவெடுக்கும் அதிகாரமும் தரப்பட்டது! கொடுக்கப்பட்ட பொறுப்புக்கு ஏற்றபடி நல்ல அலவன்சும், வேலையில் உயர்வும், பெரும் சம்பள அதிகரிப்பும் கூட அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

சாதாரணமாக என்றால் தனசேகரன் உற்சாகத்தில் துள்ளிக் குதித்திருக்க வேண்டிய விஷயம்! ஆனால், இப்போது அவன் மனம் தடுமாறியது. வாங்குகிற சம்பளத்துக்கு முழுமையாக உழைக்க வேண்டும் என்ற கொள்கையை உடைய அவனுக்கே, இங்கெல்லாம் கிளைகள் திறந்தால், ஆண்டுதோறும் ஒரு தரமேனும் மேற்பார்வையிடச் சொல்லவேண்டியிருக்குமே, குடும்ப வாழ்வு என்ன ஆகும் என்ற கவலைதான் பெரிதாக உண்டாயிற்று!

அதை அவன் மெல்லக் குறிப்பிட்ட போது, உரக் கம்பெனி அதிபர் அதற்கும் தீர்வு சொன்னார். அடுத்த ஆண்டுகளில், இந்தப் பயணங்களைக் குடும்பத்தோடு சென்று, நிறுவனச் செலவில், விடுமுறைக்கால வேலையாகச் செய்யும்படி கூறினார்.

அப்போதும் முழுமையற்ற முக்கால் சம்மதமாகவே தலையாட்டி விட்டு, தனசேகரன் தன் மாமனாரைச் சந்தித்தான்.

விவரம் அறிந்த கதிரேசனுக்கு ஒரே மகிழ்ச்சி. ''எனக்குத் தெரியும் மாப்பிள்ளை! நீங்கள் அந்த அளவுக்கு இந்த அளவு மட்டுமென்ன, இதற்கு மேலும் முன்னேறுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்ததால் தான் என் மகளையே உங்களுக்குக் கொடுத்தேன்!'' என்று அவர் தன்னையும் சேர்த்துப் பாராட்டிக் கொண்டார்.

''ஆனால் மாமா, இந்த 'டூர்' கிளம்பினேன் என்றால், திரும்பிவர ஆறுமாதமேனும் ஆகிவிடும். இருக்கும் நிலையில் மாதவி என்ன நினைப்பாளோ என்று தான் கவலையாக இருக்கிறது!'' என்றான் தனசேகரன் சுரத்தின்றி.

''மாதவிதானே? இப்போது இருக்கிற மாதிரி இன்னும் ஆறு மாதம் இருக்கட்டும்! ஒரு வகையில், உங்களுக்குள் இந்தச் சிறு தகராறு வந்ததும் நல்லது தான் மாப்பிள்ளை! இல்லாவிட்டால், 'எத்தனை மாதமானாலும் என் வீட்டிலேயே தனியாகவே இருப்பேன்' என்று உங்கள் வீட்டிலேயே உண்ணாமல், உறங்காமல் கிடந்து உடம்பைக் கெடுத்துக் கொண்டிருப்பாள். இங்கே, எப்படியும் அவள் அம்மா அவளைச் சாப்பிட வைத்து விடுவாள். நீங்கள் தைரியமாகப் போய் வாருங்கள்!''



என்ற கதிரேசன், மருமகன் முகம் தெளியாதது கண்டு, ''மாப்பிள்ளை, வாழ்க்கையில் ஒருவனுக்கு ஒரு சந்தர்ப்பம் தான் கிடைக்கும்! அதை நழுவ விடாமல் பிடித்து, நல்லபடியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களுக்கு இது அஸ்திவாரம் போடுகிற காலம் மாப்பிள்ளை! அடிப்படையை உறுதியாக அமைத்துக் கொண்டு விட்டீர்கள் என்றால், பிறகு அனுபவிக்கப் போகிறவள் என் மகள்தானே? பயணத்தை நல்லபடியாக முடித்துக் கொண்டு திரும்பி வந்து, கை நிறையக் காசைக் காட்டினால் மாதவி தானாகச் சரியாகி விடுவாள்'' என்று முடித்தார்.

தலையசைத்து, ''மாதவி, பணத்தைப் பெரிதாக மதிக்கிறவள் இல்லையே மாமா!'' என்று தனசேகரன் மேலும் கவலையே காட்டினான். ''அவளை நினைக்கும் போது இந்த உயர்வும் வேண்டாம் வெளிநாட்டுப் பயணமும் வேண்டாம் என்று கூறி விடலாமா என்று கூடத் தோன்றுகிறது!''

பிசினஸ் மாமனாருக்கு மருமகனின் பேச்சு சரியாகப்படவில்லை. ''நீங்கள் இங்கு இருந்துதான் பெரிதாக என்ன நடக்கிறது, மாப்பிள்ளை? சும்மா, கொஞ்சம் ஆறப்போடுங்கள்! அதற்குள், இந்துவும் பிள்ளையோடு வந்து விடுவாள்! அது விளையாடுவதைப் பார்க்கும் போது, இவளுக்கும் பிள்ளை ஆசை வந்து விடும்! சும்மாவே உள்ளூர அவளுக்கு உங்கள் நினைப்புதான். நீங்கள் திரும்பிவரும்போது அவளும் மனம் இளகி

விட்டிருப்பாள். நீங்கள் வந்ததும், 'வாம்மா' என்று ஒரு வார்த்தை சொன்னால், போதும்! அப்புறம் அப்பனாவது அம்மையாவது! உங்களை விட்டு நகரமாட்டாள்! பாருங் கள்!'' என்று உற்சாகமூட்டி மருமகனை அனுப்பி வைத் தார்.

அவரது பேச்சு நம்பிக்கையூட்ட, தனசேகரன்; தன் வெளிநாட்டுப் பயணத்தைப் பல இனிய கனவுகளுட னேயே தொடங்கினான்.

கதிரேசனும், தான் முழுமனதாக நம்பியதைத்தான் மருமகனிடம் சொன்னார்.

ஆனால், அவர்கள் இருவருமே சுகிர்தாவை அறிந் திருக்கவில்லை! அவளது பாம்புக் குணத்தைப் பற்றிச் சிறிதும் தெரிந்து கொண்டிருக்கவில்லை.

எனவே, வெகுசில நாட்களிலேயே, மணவிலக்கு கோரி, குடும்ப நீதி மன்றத்தில், மாதவி மனு செய்வாள் என்றும் அவர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

## 17

சிறுவயதிலிருந்தே, தான், தனது என்கிற எண்ணம் மிகுந்து வளர்ந்தவள் சுகிர்தா.

ஏங்கித் தவமிருந்து காலம் கடந்து பெற்ற மகள்! அவளுக்குப் பிறகு பிறந்த இரண்டும் கூடப் போய் விடவே, சுகிர்தா அவளுடைய பெற்றோரின் உயிர் நிலையானாள்.



அவர்களால் இயன்றவரை, சுகிர்தா கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்தனர்.

அப்படிக் கேட்டது கிடைக்காதபோது அவள் பேயாட்டம் ஆடினாள்.

சுகிர்தா வளர வளர, அவளது ஆசைகளும், ஆட் டங்களும் கூடவே வளர்ந்தன.

ஏற்கெனவே நோஞ்சானாயிருந்த, அவளுடைய தாயாரும் மறைந்து விட, பெற்றவளின் கண்டிப்பு, அடியோடு அவளுக்கு இல்லாது போயிற்று. தந்தையி டமோ, தாயற்ற பெண் என்கிற சலுகை வேறு.

அவளது திருமணத்திற்காக, தகப்பனாரின் சேமிப்பு, சொத்து அவ்வளவையும் செலவழிக்கச் செய் தாள். அவரது ஓய்வுகால ஊதியமும், ஊரில் பிரிந்து விற்கக் கூடிய சில குடும்ப நிலங்களின் மூலம் வந்த கூட்டுக் குத்தகைப் பணமும், இருந்ததாலே அவர் பிழைத்தார் எனலாம்.

சுகிர்தா, முகுந்தனைத் திருமணம் செய்து கொண்ட தன் முக்கிய காரணமே, அவளை மணம் பேசி வந்தவர்க ளுள் அதிகப் பணம் படைத்திருந்தது அவனது குடும்பம் என்பதுதான். தந்தையற்ற அவனிடம்தான் தொழில் நிர்வாகம் இருந்தது.

திருமணமாகி வந்ததுமே சுகிர்தா தன் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கி விட்டாள்.

தேனிலவிலேயே, அவளது உபதேசம் முகுந்தனுக் குத் திகட்டிப் போயிற்று.

சிறுவயதிலிருந்தே கடமை உணர்வோடு வளர்ந்த வன் அவன். மூன்று தங்கைகளுக்கும் நல்ல வாழ்வை அமைத்துக் கொடுப்பதாகத் தந்தை இறக்குமுன் அவருக் குக் கையடித்துக் கொடுத்திருந்தான். அவனுடைய தாயும் பாசத்தின் வடிவம் எனலாம். தங்கைகளுக்கும் அண் ணன் என்றால் உயிர்.

அந்தத் தங்கைகளையும், தாயையும் வீட்டை விட்டு விரட்டி விடவேண்டுமாம்! முழு வருமானத்தையும் கொண்டு இவர்கள் இருவரும் ராஜபோகமாய் வாழ வேண்டுமாம்!

முதலில் வேடிக்கைக்கு ஏதோ சொல்கிறாள் என்று எண்ணிய முகுந்தன், பல முக்கியமான தருணங்களிலும் கூட சுகிர்தா இதை வற்புறுத்திப் பேசவும், திகைத்துத் திணறித் திண்டாடிப் போனான்.

அவளது விருப்பம் நடக்க முடியாதது என்று அவன் தெளிவுபடுத்தவும், வழக்கம் போலப் பேயாட் டம் ஆடினாள்.

அதிர்ச்சியுற்று மலைத்தபோதும், அவமானம் என்று கூசியபோதும், அவன் தன் கடமையிலிருந்து சற்றும் இறங்கி வருவதாக இல்லை!

மனைவியின் கோர மனதைத் தங்கைகள், தாயிடமி ருந்து முகுந்தன் மறைக்க நினைத்தது நடக்கவில்லை.

அவ்வளவுதான். அமைதியாக வாழ்ந்திருந்த அந் தக் குடும்பம் கலங்கிக் குன்றி தலைகுனிந்து நிற்கும் அளவு உரக்கக் கத்தி, ரகளை செய்தாள். கையில்



கிடைத்ததை எடுத்து வீசினாள். கொடும் வார்த்தைக ளைப் பேசி கண்ணீர் விட்டுக் கதற வைத்தாள்.

சுகிர்தாவுடைய தந்தை விஷயமறிந்து வந்து புத்தி சொல்லி ஒரு பய்னும் இல்லை. திருமண வயதை எட்டிக் கொண்டிருந்தவளிலிருந்து அப்போதுதான் வயதுக்கு வந்திருந்த சிறு பெண் வரை யாரையும் சுகிர்தா விட்டு வைக்கவில்லை! தரக் குறைவாய், இட்டுக் கட்டிப் பேசி அவர்களது நல்ல பெயரையே அவள் நாறடிக்க முயன்ற போது முகுந்தன் ஒரு முடிவுக்கு வந்தான்.

ஓரளவு பணத்தைக் கொடுத்து சுகிர்தாவை விலக்கி விட்டான்.

அந்த அளவு பணத்தில் அவளுக்குத் திருப்தி இல்லைதான். ஆனால் முகுந்தன், தவிர, மூன்று பெண் கள், தாயார் எல்லோருக்கும் சமபங்கு வைத்து, முகுந்த னின் வருமானத்தில் அவனது தேவை போக அவளுக் குச் சட்டப்படி வரக்கூடிய தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால், அதைவிட முகுந்தன் கொடுக்க முன் வந்த பணம் அதிகமாகவே இருந்தது!

எனவே பணத்தை வாங்கிக் கொண்டாள்.

காலம் கடந்து கண் விழித்த தந்தையின் புத்திமதிக ளைக் கேட்கப் பிடிக்காமல், பெண்கள் விடுதி ஒன்றில் போய்ச் சேர்ந்து கொண்டாள்.

'பொட்டிக்' வைத்து, சுரிதாரும், சேலையும் விற்க லாம். நல்ல லாபம் வரும் என்று முடிவு செய்து தொடங்கினாள்.

திருமணத்தை ரத்து செய்யக் கோரி மனு கொடுத்தது முகுந்தன் தான். அதில், இன்னமும் பணம் கிடைக்குமா என்று வழிமுறை கண்டறியத்தான் சுகிர்தா வக்கீலை நாடியது!..

'பொட்டிக்'கிலும், சுகிர்தா நினைத்ததுபோலப் பணம் நிறைய வரவில்லை! இடத்துக்கு வாடகை கொடுத்து, துணி வாங்கி கணக்குப் பார்த்தால் வரவுக்கும் செலவுக்கும் தான் கட்டி வந்தது!

புத்திசாலித்தனமாக, முகுந்தன் கொடுத்த பணத்தில் பாதியைத்தான் சுகிர்தா தன் 'பொட்டிக்'கில் முதலீடு பண்ணியிருந்தாள். பேசாமல் 'பொட்டிக்'கை மூடிவிட்டு, மீதிப் பணத்தின் வட்டியிலேயே வாழ்வது மேலோ என்று அவள் யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் பொன் முட்டையிடும் வாத்தாய் மாதவி அவளுக்குக் கிடைத்தாள்!

இப்போது, அந்த வாத்து கைவிட்டுப் போய் விடுமா! என்னதான், 'படங்களை வாங்கி விற்றுக் கொள்' என்று தனசேகர் சொன்னபோதும் சுகிர்தாவுக்கு அதில் நம்பிக்கை இல்லை. முதலில் மாதவியின் நட்பை வெட்டி விட்டால் பிறகு தொழிலில் மட்டுமான உறவை அறுப்பது மிக எளிது! படத்தின் மூலம் வருமானத்தை அதிகப் படுத்திக் காட்டினால் போதுமே!

அந்த வருமானத்தைக் காட்டுவது கடினமும் அல்ல! மாதவியின் சித்திரங்களுக்குக் கிராக்கி நன்றாகவே இருந்தது!

மாதவியை விட்டு அடியோடு விலக்கப்பட வேண்டிய, முக்கியமான ஆள் அவளுடைய கணவன்தான் என்று சுகிர்தா முன்பே முடிவு செய்திருந்தாள். அதற்கான முயற்சியில் ஓரளவு வெற்றியும் கண்டிருந்தாள். இனி முழுவெற்றி பெற வேண்டியதுதான் என்று நினைத்து, அதற்கான வாய்ப்புக்காக, 'உறு மீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்காய்க் காத்திருந்தாள்.



அவள் காத்திருந்த தருணம் கிட்டியதும், வினாடி கூட வீணாக்காமல் செயல்பட்டாள்.

ரகசியமாக விசாரித்து தனசேகரனின் நடமாட்டங்களைப் பற்றி அறிந்து கொள்வது எப்போதும் அவளது வழக்கமே! இப்போதும் அப்படியே விசாரித்து, அவன் வெளிநாடு செல்லப்போவதையும் அறிந்து கொண்டாள்.

தனசேகரன் வெளிநாடு செல்வதற்கு முன்பான இருதினங்களும் சுகிர்தா எதற்கும் அஞ்சினாள், கலங்கினாள்; எப்போதும் விழிகளில் நீர்த் ததும்ப சோகமாகவே இருந்தாள். மாதவி, அதைக் கவனித்துவிட்டால், தன் உணர்ச்சிகளை மறைக்க வெகுவாக முயன்றாள்.

கவலையும் பயமும் ஓர் உருவாகிவிட்ட தோற்றம்!

அவளது விவாகரத்தைப் பற்றிய உணர்ச்சி வெளிப்பாடு என்பதாக மாதவி ஊகித்தாள்.

ஒரு திருமணம், நல்ல இல்லறம் நடத்துவோம் என்று கண்ட கனவு கலைந்து விட்டதே என்கிற கவலை! இனித் தனியாக எப்படி வாழப் போகிறோமோ என்கிற பயம்!

ஏன், மாதவிக்கு இல்லையா, இந்தப் பயமும் கவலையும்? குழப்பமும் வேதனையும் கூடத்தான்!

இதெல்லாம் தீர என்ன செய்வது என்று புரியாத மலைப்பு வேறு!

எண்ணிப் பார்த்தால் தானே இந்த வேதனை என்று கணவன் நினைப்பு வந்தாலே, வேறு ஏதாவது வேலை யில், வரைவதில் ஈடுபட்டு மறக்க முயல்வது... அன்றா டம் நிகழ்வதுதானே!

சுகிர்தாவின் திருமணம் விரைவிலேயே ரத்தாகி விடும் என்ற தகவல் ஏதும் கிடைத்ததோ என்னவோ?

இந்த சோகத்தை ஆற்ற வார்த்தைகள் கிடையாது என்று முதலில் ஒதுங்கிப்போன மாதவி, சுகிர்தா விசும் பத் தொடங்கவும் தாங்கமாட்டாமல் தோழியிடம் சென் றாள்.

அவசரமாக கண்ணைத் துடைத்து, முகத்தைச் சீர்ப டுத்திக் கொள்ள முயன்ற தோழியின் முதுகை லேசாக வருடி, ''ஷ் கட்டுப்படுத்திக்கொள். சுகிம்மா! நீயாக விரும்பிக் கேட்ட விவாகரத்துதானே? அது வரப்போகி றது என்று இப்படிக் கலங்கலாமா?'' என்று கேட்ட மாதவியின் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைக்கலாமா என்று வந்தது சுகிர்தாவுக்கு.

இந்தக் கவலையும் பயமும் ஏன் என்று கேட்டுப் பேச்சைத் தொடங்குவாள் என்று பார்த்தால், இவ்வளவு முட்டாள்த்தனமாக அதற்கு ஒரு காரணத்தை மாதவியே கற்பித்துக் கொண்டு மற்றவளைத் தேற்ற வேறு வந்து விட்டாளே!

முகுந்தனைப் பிரிவது குறித்து, இவ்வளவு காலம் கழித்து இப்போதா கலக்கம் தோன்றிவிடப் போகிறது! மூடம்! நீர் மூடம்!



உள்ளூரப் பொங்கிய ஆத்திரத்தைப் பெருமுயற்சி செய்து, சுகிர்தா அடக்கிக் கொண்டாள். சொல்லப் போனால், மாதவி முட்டாளாய் இருப்பது தான் அவளுக் கும் வசதியாய் இருக்கிறது!

எனவே, குனிந்து, கண்ணீரை துடைப்பவள் போல, முகத்தைச் சரியான பாவனைக்கு கொணர்ந்து விட்டு, சுகிர்தா மீண்டும் நிமிர்ந்தாள்.

''என் திருமணம் முறிந்தது என் தலைவிதி, மாது! அது மாற்ற முடியாது என்பது முதலிலேயே தெரிந்து விட்டதால், அதற்காகப் படவேண்டிய வேதனை எல் லாம் ஏற்கெனவே பட்டு முடிந்து விட்டேன்! ஆனால் இது வேறு விஷயம்! மானம் பற்றியது! அவமானம் நேர்ந்து விடுமோ என்று அதை நினைக்கவே நெஞ்சு பதறுகிறது! உடல் நடுங்குகிறது!'' என்றவளின் உடல் குலுங்குவதைக் கண்டு மாதவி திகைத்தாள்.

தோழியைத் தோளோடு அணைத்து, ''என்ன விஷ யம், சுகி?'' என்று விசாரித்தாள்.

தோழி மீண்டும் உடல் நடுக்கவும், ''கஷ்டமாயிருந் தால் விட்டுவிடு சுகி, சொல்ல வேண்டாம்!'' என்றாள் ஆறுதலாக.

சொல்லாமல் இருக்கவா இந்தப் பாடு? பல்லைக் கடித்துவிட்டு, உடனேயே முகத்தைச் சோகமாக மாற்றி, ''சொல்வதற்கு, எனக்கு, உன்னை விட்டால் யார் இருக்கி றார்கள், மாது?'' என்று விசும்பினாள் சுகிர்தா.

''இப்படி அழுகிறாயே! என்ன நடந்தது, சுகி?'' என்று கவலையுடன் மாதவி விசாரித்தாள்.

''அது... அதை உன்னிடம் எப்படிச் சொல்வேன்! அய்யோ? உன்னிடமே நான் எப்படிச் சொல்லுவேன்?'' என்று புலம்பிவிட்டு, ''அப்புறம் நீ தனசேகரனை அடியோடு வெறுத்து விடுவாயே!'' என்றுரைத்துக் கண்ணீர் வடித்தாள் சுகிர்தா.

மாதவி திகைத்துப் போனாள்! சுகிர்தாவின் துன்பத்தின் காரணம் தனசேகரனா? எப்படி? இந்த அபலைப் பெண்ணுக்கு அவன் என்ன தீமை செய்திருக்கக் கூடும்?

''அவர் என்ன செய்தார் சுகி?'' என்று மாதவி ஆத்திரத்துடன் தோழியைக் கேட்டாள்.

''இதுவரை ஒன்றும் செய்யவில்லை'' என்று உதடு குவித்துப் பதவிசாக உரைத்தாள் சுகிர்தா.

மாதவியின் முகத்தில் எரிச்சல் எட்டிப் பார்க்கவும், உடனேயே, ''ஏதேதோ செய்யப் போவதாக மிரட்டினார்!'' என்று மீண்டும் உடல் நடுங்கினாள்!

''என்ன செய்யப்போவதாக மிரட்டினார்?'' என்றாள் மாதவி முகமும் குரலும் இறுக.

''என்னை... என்னை...''

''உன்னை?''

''என்னை என்னை ஏதாவது பொது இடத்தில் ரவுடிகளை விட்டு நி.. நிர்வாணமாக்கி அவமானப்படுத்தப் போவதாக... மாது! அப்படி ஏதும் நேர்ந்தால் நான் செத்துவிடுவேன்... அய்யோம்மா! நினைக்கவே பயம்... பயமாய் இருக்கிறதே!'' என்று அவள் கூறியபோது, அவளது உடம்பு ஒரேயடியாக வெட வெடவென்று நடுங்கியது.



''என்னது? நி..நிர்வா.. சே! சொன்னது தனுவா? அவரா இப்படிச் சொல்லி உன்னை மிரட்டினார்? பெண்ணை மதிக்கிறேன், பெண்மையை மதிக்கிறேன் என்றுவிட்டு இப்படி எப்படி..? என்னால் நம்பவே முடியவில்லையே! என்ன அநியாயம்! ஆனால், ஏன்? ஏன் அப்படிச் செய்வாராம்? உன்னை எதற்காக அப்படி மிரட்டினார் சுகி? ஏன்? எதற்காக அப்படிச் செய்வாராம்?'' என்று படபடத்தாள் மாதவி.

''எல்லாம் உனக்காகத்தான்!'' என்றாள் சுகிர்தா. மீண்டும் மாதவி பேச அவகாசம் கொடுக்காமல், ''என் தலையீடு இல்லை என்றால், ஆணாதிக்கம் கிடையாது, என்பது போல ஓரிரண்டு வார்த்தைகளிலேயே மயங்கிப் போய், அவரது காலை நக்கிக் கொண்டு நாய் போல அவர் வீட்டில் நீ கிடந்திருப்பாயாம்...''

''நாய் மாதிரியா?''

''ஆமாம்! அவர் காலையே சுற்றிக் கொண்டு வாலை, ஆட்டாத நாயாக இருந்தாயாம்! நான் வந்து, பணம் சம்பாதிக்க வழி சொல்லிக் கொடுத்து, சுதந்திரம் கற்றுக் கொடுத்து உன்னைக் கெடுத்துவிட்டேனாம்! பின்னிருந்து நான் கொடுக்கிற பலம் இல்லையென்றால், நீ முன் போலவே அவர் காலடியே தஞ்சம் என்று மீண்டும் அவரிடம் போய் விடுவாயாம்! அதனால், உன்னை விட்டு நான் விலகி விடவேண்டும் என்றும், விலகாவிட்டால்... விலகாவிட்டால் அடியாளைவிட்டு... துணிமணியை உருவி...''

''சொல்லாதே!'' என்று வீறிட்டாள் மாதவி. ''என்ன திமிர்! காலடியில் கிடப்பேனாமா? அதைக்

கெடுத்ததற்காக உன்னை அவமானம் செய்வாராமா? இதோ, அவரையே நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதரி நாலு கேள்வி கேட்கிறேன்! இவர் காலடியில் நான் என்றைக்கு விழுந்து கிடந்தேன் என்று நாலுவார்த்தை நன்றாக விசாரிக்கிறேன்!'' என்று ஆத்திர மிகுதியால் கை நடுங்க, தனசேகரனின் அலுவலக டெலிஃபோன் நம்பரை டயல் செய்தாள்.

அங்கே யாரோ ஃபோனை எடுத்து தனசேகரன் அன்று வெளிநாடு சென்று விட்டதாகவும், திரும்பிவரப் பல மாதங்கள் ஆகும் என்றும் சொன்னார்கள்.

''மிரட்டுவதும் மிரட்டி விட்டுக் கோழையைப் போல ஓடிவிட்டாரே? சுத்தப் பயந்தாங்குள்ளி! இவரிடம் போய் நீ ஏன் பயப்படுகிறாய்? அவருக்கு உன் கிட்டே வரக்கூடத் தைரியம் வராது! பயமற்று இரு!'' என்றாள் மாதவி சுகிர்தாவிடம்.

''இரண்டு நாட்களில் வெளியூர் வெளிநாடு போவ தாக அவரே சொன்னார், மாதவி. போய்விட்டு வரும் போது நீ அவர் வீட்டில் பழைய மாதிரி 'எப்ப வரு வாரோ?' என்று அவருக்காக வழிமேல் விழிவைத்து உருகிக் கொண்டு இருக்க வேண்டுமாம்! என். பேரே உனக்கு மறந்து போய்விடவேண்டுமாம்! இல்லாவிட் டால்... இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்று தான்...''

மாதவி எதுவும் கூறாமல் திகைத்து நிற்கவும், ''வேண்டுமானால் அவர் உத்தரவிட்டதுபோல நாம் விலகி கொள்வோமா, மாதும்மா! ஆனால், என் தனிமை வாழ்வில், என் துயரத்தின் நடுவில் எனக்குத் தென்பூட் டும் தென்றலாக என் வாழ்வில் வந்தாய்! உன்னைப்



பார்த்த பிறகு தான் எனக்கு உயிர் வாழும் ஆசையே வந்தது! இனி உன்னைப் பிரிந்து எப்படித்தான் உயி ரோடு இருக்கப் போகிறேனோ தெரியவில்லை...'' என் றாள் அழுகுரலில் சுகிர்தா.

மனமுருகி அவளது கையைப் பற்றி ''நான் உன்னை ஒருநாளும் பிரியமாட்டேன். சுகிர்தா'' என் றாள் மாதவி!

''அதற்கு வழியில்லையே! மாதும்மா! தனசேகரன் திரும்பி வரும்போது நாம் பிரிந்துவிடவில்லை என்றால் ... அப்போதும் எனக்குச் சாவது தவிர வேறு வழியி ராதே!''

''அதெல்லாம் ஒன்றும் பயப்படாதே சுகி, அவர் மிரட்டுவது போல் எல்லாம் ஒன்றும் செய்ய முடியாது.''

''முடியும் மாது! ஐந்தாயிரம் ரூபாய் கொடுத்தால் அதுபோலக் கொடுமை செய்ய எத்தனையோ ரவுடிகள் இருக்கிறார்கள்! கொஞ்சம் பணம் செலவு செய்தால் போலீசே கண்டுகொள்ளாமல் ஒதுங்கிக் கொள்ளும்! எப்படியும் இந்த ஆறுமாதத்திற்குப் பிறகு நான் உயி ரோடு இருக்க வழியே இல்லை, மது. ஒன்று உன்னைப் பிரிவதால் சாகவேண்டும்! அல்லது... அவமானப்பட்டு சாகவேண்டும்... இதிலிருந்து மீள... அடடே ஒரு வழி இருக்கிறதே!'' என்று உற்சாகத்துடன் துள்ளிக்குதித்த சுகிர்தா... ''அது என்ன?'' என்று மற்றவள் கேட்கு முன்பே சோர்ந்தாள்.

''இல்லை மாது! அது சரிவராது! நான் ஒருத்தி படுகிறபாடு போதாதா? நீ வேறு அதேபோல வேதனைப் பட வேண்டுமா? ஊகூம்.. வேண்டாம், நீ உன் கணவ

னோடு போய் விடு. அவன் நாயாய் நடத்தினால் என்ன? நாய்க்கும் சாப்பாடு போடுவார்கள்தானே? நீ பட்டினி கிடந்து சாக நேரிடாது...''

''அது என்ன வழி, சொல்லு!'' என்றாள் மாதவி சுருக்கமாக.

''அதுவந்து, வே... வேண்டாம் மாதவி!''

''சொல்லு!''

''பார் மாது, அவர் திரும்பி வருகிற சமயம், அவரது கால் பிடித்துவிட நீ அவரது வீட்டில் இருக்க வேண்டும் என்று தனசேகர் நினைக்கிறார்! ஆனால், அப்படிப்பட்ட நிலைமைக்கு வழியே இல்லை என்று ஆக்கி விட்டால்?''

''எப்படி?''

''அவரோடு வாழ விருப்பம் இல்லை என்று விவாக ரத்து மனுச் செய்துவிட்டால்..'' என்று கேட்டபடி ஓரக் கண்ணால் மாதவியின் முகத்தைச் சுகிர்தா பார்த்தாள்.

அதில் அதிர்ச்சியையும் மலைப்பையும் கண்டு விட்டு, அதைக் காணாதது போல எதையோ யோசிக்கும் பாவனையோடு...''ஆனால், அது சரி வராது என்று தோன்றுகிறது! உன்னால் தனசேகரனை அடியோடு பிரிந்து வாழ முடியாது! இப்போதும், உன் மனதை ஒரு பொருட்டாக நினையாமல், உன்னிடம் ஒரு வார்த்தைக் கூடச் சொல்லாமல், வெளிநாடு அதுவும் மாதக்கணக்கில் வெளிநாடு சென்றபோதும்கூட, உனக்கு அவரிடம் இருக்கும் காதல்.. அவரது அலட்சியத்தை மறக்கச் செய்துவிடும்! உன் வீட்டாரும் ''பொறுத்துப் போ'' என்று தான் புத்தி சொல்வார்கள். சரி, சில கேவலங்களைச் சகித்துக் கொண்டால் கணவனோடு கூடி வாழலாமே என்றுதான் உனக்கும் தோன்றும்!... என்னைப் போல அசட்டுத் தன்மானம் இருந்து என்ன லாபம்? இப்படித் தனிமர மாய்த்தானே நிறக வேண்டியிருக்கிறது. பேசாமல், சுய கவுரவத்தை மறந்து விட்டுத் தனசேகர் திரும்பி வந்ததும் அவரிடமே போய்விடு! நான்... ஒரு கெட்ட சேதி காதில் விழுந்தால் நீ இரண்டு சொட்டுக் கண்ணீர் விடுவாயல்லவா? அதுவே எனக்குப் போதும்!'' என்றாள் உருக்கத்துடன்.



சற்று நேரம் மாதவி தீவிரமாக யோசித்தாள்.

சுகிர்தா சொன்னதில் என்ன தவறு இருக்கிறது? மனைவியின் உணர்ச்சிகளைச் சற்றும் மதியாமல், அவளிடம் ஒரு வார்த்தை அனுமதி கேளாமல் வெளிநாட்டுக்கே போய் விட்டான்! அவளோ உள் நாட்டிலேயே அத்தனை நாட்கள் பிரிந்து செல்வதை ஆட்சேபித்த மனைவி! அலட்சியம்தானே! அவமதிப்புத்தானே? புரியாத முட்டாளுக்கு முகத்தில் அடித்துப் புரிய வைக்கிறான்.

இவனோடு இனி வாழ்வது, தன்மானத்தை விழுங்கிக் கொண்டு வாழ்வது நாய் வாழ்வு போலத்தான்! அவசியமா அவளுக்கு?

அது மட்டுமல்ல! சுகிர்தாவிடம் எவ்வளவு கேவலமான மிரட்டல்?! அனாதரவாய் நிற்கும் ஓர் அபலைப் பெண்ணை இப்படி மிரட்டியவனோடு எப்படி வாழ்வது? அவ்வளவுகாலம் கூட வாழ்ந்தும் அவள் அறியாத ஈனன் அவன்!

மெல்ல நிமிர்ந்து மாதவி சுகிர்தாவைப் பார்த்தாள்.

''விவாகரத்து வேண்டி மனுக் கொடுக்கத் தேவை யானதைச் செய், சுகிர்தா!'' என்றாள் அவள்!

## 18

அன்று மருமகனை வெளிநாட்டுக்கு 'ஏர்இந்தியா' விமானத்தில் அனுப்பிவிட்டுத் திரும்பி வந்த கதிரேச னுக்கு உற்சாகம் தாங்கவில்லை.

இந்தச் சிறுவயதில், மருமகன் பெரிய பதவி பெற்று விட்டான்! உலக முழுவதும் சுற்றப் போகிறான்! இப் போது கிழக்கு பக்கம் என்றால் அடுத்தது மேற்காக அமையும்! அப்புறம் மகளையும் கூட்டிச் செல்வான்!

மகளையும் இப்படி வழியனுப்புவது போலக் கனவு கண்ட கதிரேசனுக்கு உள்ளம் பூரித்தது!

ஓரிரு தினங்கள் இந்தப் பூரிப்பை உள்ளடக்கியே வைத்திருந்த கதிரேசன், மூன்றாம்நாள் மகளிடம் வாயைத் திறந்துவிட்டார். ''மாப்பிள்ளைக்குப் பெரிய வேலை உயர்வாமே அம்மா! கீழ்த்திசை நாடுகளுக்கு அவர்கள் கம்பெனியிலிருந்தே அனுப்பியிருக்கிறார்க ளாம்!'' என்றார் தன் பெருமையை வெளிக்காட்டாமல்.

கசங்கிய மனதை மறைத்துக் கொண்டு, ''இதை என்னிடம் ஏன் சொல்லுகிறீர்கள்?'' என்று எடுப்பாகக் கேட்டாள். ''நான்தான்.... ''என்று தொடங்கியவள், மேலே பேசாமல் வாயை மூடிக் கொண்டாள்.



எப்படியும் இன்னமும் ஆறுமாதம் ஆகிவிடும் அவ ளது விவாகரத்து வேண்டும் மனு மீது நடவடிக்கை எடுப்பதற்கு! இந்தத் தந்தை, விவாகரத்து பற்றி அப் போதே தெரிந்து கொள்ளட்டும்!

இப்போதிருந்தே அவரையும் வேதனைப்படுத்த வேண்டுமா? வேதனையோடு கூட வீண்வாக்குவாதங்க ளும் நடக்கும்! மருமகனின் பிழைகள் எதுவானாலும் அது மன்னிக்க மறக்கப்பட வேண்டியது எனும் கொள்கை உடையவர் கதிரேசன்! ஏன், அவன் செய்தது தவறே இல்லை என்று கூட வாதாடுவார்!

ஒரு பெண்ணை இந்த அளவு இழிவுபடுத்தத் துணிந்தானே என்றாலும், அது உன்மேல் கொண்ட ஆசையினால்தானே, அதனால் பெரிய குற்றம் ஆகாது என்று ஒதுக்கிவிடுவார்!

ஆனால், தனசேகரனின் கேவலமான மிரட்டலின் பின், அவன் பெயர் சொல்லக் கேட்டாலே மாதவிக்கு அருவருப்பாகியிருப்பதையும், அதனாலேயே அவள் விவாகரத்து கோரியிருப்பதையும் அவரால் புரிந்து கொள்ளவே முடியாது!

எனவே வீட்டில் உரத்த குரல்கள் கேட்பது உறுதி.

அப்படிப்பட்ட நிலைவரும் போது, மாதவி அவளு டைய பெற்றோர் வீட்டை விட்டும் வெளியேறும் நிலை ஏற்படுவதும் உறுதியே.

அந்த நிலையை, இன்றே கொண்டு வருவானேன்?

விஷயத்தைப் பெற்றவர்களிடம் சொல்லாமல்

மாதவி தள்ளிப் போட்டாள். அத்தோடு, பிரிவை எண்ணி மறுகலில், பெற்றோருக்கு இதமாய், அவர்களின் இதம் நாடி நடக்கத் தொடங்கினாள்.

தாய்க்கு, தந்தைக்கு, தமையனுக்குத் தேவைப்பட்ட சிறு சிறு உதவிகள் செய்யத் தொடங்கினாள். இந்துமதி இல்லாத குறையை ஓரளவு குறைக்க முடிந்தது. இதன் விளைவாக, வீட்டில் சித்திரம் தீட்டுவது இயலாததா யிற்று. அதற்காக மாதவி வருத்தப்படவில்லை. வீட்டின ரின் வெறுப்போடு, அவசர அவசரமாய்ப் பத்து படங்கள் வரைவதைவிட, அமைதியாய் ஸ்டூடியோவில் ஐந்து படம் வரைந்தால் போதும் என்று எண்ணினாள்! எண்ணி யதின்படி செயல்பட்டாள். படங்களின் எண்ணிக்கை யைக் குறைத்தபோது, சிறு சிறு நுணுக்கங்களையும் கவனித்து வரைய முடிந்தது! அது அவளுக்குப் பெரும் திருப்தியையும் அளித்தது. வரைந்து முடித்த படத்தைப் பார்க்கும் போது மனதில் ஏதோ இதம் தெரிந்தது! 'கொல்லும் பல நினைவுகள்' அந்த இதத்தில் மங்கித் தெரிந்தன.

ஆனால், இதில் சுகிர்தாவுக்கு வருத்தம் தான். படங்களின் எண்ணிக்கை குறைகிறதே என்று வருத்தப் பட்டாள். படங்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி வருமா னமும் குறையுமே!

ஆனால், இவ்வளவுதான் முடியும் என்று மாதவி சொன்னபோது பணத்தைக் காரணம் காட்டி அவளை வற்புறுத்தவும் சுகிர்தாவால் முடியவில்லை! மாதவிக்குப் பணத்தாசை கிடையாது என்பதோடு, அவள் தன்னைப் பணத்தாசை பிடித்தவளாகக் கருதிவிடக் கூடாது என்பதி லும் சுகிர்தா கவனம் வைக்க வேண்டியிருந்தது.



எனவே, மாதவியின் படங்களின் விலையை ஏற்றி னாள். நகரின் இன்னொரு பகுதியில் திறந்த பொட்டிக் கில் நல்ல லாபம் என்று சொல்லி, நகைகள் வாங்கினாள்.

யாருக்காகவும், எதற்காகவும் நில்லாமல் காலம் சென்றது.

ஒரு சிறு கலக்கமாய், இந்துமதிக்குக் குழந்தை பிறப்பதில் சிக்கல் ஏற்பட்டு, அறுவை சிகிச்சை செய்து பிள்ளையை எடுத்தார்கள்.

ஆண் குழந்தை! தாய், சேய் இருவரும் நல்லபடியா கவே மீண்டு வந்தனர் என்பதில் எல்லோரும் நிம்மதியுற் றனர்.

ஆனால், சிசேரியன் ஆனவள் என்பதால், இந்துமதி கூடுதலாக கொஞ்சநாள் தாய் வீட்டில் இருந்து விட்டுக் கணவன் வீடுவருவதாக ஏற்பாடாயிற்று.

கதிரேசன், மருமகனிடம் கூறியது போலப் பேரக் குழந்தை வீடு வந்து கண்ணை முகத்தைக் காட்ட வில்லை. என்றாலும், அண்ணன் மகனிடம் மாதவிக்கு மிகுந்த பாசம் உண்டாகி, குழந்தைக்காக அங்கே இங்கே சென்று பல சாமான்கள் சேகரித்துக் கொடுத்தாள்.

வளைகாப்பன்று நேர்ந்த உரசலை எண்ணி, இந்தும தியை, அவளது தாய்வீடு சென்று மாதவி பார்த்ததில்லை! ஆனால் குழந்தை பிறந்தபின், மருமகனுக்காக எதையா வது வாங்கிக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு குழந்

தையோடு சற்று நேரம் உட்கார்ந்திருந்துவிட்டு அவள் வீடுவருவது வழக்கமாயிற்று. ஆனால், யாரிடமும் வாய் கொடுப்பது இல்லை! யார் என்ன சொன்னாலும், ஆம், இல்லை, அல்லது ஓர் அரை முறுவலோடு தன் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

எல்லாம் கூட்டிக்கழித்துப் பார்த்து முந்தைய சிரிப்பு இல்லாவிட்டாலும், மாதவி பழைய மாதவி ஆகிவிட்டாள்! இனி, மாப்பிள்ளை வந்ததும் எல்லாம் நன்றாகிவிடும் என்ற நம்பிக்கை வீட்டில் எல்லோருக்கும் வந்தது.

இந்த நிலையில் தான் தனசேகரன், தனது பணியை வெற்றிகரமாய் முடித்துக் கொண்டு, தாய் நாடு திரும்பி வந்தான்.

அவன் வந்த அன்றுதான், அவனுடைய மனைவி கோரியிருக்கும் விவாகரத்து பற்றிய மேல் நடவடிக்கைக்காக வந்து ஆஜராகும்படி குடும்ப நீதிமன்றத்திலிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது.

இது மறைத்து வைக்கக் கூடிய விஷயம் அல்ல.

இந்தக் கடிதம் அன்று தனசேகரனுக்குப் போகிறது என்பதைச் சுகிர்தாவுடைய வக்கீல் மூலம் அறிந்திருந்த மாதவி, அவன் வந்து சொல்லிப் பெற்றோர் விஷயம் அறிவதைவிடத் தானே சொல்லி விடுவது முறை என்று எண்ணி, தாய், தந்தை, அண்ணன் மூவரையும் அழைத்து விவாகரத்து விவரம் சொன்னாள்.

வீட்டு நடுவில், அணுகுண்டு வெடித்த அதிர்ச்சி, அனைவருக்கும்!



பேச்சுக்கு அப்பாற்பட்ட நிலையில் எல்லோரும் திகைத்து அமர்ந்திருந்தபோதே, "இது என் மாற்ற முடியாத முடிவு! மாற்றித்தான் ஆகவேண்டும். என்று நீங்கள் என்னை வற்புறுத்தினீர்கள் என்றால், அதற்குமேல் நான் இந்த வீட்டில் இருக்க மாட்டேன். பெண்கள் ஹாஸ்டலுக்குப் போய் விடுவேன். இது எனக்கும் என் கணவருக்கும் இடையே உள்ள தனிப்பட்ட விவகாரம்! இதில் யாரும் தலையிடக் கூடாது!" என்று தீர்மானமான குரலில் மொழிந்து விட்டு, மடமடவென்று வெளியே கிளம்பிச் சென்று விட்டாள்!!

ரேவதி கண்ணீர் விட்டு அழ, கதிரேசன் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார, ரவிச்சந்திரன் கொதிக்க... எதையும் நின்று பாராமல், அருகே வந்த ஆட்டோவில் ஏறி, அவள் தன் வேலையைச் செய்யப் போய் விட்டாள் வழக்கம்போல!

"எல்லாம் இந்த அத்தானால் வந்தது! முதலிலேயே இவளை இரண்டு தட்டுத் தட்டி வைத்திருந்தால்..." என்று ரவிச்சந்திரன் குமுறிய போதுதான் கதிரேசனுக்குச் சுய உணர்வு வந்தது. மருமகனிடம் ஓடினார்.

கையில் பிரித்த காகிதத்துடன் நின்றிருந்த அவனது முகத்திலும் திகைப்புதான். கூடவே ஓர் இறுக்கம்.

தனசேகரனைச் சுற்றி அடுக்கப்பட்டிருந்த பல்வேறு பாக்கெட்டுகள் பெட்டிகளைக் காண்கையில், கதிரேசனுக்குக் கண்களில் நீர் முட்டியது!

இவற்றில் பெரும்பகுதி அவருடைய முட்டாள் மகளுக்காக மருமகள் ஆசையாக வாங்கி வந்ததாய்த் தான் இருக்கும்.

''மோசம் போய் விட்டோம் போலத் தெரிகிறதே மாப்பிள்ளை! இப்போது என்ன செய்வது என்றே தெரிய வில்லையே! பிடித்து, கை ஓய அடித்துப் பணிய வைக்கலாமா என்று இருக்கிறது! அப்படி அடித்து விடப் போகிறேனோ என்று தான் விஷயத்தைச் சொல்லிவிட்டு, கிடுகிடு வென்று அவள் படம் வரையும் இடத்துக்குக் கிளம்பி ஓடி விட்டாள்... அந்தப் 'பிசாசு' அந்தப் பெண் சுகிர்தா பண்ணின வேலை! ஆள் வைத்து அவளைக் கையைக் காலை ஒடித்தால் தான் இவளுக்குப் புத்திவ ரும்! நீங்கள் கவலைப்படாதீர்கள் மாப்பிள்ளை! இந்தக் கழுதைகளுக்கு நான் ஒரு வழி செய்கிறேன்... விட்டுப் பிடிப்போம் என்று இருந்ததே பெரிய தப்பாய்த் தெரிகி றது மாப்பிள்ளை! இனிமேல் பாருங்கள்! நடக்க வேண்டி யதை நான் பார்த்துக் கொள்கிறேன்!''

கோபமும், கவலையும், பயமும் பதற்றமுமாக அவர் பொருமித் தீர்க்கும்வரை, கையிலிருந்த காகிதத் தையே பார்த்தபடி பேசாமல் நின்றிருந்த தனசேகரன், சட்டென நிமிர்ந்து ''வேண்டாம்'' என்றான்.

''என்ன மாப்பிள்ளை வேண்டாம்? இப்போதும் சும்மா இருந்து, அவள் தன்னைத் தானே அழித்துக் கொள்வதை வேடிக்கை பார்க்கச் சொல்கிறீர்களா? பெற்று வளர்த்தவன் மாப்பிள்ளை! என் நெஞ்சு எரிகிற து!'' என்றார் அவர் ஆத்திரத்துடன்.

''உங்களுக்கு மகள் என்றால், எனக்கு மனைவி, மாமா! என் உயிர் இருக்கும்வரை என்னோடு வாழ வேண்டிய என் ஒரே மனைவி! நீங்கள் சொல்கிற மாதிரி



எதையாவது செய்து வைத்தால், அது காயம் பட்ட புலியைச் சீண்டுகிற மாதிரி, எல்லாம் நாசமாகிவிடும்! வேண்டாம்!'' என்றான் தனசேகரன்.

''என்ன மாப்பிள்ளை, சொல்லுகிறீர்கள்? உங்கள் மனைவியாக இருக்க முடியாது என்றுதானே குடும்பக் கோர்ட்டில் விவாகரத்து வேண்டி மனுக் கொடுத்திருக்கி றாள்? அதை மறந்து போகிறீர்களே!''

''மனுதான் கொடுத்திருக்கிறாள் மாமா! அவளுக்கு என் மேல் கோபம்! அவள் அவ்வளவு சொன்னபிறகும் நான் வெளியூர் போனதால் வந்த ஆத்திரம்! சுகிர்தா அதை ஊதி விட்டிருப்பாள். இந்த மனுவே அவள் தூண்டுதலில் செய்ததாகத்தான் இருக்கும்! ஆனால், மாத வியால் என்னை அடியோடு பிரிந்து வாழமுடியாது!... நிச்சயமாக அவளால் முடியாது! மாமா!''

''இப்போதே கிட்டத்தட்ட ஒன்பது மாதமாய்ப் பிரிந் துதானே மாப்பிளை, வாழ்கிறாள்!'' என்றார் அவர் சுரத்தின்றி!

''இது வேறு மாமா! வேலை நிமித்தமான என் வெளியூர்ப் பயணங்களுக்குப் பழகி விட்டிருப்பவள் மாதவி. கடைசிப் பிரிவு, நீண்டுவிட்டது என்றாலும் இதுவும் அதுபோலத்தான். அரபு நாடுகளில் வேலைக் குப் போகிறவர்கள், ஓர் ஆண்டு, ஒன்றரை ஆண்டு என்று பிரிந்து இருக்கவில்லையா? அது போலத்தான்! எப்போதும், நான் திரும்பி வந்துவிடுவேன் என்கிற ஒரு நிச்சயம் பின்னணியில் எப்போதும் நிலைத்திருக்கும்! ஆனால் திருமணம் ரத்தாகி, என்னை அடியோடு பிரிந்து

அன்னியன் ஆவது என்றால், அவளால் அதை ஏற்க முடியாது மாமா!''

''மெய்யாகத்தான் சொல்லுகிறீர்களா, மாப்பிள்ளை? அல்லது இந்தக் கிழவனுக்கு இப்போதைக்கு ஆறுதலாகச் சும்மாவேனும் எதையோ சொல்லி வைக்கிறீர்களா?'' என்று பரிதாபமாகக் கேட்டார் பெரியவர்.

''ஐம்பத்து இரண்டு வயதில் நீங்கள் கிழவராகி விட முடியாது மாமா! ஆனால், நான் உள்ளூர வெகு நிச்சயமாக உணர்வதை உங்களிடம் சொல்கிறேன்!'' என்றான் தனசேகரன்.

''இப்போது என்னதான் செய்வது, மாப்பிள்ளை?'' என்று கதிரேசன் மருமகனிடமே ஆலோசனை கேட்டார்.

''என் நண்பன் ஒருவன் வீட்டில் ஒரு விவாகரத்து நடந்தது மாமா! அதனால் இந்த மணவிலக்கு பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். இந்தியாவில், ஓர் இந்து திருமணத்தை ரத்து செய்வது அவ்வளவு எளிதல்ல. வலுவான காரணம் வேண்டும்! காரணம் இருந்தாலுமே கால தாமதம் ஆகும்! குறைந்த பட்சமாய் ஓர் ஆண்டு காலம்! இப்போதைக்கு எதிர்ப்பு இருந்தால், இன்னமும் அதிகமாக ஆகும்! இப்போதைக்கு இதை நான் எதிர்க்கப் போகிறேன். தொடர்ந்து நடப்பதை வைத்து மேற்கொண்டு செய்யவேண்டியதைத் தீர்மானிக்கலாம்!''

''சரி மாப்பிள்ளை!'' என்றார் கதிரேசன். ஓரளவு பாரம் இறங்கியவராய்.



''இன்னும் ஒன்று மாமா. முன்பு சொன்னதையே இப்போதும் சொல்கிறேன். எக்காரணம் கொண்டும் மாதவி, வீட்டைவிட்டு வெளியேறி, சுகிர்தாவிடம் சென்று, அவள் இருக்கும் இடத்திலேயே இவளும் வசிக்கும்படி விட்டுவிடாதீர்கள்! இவ்வளவுக்குமேல், ஒன்றும் நடவாததுபோல இருக்க உங்களால் முடியாது தான். ஆனால் அவளிடம் கோபத்தைக் காட்டாதீர்கள். வருத்தம்... அது பரவாயில்லை. ஆனால் மாதவியைக் குற்றம் சாட்டவோ, அவளிடம் கோபம் காட்டவோ வேண்டாம்!''

''அந்தப் பிசாசின் இடத்துக்கு இவள் போவது தான் வெறுப்பாய் இருக்கிறது, மாப்பிள்ளை!''

''எனக்கும், அப்படித்தான் மாமா! ஆனால், இப்போது மாதவி ஒரு சிறுபிள்ளை மாதிரி, செய்யாதே என்பதைத்தான் பிடிவாதமாய்ச் செய்வாள். அதனால் சுகிர்தா பற்றி எதிர்மறையாக ஒரு பேச்சு கூட இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்... அந்தப் பெண்ணைக் கொஞ்சம் சாதாரணமாக எடை போட்டுவிட்டேன்... ஓர் எச்சரிக்கை மட்டும் போதும் என்று நினைத்தேன். ஆனால்.. இருக்கட்டும். நான் வேறு வழியில் அவளை விலக்குகிறேன்! நீங்கள் தைரியமாகப் போய் வாருங்கள்!'' என்று மாமனாரைத் தென்பூட்டி அனுப்பி வைத்தான்.

பிறகு மிகுந்த சிந்தனையில் ஆழ்ந்தான்.

அன்று மிரட்டியதற்குச் சுகிர்தா கொடுத்த பதிலடி இது என்பதில் தனசேகரனுக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

ஆனால், அவள் என்னதான் ஊக்கினாலும் மாதவிக்கு எங்கே போயிற்று மூளை! வெகுளிதான்! உணர்ச்சி வசப்படுகிறவள்தான்! என்றாலும் அவள் முட்டாள் அல்லவே!

ஒருவேளை... என்று நினைக்கத் தொடங்கிவிட்டுத் தனசேகரன் உடனேயே, தன்னையே கடிந்து கொண்டான்.

இப்படி நினைக்கத் தொடங்குவது என்றால், அவனுக்கும் மூளை கெட்டு விட்டதா?

ஏறத்தாழ ஒன்பது மாதங்கள் மனைவியைப் பிரிந்து வாழ்ந்தால் பைத்தியம் பிடிப்பதற்கு என்ன குறை?

ஒன்பது மாதங்கள்! அவனது நேரம் பெரும்பாலும் வேலையில் கழிந்து விட, பாவம், மாதவி என்னபாடு பாடுபட்டாளோ!

மாமனாரிடம் கலந்து ஆலோசித்துச் செய்ததுதான்! ஆனால் அவரும் ஆண்மகன்தானே! ஒரு பெண்ணின் சிந்தை செல்லும் வழி அவர்களுக்கு எந்த அளவு புரியும்! அவனுக்கு மனைவி, அவருக்கு மகள் என்றாலும், மாதவியின் மனதை முழுதாகப் படித்து விட்டதாக யார் பெருமை பேச முடியும்?

சட்டெனத் தலையை உலுக்கிவிட்டுக் கொண்டான் தனசேகரன்.

நடந்து முடிந்ததை நினைத்துப் பயன் இல்லை! இனி நடக்க வேண்டுவதைப் பார்க்க வேண்டும்!



குடும்ப கோர்ட்டுக்கு மாதவி தனியாகத்தான் சென்றாள். சுகிர்தாவுக்கு அந்த நீதிமன்றம் மட்டுமில்லை, எந்த இடத்திலும் தனசேகரனை நேராக நோக்கிப் பேச மனமில்லை! வக்கீலுக்கோ, இந்தக் குடும்ப நீதிமன்றங்களில் இடமில்லை!

எனவே, வக்கீலும் அவளுமாக, மாதவிக்கு உரு ஏற்றி அனுப்பி வைத்தார்கள்.

இந்த உலகத்தில் - அதுவும் இன்றைய உலகத்தில் உண்மையே பேசுவது என்றால் ஒன்றும் நடவாது. அடித்தானா கொடுமை செய்தானா என்று கேட்கும் போது, ஆமாம் என்றால் தான் வழக்கு உனக்குச் சாதகமாக முடியும்! வரதட்சணை கேட்டானா என்றால் கேட்டான் என்று சொல்வதுதான் வெற்றிதரும். வெறுமனே மனவேறுபாடு விட்டுப் போயிற்று என்றால் ஃபெவிகால் போட்டு ஒட்டிக்கொள்ளலாம் என்பார்கள். அதனால் கொஞ்சம் மாற்றியே பேசு... இத்யாதி, இத்யாதி கூடவே, அவன் அவ்வளவு கீழ்த்தரமாய் மிரட்டியதற்கு வேறு எப்படித்தான் திருப்பிக் கொடுப்பது என்று கிளப்பி விட்டார்கள்!

தனசேகரன் மட்டும் சத்ய சந்தனாக, அன்று சுகிர்தாவை மிரட்டியதை ஒத்துக் கொள்ளவா போகிறான்? வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும்! பொய்யைப் பொய்யால்தான் அடிக்க வேண்டும்... உச்சி வரை உருவேற்றினார்கள்.

அவள் வேண்டாம் என்று தடுத்தும், மனது கேளாமல் நீதிமன்றத்துக்கு வந்திருந்த தந்தை, தமையனைப் பார்க்க அவளுக்கு ஆறுதலாகவே இருந்தது.

ஆனால், அவளது மனுவின் மீதான விசாரணையைத் தொடங்கும் போது அவளது உறவினர் அனைவரையும் விலக்கி ஒதுக்கிவிட்டார்கள்! தனசேகரன் தனியாகத்தான் வந்திருந்தான்.

அவன் வீட்டில் மற்றவர்களுக்குத் தெரியுமா என்று அவள் மனம் ஓடியது. அத்தை என்ன சொன்னார்களோ! மைத்துனர்.... சந்தியா...

வயதான ஒருவர். பெயர் ரத்தினபாண்டியன், நீதித்துறையில் பணி புரிந்து ஓய்வு பெற்றவர் என்றார்கள். அவர் தனசேகரனையும் மாதவியையும் தனியே அழைத்துப் பேசினார்.

ஒரு திருமணம் முறியாமல், முடிந்தவரை காப்பது தான் இந்தக் குடும்ப நீதிமன்றத்தின் கோட்பாடு என்றவர், தன்னிடம் மனம் விட்டுப் பேசுமாறு இருவரையும் கேட்டுக் கொண்டார்.

தான் மணவிலக்கை விரும்பவில்லை என்றதற்கு மேல் தனசேகரன் ஒன்றும் சொன்னானில்லை.

மாதவிக்கும் எதுவும் சொல்ல முடியவில்லை.

பல மாதங்கள் கழிந்து கணவனின் உருவத்தைப் பார்த்ததே அவளது தொண்டையைக் குறுக்கி அடைத்து விட்டிருந்தது. இத்தனைக்கும் சுகிர்தா எச்சரித்தது போல, மனம் நிலையிழந்துவிடக் கூடுமோ என்ற அச்சத்தினா



லேயே அவள் அவனை நேரடியாகப் பார்ப்பதைக் கூட தவிர்த்திருந்தாள். மொத்தத்தில், அவன் எந்த இடத்தில் இருக்கிறான் என்கிற அளவுதான். அதற்குமேல், பார்வையை அவனது தோள் அளவு கூட அவள் உயர்த்த வில்லை, உயர்த்தத் துணிவில்லை.

சிறு அமைதியின் பின், "சொல்லம்மா! நீ தான் ரத்து வேண்டி மனுச் செய்திருக்கிறாய்! என்ன காரணம்? அவர்... மிஸ்டர் தனசேகரனுக்குக் குடி, போதை மருந்து என்று ஏதாவது கெட்ட பழக்கம் இருக்கிறதா? அது உனக்கு வெறுப்பாய் இருக்கிறதா?" என்று பெரியவர் வினவினார்.

'இல்லையே! பீடா கூட மாப்பிள்ளைக்கு பழக்கம் இல்லை. எப்பவாவது ஒரு சிகரெட் பிடிப்பாராம்! மாதவிக்குச் சிகரெட் புகையே பிடிக்காது என்றேனா? கல்யாணத்துக்கு முன்னால் எப்படியாவது சிகரெட்டையும் விட்டு விடுகிறேன் என்று சொன்னார்...' என்று தந்தை சொன்னதுபோலவே தனசேகரன், அந்த ஒன்றிரண்டு சிகரெட்டையும் மணமாகுமுன் விட்டு விட்டிருந் தானே!

"சொல்லம்மா!" என்று திரும்பக் கேட்டார் அவர்.

"இல்லை... கெட்ட பழக்கம் கிடையாது..."

"மனநிலை சரியானவர்தானே?"

"எ... என்னது? என்ன கேட்கிறீர்கள்?"

"மனநோயாளியா என்று கேட்கிறேன். பைத்தியம்."

''சார்!'' சட்டென எழுந்துவிட்டாள் மாதவி! ''பெரிய நிறுவனத்தில் 'ஹை ஈல்ட்' கம்பெனியில் அவருக்குப் பெரிய வேலை சார்! விற்பனைத் துறை. விற்பனையைப் பெருக்குவதற்காக சமீபத்தில் கூட வெளிநாடெல்லாம் போய் வந்திருக்கிறார். அவரைப் போய் இப்படியெல்லாம்...'' என்று படபடத்தவள் சட்டென மவுனமானாள்.

ஒரு பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு, ''மனநிலை சரியானவர்தான்'' என்று மொட்டையாகக் கூறி முடித்து உட்கார்ந்தாள்.

''ம்ம்... வேறு என்ன குறையம்மா? ஒருவேளை ... தகாத உறவு ஏதும் இருக்கிறதா?'' என்றவர் மாதவி கேள்வியாய் நோக்கவும், ''வேறு பெண், அல்லது பெண்கள் உறவு வைத்திருக்கிறாரா?'' என்று தெளிவாகக் கேட்டார்.

தனசேகரனா? இன்னொரு பெண்ணுடன் தகாத உறவு கொள்வதா? ''உன்னைப் பார்த்தபிறகு, எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அவள் ஒரு பெண் என்கிற நினைப்பே வரமாட்டேன் என்கிறது மது! முன்னெல்லாம், பெண்களின் மெச்சுதலும், மரியாதையும் பெரிதாய்த் தோன்றும். அதற்காக அதிகப்படியாக அலட்டத் தோன்றும். பெருமை அடிக்கத் தோன்றும். இப்போது ஆண், பெண், எல்லோர் பேச்சும் ஒரே மாதிரி தான் படுகிறது! என்பானே! அவனாவது இன்னொரு பெண்ணுடன் தகாத உறவு கொள்வதாவது!



'இல்லை' என்பதுபோலத் தலையாட்டினாள் மாதவி.

''பின்னே? கூச்சமின்றிச் சொல்லம்மா! ஓரினக் காதல் என்பார்களே!''

''சார்!'' என்று மாதவி கத்தி விட்டாள். சிவந்த முகத்தையும் மூச்சையும் ஒருவாறு சமனப்படுத்திக் கொண்டு, ''என்ன சார், இப்படியெல்லாம் கேட்கிறீர்கள்?'' என்றாள், அழாக் குறையாக.

''மணவிலக்கு கோருவதற்கும் அதை நீதிமன்றம் வழங்குவதற்கும் ஏதாவது காரணம் தகுந்ததாக இருக்க வேண்டுமில்லையா, மாதவி? ஒரு வேளை... உன் கணவருக்குப் பால்வினைநோய் ஏதும் இருக்கிறதோ?''

''ஐயோ! கடவுளே!'' என்று முனகினாள் அவள். ''அப்படியெல்லாம் எதுவுமே கிடையாது சார்!'' என்றவளுக்குக் குரல் கரகரத்துப் போயிற்று.

குணம் கெட்டு, மனதை, உணர்ச்சிகளை அடக்க முடியாமல் கெட்ட நோய்களை இழுத்துக் கொள்பவர்களை எப்படிச் சாடுகிறவன், அவளுடைய கணவன்! நக இடுக்கில் சிறிது அழுக்குக் கூட இருக்கக் கூடாது என்று ஆரோக்கியம் பேணுகிறவன்! அவனைப் போய் இப்படியெல்லாம் சொல்வதா என்று அவள் மனம் தவித்தது.

முன்னிருந்த தம்பதியர் முகத்தைச் சற்றே கூர்ந்து பார்த்துவிட்டு, ரத்தினபாண்டியன், தன் கண்ணாடியைக் கழற்றித் துடைத்து, மீண்டும் அணிந்து கொண்டார்.

''நீங்கள் ஒன்றுமே சொல்லவில்லையே மிஸ்டர் தனசேகரன்?'' என்று கேட்டார்.

மார்பின் குறுக்கே கைகட்டி, நிமிர்வுடன் அமர்ந்தி ருந்தவன் வாய் திறந்தான். ''ரத்து செய்யக் கேட்பவர்கள், அவர்கள்! அவர்களே சொல்லட்டும் சார்!'' என்றான், எந்தவித சலனமும் அற்ற குரலில்.

முகம் சற்றே கடினப்பட அடுத்த கேள்விக்காக மாதவி காத்திருந்தாள். மனவேறுபாடு பற்றி இந்த மனிதர் எப்போதுதான் கேட்பார்?!

ஆனால், அவள் எதிர்பார்த்த அந்தக் கேள்வியை, ஓய்வு பெற்ற அந்த அதிகாரி அப்போதும் கேட்க வில்லை; மாறாக, ''வரதட்சணை கேட்டு தொல்லை செய்கிறாராம்மா?''

இல்லையே! அவன் தனக்கென்று எதுவுமே கேட்க வில்லையே! அவளுடைய தந்தை கூட, மகன் திருமணத் தின் போது, இவ்வளவு தொகை நகை வேண்டும் என்று கேட்டு, இந்துமதியுடைய பெற்றோரிடம் வாங்கியிருக்கி றார். இந்துமதியுடைய நகைகளை அவர் தொட்டுப்பார்த் தது கூடக் கிடையாது என்றாலும், பணத்துக்கு ஈடாகக் குடும்பத்தொழிலில் அவளுக்குப் பங்கு கொடுத்து விட்ட போதும், அந்தப் பணத்தைக் கையாள்வதில் இந்தும திக்கு உரிமை இல்லையே என்று மாதவி அவ்வப்போது நினைப்பது உண்டு.

மகளுக்குச் செய்யவும் கதிரேசன் தயங்கவில்லை. 'பெண்ணாய்ப் பிறந்தால் அவளுக்கு ஒன்றுமில்லாமல் அனுப்பி விடுவேனா' என்று நன்றாகத்தான் செய்தார். தனசேகரனுடைய தாயாரிடம் கொடுத்த பணம் என்ன ஆயிற்று என்று தெரியாத போதும், தனசேகரன் அதே அளவு பணத்தை மனைவியின் பெயரில் பாங்கில் போட்டு, 'இதை என்ன வேண்டுமானாலும் பண்ணிக் கொள்' என்று அவள் கையிலேயே பாஸ் புத்தகத்தைக் கொடுத்துவிட்டான்.



பிறகும், தீபாவளி, பொங்கல் என்று எதற்கும் அவனேதான் அவளுக்குப் பிடித்ததாக, தரமானதாக வாங்கிக் கொடுப்பான்! இவனைப் போய் வரதட்சணை கேட்டான் என்று எப்படிச் சொல்வது? மீண்டும் மறுப்பா கவே தலையசைத்தாள் மாதவி.

''ம்ம்... ஒருவேளை உன் கணவருக்கு வக்கிரம் ஏதும் உண்டாம்மா? தனிமையில், கணவன் மனைவி உறவில் உன்னைத் துன்புறுத்தி...''

''அய்யய்யோ! தயவு பண்ணி இப்படி எல்லாம் பேசாதீர்கள், சார்! அவர் அப்படியெல்லாம் கிடையாது! சார்!'' என்றபோது மாதவிக்கு கண்ணீரை அடக்குவது கஷ்டமாய்ப் போயிற்று.

தனசேகரனின் மென்மையும், மேன்மையும் இந்தக் கிழவருக்கு எப்படித் தெரியும்? ஏன், இந்த உலகத்தில் யாருக்குத்தான் புரியக் கூடும்? அதனால்தான் பத்து இருபதுநாள் பிரிவில் கூட அவள் அப்படிப் பரிதவித் தது! இப்போது...

இரு கைகளை விரித்து என்ன இது என்பது போன்ற அசைவுடன் "பின்னே என்னம்மா விஷயம்? நீ எதற்காக மணவிலக்கு கேட்கிறாய் என்றே புரியவில்லையே!" என்றார் பெரியவர்.

அவள் எதிர்பார்த்த வேளை இதுதான்! "அவரைத் தவிர எனக்கு என்று ஒன்றுமே இருக்கக் கூடாது என்று நினைக்கிறார். அவரது விஷயம் என்றால் நானும் அதற்காகத் தலைகீழாக நின்று வேலை பார்க்க வேண்டும். ஆனால் என் விஷயம் என்றால் அப்படி ஒன்று அவசியமே இல்லை என்று எனக்கென்று உறவு வருமானம் நட்பு எதுவும் கூடாது என்கிறாரே!"

'ரீகன்சிடரேஷன் ஆபீசர்' தனசேகரனைப் பார்த்தார். "இது பேசித் தீர்த்துக் கொள்ளலாம், என்ன சொல்கிறீர்கள், தனசேகரன்."

"எது எது என்று தனித்தனியாகக் கேட்கச் சொல்லுங்கள்!"

"எங்கள் வீட்டு விசேஷத்துக்கு ஊரில் இல்லை!"

"அது விவரம் ஏற்கெனவே பலமுறை சொல்லியாயிற்று!"

"எனக்கு வருமானம் வருவது பிடிக்கவில்லை!"

"தப்பு அபிப்பிராயம்! அப்படி ஒரு வருமானம் தரும் வழியில் செல்ல வழிகாட்டியதே நான்தான். பல வசதிக் குறைவுகளைப் பொறுத்துக் கொண்டு ஊக்கம் கொடுத்ததும் நான்தான்!"



"அதெல்... அது.. சரி! அதுபோகட்டும்! என் நட்பு? என் சினேகிதியைத் தந்திரமாய்த் தனியே அழைத்து, என்னை விட்டு விலகி விட வேண்டும் இல்லாவிட்டால்... என்று கீழ்த்தரமாக மிரட்ட வில்லை?"

"அது..." என்று தொடங்கி தனசேகரன் சற்றே தயங்கினான்! பிறகு "அவள் நல்லவள் அல்ல... உனக்கு நல்லது செய்பவளும் அல்ல. அதனால் தான்... அதனால் தான், அந்த அளவு இறங்க நேர்ந்தது?" என்று முடித்தான்.

இடி விழுந்ததுபோல இருந்தது மாதவிக்கு. இவன் வாயாலேயே ஒப்புக்கொண்டு விட்டானே! இவனோடு இனி வாழ்வது முடியாத காரியமே!

## 19

சுகிர்தாவின் சொல்லை எவ்வளவோ நம்பினாலும், மாதவிக்கு உள்ளூர ஒரு சிறு சந்தேகம். ஒரு நப்பாசை இருந்து கொண்டேதான் - தலைநீட்டிக் கொண்டேதான் இருந்தது.

அவ்வளவு கேவலமாய் தனசேகரனால் பேச முடியாது! அந்த மாதிரி மிரட்ட முடியாது என்று ஓர் எண்ணம் இருந்தது. சுகிர்தாதான் தப்பாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்!

ஆனால் இப்போது அவனே அதை ஒத்துக் கொண்டு விட்டானே!

அதுவும், கீழ்த்தரமாக மிரட்டியதைக்கூட...!

இது என்ன மாதிரியான அருவருக்கத்தக்கக் கொடூரம் என்பது புரியாத இளவயது விடலை அல்ல தனசேகரன்! கண்ட கண்ட தரங்கெட்ட எழுத்துக்களை எல்லாம் படித்துவிட்டு, மனநிலை தடுமாறி ஏதோ உளறி விட்டான் என்று சொல்வதற்கில்லை.

திருமணமானவன்! பொறுப்பான பதவி வகிக்கும் குடும்பஸ்தன்! அவன் இப்படிப் பேச வேண்டுமானால், திருமணமாகி இருவரும் ஒன்றி வாழ்ந்த அந்தச் சில காலத்தில் மாதவி அறியாத வக்கிரம் ஒன்று அவனுள் எப்போதும் இருந்திருக்கிறது! ஒருவேளை, இன்னும் கொஞ்ச காலம் சென்றிருந்தால், அவளிடமே கூட அதைக் காட்டியிருப்பான்!

போகட்டும்! அவனது வக்கிரத்தைத் தனசேகரன் செயல்படுத்துமுன், அவனது பேச்சிலேயே கண்டு கொண்டு தப்ப முடிந்தது அவளது நல்ல காலம் என்று கூட எண்ணிக் கொள்ள வேண்டியதுதான்.

அன்று பாஞ்சாலிக்கு இந்த அநியாயம் செய்தவர்கள் அதன் தண்டனையாக, அரசிழந்து, உயிரைப் பறி கொடுத்தார்கள். அதையே செய்வேன் என்றதற்குத் தண்டனையாக தனசேகரன் மனைவியை இழக்க வேண்டியதுதான்!

மாதவி சட்டென எழுந்தாள். "சார் எனக்கு வேறு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது. போக வேண்டும். ஆனால் போகுமுன் ஒன்றுமட்டும் உறுதியாகச் சொல்லுகிறேன். இவரோடு என்னால் இனிமேல் வாழ முடியாது



என்பது உறுதி! உறுதி! உறுதி!" என்றவள் கைப்பையை எடுத்துக் கொண்டு மடமடவென்று அங்கிருந்து சென்று விட்டாள்!

"அடுத்து வரவேண்டிய நாள் பற்றி உங்களுக்கு அறிவிப்பு வரும் மிஸ்டர் தனசேகரன்" என்று அந்த அதிகாரி ரத்தினபாண்டியனும் எழுந்தார்.

'விவாகரத்துதான் வேண்டும் சேர்ந்து வாழ முடியாது' என்று சொல்லி விட்டு வந்ததாகக் கூறியதோடு அதுபற்றிய பேச்சை மாதவி நிறுத்திக் கொண்டாள்.

தூண்டித்துருவி விசாரிக்கச் சுகிர்தாவுக்கு ஆசைதான்! ஆனால் மாதவி திருப்பிக் கொண்டு விட்டால் ஆபத்தாகிவிடும் என்று மேலே கிளறாமல் வாயை மூடிக் கொண்டாள்.

பெற்றவரிடமும் மாதவி அதையேதான் சொன்னாள்.

கலங்கிப்போய் ஓடிவந்தவரிடம் தைரியமாக இருக்கும்படி தனசேகரன் சொன்னான்.

பொறுமையாக இருக்கும்படியும் கேட்டுக் கொண்டான். "உங்கள் விருப்பத்துக்கு மாறாக எதுவும் நடவாது" என்று உறுதியும் கொடுத்தான்.

தனசேகரனுடைய தாயார் ஒருநாள் பதறிக் கொண்டு மூத்த மகனோடு வந்தார்.

மரியாதையோடு வரவேற்று, உபசாரம் செய்த போதும், திருமண முறிவுபற்றி எதையும் பேச மாதவி மறுத்துவிட்டாள்.

''வெளிநாடு போகிறதைச் சொல்ல வந்தபோது நீ கூட வரவில்லையே என்று அப்போதே எனக்கு யோசனை தான். ஏதேனும் விசேஷமோ என்று கேட்டதற்கு ஒன்றுமில்லை என்று ஒரு மாதிரி சொன்னானே என்று நினைத்துக் கொண்டே இருந்தேன்! கடைசியில் இடியாய் இறக்கிவிட்டீர்களே! குடும்பம் என்றால் ஒரு கோபம், ஒரு தாபம் இருக்கத்தான் செய்யும். அதற்கெல்லாமா கோர்ட்டிலே போய் நிற்பது?'' என்று மாமியார் வருத்தப்பட்டபோது அவள் பதிலே சொல்லவில்லை.

''நீ புத்திசாலி என்று நினைத்தேன் மாதவி! அவனும் கெட்டிக்காரன். இருவரும் மிகவும் சிறப்பாக வாழப் போகிறீர்கள் என்று எண்ணினேனே! கடைசியில் என்னம்மா இது?'' என்றான் தனசேகரனின் அண்ணன் குணசேகரன்.

''வேறு வழியில்லை, அத்தான்! ஆனால், தயவு பண்ணி இதுபற்றிப் பேசவேண்டாமே?'' என்றாள் மாதவி மெதுவாக.

'பெண்ணை வளர்த்திருக்கும் அழகா?'' என்று சம்பந்தி வீட்டாரிடம் சூடாக இரண்டு வார்த்தை கேட்டு விட்டுப் போகத்தான் மாதவியுடைய மாமியார் இங்கு வந்தது! ஆனால் அழுது சிவந்த கண்களுடன் ரேவதியை பார்த்ததும் அந்த அம்மாளுக்கு வாயடைத்துப் போயிற்று.

''கவலைப்படாதீர்கள்! எல்லாம் ஏதோ கெட்ட நேரம்! சீக்கிரம் சரியாகி விடும்!'' என்ற ரேவதியையே தேற்றிவிட்டுத் திரும்பிச் சென்றார் அவர்.



அடுத்து, 'ரிகன்சிடரேஷன் ஆஃபீசரைச்' சந்திக்க இருவரும் குடும்ப நீதிமன்றம் சென்றார்கள்.

அன்றைய தினம் அங்கே பேச்சுவார்த்தை என்று எதுவும் அதிகமாக நடக்கவில்லை.

திருமணத்தின் பெருமை பற்றியும், பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க முடியாதது எதுவும் இல்லை என்பது பற்றியும் பெரியவர் ரத்தினபாண்டியன் வெகுவாக எடுத்துச் சொன்னார்.

ஆனால், எந்தவிதப் பேச்சுவார்த்தையும் தேவையில்லை; எதற்காகவும் தன் மனம் மாறப் போவது இல்லை என்று மாதவி பலமுறை திருப்பித் திருப்பிச் சொன்னாள். விஷயத்தை, மற்ற இருவருக்கும் வலியுறுத்த முயன்றாளா, அன்றித் தனக்கே உறுதிப்படுத்திக் கொள்ள முயன்றாளா என்பது அவளுக்கே வெளிச்சம்!

கடைசியாக, ஒரு திடீர்த் திருப்பமாகத் தனசேகரன், தானும் விவாகரத்துக்குச் சம்மதிப்பதாக அறிவிக்க, மாதவி அதிர்ச்சியில் திகைத்து விழித்தாள்.

ரத்தினபாண்டியனுக்கும் பிரமிப்பு தான்!

''என்னப்பா, திடீரென்று! நீ, கொஞ்சம் ஆழ்ந்து யோசிக்கிறவன் என்று நினைத்தேனே!'' என்றார் அவர்.

''அதற்காகக் கெஞ்சிக் கொண்டே காலத்தைக் கழிக்க முடியுமா, சார்? நானும் வாழ வேண்டாமா?'' என்று கேட்டான் தனசேகரன்.

வாழ வேண்டாமாவா? மாதவி இல்லாமல் அவனுக்கு ஒரு வாழ்வு இருக்கிறதாமா? அவள்தான் முட்டாள்! இனித் தனிமைதான் வாழ்வென்று முடிவு கட்டி...

''எப்போது சார் எஸ்.... என் விவாகரத்து எனக்கு எப்போது கிடைக்கும் சார்?'' என்று வெறுப்பும் கசப்பு மாக மாதவி வினவினாள்.

''இன்னும் ஒரு முறை முயன்று பார்ப்பேன். அப் போதும் இதே பிடிவாதமாய் இருந்தால், இனிச் சமாதா னத்துக்கு வழியில்லை என்று எழுதி விடுவேன்! இப்போ துதான், தனசேகரனும் மணவிலக்கை ஆதரிக்கிறாரே! நீ விரும்பியது கிடைக்க அதிகநாள் ஆகாது'' என்றார் ரத்தினபாண்டியன், சற்றே விட்டேற்றியாக.

அடுத்த கோர்ட் சந்திப்புக்கான நாள் தெரிந்ததுமே, தனசேகரன் தீவிரமான வேலையில் இறங்கினான்.

தனக்கு உதவக்கூடியவர்களை, அதிலும் கட்டாய மாய் அவனுக்கு உதவி செய்யத் தேவைப்படுகிறவர் களை மீண்டும் மீண்டும் போய்ப் பார்த்து அவர்கள் மனதைக் கரைத்தான்.

கோர்ட்டில் இருவரும் சந்திக்க இரண்டு நாட்கள் முன்னதாகக் கடவுளே தனசேகரனுக்கு ஓர் உதவி செய் தது போல, மாதவிக்கு ஒரு பரிசு கிடைத்தது.

முன்னர், கனகாஞ்சலி நகைக் கடையார் வைத்த 'கனகாஞ்சலி' நகை 'டிசைன்' போட்டியில் மாதவிக்கு முதல் பரிசு கிடைத்திருந்தது. உருளைக் கிழங்கு தொடர் சீவலை அடிப்படையாக வைத்து அவள் வரைந்து அனுப்பிய டிசைனுக்கு முதல்பரிசு கொடுத்திருந்தார்கள்.

சற்றே சிறிய அளவில், அந்த டிசைனில் ஒரு செட் நகைகளும், ராயல்டியும் தருவதாய், நகைக் கடையார் எழுதியிருந்தார்கள்!



முதலில் வெகு மகிழ்ச்சியுடன் எல்லோரிடமும் கடிதத்தைக் காட்டிய மாதவியின் முகம் விரைவிலேயே வாடிவிட்டது.

இந்த நகை வடிவின் கரு தனசேகரன் சொன்னது தான். நகை டிசைன் மட்டுமல்ல, இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும்படி அவளைத் தூண்டியதும் அவனே தான்.

அன்றையத் தினத்தைத் தெளிவாக நினைவு கூர்ந்த மாதவிக்கு மேலும் மனம் நொந்து போயிற்று.

அப்போதே வீட்டில் தகராறு தான். அதுவும், விக்கியின் பிறந்த நாளைக்கு வந்து உதவுகிறேன்' என்று சொல்லி விட்டுத் தாமதமாகச் சென்று அவனை, அவள், அவமானத்துக்கு ஆளாக்கியதற்கு மறுநாள்!

தினசரியில் பார்த்ததும் அவனாக அவளைக் கூப் பிட்டுச் சொன்னானே! அவளாக, அனேகமாக அதைப் பார்த்திருக்கமாட்டாள்! பார்த்தாலும் கவனித்திருக்கமாட் டாள்! கவனித்திருந்தாலும், போட்டியில் கலந்து கொள்ள அவளுக்குத் தோன்றியும் இராது.

எல்லாத் தூண்டுதலும் தனசேகரனுடையது தானே? அவன், எவ்வளவு நல்லவனாக இருந்ததினால் இந்த மாதிரி ஓர் உதவியை அவளுக்கு செய்திருப்பான்!

இந்த நல்லவனை சட்டரீதியாகவே பிரிந்துவிடப் போகிறோமே என்று எண்ணும் போதே வேறு ஒன்று நினைவு வந்தது.

தனசேகரன் அப்படி ஒன்றும் நல்லவன் அல்ல! சுகிர்தாவை அவ்வளவு அசிங்கமாக மிரட்டியவன் எப்படி நல்லவனாக இருக்க முடியும்?

சுகிர்தா, சொன்னது மட்டும் மெய்யாக இருந்தால்... என்று எண்ணம் ஓடும்போதே மாதவி திடுக்கிட்டாள்!

சுகிர்தா ஒருவேளை... பொய் சொல்லியிருக்கக் கூடுமோ என்கிற சந்தேகம் ஏன் வந்தது? சுகிர்தா அவ்வப்போது கூறுவதுபோலக் கணவனின் கால்மிதியாகக் கிடக்கத்தான் அவளுக்கும் உள்ளூர ஆசையா? கேவலம்!

அத்தோடு, திருமணத்தை ரத்துபண்ண இப்போது அவனும் ஒப்பிவிட்டானே! வேறு வாழ்வு வாழ என்றானே!

அவன் காலைச் சுற்றி வர, இன்னொரு நாய் கண்டுபிடித்துவிட்டான் போலும் என்று கோபமாக எண்ணியவளுக்குக் காரணமற்றுக் கண்ணீர் பெருகியது!

குடும்ப நீதிமன்றத்துக்குச் செல்வதற்கு முந்திய நாள் மாதவிக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது.

அவளது சித்திரக் கண்காட்சியை நடத்திய ஹாலின் நிர்வாகி, அன்று மாலை அவளைச் சந்தித்தார்.

வீடுதிரும்பும் போதே அன்று அவள் சோர்ந்திருந்தாள்.

''விளக்கேற்றும் நேரம்! படுத்திராதே!'' என்ற தாயின் குரலையும் மீறிப்படுத்திருந்தவளுக்கு, எழுந்து வந்து அந்த நிர்வாகியுடன் பேசவே அலுப்பாய்த்தான் இருந்தது.



ஆனால், வீடுதேடி வந்துவிட்டாரே!

வணக்கம் கூறி, 'காபியா குளிர்பானமா?' என்று உபசரித்தவளிடம், 'எதுவும் வேண்டாம்' என்று மறுத்தார் அவர்.

''இந்த வேளையில் எதைக் குடித்தாலும், இரவு உணவு சரியானபடி உண்ண முடியாதம்மா. அதனால், எதுவும் வேண்டாம் ... நான் இந்தப்பக்கம் ஒருவேலையாக வந்தேன். அப்படியே இங்கேதானே; உங்கள் வீடு என்று நினைவு வந்தது. அடுத்து ஏதும் சித்திரக் கண்காட்சி ஏற்பாடு செய்கிறீர்களா என்று ஒரு வார்த்தை கேட்டுவிட்டுப் போகலாம் என்று வந்தேன்!'' என்று, அவர் வந்த காரணம் சொன்னார்.

''இல்லை சார்! வரும் ஆர்டர்களுக்கே முழுவதாக வரைய முடியாமல், குறைத்து விட்டேன்! கண்காட்சி வைக்கும் அளவு தனிப்படங்கள் வரைய நேரம் இல்லை சார்.'' என்றாள் மாதவி இயல்பாக.

''நினைத்தேன்!'' என்றார் நிர்வாகி. ''முதல் கண்காட்சியிலேயே உங்களுக்கு நல்ல பேர் வந்துவிட்டதில்லையா? புகழோடு நல்ல வருமானமும்கூட என்ன... குறைந்தது ஒரு லட்சம் வந்திருக்குமா?'' என்று பேச்சுப் போக்காய் விசாரித்தார்.

''ஒரு லட்சமா! ஊகூம்.... இல்லையே சார். ரொம்ப குறைவுதானே சார். விலை கூடக் குறைவாகத்தான் வைத்திருந்தோம். சாமான்கள், ஹால் வாடகை என்று செலவுகளும் உண்டல்லவா?''

புருவம் சுருக்கி "அதெல்லாம் போகவே நிறைய வந்திருக்க வேண்டுமே, அம்மா! என் கணக்கின்படி... உங்களுக்கும் சுகிர்தாவுக்கும் சமபங்கு வைத்தாலும் கூட ஆளுக்குக் குறைந்தது ஓர் ஆறுபது... குறைத்துக் குறைத்துப் போட்டாலும் ஆளுக்கு ஐம்பதாயிரமாவது கிடைத்திருக்க வேண்டும். படம் வாங்கியவர்கள் எல்லோரும் பணத்தை ஒழுங்காகத் தந்து விட்டார்கள் இல்லையா... தந்திருந்தால்.. எதற்கும் நீங்கள் ஒரு தரம் அந்தக் கணக்கைச் சரி பாருங்கள்!... அப்படியானால், நான் கிளம்பட்டுமா?" என்று எழுந்து விடைபெற்றுச் சென்றார் அவர்.

மாதவிக்கு மனம் குழம்பிப் போயிற்று.

அவ்வளவு பணம் வரவில்லையே! சொல்லப்போனால், கையில் இருந்ததை எல்லாம் முதலில் ஒவ்வொன்றாக விற்ற படங்களின் மூலம் வந்த வருமானத்தையும் சேர்த்துப் போட்டல்லவா, பத்தொன்பதாயிரத்துக்கு அந்த டீவி வாங்கினாள்!

ஏதாவது செலவு இருந்திருக்கும் என்று அலட்சியப்படுத்தியவள், உள்ளே அரித்த வேதனைப் புழுவிடமிருந்து தப்பிக்கும் முயற்சியாய், கண்காட்சியின் வரவு செலவை மனதுள், கூட்டிக் கழிக்கத் தொடங்கினாள்.

படங்களின் எண்ணிக்கையும், அப்போது படங்களுக்கு வைத்த விலையும் அவளுக்கு நன்றாகவே நினைவிருந்தது.

போர்டு, பெயின்ட், ரோக், கல் என்று செலவு அயிட்டங்களும் இப்போது தெளிவாய் இருந்ததால், எவ்வளவு செலவாகி இருக்கும் என்று கணக்கிடுவது இலகுவாகவே இருந்தது. கூடவே ஹால் வாடகை! அழைப்பிதழ், விளம்பரம்...



கூட்டிக் கழித்தபோது, வந்திருக்க வேண்டிய தொகைக்கும் வந்த தொகைக்கும் இருந்த பெரும் இடைவெளி அவளைத் திகைக்க வைத்தது.

சுகிர்தா எங்கேயோ ஏமாந்து விட்டாள்; சரிவரக் கணக்கைப் பார்க்கும்படி அவளிடம் சொல்ல வேண்டும் என்று எண்ணியபடி, கண்மூடி உறங்க முயன்றவளுக்குத் 'தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு ஆயிற்றே? என்று தனசேகரன் சொன்னது நினைவு வரவும் சட்டென எழுந்து உட்கார்ந்தாள்.

சுகிர்தா மீது அப்போதே அவன் சந்தேகம் எழுப்ப முயன்றானே! ஒருவேளை சுகிர்தாவே... என்று எண்ணியவளுக்குத் தன் மீதே ஆத்திரம் வந்தது. தன்மீதும் தனசேகரன் மீதும்!

அவனைச் சாயமிழக்கச் செய்து விடுவாள் என்று அப்போதே தனசேகரன் சுகிர்தாவை விலக்க முயன்றிருந்தான். அவன் எப்படிப்பட்டவன் என்று தெரிந்த பிறகும் அவனது பேச்சை எண்ணி, சுகிர்தா மீது சந்தேகப்படுகிறாளே! எவ்வளவு பெரிய முட்டாள் இந்த மாதவி!

மக்கு! ஏமாளி! முட்டாள்!

ஆத்திரமும், கூடவே அழுகையுமாக, விசித்தபடியே மாதவி உறங்கிப் போனாள்.

மறுநாள் காலையில் மாதவிக்குச் சும்மாவே மன நிலை சரியில்லை. அதிகாரி, ரத்தினபாண்டியனோடு அன்று மூன்றாவது சந்திப்பு! கணவன் மனைவியிடையே

அதிகாரி, ரத்தினபாண்டியனோடு அன்று மூன்றாவது சந்திப்பு! கணவன் மனைவிக்கிடையே நல்லிணக்கம் ஏதும் ஏற்படவில்லை என்றால், வீணாக இழுத்தடிப்பதை விடுத்து, திருமணத்தை ரத்து செய்யப் பரிந்துரை செய்யப்போவதாக அவர் ஏற்கெனவே சொல்லி விட்டிருந்தார்.

அதன்படி பார்த்தால், இன்று எல்லாம் முடிந்துவிடும்.

தனசேகரனை அருகிருந்து பார்க்கும் வாய்ப்புகூட இன்றோடு நின்று விடும்!

முதலில் பிரிந்து வந்த காரணம் இப்போது பைத்தியக்காரத்தனமாகத் தோன்றியது!

அப்போது அவளுக்கு அவ்வளவு கோபம் வந்ததே அசட்டுத்தனமாய் இன்று தோன்றியது. அவளது பிறந்த நாள், திருமணமான முதலாம் ஆண்டு நாள்... இவைகளை விடவா அண்ணியின் பூச்சூட்டல் அவளுக்கு முக்கியம்? இல்லையே! தனசேகரன் சொன்னதுபோல, அது முக்கியமாய் பெண்கள் விழாதான்!

பின் ஏன் மாதவிக்கு அவ்வளவு கோபம் வந்தது!

காரணம், அவளது குற்ற மனப்பான்மை! அன்று விக்கியின் பிறந்த நாளின் போது அவள் செய்த பிழை உள்ளூரக் குறுகுறுத்துக் கொண்டே இருந்ததால், அதை அவன் ஊகித்து விட்டான் என்பது வேறு உறுத்திக் கொண்டே இருந்ததால், வந்த வினை அது! அவன் மீதும் குற்றம் ஏற்றிக் காண்பித்துவிடும் வெறிதான் காரணம்!

ஆனால், அது இப்போது புரிந்து என்ன லாபம்? அதற்குமேல் என் னென்னவோ நடந்து வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டதே! சுகிர்தாவை வெகு கீழ்த்தரமாய் மிரட்டி, தனசேகரன், தான் ஒரு பொறுக்கி என்று காட்டிக் கொண்டு விட்டானே!

அவனது கீழான புத்தியை நல்லவேளையாகக் கண்டு கொண்டு விட்டோம் என்று நிம்மதி அடைய, மாதவியால் இப்போது முடியவில்லை! மாறாக, அது வெளிப்பட்டதால், விவாகரத்து செய்யும்படி ஆகிவிட்டதே என்ற வருத்தம்தான் தலைதூக்கி நின்றது.

இப்படி அவள் உழன்று கொண்டு இருந்தபோது, பட விஷயமாக் ஒருவர் அவளைப் பார்க்க வந்திருப்பதாக ரவிச்சந்திரன் வந்து சொன்னான்.

"என்னால் யாரையும் பார்க்க முடியாது!" என்றாள் மாதவி எரிச்ச லோடு.

எதற்காகவோ "அங்கே வந்த கதிரேசன் என்னவென்று கேட்க, ரவிச் சந்திரன், தந்தையிடம் விஷயத்தைச் சொன்னான்.

"என்னடா, குழந்தை மனது இப்போது என்ன பாடுபட்டுக் கொண் டிருக்கும் என்பது தெரியாதா? இன்றைக்கு முடியாது என்று நீயே சொல்லி அனுப்பிவிட வேண்டியதுதானே" என்றார் தந்தை, மகளின் தலையைப் பரிவாய் வருடியபடி.

அப்பாவுக்காவது துன்பம் தெரிகிறதே என்று அவரை நெருங்கி நின் றாள் மாதவி.

"சொல்லியிருப்பேன், அப்பா!" என்றான் ரவிச்சந்திரன் மெல்லிய குரலில். "வந்தவர், ஏதோ நிறையப் படங்கள் 'ஆர்டர்' கொடுப்பது பற்றிப் பேச வந்ததாகச் சொன்னார்! இவள் வேறு வளமான வாழ்க்கையைத்

தொலைத்துவிட்டு நிற்கிறாள்! வருமானத்தையும் விட்டு விடக்கூடாதில்லையா?... நாம் இருக்கும் வரைக்கும், இவள் சோறு துணிக்குக் கஷ்டப்பட விடமாட்டோம் தான். ஆனால், இவளது ரோஷம்? எதையாவது தப்பாக எடுத்துக் கொண்டு இங்கிருந்தும் போக வேண்டும் என்று... உங்களுக்கு தான் தெரியுமே, அப்பா? சும்மாவே விடுதியில் தங்கப் போகிறேன் என்கிறவள் தானே? அவளுக்கென்று வருமானம் வரும் வழியில் சற்றும் தடை ஏற்பட்டு விடக்கூடாது என்றுதான் அவரை உட்கார வைத்து விட்டு வந்தேன்'' என்றான் அவன்.

''நான் ஒன்றும் எதையும் தப்...'' என்று ரோஷமாகத் தொடங்கியவளின் பேச்சு சட்டென நின்றது. முதலில் அவளது வீட்டை விட்டு வெளியேறியது தப்புதானே?

மகளின் பேச்சைக் கவனியாததுபோல, ''அதுவும் சரிதான், மாதவி. நீ எதற்கும் அவரைப் பார்த்துப் பேசி விடுவதுதான் நல்லது. நீ அம்மாவிடம் போய் வந்தவருக்குக் காஃபி அனுப்பச் சொல்லு'' என்றார் கதிரேசன்.

எல்லோருமே மாதவி ஓர் அசட்டுக் கோபக்காரி என்று முடிவு செய்து விட்டார்களாக்கும் என்று உள்ளூரப் பொருமியபடியே மாதவி வாயில் வரவேற்பறைக்குச் சென்று பார்த்தாள்.

ஒரு பெரிய ஆர்டர் விஷயமாக ஏழெட்டு நாட்களாக வந்து போகிறவர்தான், பெரிய, தனியார் மருத்துவமனை ஒன்றின் உதவி நிர்வாகி, சுவர்ச்சித்தரமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கு வந்து வரைவது வசதிப்படாது; வரைந்து தரும் படங்களைச் சட்டமிட்டு



மாட்டிக் கொள்ளும்படி மாதவி சொல்லி, அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்ட நிலைதான்.

இப்போது என்ன பேச இங்கு வந்திருக்கக் கூடும்?

வணக்கம் தெரிவித்து உட்கார்ந்தவளிடம், அவர் வெகு சீக்கிரமாகவே வந்த விஷயத்தைத் தெரிவித்தார். படங்களின் விலையைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ள வேண்டுமாம்.

உள்ளூர எரிச்சல்பட்டபடி, ''பணக்கணக்கு எல்லாம் சுகிர்தா தான் பார்ப்பது. இது பற்றி அவளிடமே பேசிக் கொள்ளுங்கள்.'' என்று எழுந்தாள் மாதவி.

''அவர்கள் ரொம்பவும் கறாராகப் பேசுகிறார்களே, மேடம்! உங்களிடம் நேரில் கேட்டால் குறைப்பீர்கள் என்று நம்பகமான தகவல் கிடைத்தது...'' என்று அவசரமாகப் பேசினார் அவர்.

''இல்லை... என் பங்கு வரைவது மட்டும்தான். கணக்கு வழக்கு அவளது தான் இப்போது...'' என்று மாதவி கடிகாரத்தைப் பார்த்தாள்.

வேறு வழியின்றி எழுந்தபடி, அவர் பேசினார். ''ஆனாலும் மேடம், சரிக்குச்சரி கறுப்பில் கேட்டால் நாங்கள் எங்கே போவது?''

புரியாத திகைப்புடன் அவர் முகத்தைப் பார்த்தாள் அவள்.

''இது மருத்துவமனை மேடம்! எல்லாம் கணக்குத் தான். இதில் ஒவ்வொரு படத்துக்கும் வெள்ளையில் ஆயிரம், கறுப்பில் ஆயிரம் என்றால் எங்களால் எப்படித்

எங்களால் எப்படித் தரமுடியும்? சொல்லுங்கள்?'' என்று அவர் மேலே பேசப் பேச, மாதவிக்குத் தலைசுற்றியது.

'படத்துக்கு ஆயிரம் ரூபாய்! சாமான்கள் போக ஐநூறு மிச்சம். சுவர் இருந்தால்தானே சித்திரம்? வரைகிறவள் நீ உனக்கு முன்னூறு, எனக்கு இருநூறு!'' என்றவளை வற்புறுத்தி ஆளுக்குப் பாதி என்று முடித்து, படத்துக்கு இருநூற்றைம்பது வீதம் பெற்றது நிறைவுவர, உள்ளே பகிரென்றது! ''எல்..லாம் பில்தானே?'' என்பாளே சுகிர்தா! பில்லிலேயே வராமல் இப்படி ஒரு வருமானமா?

தனசேகரன் குறிப்பு காட்டியபோதுகூட அவனிடம் கோபப்பட்டாளே!

முதலில் இது விஷயம் தெளிவுபடுத்திக் கொண்டாகவேண்டும் என்று

மாதவி சீக்கிரமாகவே கிளம்பி, ஸ்டூடியோவுக்குச் சென்றாள்.
கிட்டத்தட்ட அதே சமயத்தில், ரத்தினபாண்டியனை, அவரது வீட்டில்
சந்தித்து சிலது கேட்டுக் கொண்டிருந்தான் தனசேகரன்.
"இந்த மாதிரி வீட்டிற்கு வந்து நீ பேசுவது தப்பு அப்பா! அத்தோடு,
நீ கேட்டது போலக் கையெழுத்து எல்லாம் அவசியம் இல்லை..." என்ற
பெரியவரை இடைமறித்து, "சார், உங்கள் நோக்கம் என்ன? திருமணத்தை
நிலைக்கச் செய்வதுதானே? அதற்குச் சாதகமாய் அவளுக்கு ஓர் உந்துதல்!
அவ்வளவுதான், கையெழுத்திட என் பேனாவை அவள் வாங்க வேண்டும்...
சார், இது எங்களுக்குள் ஒரு குறிப்பு! சங்கேதம்! என் பேனாவை அவளும்,
அவளது சாவிக் கொத்தை நானும்... என்று... ப்ளீஸ் சார்! சட்டவிரோதமாய்
எதையும் செய்யும்படி உங்களிடம் நான் கேட்கவில்லையே! தயவ செய்து—
சார்!" என்று மன்றாடினான்.




**அ**ன்று வழக்கத்துக்கு ஒரு மணிநேரத்துக்கும் முன்னதாகவே மாதவி,
பொட்டிக்கிற்கு வந்துவிட்டாள்.
ஆனால் வழக்கம்போலவே சுகிர்தாவைக் கண்ணிலேயே
காணவில்லை!
சில மாதங்களாகவே இப்படித்தான். 'பொட்டிக்' திறப்பது, சுத்தம்
செய்து, வெளியே அடுக்குவது போன்ற தொடக்க வேலைகள் செய்வது
எல்லாமே மாதவிதான். வெளி வேலைகள் படங்களுக்கு ஆர்டர் பிடிப்பது,
பணம் வாங்குவது என்று அது தொடர்பான வேலைகள் சுகிர்தாவுக்கு
அவளுக்கு அதிகம் இருந்ததால் 'பொட்டிக்'க்கும் கூட மாதவியின் பொறுப்பில்
தான் நடந்தது. 'பொட்டி'க்கில் விற்பனை என்று கிட்டத்தட்ட ஒன்றும்
இராததால் மாதவிக்கு அது இடையூறாகவும் இல்லை..
இன்று வந்ததும் மாதவி, கணக்குப் புத்தகங்கள் வைக்கும் அல
மாரியைத் திறந்து பார்த்தாள். 'பொட்டிக்'கில் ஏதேனும் விற்றால் 'பில்'
போடுவதற்காக 'பில்புக்' எடுப்பதற்காக அந்தச் சாவியும் சாவிக் கொத்தில்
தான் இருந்தது.

ஒரு வேகத்தில், சித்திரக் கண்காட்சியின் கணக்குப் பேரேட்டை எடுத்து விட்ட மாதவி சற்றுநேரம் அதைப் பிரித்துப் பாராமலே நின்றாள்.

உயிர்த்தோழி என்று ஏற்றபின் சந்தேகப்படுவதா? ஒருவேளை சுகிர்தா நல்லவளாக இருந்து மாதவி சந்தேகப்பட்டது தெரிய வந்தால் துடித்துப் போக மாட்டாளா?

மேலும் இந்தக் கணக்கு வழக்கைப் பார்க்க் கூடாது என்று சுகிர்தா, மாதவியிடம் மறைத்தது கிடையாதே!

''இரண்டு பேர் சேர்ந்து தொழில் செய்தாலே, குட்டை குழப்ப என்று நிறையப் பேர் வருவார்கள்!'' எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்பார்கள். 'தான் திருடி பிறரை நம்பாள்' என்கிற மாதிரி, இவர்கள் மற்றவர்களை நம்பவும் மாட்டார்கள். நம்பி நல்லபடியாய் இருப்பவர்களை நிம்மதியாய் இருக்கவும் விடமாட்டார்கள்! ஒருவருக்கொருவர் சந்தேகப்படும்படி, தூபம் போட்டுக் கொண்டே இருப்பார்கள்! அப்படிச் சந்தேகமாய் இருந்தால்.... இந்தக் கணக்குகளை ஒரு தரம் சரிபார்த்து விடுகிறாயா, மாது?'' என்று சுகிர்தா சொன்னது அப்போதுதான் போல மாதவிக்கு நினைவு வந்தது.

அவள் 'பார்த்துவிடு' என்றுதானே சொன்னாள்?

அதுவும் எத்தனை தடவை சொல்லியிருக்கிறாள்! உனக்குச் சின்னதாய் ஓர் ஐயம் தோன்றினாலும், உடனே கணக்கைப் பார்த்து அதைத் தீர்த்துக் கொள்! என் மேல் நம்பிக்கை கொஞ்சம் குறைந்தாலும் 'கணக்கைக் கொண்டுவாடி' என்று நீ கட்டளை போடு நான் கொண்டுவந்து



காட்டுகிறேன்' என்றெல்லாம் எத்தனைமுறை என்று... எண்ணும்போதே மாதவிக்கு எங்கே இடித்தது.

சுகிர்தா ஒன்றும் 'எதற்கும் நீயும் ஒரு தரம் பார்த்து விடுவது நல்லது' என்று கணக்கை மாதவியிடம் கொடுக்கவில்லையே!

'சந்தேகம் இருந்தால் சரிபார்த்துவிடு', ஐயம் தோன்றினால் தீர்த்துக் கொள்' 'நம்பிக்கை குறைந்தால்...' இப்படியெல்லாம் கூறும்போது, கணக்கைப் பார்க்கிறேன் என்றாலே அதுவே சந்தேகப்படுகிறேன் என்று சொல்லாமல் சொல்வது போல ஆகாதா? அதற்குத் தயங்கி, கணக்கைப் பாராமல் மாதவி விட்டு விடுவாள், என்ற மனோதத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சுகிர்தா முயன்று வெற்றியும் பெற்று விட்டிருந்தால்?

மீண்டும் ஏதோ மனதில் நெருடியது. நேரடியாகப் பேசினால் குறைக்கக் கூடும் என்று நம்பகமான தகவல் வந்ததாகச் சொன்னாரே! அப்படித் தகவல் கொடுத்தது யார்?

கும்மிருட்டில் திசை தெரியாத காட்டுக்குள் நிற்பது போல, மாதவி சில வினாடிகள் மலைத்து நின்றாள்.

இந்தக் கணக்கைப் பார்த்தால் ஏதோ ஒரு வழி தென்படும் என்று தோன்றவும் கணக்குப் புத்தகத்தைப் பிரித்தாள்.

சுமார் நாற்பத்தைந்து நாள் கணக்கு அது. வரவு இனங்களை விட செலவு இனங்கள் அதிகம். ஆனால்

அதுவும் அதிக எண்ணிக்கையில் இல்லை. படங்களுக்குத் தேவையான பொருட்கள் மூன்றே தடவைகளில் மொத்தமாக வாங்கியவைதான். ஆனால், ஒவ்வொரு நாளும் கட்டாயமாகக் குறிக்கப்பட்டிருந்த ஒரு செலவு அயிட்டம் மாதவியை மிகவும் உறுத்தியது.

தினந்தோறும் அறுநூறு ரூபாய்க்கு டாக்சி செலவு எழுதப்பட்டிருந்தது. பொதுவாகப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தியது சுகிர்தாவின் மொபெட் தான். அதற்கும் அவ்வப்போது பெட்ரோல் செலவு எழுதப்பட்டிருந்தது. அடுத்து சாமான் வாங்கி வந்ததெல்லாம் ஆட்டோவில்தான். அதுவும் எழுதப்பட்டிருந்தது. டாக்சி எடுத்தது, கண்காட்சியன்று மட்டும்தான். பிறகு நாற்பத்தைந்து நாட்கள் முழு நாள் டாக்சி செலவு மொத்தத்தில் இருபத்தேழாயிரம் ரூபாய் செலவு எங்கிருந்து வந்தது?

படத்திற்குரிய சாமான்கள் கூட, மூன்று தடவைக்குப் பதிலாக எட்டுத் தடவை ஆட்டோவில் சென்று வாங்கியதாகக் குறித்திருந்தது.

கூட்டுத் தொகையை மட்டும் காட்டிவிட்டுப் பங்கு என்று சுகிர்தா பிரித்துத் தந்ததை வாங்கிக் கொண்டு பைத்தியக்காரி மாதிரிப் பரவசப்பட்டாளே?

இவளைப் பற்றிக் குறிப்புக்காட்டி பேசியதற்காகக் கூட கணவனிடம் மாதவி எவ்வளவு கோபப்பட்டிருக்கிறாள்!

சுளீரென்று முகத்தில் அறைந்தாற்போல இன்னொன்று தோன்றியது!



என்னவோ தனசேகரன் கீழ்த்தரமாக மிரட்டியதாக மாதவியிடம் சொன்னதுகூடப் பொய்யாக இருந்தால்?

'இல்லை இல்லை' என்று மாதவி தலையில் தட்டிக் கொண்டாள். மிரட்டியதைத் தனசேகரனே ஒத்துக் கொண்டு விட்டான்! ஆனால் ஒன்று! அவன் அப்படி மிரட்டும் அளவுக்கு இவள் என்னென்ன பேசினாளோ!

அவளை அந்தப் பக்கம் சீண்டிவிட்டு, மாதவியை இந்தப் பக்கம் விவாகரத்துக்குத் தூண்டி விட்டாளே! பாதகி! மாதவியின் வாழ்வு பாழானதற்கு இந்தப் பாதகியல்லவா பெரும் காரணம்!

முதலில் அவளை நேரே பார்த்து நாலு வார்த்தை கேட்க வேண்டும்! இந்தக் கணக்கு புத்தகத்தை அவள் முகத்தில் விசிறியடித்து, 'என்னடி' என்று விசாரிக்க வேண்டும்!

அந்தக் கணக்குப் புத்தகம் அங்கே இருந்தது கூட மாதவிக்கு அவமானத்தையும் ஆத்திரத்தையும் ஊட்டியது! மாதவியின் ஏமாளித்தனத்தில் எவ்வளவு நம்பிக்கை இருந்தால், இந்தக் கணக்கை எல்லாம் அவள் எடுத்துப் பார்க்கவே மாட்டாள் என்ற நிச்சயத்தோடு இங்கேயே வைத்திருப்பாள் அந்த சுகிர்தா!

கணக்குப் புத்தகத்தை ஒரு பைக்குள் போட்டு எடுத்துக் கொண்டு, மீண்டும் கதவை மூடி விட்டு மாதவி கிளம்பினாள்.

சுகிர்தா தங்கியிருந்த பெண்கள் விடுதிக்குப் போனால், அங்கே அவள் இல்லை! இரண்டு மாதம்

முன்பாகவே வேறிடம் போய்விட்டாளே என்றார்கள். அவள் மலைத்து நின்றதைப் பார்த்து, 'கடிதங்கள் வந்தால் அனுப்பும்படி கூறி சுகிர்தா கொடுத்துவிட்டுப் போன முகவரியை மாதவியிடம் கொடுத்தார்கள்.

சுகிர்தாவின் லாபகரமாய் நடக்கும் இன்னொரு 'பொட்டிக்' காக இருக்கும் என்று எண்ணிச் சென்றால், அது குடியிருப்புப் பகுதி. ஃப்ளாட் முறைப்படி கட்டப் பட்ட இடம்.

அங்கே லிஃப்டில் ஏறி, இரண்டாவது தளத்தில் இருந்த சுகிர்தாவின் ஃப்ளாட்டின் முன் நின்று அழைப்பு மணியை அழுத்திய மாதவிக்கு ஒன்றுமே புரியவில்லை.

இந்த ஃப்ளாட்டுக்குச் சுகிர்தா எப்போது வந்தாள்? வாடகை என்றாலும், வாங்குவது என்றாலும் இந்த இடங்களில் பணம் நிறைய ஆகுமே!...

கதவு திறந்து, ''யார்'' என்று கேட்ட வேலைக்காரப் பெண்ணிடம், ''சுகிர்தா இருக்கிறாளா?'' என்று மாதவி வினவ, உள்ளே அழைத்து உட்கார வைத்துவிட்டுத் தன் எஜமானியைத் தேடிப் போனாள் அந்தப் பெண்.

மாதவியைக் கண்டதும் உண்டான வியப்பை - திகைப்பை சுகிர்தா சில வினாடிக்குள் அடக்கிக் கொண்டாள். ''வா வா வா!'' என்று உரத்த குரலில் வரவேற்றாள். ''எங்கே இந்தப் பக்கம்? காஃபி குடிக்கிறாயா? ஏ குட்டி, ஒரு கப் காஃபி இந்தம்மாவுக்குக் கொண்டு வா? மாதவி, நான் சற்று வெளியே போகவேண்டும்! அதனால் வேண்டுமானால், நாம் 'பொட்டிக்'கில் சந்திக்கலாமே!'' என்று அதே குரலிலேயே தொடர்ந்து கூறினாள்.



முன்பானால், ''என்னம்மா, பொதுக் கூட்டத்தில் பேசுகிற நினைப்பா?'' என்று வெள்ளையாய் சிரித்திருக்கக் கூடியவளுக்கு, இப்போது சந்தேகம் வந்தது. இந்த உரத்த குரல் யாருக்கான எச்சரிக்கை?

''இன்றைக்கு நான் 'பொட்டிக்' போகவில்லை..''

''ஏன்? ஓகே! இன்று உனக்கு விவாகரத்து வழக்கு இருக்கிறதில்லையா? மறந்தே போனேன்! சாரிம்மா! பரவாயில்லை! இன்று நானே போய்த் திறந்து கொள்கிறேன். நாளையிலிருந்து வழக்கம் போல் நீ பார்த்துக் கொள்!''

'உன் பொட்டிக்கைத் திறக்கவும் அதில் வேலை செய்யவும் நீ ஒன்றும் எனக்குச் சம்பளம் தருவதில்லையே! மாறாக, ஸ்டுடியோவுக்கு என்னிடம் இப்போதெல்லாம் வாடகை வாங்கிக் கொள்கிறாய்!' என்று எண்ணியபோதும், அதைச் சொல்லாமல், ''விடுதியை விட்டு இங்கே எப்போது வந்தாய்?'' என்று மாதவி வினவினாள்.

''கொஞ்ச நாள் இருக்கும்! உன்னிடம் சொல்லவில்லை? சொல்லி விட்டேன் என்று நினைத்தேனே? பா..வம்! கோர்ட்டுக்குப் போவதால் 'பொட்டிக்'கைப் பார்த்துக் கொள்ளும்படி என்னிடம் சொல்வதற்காக, அங்கே விடுதிக்குப் போய் என்னைத் தேடினாயா? அச்சச்சோ! பா..வம் உனக்கு, வீ...ண் அலைச்சல்!'' என்று உருகினாள் சுகிர்தா.

''வாங்கியதா? வாடகையா? இந்த இடத்தைக் கேட்கிறேன்!''

''லோன் போட்டு வாங்கியது. முதல் தவணை கட்டிவிட்டு, ஃபைனான்ஸ் கம்பெனியில்....'' என்ற சுகிர்தாவுக்குப் பேச்சு போகும் போக்குப் பிடிக்கவில்லை. ''இந்த வேலைக்கார குட்டி காஃபி கொண்டு வராமல் என்னதான் செய்கிறது?'' என்று எரிச்சலாய் மொழிந்தவண்ணம், அதைப் பார்ப்பவள் போல எழுந்து அந்தப் பெரிய ஹாலின் உட்புறம் இருந்த கதவை அணுகினாள்.

சுகிர்தா முதலில் உரத்த குரலில் பேசியதைக் கவனிக்கவில்லையோ அல்லது அவள் அப்படிப் பேசிய போது, அவன் குளியலறையில் இருந்தானோ தெரியவில்லை. இப்போது, மாதவி, அங்கே இருப்பது தெரியாமல், ''நாளைக்கு என் மனைவியின் பிறந்த நாள் சுகி. அதனால் இங்கே வரமாட்...'' என்றபடி, பக்கவாட்டுப் படுக்கையறையில் இருந்து வெளியே வந்த அந்த வக்கீல் இளங்கோ சோஃபாவில் அமர்ந்திருந்தவளைக் கண்டதும் திகைத்து விழித்தான்.

உடனேயே சமாளித்துக் கொண்டு, ''எனக்கு அவசரமாய் ஒரு பெரிய மனிதரிடம் 'அப்பாயின்ட்மென்ட்' இருக்கிறது! பிறகு பார்க்கலாம்'' என்றவன் அவசரமாகக் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்று விட்டான்.

ஓடிவிட்டான்!

பூப்போட்ட லுங்கி கட்டிக்கொண்டுதான் பெரிய மனிதரைப் பார்க்கப் போவாயாடா என்று ஏளனமாக



நினைத்த மாதவிக்குச் சட்டென வயிற்றைப் பிரட்டிக் கொண்டு வந்துவிட்டது!

சே! என்ன கேவலமான மனிதர்கள்.

இளங்கோவின் குரல் கேட்டதுமே, அவனைத் தடுக்க எண்ணித் திரும்பி வந்த சுகிர்தா, அதற்குள் அவன் ஹாலுக்குள் வந்து, மாதவியும் அவனைப் பார்த்துவிடவே பேசாமல் நின்று விட்டிருந்தாள்.

இப்போது அவன் வெளியே சென்றதும், நிதானமாக வந்து, மாதவியின் எதிரே அமர்ந்தாள். ''இங்கே நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் இருக்கிறோம்!'' என்றாள் ஒரு நிமிர்வுடன்.

''அவர்... மணமானவர்! ஒரு குடும்பத்தைக் கலைப்பது பாவம்!''

''ஏன்? அவளை ஒன்றும் விரட்டி விடவில்லையே! எப்படியும் அது என் சொந்த விஷயம்! பேச உனக்கு உரிமை இல்லை! இப்போது இங்கே எதற்காக வந்தாய்?'' என்று சுகிர்தா அதிகாரக் குரலில், அதட்டலாகக் கேட்டாள்.

அந்தக் குரலில், மாதவிக்கும் சுள்ளென்று சினம் ஏறியது. ''இதோ இதற்காகத்தான்!'' என்று பைக்குள் இருந்த கணக்குப் புத்தகத்தை எடுத்து டீபாய் மீது போட்டாள்.

சுகிர்தா புருவம் நெறித்து நோக்கவும், மாதவியே தொடர்ந்து பேசினாள். ''பார்! இது நம் கண்காட்சிக் கணக்கு! தினமும் டாக்சிச் செலவு எழுதியிருக்கிறாயே!

மொப்பெட்தானே பயன்படுத்தினாய்? டாக்சி எங்கி ருந்து வந்தது? சொல்லு? என்று முடிந்தவரை அவளும் அதட்டியே கேட்டாள்.

''பூ!'' இதற்காகத்தானா இவ்வளவு ஆவேசம்? கவனி, மாதவி! கண்காட்சி வைத்தது உன் படங்களை விற்க! உனக்கு விளம்பரம் செய்வதற்காக! நான் அலைந்து திரிந்தது டாக்சியில் என்றாலும் அதை முழுக் கக் கொடுக்க வேண்டியவள் தானே நீ? மொப்பெட்டில் சிரமப்பட்டுப் பயணம் செய்து, அந்தத் தொகை மிச்சம் பிடித்து எடுத்துக் கொண்டது என் கெட்டிக்காரத்தனம்! இதில் தப்பென்ன வந்தது? சொல்லு?''

என்ன தப்பா? கொதித்துக் கொண்டு வந்தது மாத விக்கு! இவளை நம்பி... சீ!

''நட்பு, நம்பிக்கை என்பது பற்றி எதுவுமே தெரி யாத உன்னிடம் என்ன சொல்லி என்ன பயன்? அதை விடு! ஒவ்வொரு படத்துக்கும் கறுப்பில் ஆயிரம் ரூபாய் தனியாக வாங்கி இருக்கிறாயே! கணக்கில் காட்டாத அது என்ன கணக்கும்மா! அதற்கும் ஒரு விளக்கம் சொல் லேன், கேட்கிறேன்!''

''எந்தப் பேமானி உன்னிடம் வந்து சொன்னது? ஆளைக்காட்டு! கூறுபோட்டு விடுகிறேன்!'' என்று சுகிர்தா கத்திய தினுசில் மாதவிக்கு அருவருத்துப் போயிற்று.

சட்டென எழுந்து, ''நான் போகிறேன், சுகிர்தா. ஸ்டூடியோவில் இருக்கும் என் சாமான்களை ஆள்விட்டு எடுத்துக் கொள்கிறேன். இனி உனக்கும் எனக்கும்



ஒன்றுமில்லை!'' என்று முடித்துவிட்டுத் திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

''அடிப்பாவி! அப்புறம் நான் எப்படி இந்தத் தவ ணைகட்டு...'' என்று தொடங்கியவள் சட்டென அதை நிறுத்திக் கொண்டு மாதவியின் பின்னோடு ஓடிவந்தாள். ''நில்லு மாதவி. ஒரேயடியாய் இப்படிச் சொன்னால் எப்படி? வேணுமானால், இந்த ஆயிரத்தையும் கூட இருவருமாய்ப் பிரித்துக் கொள்ளலாம்... யோசி! விற்ப தற்கு நான் இல்லாமல் நீயும்தான் வருமானத்துக்கு என்ன செய்வாய்? உன் புருஷனும் இனி உன்னைச் சீந்தப்போ வது இல்லை! உனக்கு நல்லதற்குத்தான் சொல்கிறேன்...'' என்றாள் நயந்த குரலில்.

நின்று, திரும்பி, சுகிர்தாவை வெறித்து நோக்கி னாள் மாதவி. ''என் நல்லதற்காக? அதை நீ சொல்கி றாயா? அவர் அப்போதே எச்சரித்தார்...'' என்றவளுக்கு 'ஐயோ' வென்று வந்தது.

தனசேகரனின் பேச்சுக்குக் கொஞ்சம் செவி சாய்த்தி ருந்தால்...?

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு, ''இப்போதேனும், மெய்யாகவே என் நன்மையை ஒரு கணமேனும் நினைத்தாய் என்றால், சுகிர்தா, நீ இனி என் பெயரைக் கூட, உச்சரிக்காதே! மாதவி என்று ஒருத்தி இருந்தாள் என்பதையே மறந்துவிடு! அது போதும் எனக்கு!'' என்றவள், கதவைத் திறந்து கொண்டு அங்கிருந்து வெளியேறினாள்.

விடுவிடுவென்று வேகமாக நடந்தவளுக்கு ஏதோ சாக்கடை நாற்றத்திலிருந்து மீண்டுவந்த உணர்வு உண்டாயிற்று. நின்று, சற்று மூச்சு வாங்கிக் கொண்டாள்.

ஸ்கூட்டியில் ஏறிச் செல்லும்போது, இடைத் தெரு ஒன்றில் பதுங்கினாற் போல் அந்த வக்கீல் இளங்கோ நிற்பது கண்ணில் பட்டது! இந்தத் தரங்கெட்டவர்களை நம்பினோமே என்று மீண்டும் அவள் மனம் தவித்தது.

நீதிமன்றத்துக்குச் செல்லும் வழியெல்லாம், மீண்டும் மீண்டும் அவளுக்கு ஒரே சிந்தனைதான்.

எனக்கு விவாகரத்து வேண்டாம் என்று அந்தப் பெரியவரிடம் சொல்லி விட்டால்? ஒரு திருமணத்தை நிலை நிறுத்துவதுதான் குடும்ப நீதிமன்றத்தின் குறிக்கோள் என்றாரோ! அதன்படி, மணவிலக்கு வேண்டாம் என்றால் சரியென்று ஏற்கத்தானே செய்வார்கள்?

அப்படியே சொல்லிவிடலாம் என்று தீர்மானிக்கும் போதே, தனசேகரன் விவாகரத்துக்குச் சம்மதித்தது நினைவு வந்து அவளை நெற்றியடி அடித்தது.

அவள் தன்னை உணர்ந்து என்ன செய்வது? அவன் வெறுத்து விட்டானே! அவன் வாழவேண்டாமா என்றானே! இப்போது, அவளிடமிருந்து அவன் அல்லவா விடுதலை நாடுகிறான்!

மணவிலக்கு வேண்டாம் என்று அவள் சொல்லலாம்! வழக்காடினால், அவனுக்கு விடுதலை கிடைக்க ஆண்டுக்கணக்கில் தாமதம் ஆகக்கூடும்!



ஏனெனில், அவளைப் போலவே, அவனுக்கும் திருமணத்தை ரத்து செய்வதற்கு உரிய காரணங்கள் எதுவும் இல்லைதான்.

ஆனால், அப்படி தனசேகரனைச் சட்டப்படி பிடித்து வைத்துக் கொண்டு வாழ விரும்பும் அவள், வேண்டும் விடுதலையைக் கொடுக்காமல் இருப்பது எந்த வகையில் நியாயமாகும்?

இப்போதே அவளது முட்டாள்தனத்தினால் அவனது வெறுப்பைச் சம்பாதித்து வைத்திருக்கிறாள்! இந்த வெறுப்பு பன்மடங்காவது தவிர, இப்படி இழுத்தடிப்பதால் வேறு என்ன லாபம்?

அதைவிட, அவன் கேட்கும் விடுதலையைக் கொடுத்து விட்டு, அவனோடு கழித்த இன்பமான காலத்தை மட்டும் நினைத்தபடி வாழ்வது மேல்!

அனிச்சைச் செயலாய் பிரேக்போட்டு ஸ்கூட்டியை அவள் நிறுத்த, எதிரே வந்த பைக்காரனும் அப்படியே நிறுத்தியதால் ஒரு பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

சரிந்துவிட்ட ஸ்கூட்டியை நிமிர்த்தி நிறுத்த முடியாமல் மாதவியின் கைகால்கள் நடுங்கின.

''விலகுங்கள்'' என்றுரைத்து, அவள் நகர்ந்ததும், ஸ்கூட்டியைத் தூக்கி நிறுத்தினான் பைக்கில் வந்தவன். ''சாரி! ஆனால் நீங்கள் பாதையில் கவனம் வைக்கவில்லை என்று நினைக்கிறேன்!'' என்றான் வரண்ட குரலில்.

கவனம் அவள் அன்று பறிகொடுக்கப் போகும் கணவனிடம் இருந்தது என்று சொல்ல முடியுமா?

தவறை ஒப்புக் கொண்டு, ''மன்னித்துக்கொள்ளுங் கள்! ஏதோ ஞாபகமாய்...'' என்ற மாதவி சுற்றுமுற்றும் பார்த்தாள்.

புத்தி புல் மேயப் போயிருந்தாலும், அந்த மட்டும் வண்டியை நீதிமன்ற வளாகத்துக்குத்தான் ஓட்டி வந்தி ருந்தாள்!

''நீங்கள் எங்கே போக வேண்டும்? வண்டியை ஓட்ட முடியுமா? வேண்டுமானால் ஓர் ஆட்டோ கூப்பி டட்டுமா?'' என்று வினவினான் அவன்.

''வேண்டாம், சார். நான்... நான் இங்கேதான் உள்ளேதான் போக வேண்டும்!'' என்றாள் அவள், வாட்டத்தை மறைக்க முயன்றபடி.

அவளைக் கூர்ந்து பார்த்த பைக்காரன், அவளோடு கூடவே பைக்கை உருட்டிக் கொண்டு வரவும் அவளுக்கு 'என்னடா இது' என்று இருந்தது.

உரிய இடத்தில் ஸ்கூட்டியை நிறுத்தி, 'பார்க்கிங் டிக்கட்'டை வாங்கியவள், அவனும் அதையே செய்ய வும், ''நீங்கள் போங்கள், சார், எனக்கு ஒன்றுமில்லை'' என்றாள்.

''எனக்கும் இங்கே ஒரு வேலை இருக்கிறது!'' என்றவன், மீண்டும் ஒரு தரம் அவளைக் கூர்ந்து நோக்கினான்.



கவனியாதது போல நடக்க முயன்றவளை, ''ஒரு நிமிடம்'' என்று நிறுத்தி, அவன் கேட்டான், ''உங்கள் பெயர் மாதவியா? மாதவி தனசேகரன்?''

திகைப்புடன் நின்று, அவனை நோக்கினாள் மாதவி! யார் இவன் என்ற கேள்வி பார்வையில் இருந் தது.

''என் பெயர் முகுந்தன்'' என்றான் அவன். ''என் பெயர் உங்களுக்குப் பரிச்சயமோ என்னவோ, எனக்குத் தெரியாது! ஆனால் இப்படிச் சொன்னால் நிச்சயம் அறிந்து கொள்வீர்கள். நான் சுகிர்தாவுடைய மாஜி கணவன்! கடவுளும் இந்த நீதிமன்றமும் கருணை செய்த தால் மாஜியாகிவிட்டேன்!''

## 21

மாதவி, மீண்டும் திகைத்து நின்றாள்.

ஒரே ஓர் இருபத்தி நாலுமணி நேரத்தில் என்ன வெல்லாம் தான் நடக்கும்?!

தலையை உலுக்கிவிட்டுக் கொண்டு ''வணக்கம்'' என்றாள் அவள்.

''வணக்கம் வாருங்கள்! நடந்துகொண்டே பேச லாம். என் விவாகரத்தின் காப்பி இன்று கிடைக்கும் என்றார்கள். உங்களுக்கு இன்று, 'ரீகன்சிடரேஷன்' ஆஃ பீசரோடு சந்திப்பாமே! உங்களையும் அப்படியே பார்த் துப் பேசிவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்...

ஒரோர் சமயம் உங்களைத் தூரத்தில் சுகிர்தாவோடு பார்த்ததுதான்! அதனால்தான் உடனே அடையாளம் தெரியவில்லை..!''

''எ... என்ன பேச வேண்டும்?'' என்று மாதவி குழப்பமாகவே கேட்டாள்.

''வேறு என்ன? நம்மிடையே பொதுவாய் இருப்பது சுகிர்தாதானே? அவளைப் பற்றி நான் உங்களிடம் சில விவரம் சொல்ல விரும்புகிறேன்.. அதைச் சொல்வதில் எனக்கு ஆசை, ஆர்வம் ஒன்றும் கிடையாதுதான்! ஆனால், இன்னொரு குடும்பம் நாசமாகும் போது கையைக் கட்டிக் கொண்டு சும்மா நின்று பார்த்துக் கொண்டு இருக்க முடியவில்லை! உங்கள் கேஸ் எப்போது?''

''இன்னும் அரை மணிநேரம் இருக்கிறது!''

''அப்படியானால் வாருங்கள். அங்கே உட்கார்ந்து பேசலாம்... பேசுவது என்ன? நான் சொல்லும் சில விவரங்களைக் கேளுங்கள்!'' என்று தொடங்கி, முகுந்தன் அவனது வாழ்க்கை பற்றிச் சொன்னான்.

அவனது திருமணமானதிலிருந்து தொடங்கிய துன்பம்! அது பற்றிக்கூட அவன் அப்படி இப்படி என்று வர்ணித்திருந்தால், மாதவிக்கு கொஞ்சம் வெறுத்திருக்கும்! ஆனால், எந்தவித அலங்காரமும் இல்லாமல், நடந்த சில நிகழ்ச்சிகளை அவன் அப்படியே பிட்டு வைத்த விதம் அவளை உருக வைத்தது.



சுகிர்தாவோடு, அவளது சொந்த அனுபவமும் இருக்கிறதே!

தான் சொல்ல நினைத்ததைச் சொல்லி முடித்துவிட்டு, முகுந்தன் சில கணங்கள் பேசாதிருந்தான்.

பிறகு கையிலிருந்த சிறு பெட்டியில் இருந்து ஒரு காகிதத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

''இதில், முதலில் இருப்பது சுகிர்தாவுடைய தந்தையின் முகவரி! எங்களை விடவும் பரிதாபத்துக்குரிய மனிதர்! அடுத்தது என் வீடு. என் வீட்டில் என் தாயார், மூன்று தங்கைகள் இருக்கிறார்கள். உங்களுக்கு மேற்கொண்டு ஏதாவது தெரிய வேண்டுமென்றால், இவர்களைக் கேளுங்கள், சொல்லுவார்கள்! எங்கள் வீட்டில் சுகிர்தா என்றால் எல்லோரும் கொஞ்சம் பயப்படுவார்கள்! ஆனால் விவரம் கேட்டால் சொல்லுவார்கள்! இனி'' கையைத் திருப்பி மணி பார்த்துவிட்டு, ''இப்போது கிளம்பினால், உங்களுக்கு நேரம் சரியாக இருக்கும். மிசஸ் தனசேகரன் உங்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்று என் மனது விரும்புகிறது. கடவுளை வேண்டிக் கொண்டு போங்கள்!'' என்றவன் எழுந்து தன் வழியே சென்றான்.

முகுந்தன் கூறிய விவரங்கள், செத்த பாம்பை அடிக்கிற மாதிரி தேவையற்றவைதான். ஆனால், இவ்வளவு கொடூரமா என்றிருந்தது! இந்தக் கொடூரம் புரியாமல் இருந்து விட்டாளே! காலம் கடக்குமட்டும்! அவளுக்கு மட்டும் ஏதாவது சக்தி கிடைத்து, இந்த ஓர் ஆண்டு காலத்தை இல்லாமல் செய்துவிட முடியுமா

னால்? அதற்கு விலையாக அவளது உயிரைக்கூட கொடுப்பாளே! இப்போது? உயிர் இருந்தும் நடைப் பிணமாய் வாழப் போவதை விட, நல்ல வாழ்வு வாழ்ந் தோம் என்ற திருப்தியுடன் உயிர் விடுவது மேலாயிற்று!

அன்றைக்குத் திரு. ரத்தினபாண்டியன் அதிகமாய் எதுவும் கேட்வோ, பேசவோ இல்லை. கேட்டிருந்தால் பதில் சொல்ல, அவளது தொண்டையிலிருந்து சத்தம் வெளிவந்திருக்குமா என்பதே சந்தேகம் தான்!

இருவருக்கும் விவாகரத்துதான் வேண்டுமா என்று மட்டும் கேட்டார். இருவருமே ஒப்புதலாய்த் தலைய சைக்கவும் ஒரு காகிதத்தில் அவர் அதை எழுதி, அவர்க ளைக் கையெழுத்துப் போடச் சொன்னார். ''பெண்கள் முதலில்! பேனா இருந்தால் கொடுங்கள் தனசேகரன்!''

சட்டெனப் பையில் இருந்த பேனாவை எடுத்து தனசேகரன், மனைவி கையில் வைத்தான்.

அவனது சட்டைப் பையிலேயே எப்போதும் இருக் கும் பேனா! அவனது உடல் சூட்டுடனேயே அப்போதும் இருந்தது. அந்தக் கதகதப்பைக் கையில் உணர்ந்ததும் மாதவி திகைத்து நின்றாள்.

இந்தப் பேனாவின் சூடு அவர்களுக்கிடையே ஒரு சிறு விளையாட்டு. வீடு வந்தவுடன் அணைக்கவில்லை என்றால், இந்தப் பேனாவைப் பிடுங்கி மாதவி தன் கன்னத்தோடு ஒட்டிக் கொள்வாள். அதுபோதுமாம்! அதேபோல, அவளது இடுப்பில் தொங்கும் சாவிக் கொத்தை எடுத்து, அவளது உடலில் பட்ட பாகத்தைத் தன்னோடு ஒட்டி வைத்துக் கொண்டு அவன் சிரிப்பான்!



ஏறத்தாழப் பத்து மாதங்களுக்குப் பிறகு, அந்தக் கதகதப்பைக் கைகளில் உணரவும், மாதவி பிரமித்தாள்.

அவளுக்கே உரிமையான இந்தக் கதகதப்பை வாழ் நாள் முழுவதும் இழப்பது எப்படி சாத்தியம்? எப்படி முடியும்?

மனைவியின் முகத்தையே பார்த்தபடி, தனசேகரன் அசையாமல் நிற்க, ஒரு விசித்திர முறுவலுடன், ''கையெ ழுத்துப் போடம்மா!'' என்றார் ரத்தினபாண்டியன்.

பேனாவை இறுகப் பற்றியபடி ''மாட்டேன்!'' என்று வீறிட்டாள் மாதவி. ''மாட்டேன்! மாட்டேன்!! மாட் டேன்!!!''

சட்டென முன்வந்து, தனசேகரன் அவளை அணைக்க, அண்ணாந்து அவனை ஒரு பார்வை பார்த்து விட்டு மாதவி அப்ப்டியே அவன் மார்பில் ஒண்டிக் கொண்டாள்.

நனைந்த புறாவாய் வெடவெடத்த உடல் மெல்ல அமைதியுற, ''உங்களை நான் விடமாட்டேன், தனா!'' என்றாள் மாதவி கண்ணீர் குரலில்.

''வேண்டாம் கண்மணி'', என்ற தனசேகரன், ரத் தின பாண்டியனைப் பார்த்து லேசாக முறுவலித்துவிட்டு, மாதவியைக் கையணைப்பிலேயே வழிநடத்தி வெளியே வந்தான்.

அங்கே கதிரேசன், ரவிச்சந்திரன், குணசேகர னோடு, முகுந்தனும் பார்த்துக் கொண்டிருக்க, அவர்களி டம் ஒரு தலையசைவால் விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து மனைவியோடு வெளியேறினான்.

நேரே, அவளோடு அவன் சென்ற இடம் அவர்கள் வீடுதான்!

கண்ணீர் எல்லாம் நின்று, மாதவி அமைதியடைய வெகு நேரம் பிடித்தது. ''என்ன மடத்தனம் செய்ய இருந்தேன்!'' என்று தன்னைத்தானே பலமுறை நொந்து கொண்டவள், கடைசியில் ''நீங்களும் அதற்குச் சம்மதித் தீர்களே!'' என்றாள் குறையோடு.

''இல்லை கண்ணம்மா! இந்த ஒரு வினாடிக்காக பிரிவு நிரந்தரமாகி விடும் என்று நீ உணரும் வினாடிக்காகத்தான் நான் காத்திருந்தேன். அதை உன்னால் தாங்க முடியாது என்பது எனக்கு நிச்சயம்தான்! ஆனால்...''

கணவன் தன்னைத் தெரிந்து வைத்திருக்கிறான் என்பதில் மாதவிக்கு மிகவும் பெருமைதான்! ஆனால், கொஞ்சம் அவமானமாகவும் இருந்தது! அவள், அவனை அப்படித் தெரிந்து கொள்ளவில்லையே!

கணவன் முடிக்காமல் நிறுத்தியதை எடுத்துக் கொடுத்து, ''ஆனால்?'' என்று கேட்டாள் அவள்.

''இவ்வளவு ஏற்பாடு செய்த பிறகும் கூட, இன்றைக்கு எனக்கும் கலக்கமாகவேதான் இருந்தது?'' என்றவன், ''அப்பாடி'' என்பது போல அவள் தலைமீது தன் சென்னியைச் சாய்த்துக் கொண்டான்.

சற்று நேரம் அந்த ஆறுதலை இருவருமே அனுபவித்தபின், ''அப்படியானால், உங்களுக்கும் சந்தேகம் தான்! அப்படித்தானே?'' என்று மாதவி வினவினாள்!



''சந்தேகம் என்பதைவிட, ஒரு கலக்கம் எனலாம். பார்த்துப் பார்த்து எல்லாம் செய்தபிறகும், ஒரு சிறு தவறில் எல்லாம் கெட்டுவிடுமோ என்கிற துணுக்கம்! ஒருவர் மனதுள் மற்றவர் புகுந்து பார்க்க முடியாத வரையிலும், குறைந்தபட்சமாய் இந்தத் துணுக்கம் எல்லோர் மனதிலும் இருக்கத்தானே செய்யும்!''

''ம்ம்...'' என்று அவன் பேச்சை ஜீரணித்தவள் மெல்ல முணுமுணுத்தாள்... ''இவ்வளவு ஏற்பாடு பார்த்துப் பார்த்து எல்லாம் செய்து... என்னென்ன செய்தீர்கள், தனா?'' என்று கேட்டவள் சட்டெனத் திரும்பி... ''கண்காட்சி சாலை நிர்வாகி, மருத்துவமனை உதவியாளர்.. அந்த முகுந்தன்! எல்லாம் உங்கள் வேலை தானா?'' என்றாள் கண்ணகல!

''பின்னே, எல்லோரும் இப்படி ஒன்றாய் வந்து குவிவார்களா? என்ன?'' என்று அவள் மூக்கைப் பிடித்து ஆட்டினான் கணவன். ''ஆனால், இதில் ரத்தின பாண்டியன் சாரை விட்டு விட்டாளே என் கெட்டிக்கார மனைவி!''

''அவர் என்ன செய்தார்?''

''கையெழுத்துப் போடச் சொன்னாரே! அதுவும் என் பேனாவைக் கொண்டு!'' என்று கண் சிமிட்டிச் சிரித்தவன், மாதவி வியப்பும், ஆர்வமுமாய் நோக்கவும், ''ஆனால் ஒன்று! மனிதர் லேசில் சம்மதிக்கவில்லை! அதெல்லாம் 'ரூல்'படித்தான் நடப்பேன்! நீ வீட்டில் என்னைப் பார்க்க வந்ததே தப்பு' என்றெல்லாம் மிரட்டியிருந்தார். கடைசிவரை, செய்வாரா, செய்வாரா என்று

எனக்கு உதைப்புதான்!'' என்றுரைத்து, தோளைக் குலுக்கினான்.

''மனிதர்களில் நிறையபேர் நல்லவர்கள்தான்! இல்லையா, தனா? எல்லோருமே உதவியிருக்கிறார்களே!'' என்றாள் மாதவி யோசனையோடு.

'உண்மைதான்!'' என்றான் தனசேகரனும். ''அதிலும் மற்ற இருவருக்குமாவது ஒரோரு வகையில் சுயலாபம் இருந்தது. ரத்தினபாண்டியன் சாருக்குக் கூட அவரது, வேலையில் வெற்றி என்பது இருந்தது. எந்தவித பிரதிபலனும் இல்லாமல் செய்தவர் முகுந்தன்தான்! அதிலும், அவர் மானம் பார்க்கிறவர்! அப்படியிருந்தும், நம் குடும்பத்தைக் காப்பாற்றும்படி கேட்டேன் என்று, அவரது சொந்த அவலத்தை உன்னிடம், வாழ்வில் ஒரு தரம் கூடக் கண்டு பேசி அறியாத உன்னிடம் சொன்னார்! அவருக்கு இனிமேலாவது ஒரு நல்ல வாழ்வு அமைய வேண்டும்!''

அவளும் அதே வேண்டுதலை எதிரொலித்தாள்.

அடுத்தவரின் அருகாமையே போதும்போல, அவ்வப்போது இருவரும் பேசாமலும் இருந்தனர்.

அப்படி ஒரு சிறு அமைதியின் பின், ''ஒரு வேளை... நான் கையெழுத்திட்டிருந்தால் என்ன செய்திருப்பீர்கள், தனா?'' என்று மாதவி வினவினாள்.

''நான் மறுத்திருப்பேன்?'' என்றான் அவன் எளிதாக, ''எப்படியும் நான் உன்னை எப்படி விடுவேன், மது?''



''அப்படிப்பட்டவர், நான் உங்கள் மீது கோபத்தில் அப்பா வீட்டில் போய் இருக்கிறேன் என்று தெரிந்த பிறகும் எப்படி இவ்வளவு நீண்ட காலம் வெளிநாட்டுப் பயணம் போனீர்கள் தனா?'' என்று தொண்டையடைக்க மாதவி கேட்டாள்.

''இங்கே இருந்துதான் என்ன செய்வது, மதும்மா! நீதான் என்னிடம் பேசவே மாட்டேனென்று இருந்தாயே! அப்போதும் எனக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை தான். ஆனால் மாமாதான் அஸ்திவாரம் போடுகிற காலம், பலனை அனுபவிக்கப் போகிறவள் நீதானே! என்று போகச் சொன்னார்கள்! நீயும்தான் யோசித்துப் பார்! இந்த மாதிரி ஒரு வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும்?'' என்று, அந்த வாய்ப்பு தரப்போகும் உயர்வுகளைப் பற்றி அவன் எடுத்துரைத்தான்.

''அப்பா ஒரு நாள் சொன்னார். ஆனால் நான் மிகவும் கோபத்தில் இருந்தேனா, காது கொடுத்தே கேட்கவில்லை!''

''அடுத்த ஆண்டு, உன்னையும் அங்கெல்லாம் கூட்டிப் போகலாம் என்பதுதான் நான் கடைசியாகச் சரி என்றதன் முக்கிய காரணம்! நீயானால்... இதற்காகவெல்லாம் விவாகரத்துவரை போவதா, மாதவி?'' என்ற போது, அவன் குரலில், குறையோடு கோபமும் இருந்தது.

''நான் ஒன்றும் அதற்காக அப்படிக் கேட்கவில்லை!'' என்றாள் மாதவியும் சிறு கோபம் எழும்ப. ஆனால், கோபம் வந்த வேளையிலும் 'விவாகரத்து' என்ற வார்த்தையே அவளை நடுக்கியது!

''பின்னே எதற்காக?''

''சுகிர்தாவை அப்படி மிரட்டினீர்களே?''

''கடவுளே!'' இலகுவாய்ச் சாய்ந்து கிடந்தவன் சட்டென நிமிர்ந்து அமர்ந்தான். ''என் இனிய குடும்பத்தை ஒருத்தி நாசமாக்கிக் கொண்டு இருக்கிறாள்! அவளை, விரட்டுவதற்காக மிரட்டக்கூடாதா? நல்ல வழியில் சொன்னால் அவள் கேட்கிறவள் இல்லையே! வேறு என்னதான் செய்வது?''

''அதற்காக அப்படியா மிரட்டுவது? அடியாள் வைத்துப் பலர் பார்க்கத் துகில் உரிவது என்றெல்லாமா என் தனா சொல்வது?'' என்றாள் மாதவி துக்கமும் கோபமுமாக.

''பாவி! படுபாதகி!'' என்று நெற்றியில் அறைந்து கொண்டான் தனசேகரன். ''மரியாதையாக உன்னை விட்டு விலகாவிட்டால் - அதுகூடத் தொழில் துறையில் நான் அவளை விலகச் சொல்லவில்லை! - அவளுடைய புகுந்த வீட்டில் அவள் நடந்துக் கொண்ட விதம் பற்றி உன்னிடம் ஆதாரத்துடன் கூறிவிடுவேன் என்றேன்! அதைப்போய் இப்படிப் புளுகினாளா? அவள்தான் புளுகினாள் என்றால், நீ என்னிடம் ஒரு வார்த்தை இப்படிச் சொன்னீர்களா, என்று கேட்க வேண்டாமா?'' என்று ஆத்திரப்பட்டான்.

''எங்கே கேட்பது? நீங்கள்தான் அவளை மிரட்டி விட்டு, உடனேயே வெளிநாடு போய் விட்டீர்களே! நானே உங்கள் அலுவலகத்துக்கு டெலிஃபோன் செய்தேன்!'' என்றாள் அவள் துக்கம் தொண்டை அடைக்க.



சுகிர்தா ஏமாற்றுக்காரி, கெட்டவள் என்பது இப்போது தெளிவாகிவிட்ட விஷயம். குறைந்தபட்சம், தனசேகரன் அப்படி உடனே கிளம்பி வெளிநாடு செல்லாமல் இருந்திருந்தாலாவது, அவனிடம் பேசி உண்மை அறிந்திருக்கலாமே! எவ்வளவு காலம் அந்த வேதனையைச் சுமக்க நேரிட்டு விட்டது!

''இல்லையே!'' என்று அதையும் மறுத்தான் அவளுடைய அருமைக் கணவன். ''சுகிர்தாவை மிரட்டியபின் கிட்டத்தட்டப் பதினைந்து நாள் கழித்தல்லவா நான் வெளிநாடு கிளம்பியது!''

சுகிர்தாவின் வஞ்சகம் இப்போது இருவரையும் வாயடைக்கச் செய்து விட்டது! என்னமாய்த் திட்டமிட்டு சதி செய்திருக்கிறாள்!

சற்றுப் பொறுத்து, இயல்பாகப் பேச முடிந்ததும், ''ஆனால் தனா, நீங்களே கூட, அன்று முதல்நாள் ரத்தினபாண்டியன் சார் முன்னிலையில், கீழ்த்தரமாக மிரட்டியதாக ஒப்புக் கொண்டீர்களே!'' என்று கேட்டாள் அவள். இன்னமும் கூட சுகிர்தாவால் அவ்வளவு எளிதாக அவர்கள் வாழ்வைக் கெடுக்க முடிந்ததை அவளால் நம்பமுடியவில்லை. குறைந்தது, கோர்ட்டில் முதல் நாளிலேயாவது விஷயம் அறிந்திருக்கலாமே!

''மது, மது! நான் பொதுவாக மிரட்டலை, அன்று அவளை பிளாக்மெயில் பண்ணியதைத்தான் கீழ்த்தரம் என்றேன். அவள் சொன்ன அசிங்கத்தை அல்ல!'' என்று தனசேகரன் கூறவும், மாதவி, மீண்டும் அவன் மார்பில் முகம் புதைத்து விம்மி அழுதாள்! காரணமே இல்லாமல், வாழ்வைக் கெடுத்துக் கொள்ள இருந்தாளே!

தகுதியற்ற ஒருத்தியை நம்பிய பாவம்! அவளது வாழ்வில், எவ்வளவு காலம், எவ்வளவு துன்பம் நேர்ந்து விட்டது! அவளது முட்டாள்த்தனத்தால், அநியாயமாய் அவள் கணவனையும் வேதனைக்குள்ளாக்கி விட்டாளே! என்ன செய்து, அந்தத் துன்பத்தை அவளால் மாற்ற முடியும்?

மென்மையாய்க் கணவனை வருடிவிட்டவள் வேறு பாடு உணர்ந்து, ''மெலிந்து விட்டீர்களே, தனா!'' என் றாள் வருத்தத்துடன்.

''என்ன செய்வது, சொல்லு! நீ இல்லாத வீட்டில் உண்ண, உறங்கப் பிடிக்கவில்லையே!''

விளையாட்டுப் போலவே கணவன் சொன்ன போதும் மாதவியால் மீண்டும் கண்ணீரை அடக்க முடிய வில்லை.

''ஊகூம், கண்ணீர் கோட்டா முடிந்துவிட்டது! இனி அழக்கூடாது!'' என்று மனைவியின் கண்களைத் தன சேகரன் துடைத்துவிட்டான். ''பார், உனக்காக, நான் சென்ற ஒவ்வொரு நாட்டிலிருந்தும் என்னென்ன வாங்கி



வந்திருக்கிறேன், பார்'' என்று ஒவ்வொன்றாக அவன் காட்ட, அப்படியே இருவருக்கும் மனநிலை இலகுவாக மாறிற்று.

''எல்லாம் எனக்கே வாங்கியிருக்கிறீர்களே! அதில் பத்தில் ஒரு பங்கு உங்களுக்கு வாங்கவில்லையே!''

''அதெயெல்லாம் நீ அணிந்து கொண்டு நிற்கும் போது, கண்ணாரப் பார்க்கப் போகிறவன் நான்தான்? என் கண் ரசிக்கும் விதமாய் நான் வாங்கினேன்!'' என்று கண் சிமிட்டியவனோடு இணைந்து மாதவியும் முறுவ லித்தாள்.

தொடர்ந்து, மனைவியின் முகத்தில் யோசனை படியவும், 'ஊகூம்'' என்று சிறு கண்டிப்புடன் தனசேக ரன் தலையசைத்தான்.

''இது ஒன்றுமட்டும். அப்புறம் பழைய விஷயம் பேசுவதே இல்லை! சரிதானா?'' என்று ரொம்பவும் நல்ல தனமாய் அனுமதி பெற்றுக் கொண்டு மாதவி சொன் னாள்.

''நல்லபடியாகச் செல்வதற்குச் செல்லும் பாதை யைப் பார்க்கும் விழியும், நன்றாயிருக்க வேண்டும், தனா! நல்ல வழியாக எனக்கு நீங்கள் இருந்த போதும், நான் சுகிர்தாவின் கண்வழியே கோணலாக எல்லாவற் றையும் பார்க்கத் தொடங்கியதுதான் பிழையாகப் போயிற்று! இனி அப்படி நடவாது தனா!'' என்றாள் அவள்.

''என்னைப் பொறுத்தவரை, எனக்குப் பார்க்கும் விழி நீதான், மது. உனக்கு இது பிடிக்கும், இது பிடிக்காது என்று அதுதான் என்னை வழிநடத்துகிறது!'' என்றான் தனசேகரன் பெருமிதமான ஒரு முறுவலுடன்.

மையலாய்க் கணவனை நோக்கி, ''உங்கள் பார்க் கும் விழி இப்போது என்ன சொல்கிறது, தனா?'' என்று கொஞ்சலாய் மாதவி வினவினாள்.

''சும்மா, வளவளவென்று பேசிக் கொண்டிராமல், வந்து, கட்டிப் பிடிடா, முட்டாள்! என்கிறது! சரி தானே?'' என்று மனைவியை நெருங்கினான் அவன்.

''ம்ம்... அந்த 'முட்டாளை' மட்டும் நீக்கி விடலாம்!'' என்று அவள் கிளுகிளுக்க, அதன்பின் அங்கே நகையொலி மட்டுமே கேட்டது!